Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 115 | சர்வதேச மின் செய்தித்தாள் | பெப்ரவரி 15 2026




*வான் ஏறி, வீரவரலாறு வரைந்தவர்!*

*புதிதாய் எழுதப்பட்ட பக்கங்களின் அகரமானவரே!*
*வரிந்த வானத்திலும் தியாகப் பெருநெருப்பை வளர்த்து விட்டுச் சென்றவரே!*
*இருள் கிழித்து வான் எழுந்த திருமுகத்தின் ஒளிமுகங்களே!*
*எங்கள் வானத்தின் விடிபொழுதுக்கானது உங்கள் பறப்பு.*
*தாய்மண் மீதுள ஒவ்வொரு உயிர்ப்பிலும் உங்களின் நினைப்பு.*

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**NISHANTHAN LAW OFFICE**

SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES

NEW LOCATION

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com

39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

**MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION**
CPA CA
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

**Ideal Auto Tech** Ontario
For all your vehicle repair and service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

**JRS AUTO TECH**
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399

| | |
|---|---|
| AC | $119.99 + |
| OIL CHANGE | $59.99 + |
| USED TIRE | $74.99 + |
| BRAKES JOB | $299.99 + |

7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில்
மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச
ஆலோசனைகளும் வழங்கப்படும்

Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

**LONGO LAWYERS**
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட
என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
**Silver Print House**
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com
Please call & book an appointment before visiting...
I will provide the adress after booking.....

உங்கள் விருப்பத்திற்கேற்ப
வீடு, வியாபாரம் வாங்க, விற்க
நம்பிக்கையுடன் நாடுங்கள்
ST
THINKING OF BUYING OR SELLING
Suresh Theivendram
Broker
416.890.7179
realtorsuresh@outlook.com

**JEY RASATHURAI** MBA, BBA
REALTOR & MORTGAGE BROKER
RIGHT AT HOME REALTY INC. RealtorGroup
MORTGAGE ALLIANCE
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties

301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
" NO PROMISES BUT SOLUTIONS"

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

**ACCIDENT HAPPENS!**
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers @
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203




"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

## தேசிய தலைவர்
## மேதகு
## வே. பிரபாகரன்
## அவர்களின்
## சிந்தனையிலிருந்து

**நாம்
உறுதியுடன் தொடர்ந்து
போராடுவோம்.
எமது தாயக பூமியை
எதிரியிடமிருந்து மீட்டெடுத்து
சுதந்திர தமிழீழம்
அமைக்கும் வரை, நாம்
தொடர்ந்து
போராடுவோம்.**






# சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




## வீரம், உறுதி, துணிவு
## பறைசாற்றி நின்ற மண்ணின் மைந்தன்

# லெப். கேணல்
# கிறேசி

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு என்றும் தமிழீழ இனத்தின் வீரம், உறுதி, துணிவை பறைசாற்றி நிற்கின்றது, அந்த வகையில் அதில் பங்கு கொண்டு தம்மை அர்ப்பணித்த மான மறவர்களையும் தம்முயிரை ஈய்ந்த வீரப்புதல்வர்களையும் நம் தமிழினம் வரலாற்று சக்கரத்தில் என்றும் மறக்க முடியாத பதிவாக பதித்துள்ளது, எனவே விடுதலை நோக்கிய வெற்றிப் பயணத்தில் பயணித்த மறவர்களின் வரிசையில் எம் மனங்களில் என்றும் அழிக்கப்படமுடியாத போர்வீரனாக திகழ்ந்தவர் தான் லெப் .கேணல் கிறேசி அவர்கள்.




மருதம், முல்லை, பாலை, நெய்தல், குறிஞ்சி எனப்படுகின்ற ஐவகை நிலங்களிலே மருத நிலம் மிக நிறைந்த பூமி கிளிநொச்சி. கிளிநொச்சியின் தலைசிறந்த விவசாயக் கிராமங்களில் ஒன்றுதான் வட்டக்கச்சி. வட்டக்கச்சி மண்ணில் கணபதிப்பிள்ளை தம்பதியருக்கு 19.08.1960இல் ஆண்மகவு ஒருவர் பிறந்தது. கோபாலபிள்ளை என்ற இயற்பெயரோடு அவதரித்த குழந்தையே கிறேசி என்ற பெயரோடு ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக, தனது தாய் நிலத்தின் விடியலுக்காக செங்களமாடியது.

லெப்.கேணல் கிறேசி, தமிழீழ தேசத்தில் எங்கெல்லாம் ஆக்கிரமிப்பு இராணுவங்கள் நிலைகொண்டுள்ளதோ அங்கெல்லாம் அவரது சுடுகலனும் கனன்றிருக்கும். களமுனைகளில் தொடர்ச்சியாக ஓய்வு ஒளிச்சலின்றி சுழன்றடித்த வீரன் அவர் “செய்வோம் அல்லது செத்துமடிவோம” என்ற வசனத்தை அடிக்கடி சொல்பவர், சொன்னதை செய்தும் காட்டியவர். எந்நேரமும் இயக்கத்தின் நலனையே சிந்தித்து செயலாற்றிக் காட்டியவர். எந்த நேரமும் இயக்கத்தின் நலனையே சிந்தித்து செயலாற்றிய மண்ணின் மைந்தன் அவர். கிளிநொச்சிப் பிரதேசத்தில் எண்பதுகளின் நடுப்பகுதி தொடங்கி, தொண்ணூறுகளின் ஆரம்பம் வரைக்கும் சிறீலங்கா இராணுவத்திற்கு எதிரான அனைத்துத் தாக்குதல்களிலும் காத்திரமான பங்கை லெப். கேணல் கிறேசி வகித்துள்ளார்.



துடியாடியட்டமான போராளியாகவும், அவரது உடலமைப்பு எதிரியை திகைக்க வைக்ககூடிய உயரமான திடமான உருவமைப்பை கொண்டதாகவும், நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட, பார்வையும் கையில் துப்பாக்கியும் இடையில் பிஸ்ரலுமாக எந்த நேரமும் உசாரான போராளியாக களத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் ஒரு திறமையன சிறந்த வீரனாவார். தமிழீழ மண்ணில் எங்கெல்லாம் ஆக்கிரமிப்பு இராணுவம் தாக்குகின்றதோ அங்கெ கிறேசி அண்ணாவை காணலாம். அவர் மட்டும் அல்லாது அவரது அணியும் எந்நேரமும் தயார் படுத்தப்பட்டு தயார் நிலையில் நிற்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒழுக்கம், கட்டுப்பாடு, மண்ணிற்காக தம்முயிரை மாய்க்கும் தன்மை என்பவற்றை மிகவும் கடுமையான குறிக்கோளாக நினைப்பவர் லெப். கேணல் கிறேசி. தமிழீழ தேசத்தில் எங்கெல்லாம் ஆக்கிரமிப்பு இராணுவங்கள் நிலைகொண்டுள்ளதோ அங்கெல்லாம் அவரது




சுடுகலனும். கனன்று நிற்கும் களமுனைகளில் ஓய்வின்றி ஊணின்றி , உறக்கமின்றி, சுழன்றடித்த மிகப்பெரிய போர் வீரன் தான் கிறேசி.

சிங்கள இராணுவத்துற்கு கிறேசி என்றால் ஒரு பயம் இருக்கும். அப்படியான துணிச்சலான, துடியாட்டமான, அர்ப்பணிப்பான ஒரு போர்வீரர்தான் கிறேசி அவர்கள். 1987ம் ஆண்டு ஜுலை மாதம் வடமராட்சியில் நெல்லியடி முகாம் தகர்ப்பில் அணியொன்றின் பொறுப்பாளராக கலந்து கொண்டார். திடமான போராளிகளின் தாக்குதலினால் நிர்மூலமாக்கப்பட்டது இராணுவ முகாம், வெற்றி வாகையுடன் முகாம் திரும்பினர் அணி வீரர்கள். அதன் பின்னர் லெப் கேணல் கிறேசி அவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார், திறமை







யான வேலைத்திட்டங்களை இவரது பொறுப்பான காலங்களில் செய்தார்.

சிறீலங்கா இராணுவத்தினருடனான சமர்களம் முடிவடையும் நேரத்தில், அமைதி என்ற போர்வையில் அந்நிய இராணுவத்தினர் ஆக்கிரமித்தனர் தமிழீழ மண்ணை. இந்திய இராணுவத்தினருடனான சமர்களங்களில் கனன்றது கிறேசியண்ணாவின் துப்பாக்கி. கிளிநொச்சி நகரில் கூடாரமிட்டிருந்த இந்திய படைகளுக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் கிறேசி. கிளிநொச்சியில் எல்லா மூலையிலும் இந்திய இராணுவம் தாக்கப்பட்டது. இவரது திறமையால் கூலிகள் அடித்து விரட்டப்பட்டனர். கள முனைகளில் நேருக்கு நேர் கிறேசி அவர்களும் அவரது அணியினரின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத ஈ. பி .ஆர். எல். எவ் துரோகிகள் இவரது தந்தையான கணபதிப்பிள்ளை அவர்களை சுட்டு கொன்றனர். தந்தையரின் இறுதி சடங்குக்கு தனயன் வருவான் அப்போது வேட்டையாடுவோம் என ராஜீவின்



இராணுவமும் துரோகக்கும்பலும காத்திருந்ததாம். எதிரியின் சதி வலையில் சிக்கக் கூடிய புலி அல்ல கிறேசி. மதிநுட்பமாக செயல்படும் திறமை கொண்ட வீரனை எதிரியினால் முறியடிக்க முடியவில்லை. தனது விடுதலை பயணத்தில் எண்ணிறைந்த இடர்களையும் இழப்புகளையும் சந்தித்த வேளையிலும் சலியாது கொண்ட கொள்கையில் உறுதி தளராத உரம் படைத்த நெஞ்சன் கிறேசி இந்தியா இராணுவச் சண்டையின்போது போர்வீரர்களுக்கு கானக வாழ்கை ஆரம்பமாகினது. இவ்வேளையில் அவரின் அணியில் பெண் போராளிகளும் இணைத்து கொள்ளப்பட்டனர். ஆண்களுக்கு பெண்கள் சமமானவர் என்ற தலைவரின் கூற்றிற்கு அமைவாக பெண்கள் அணியை வழிநடத்திய பெருமைக்குரியவர் கிறேசி.

கானக வாழ்க்கையில் காசி முகாம் காலை, மாலை என பயிற்சி சத்தங்களும் கிறேசியின் அதட்டல் குரலுடம் கூடிய கொமாண்ட ஒலியும் முகாமில் ஒலித்து கொண்டிருக்கும். அனைவரும் உசார் நிலையில் ஓடித்திரிவர்.

பெண்கள் அணிக்கு அவருடனான போராட்ட வாழ்வில் மறக்க முடியாத நினைவுகள் முசல்குத்தி சமர், புளியங்குள சமர் என மறக்க முடியாத காலங்கள் பல. இந்திய இராணுவத்தை வெளியேற்றிய பின் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது . இந்த போரில் மண்டைதீவு பகுதியுடாக முன்னேறி வந்த சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட எதிர் சமரின் போது விழுப்புண்னைந்த கிறேசி அவ்வேளையில் விழுப்புண் அடைந்து துடித்ததை விட இச்சம்பவத்தில் வீரச்சாவடைந்த சக போராளிகளை நினைத்து துடித்தார்.

19.04.1991 அன்று மன்னர் பரப்புக்கடந்தான் பகுதியூடாக சிங்கள இராணுவம் முன்னேற முற்பட்டது. சிங்களத்தின் அம் முன்னேற்ற முயற்சியை முறியடிக்கும் நோக்கில் சென்ற விடுதலைப் புலிகளின் அணிகளுக்கு கட்டளைத் தளபதியாக களமுனையில் பணியாற்றிக் கொண்டிருந்தார் கிறேசி. எதிரியிடம் ஒரு அங்குல நிலம்தானும் பறி போய்விடக்கூடாது என்ற உறுதியோடு தனது அணியினரை வழிநடத்தி சமராடிக் கொண்டிருந்த வேளையில் எதிரி ஏவிய குண்டொன்றினால் கிறேசி இந்த மண்ணைவிட்டுப் பிரிந்தார்.

1990.05.25ஆம் திகதி லெப்.கேணல் கிறேசி அவர்களுக்கு திருமணம் நடந்தது. திருமணம் நடைபெற்று ஒரு வருடம் கூட நிறைவடையாத நிலையில் களமுனையின் முன்னிலையில் நின்று களமாடி தனது குடும்பம் என்ற சிறுவட்டத்தில் நில்லாது, தமிழீழத் தாயகம் என்ற பெரும் குடும்பத்தின் விடியலுக்காய் விழுதாகிப் போனார் லெப்.கேணல் கிறேசி. இவர் அணையாத தீபமாகிய 35ஆம் ஆண்டு நினைவில் நினைந்துறைவோம்.














www.sangathamil.ca




# சிங்களப் பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக கைகோர்க்கும் தமிழர்!

அருட்தந்தை மா. சத்திவேல்

01.02.2026

தமிழர்களின் அரசியல் போராட்டத்தோடு தெற்கு கை கோர்த்தால் மட்டுமே சுதந்திரத்திற்கான மீட்பு உண்டு. அது வரைக்கும் முழு நாட்டுக்கும் சுதந்திர தினம் என்பது கரிநாளே என அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இன்று (01.02.2026) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி நாட்டின் 78வது சுதந்திர தினத்தை தமது பதவிக் காலத்தில் இரண்டாவது சுதந்திர தினத்தையும் கொண்டாடு வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இந்த தினத்தினை தமிழர்கள் என்றோ கரி நாளாக அடையாளப் படுத்தியதோடு அரசியல் வாழ்வுரிமைக்கான போராட்ட நாளாக வும் மாற்றி உள்ளனர்.

இந்த நிலை தெற்கு மக்களுக்கும் தோன்றும் நிலை தேசிய மக்கள் சக்தியின் காலத்தில் அண்மித்து விட்டது என்றே கூறலாம்.

அவர்கள் பயங்கரவாத தடை சட்டத்திற்கு பதிலாக கொண்டுவர உத்தேசித்துள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாப்பதற் கான சட்டமூலம் சட்டமானால் சிங்கள பௌத்த பேரினவாதி களும் அதே மனநிலையுடனான போரியல் வெற்றியும் போலி யானது என்பதையும் மக்கள் உணர்வதோடு அன்றைய நாள் இதுவரைக்கும் அவர்களின் அரசியல் தலைமைகள் கூறிவந்த தேசியத்தையும் இறைமையையும் கரி படிந்துள்ளது என்று அவர்களுக்கு புரியும். நாட்டின் இறைமையையும் சுதந்திரத் தையும் காக்கும் காவல் தெய்வமாக சிங்கள பௌத்த பேரின வாத்தை கருதி அதனையே தெற்கின் தலைவர்கள் என்று அரசியலாக்கினார்களோ அன்றே அது மரண பொறிக்குள் தள்ளப்பட்டது.

இதனையும் மீட்பதற்கான அரசியல் போராட்டமாகவே தமிழர் களின் அரசியல் போராட்டம் எழிச்சி கொண்டது. ஆனால் பேரினவாத அரசியல் தலைமைகள் அதனை பயங்கரவாத மாக்கி சர்வதேச சக்திகளின் துணையோடு இனப்படு கொலையை அரங்கேற்றி நாளிலே அது மீட்க முடியாத அளவில் அந்நிய சக்திகளின் பிடிக்குள் சிக்கியது.

அதனை தாரை வார்ப்பதன் அடையாளமாகவே 2009 மே 19ல் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கி பூமியை வீழ்ந்து வணங்கி உத்தியோக பூர்வமாக நாட்டை கையளித்தார்.

இதனையே யுத்த வெற்றி நாளாக சிங்கள தேசம் கொண்டாடி வருகின்றது. சிங்கள பௌத்த பேரினவாதம் கண்களை மறைத்து விட்டது.

உணர்வு காலம் வெகு விரைவில் நடக்கும். 2022 காலி முகத் திடல் போராட்டம் ஓரளவுக்கு மக்களின் கண்களை திறந்தாலும் அது முழுமை பெறவில்லை. ஆனால் தற்போது அரசு கொண்டு வர உத்தேசித்துள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாது காப்பதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற் றினால் மக்கள் கண் திறப்பர். சுதந்திரம் என்பது வெறும் களியாட்டம் என்பதை அவர்கள் அறிவர்.

**பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான கோரிக்கை**

நடைமுறையாக்க உத்தேசித்துள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் எவரையும் இந்த சந்தர்ப்பத்திலும் பயங்கர வாதியாக்க முடியும். கைது செய்ய முடியும் அதிகாரம் இராணுவத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், எந்வொரு பிரதேசத்தையும் தடை செய்யப்பட்ட பிரதேச மாக அறிவிக்கவும் முடியும். அது மட்டுமல்ல மக்களின் கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம், எழுத்து சரித்திரம் முற்றாக பறிக்கப் படும் அபாயமும் உள்ளது.

வெளிநாட்டில் இருக்கும் ஒருவர் கூட இலங்கையை விமர் சிக்கவோ எழுதவோ முடியாது. அவ்வாறு செய்வோரை பயங் கரவாதியாக்க முடியும்.

முக்கியமாக தமிழர்களின் அரசியலையும் அதனை நோக்கிய அரசியல் போராட்டத்தையும் அது தொடர்பான கலந்துரை யாடலை மட்டுமல்ல இனப்படுகொலை நினைவு நாட்கள் நினைவேந்த நாட்களைக் கூட பயங்கரவாதமாக முடியும்.

நாட்டின் அரசியல் அமைப்பின் மூலம் வழங்கி உள்ள ஜன நாயக உரிமைகளையும், அடிப்படை மனித உரிமைகளையும் பறிப்பதற்கான சட்டத்தை அமுலாக்குவதற்கான எல்லா ஆயத் தங்களையும் செய்து கொண்டு தேசிய மக்கள் சக்தி சுதந்திர தின விழாவை கொண்டாடுவது யாருக்காக?

அவர்களின் நியாயக் கோட்பாடு தான் என்ன? அரசு பயங்கர வாதத்தில் துணைக் கொண்டு தனிக்கட்சி ஆட்சியை முன் னெடுக்க மக்கள் விடுதலை முன்னணி தேவையான பாதுகாப் பினை வலை அமைத்துக் கொள்ளவே புதிய சட்டத்தை உரு வாக்க முனைகின்றது.

அத்தோடு உலக வல்லரசுகளின் அரசியல் பொருளாதார சதி வலைகுள்ளும் சிக்கி உள்ளது. அதனை மறைப்பதற்கு மக்கள் எழுச்சியை தடுப்பதற்கு எடுக்கும் பயங்கரவாத செயற்பாடுக ளுக்கு இடமளிக்கக் கூடாது. வடக்கு கிழக்கின் அரசியல் போராட்டத்தை தெற்கின் சமூகம் ஏற்று விழிப்புணர்வடைந்து தமிழர்களின் அரசியல் போராட்டத்தோடு தெற்கு கைகோர்த் தால் மட்டுமே சுதந்திரத்திற்கான மீட்பு உண்டு.

அதுவரைக்கும் முழு நாட்டுக்கும் சுதந்திர தினம் என்பது கரிநாளே. தமிழர்களின் கரிநாள் போராட்டம் தெற்கிற்கு விழிப்பாகட்டும் என குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். மயிலிட்டியில் சிறீலங்கா இராணுவ வாகனம் மோதி நபரொருவர் பலி!

02.02.2026

பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலிட்டி பகுதியில் இன்று திங்கட்கிழமை (02) மதியம் சிறீலங்கா இராணுவ வாகனம் மோதியதில் நபர் ஒருவர் பலியாகியுள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் பயணித்த குறித்த நபர் வீதியை கடக்க முயன்றபோது அவர்மீது இராணுவ வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்தை செலுத்திய பெண் சிப்பாய் கைது செய்யப் பட்டுள்ளார். இது குறித்து பலாலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# தேசிய மக்கள் சக்தியின் கடும் எதிர்ப்பையும் மீறி யாழ். வலி–கிழக்கில் கிவுல் ஓயா எதிர்ப்பு பிரேரணை நிறைவேற்றம்!

01.02.2026

தமிழ் மக்களின் பூர்விக தாயகமான வடக்குக் கிழக்கில் தமிழ் இன விகிதாசாரத்தினை மாற்றியமைக்கும் அரச கொள்கையின் திட்டமிட்ட தொடர்ச்சியாகவே கிவுல் ஓயாத்திட்டம் அமைகிறது எனத் தெரிவித்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சபைக் கூட்டம் இடம்பெற்றது. கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பான பிரேரணை சபையில் தவிசாளர் தியாகராஜா நிரோஷனால் முன்வைக்கப்பட்டது. இப் பிரரேரணையினை சபையில் முன்வைக்க முடியாது என மத்தியில் ஆளும் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். அவ் எதிர்ப்பினையும் மீறி தமிழ்க் கட்சிகள் அனைத்தும் பிரேரணைக்கு ஆதரவாக தேசிய மக்கள் சக்தியினரின் கருத்தை எதிர்த்தன. இறுதியில் தேசிய மக்கள் சக்தியினர் நிகழ்ச்சி நிகழ்ச்சி நிரலில் இல்லாததை எவ்வாறு தவிசாளர் சபைக்கு ஆற்றுப்படுத்த முடியும் என வாதிட்டனர்.

நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாத ஒன்றை சபையின் அனுமதியுடன் தவிசாளர் அறிவிப்பாக முன்வைப்பதற்கு ஏற்பாடுகளில் இடமுண்டு. எனவே தயவு செய்து இனம் சார்ந்த பிரச்சினையில் உங்கள் கட்சி சார்ந்த நிலைப்பாடுகளுக்காக நீங்கள் தடையினை ஏற்படுத்தாதீர்கள் என பலதடவைகள் தேசிய மக்கள் சக்தியினரின் வினயமாகக் கோரினார். எனினும் கூச்சல் தொடர்ந்தது.




தவிசாளர், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான காரணங்களுள் ஒன்றாக அரச அனுசரனையுடன் திட்டமிட்ட சிங்கள பேரினவாதக் குடியேற்றங்கள் வரலாற்று ரீதியாக இடம் பெற்றுள்ளன. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அதிகாரசபைகள் ஊடாக குறிப்பாக மகாவலி அதிகார சபை ஊடாக ஏற்கனவே பல சிங்கள குடியேற்றங்கள் தமிழர் இன விக்தாசாரத்தினையும் அடையாளத்தினையும் இருப்பையும் அழிக்கும் வகையில் இடம்பெற்றுள்ளன. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறாது இனப் பிரச்சினை தீர்வை முன்வைக்காது கடந்த அரசாங்கங்கள் போலவே தொடர்ந்து செயற்படுகின்றது. அதனை ஏற்க முடியாது. ஆரம்பமாக அரசாங்கம் 2500 மில்லியன்களை ஒதுக்கி சூட்சுமமான முறையில் ஆரம்பித்துள்ள இத்திட்டத்தினை எதிர்கின்றோம். மேலும் பல கோடிகள் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படவுள்ள நிலையில் அரசாங்கம் தமிழர்களின் வரலாற்றுத் தாயக இயல்பு வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

தவிசாளரை உரையாற்ற விடாது செயற்பட்ட தேசிய மக்கள் சக்தி உறுப்பினரை ஒருமாத காலத்திற்கு சபையில் இருந்து வெளியேற்ற வேண்டிவரும் என தவிசாளர் எச்சரித்த நிலையில் சபையில் சற்ற அமைதி ஏற்பட்டது. இதில் சபை உறுப்பினர்களின் விவாதத்திற்கு அனுமதிக்கப்பட்டது. விவாதத்தில் தேசிய மக்கள் சக்தியைத் தவிர பிரசன்னமாகியிருந்த தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் கண்டனத் தீர்மானத்திற்கு முழு ஆதரவைத் தெரிவித்தனர்.

இந் நிலையில், சபையில் தேசிய மக்கள் சக்தியின் ஒன்பது உறுப்பினர்களில் தலைமை தாங்கும் உறுப்பினர் இத் தீர்மானத்திற்கு எதிராகவும் ஏனைய எட்டு உறுப்பினர்களும் நடுநிலை வகித்தனர். தேசிய மக்கள் சக்தியைத் தவிர தமிழ்க் கட்சிகள் அனைத்தினதும் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# கிவுல் ஓயாத் திட்டத்தினால் ஆபத்து: இத் திட்டம் வேண்டாம்!

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம்

01.02.2026

கிவுல் ஓயா திட்டம் அபாயமானது என்றும், அதற்கு எதிராக அனைவரும் போராட வேண்டும் என அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

கிவுல் ஓயா திடடத்திற்கு எதிராக நாளை மறுதினம் வவுனியா வடக்கில் இடம்பெறவுள்ள போராட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கோட்டபய அரசங்கத்தினால் கொண்டுவரப்பட்ட கிவுல் ஓயா திட்டத்தை நடைமுறை படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பில், வரவு செலவு திட்டத்திலும் நிதி ஒதுக்கபட்டுள்ளதோடு அமைச்சரவையிலும் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இது ஒரு படு மோசமான திட்டம். இது அரசியல் ரீதியாக, சூழலியல் ரீதியாகவும் தமிழ் மக்களை பாதிக்கின்ற ஒரு திட்டம்.

இந்த திட்டம் கொண்டு வரப்பட்டதற்கான பிரதான காரணம் வெலி ஓயாவிலும், வவுனியா வடக்கிலும் குடியேற்றம் செய்யப்பட்ட சிங்கள மக்களுக்கு நீர் வளங்குவதற்காகும், புதிய சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதற்குமாகும்.


ஆகவே, அமைச்சர் சந்திரசேகர் சொல்லுவது போன்று தமிழ் மக்களின் நலன்களுக்காக கொண்டுவரப்பட்ட ஒன்று அல்ல. மாறாக, குடியிர்றப்பட்ட சிங்கள மக்களுக்காக கொண்டுவரப்பட்டதிட்டம் தான் இந்த திட்டம்.

இந்த திட்டத்தினுடாக இன்னும் சிங்கள குடியெற்றங்கள் வருவதற்கான அபாயம் இருப்பதாக நான் நினைக்கின்றேன். ஆகவே இந்த திடடத்தை எதிர்க்க வேண்டியது தமிழ் மக்களது கடமை. இது தனிய திட்டம் மாத்திரம் அல்ல. ஏற்கனவே இருக்கின்ற தமிழ் கிராமங்களும் அழியக்கூடிய அபாயமும் இருக்கின்றது.

குறிப்பாக வவுனியா வடக்கில் உள்ள அனைத்து கிராமங்களும் நீரில் மூழ்கும் அபாயமும் உள்ளது. உண்மையில் அரசாங்கத்தினுடைய முழு கவனமும் முல்லைத்தீவு சிங்கள குடியிராத்திலேயே உள்ளது.

வடக்கு கிழக்கை மையமாக இணைத்த மாவட்டம் திருகோணமலை மாவட்டம். திருங்கிணைமலை மாவட்டத்தில் சுமாராக குடியேற்றங்கள் நிறைவடைந்துள்ளது.

அடுத்து இருப்பது முல்லைத்தீவு மாவட்டம். இதனூடாக தமிழர் தாயகத்திலுள்ள ஒருமைப்பாட்டை இல்லாமல் செய்கின்ற சதித் திட்டம் நீண்ட காலமாக இடம்பெற்று வருகிறது.



அதனுடைய முயற்சிகளில் ஒன்று தான் இந்த கிபுல் ஓயா திட்டம். ஆகவே, இந்த கிபுல் ஓயா திட்டத்தை எதிர்க்க வேண்டியதும், அதற்காக போராட வேண்டியதும் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

எனவே, சிவில் அமைப்புக்களால் முன்னெடுக்கபடுகின்ற போராட்டம்தான் வெற்றி பெறும் என்றும் இதனால் தமிழரசுக் கட்சி போன்ற அரசியல் கட்சிகள் முன்னெடுக்கும் போராட்டங்களில் ஏனைய கட்சிகளும் பங்கேற்கும் என கூறி விட முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொக்கிளாய், முல்லைத்தீவில் புதிய விகாரை!

02.02.2026

தமிழரின் காணிக்குள், பிரதேச சபையின் வைத்தியாலை வீதியை மறித்து பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

அனுரா அரச பேரினவாதியினர் வேகமாக இனப்பரம்பலை மாற்றி அமைத்து வருகின்றனர்.



# வல்வெட்டித்துறையில் தமிழீழத் தேசியத் தலைவரின் வீட்டை மீளமைப்பதே பொருத்தமானது!

## வல்வெட்டித்துறை நகரசபையில் தீர்மானம்

02.01.2026

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த காணியில், புதிய கட்டுமானங்களை அமைக்காமல் அவர் வாழ்ந்த இல்லத்தின் மாதிரியில் அதை அமைப்பதே பொருத்தம் என, காணியின் உரிமையாளரான தலைவர் பிரபாகரனின் சகோதரிக்கு அறிவுறுத்த வல்வெட்டித்துறை நகரசபை தீர்மானித்துள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்த அமர்வு, அண்மையில் நகர பிதா எம்.கே சிவாஜிலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது, தலைவர் பிரபாகரனின் இல்லம் அமைந்திருந்த காணியில் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு, காணியின் உரிமையாளரான பிரபாகரனின் சகோதரி ம.ஜெகதீஸ்வரி முன்வைத்த கோரிக்கை தொடர்பில் ஆராயப்பட்டது.

அதன் போது, உறுப்பினர் மயூரன் கருத்துத் தெரிவிக்கையில்,

சம்பந்தப்பட்ட காணியின் உரிமையாளராக தலைவர் பிரபாகரனின் சகோதரி உள்ளார். எனினும், அந்தக் காணி “பிரபாகரனின் காணி” என்றே அனைவராலும் அறியப்படுகின்றது.

தலைவர் வாழ்ந்த வீடு இடித்து அகற்றப்பட்டாலும், அந்த வெற்றுக் காணியை பிரபாகரனின் இல்லம் என்றே இன்றும் அழைக்கின்றனர். எனவே, அதன் பழைமை மாறாமல் நாங்கள் பாதுகாக்க வேண்டும்.

அங்கு புதிய கட்டுமானங்களை அமைக்கவிடாமல் தடுப்பதற்கு நகரசபைக்கு அதிகாரம் இல்லை. ஆனால், தார்மீக அடிப்படையில் - புதிய கட்டுமானங்களை அமைப்பதைத் தவிர்க்குமாறும், அமைப்பதாயின் பிரபாகரனின் இல்லத்தையொத்த



கட்டுமானத்தை அமைக்குமாறும் ஆதனத்தின் உரிமையாளருக்கும், அற்றோனித்தத்துவக் காரருக்கும் கோரிக்கை விடுப்போம். அதை ஏற்பதும், மறுப்பதும் அவர்களின் கைகளில் உள்ளது என்றார்.

# யாழில் சிறுமியின் கை துண்டிக்கப்பட்ட சம்பவத்தில் மருத்துவர்களை கைது செய்ய பொலிசார் பின்னடிப்பு

02.02.2026

யாழ் . போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமிக்கு மருத்துவ தவறால் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை தொடர்பில் பொலிசாரின் விசாரணைகள் தொடர்பில் நீதிமன்றம் கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

பொலிசரின் இத்தகைய செயற்பாடு தொடருமாயின் வழக்கினை குற்ற புலனாய்வு துறையினருக்கு பரப்படுத்த நேரும் எனவும் பொலிசாருக்கு மன்று அறிவுத்தியுள்ளது.




கடந்த 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சிறுமி ஒருவர் காய்ச்சல் மற்றும் தோலில் ஏற்பட்ட தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு மணிக்கட்டில் ஊசி (கனூலா) மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாள்களில் கை மணிக்கட்டு வீக்கமடைந்த நிலையில், கையின் செயற்பாடு மணிக்கட்டுடன் செயலற்று போனதாக கூறி, அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது.

இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர்.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகிறது.

அந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள் ளப்பட்ட போது, கடந்த தவணையின் போது மூன்று மருத்து வர்களை சந்தேக நபர்களாகப் பெயரிடப் போவதாக பொலிசார் தெரிவித் திருந்தனர் .




ஆனால் அவர்களைச் சந்தேக நபர்களாகப் பெயரிட வேண்டிய அவசியம் இல்லை என வழக்கு விசாரணையில் பொலிசார் தெரிவித்தனர்.

இதையடுத்தே, கடந்த இரண்டரை வருடாங் களுக்கும் மேலாக நீடித்து வரும் இந்த வழக்கை பொலிசார் கையாளும் விதம் தொடர்பில் நீதவான் தனது கடுமையான அதிருப்தியைத் தெரிவித்தார்.

மருத்துவர்களைக் கைது செய்யாத பொலிசார், தாதியர்களைக் கைது செய்து சந்தேகநபர்களாக முற்படுத்தி உள்ளனர். ஒரே வழக்கில், இருவேறு நிலைப்பாட்டுடன் பொலிசார் செயற்படுகின்றனர்.

அத்துடன், இந்த வழக்கில் பொலிசார் திட்டமிட்ட வகையிலும், அல்லது முறையற்ற விசாரணைகள் காரணமாகவும் நீண்ட தாமதங்களை ஏற்படுத்துகின்றனர். பொலிசாரின் செயற்பாட்டில் இந்த நீதிமன்றம் திருப்தியடையவில்லை.

தமக்கு வழுங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே தாம் சிறுமிக்கு மருந்து ஏற்றினோம் என்று பொலிசாரின் விசாரணையிலும், திறந்த நீதிமன்றத்திலும் தாதியர்கள் வாக்குமூலம் வழுங்கியுள்ளனர்.

அத்துடன், சிறுமிக்கான சிகிச்சைக் குறிப்பில் மருந்தைச் செலுத்த வேண்டிய அளவீடுகள் குறிக்கப்படவில்லை என்றே நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் காண்பிக்கின்றன. ஆதலால், பொலிசாரின் முன் பின முரணான செயற் பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

மருத்துவர்களைக் கைது செய்வதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அனுமதி பெறவேண்டியுள்ளது என்று விட்டு, தற்போது அவர்களைச் சந்தேகநபர்களாகப் பெயரிட வேண்டிய தேவை இல்லை என்கின்றனர்.

நீதி கிடைக்கும் என்று நம்பியே மக்கள் நீதிமன்றத்துக்கு வருகின்றனர். ஆனால், பொலிசாரின் செயற்பாடு மக்களுக்கு அநீதியை வெளிப்படுத்துகின்றது.

எனவே, வடமாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபரின் தலைமையில் இந்த விடயத்தில் முறையான விசாரணைகள் இடம்பெற வேண்டும்.

இந்த வழக்குத் தொடர்பான குறிப்புகள் பொலிஸ்மா அதிபரின் விசேட அவதானத்துக்காக அனுப்பப்பட வேண்டும். தேவையேற்படின் இந்த வழக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பாரப்படுத்த வேண்டிய நிலை ஏற்படலாம்” என நீதவான் தெரிவித்தார்.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# ‘கிவுல் ஓயா’ திட்டத்திற்கு எதிராக எழுச்சிகொண்டது தமிழர் தாயகம்

02.02.2026

தமிழ் மக்களின் இனப்பரம்பலை அச்சுறுத்தும் வகையில், மகாவலி அதிகாரசபையின் (எல்) வலயத் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்படும் “கிவுல் ஓயா” திட்டத்திற்கு எதிரான எதிர்ப்புப் பேரணியானது, இன்றைய தினம் வவுனியா வடக்கு - நெடுங்கேணியில் மக்கள் ஆதரவுடன் எழுச்சியாக நடைபெற்றது.

ஒருங்கிணைந்த தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்பேரணி, நெடுங்கேணி பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகி வவுனியா வடக்கு பிரதேச செயலகம் வரை சென்றடைந்தது.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் “கிவுல் ஓயா திட்டம் வேண்டாம்” என்பதை வலியுறுத்தும் கோஷங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியவாறும், முழக்கங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் உணர்வுப்பூர்வமாகப் பங்கேற்றனர்.

தொடர்ந்து, இத்திட்டத்தைக் கைவிடுமாறு வலியுறுத்தி ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றை ஒருங்கிணைந்த தமிழ்க் கட்சிகள் வவுனியா வடக்கு பிரதேச செயலரிடம் கையளித்தன.

மேலும் இவ்வார்ப்பாட்டப் பேரணியில் அரசியல் பிரமுகர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.























# யாழில் ஈகியர் திருமலை நடராசானின் 69ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

04.02.2026

தமிழ்த் தேசியப் பற்றாளர் ஈகியர் திருமலை நடராசனின் 69வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் புதன் கிழமை (04.02.2026)நினைவுகூரப்பட்டது.



கடந்த 04.02.1957 அன்று இலங்கையின் ஒன்பதாவது சுதந்திர நாளன்று தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தமிழர் தேசமெங்கும் இலங்கையின் சுதந்திரதினத்தை தமிழர்கள் கரிநாளாக பகிஸ்கரித்தனர்.





திருமலையில் உயரமாக பறக்கவிடப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்புக் கொடியைக் கட்டமுயன்ற இனப் பற்றும் தேசப்பற்றும் நிரம்பிய 22 வயது இளைஞரான ஈகியர் நடராசன், சிறீலங்காப் பொலிசாரினால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அவர் தேசியக் கொடியுடன் மண்ணில் வீழ்ந்து மாய்ந்த நிகழ்வு அன்று வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தையே உலுக்கியது.

இந்நிகழ்வில் தாயக நினைவேந்தல் குழுவினர் மற்றும் தமிழ்த் தேசிய பற்றாளர் கலந்து கொண்டு ஈகியர் நடராசனின் உருவப் படத்திற்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செய்து மாலை அணிவித்து கருத்துரைகள் வழங்கியிருந்தனர்.

# யாழ். வலி.வடக்கில் சிறிலங்கா இராணுவத்தால் அழிக்கப்படும் பனைமரங்கள்

03.02.2026

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள மக்களின் விவசாய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ் . மாவட்ட செயலர் ஆகியோருக்கு மாவட்ட கட்டளை தளபதி உறுதி அளித்துள்ள அதே நேரம் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை சூழவுள்ள காணிகளில் இராணுவம் விவசாயம் செய்வதற்காக தனியார் காணிகளில் உள்ள பனை மரங்களை தறித்து வருகின்றார்கள்.





இது தொடர்பில் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தனிடம் தொடர்புக்கொண்டு கேட்ட போது,

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட பகுதிகளில் 15 கிராம சேவையாளர் பிரிவுகள் முற்றாக விடுவிக்கப்பட வேண்டும்.

அந்த நிலையில் மயிலிட்டி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் ஒரு பகுதி விடுக்கப்பட்டுள்ள நிலையில், மற்றைய பகுதி விடுவிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. அந்த நிலங்களில் இராணுவத்தினர் தோட்டங்களை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் விமான நிலையத்திற்கு மேற்கு பக்கம் உள்ள பகுதியில் பெருமளவான பனை மரங்கள் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை அழிக்கப்பட்டு, இராணுவத்தினர் தாம் விவசாயம் செய்வதற்காக அந்த நிலங்களை தயார் படுத்தி வருகின்றனர்

பொதுமக்கள் தமது காணிகளில் உள்ள பனை மரங்களை அனுமதியின்றி தறித்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து தண்டங்கள் அறவிடப்படும் நிலையில், இராணுவத்தினரால் பனை மரங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக பனை அபிவிருத்தி சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை தடுத்து நிறுத்தி பனை வளங்களை பாதுகாக்க வேண்டும்.

பெருமளவான பனை மரங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக மாவட்ட செயலர் மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலர் ஆகியோர் இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆட்சி மாற்றங்கள் ஊடாக தமது காணிகள் விடுவிக்கப்படும் என மக்கள் நம்பி தேசிய மக்கள் சக்தியினருக்கு வாக்களித்தனர். அதனாலயே அவர்களில் மூவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானார்கள்.

ஜனாதிபதி தைப்பொங்கல் நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் வருகை தந்த போது காணிகள் விடுவிக்கப்படும், வீதிகள் திறக்கப்படும் என தமிழ் மக்கள் நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள். மக்களின் நம்பிக்கையை சிதறடிக்கும் முகமாக ஜனாதிபதி யாழ்ப்பாண வருகை தந்த போது காணி விடுவிப்புக்கள் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காது சென்றார்.

மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என உயர் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில், கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற நீதிமன்ற விசாரணையில், காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளதாகவும், விடுவிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான வரைபடங்களை தாம் தயாரித்து வருவதாகவும் இராணுவத்தினர் நீதிமன்றில் தெரிவித்துள்ள நிலையில், தற்போது தாம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்களின் காணிகளில் உள்ள பனை மரங்களை அழித்து வருகின்றனர்.

எனவே மக்களின் காணிகளில் உள்ள பனை மரங்களை பாதுகாக்க மாவட்ட செயலர், பனை அபிவிருத்தி சங்க தலைவர் வடமாகாண ஆளுநர் ஆகியோர் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து, பனை மரங்களை பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்தார்.


அதேவேளை யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாக புதிதாக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் கே.ரி.பி.டி.சில்வா இன்றைய தினம் வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட செயலரை சந்தித்த போது, பொது மக்களின் விவசாய காணிகளை விடுவிப்பது தொடர்பில், நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்திருந்த நிலையிலையே, இராணுவத்தினர் தாம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தனியார் காணிகளில் நிற்கும் பனை மரங்களை தறித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சுதந்திர நாளை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடிகள்

04.02.2026

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக் கொடி இறக்கப்பட்டு கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது.





இலங்கையின் சுதந்திர தினம் தமி ழர்களின் கரி நாளாக நினைவு கூருமாறு விடுத்த கோரிக்கையின் பெயரில் பல் - கலைக் கழக மாணவர்களால் இது மேற்கொள்ளப்பட்டது.



கறுப்புக் கொடி ஏற்றலின் போது பங்கு கொண்டிருந்த மாணவர் களில் அதிகமானோர் கறுப்பு ஆடை அணிந்திருந்தனர்.

இதேநேரம் இன்று கிளிநொச்சியில் இடம்பெறும் கரிநாள் போராட்டத்திலும் பங்குகொள்ள பல்கலைக்கழக மாணவர்கள் பலர் அங்கு செல்கின்றனர்.

**நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம். எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திர தமிழீழம் அமைக்கும்வரை, நாம் தொடர்ந்து போராடுவோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# “இது சுதந்திர நாள் அல்ல; எங்கள் குழந்தையர் காணாமல் ஆக்கப்பட்ட கரி நாள்”

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தையரின் தாய்மார்

04.02.2026

காலனித்துவ முடிவில் ஏற்பட்ட அரசியலமைப்பு தோல்வியை இலங்கை அரசு சுதந்திர தினமாகக் கொண்டாடும் இந்த நாளை, காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தையரின் தாய்மார் கரி நாள் என நினைவுகூருகிறோம் என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.



சுதந்திரம் எங்களுக்கு கிடைக்கும் நாள், எங்கள் குழந்தையரின் உண்மை வெளிவரும் நாளே. இது சுதந்திர தினம் அல்ல. இது எங்கள் குழந்தையர் காணாமல் ஆக்கப்பட்ட கரி நாள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இன்றைய தினம் (4) அவர்கள் தமது போராட்ட பந்தலில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

1948ஆம் ஆண்டு கிடைத்த சுதந்திரம் எங்களுக்கு விடுதலையாக அமையவில்லை. அது எங்கள் குழந்தையர் காணாமலாக்கும் ஒரு நீண்ட, இருண்ட பாதையின் தொடக்கமாக மாறியது. நாங்கள் அரசியல்வாதிகள் அல்லர். நாங்கள் சட்ட நிபுணர்கள் அல்லர். நாங்கள் தாய்மார்கள். எங்கள் குழந்தையரைப் பெற்றவர்.

அவர்களை வளர்த்தவர். அவர்களை இழந்தவர். இன்று, வவுனியா நகரில், இந்த வன்னிப்பந்தலில் 3271 நாட்களாக நாங்கள் அமர்ந்திருக்கிறோம்.

மழையிலும் வெயிலிலும், அரசுகள் மாறினாலும், வாக்குறுதிகள் மாறினாலும், எங்கள் கேள்வி மட்டும் மாறவில்லை. 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது.

ஆனால், அந்த சுதந்திரம் எங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவில்லை. எங்கள் மொழியை மதிக்கவில்லை. எங்கள் நிலங்களை காக்கவில்லை. எங்கள் குழந்தையரை எங்களிடம் திருப்பித் தரவில்லை.

இந்த அநீதியின் வேர்கள், சொல்பரி கமிஷன் உருவாக்கிய அரசியல் அமைப்பிலேயே உள்ளன. இங்கிலாந்து இலங்கையிலிருந்து அவசரமாக வெளியேறி, பெரும்பான்மை ஆட்சியை ஜனநாயகமாக்கி, தமிழர் பாதுகாப்பு அற்றவர்களாக விட்டுச் சென்றது.

காலனித்துவத்திற்கு முன்பு, தமிழருக்கு தங்கள் சொந்த அரசியல் அதிகாரம் இருந்தது. தங்கள் சொந்த நிலமும் நிர்வாகமும் இருந்தது. இந்த உண்மை அரசியலமைப்பில் சொல்லப்படவில்லை.




சொல்லப்படாத உண்மை, பின்னர் எங்கள் குழந்தையர் காணாமல் ஆக்கப்படுவதற்கு ஒரு சட்டபூர்வ அநீதியாக மாறியது. அந்த தவறுகளின் விலையையே இன்று நாங்கள் இந்த பந்தலில் எங்கள் கண்ணீரோடு செலுத்துகிறோம்.

எங்கள் கேள்வி எளிமையானது. எங்கள் குழந்தையர் எங்கே? அவர்கள் எங்கே? யார் பொறுப்பு? எப்போது நீதி? கரி நாள் எங்களுக்கு ஒரு சடங்கு நாள் அல்ல. அது ஒரு நினைவூட்டல்.

சுதந்திரம் எங்களுக்கு கிடைக்கும் நாள், எங்கள் குழந்தையரின் உண்மை வெளிவரும் நாளே. இது சுதந்திர தினம் அல்ல. இது எங்கள் குழந்தையர் காணாமல் ஆக்கப்பட்ட கரி நாள் என்று தெரிவித்தனர்.





# செம்மணியில் 600 இற்கு மேற்பட்ட அப்பாவி தமிழ்மக்களை கொன்று புதைத்தவருக்கு கொழும்பில் பாராட்டு விழா

04.02.2026

செம்மணியில் 600 இற்கு மேற்பட்ட அப்பாவி தமிழ் பொது மக்களை கொன்று புதைத்த கொடூர சம்பவத்தின் ஐந்தாவது சந்தேக நபராக அடையாளம் காணப்பட்ட பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தன அவர்களுக்கு கொழும்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டு இருக்கின்றது.





சில மாதங்களுக்கு முன்னர் திரு அனுரா குமார திசாநாயக்க அவர்கள் பிரிகேடியர் சசிந்திர விஜேசிரிவர்தனவை இராணுவ தலைமையக Directorate of Movement யின் 34 வது பணிப்பாளராக நியமித்திருந்த நிலையில் இந்த பாராட்டு விழா நடந்திருக்கின்றது.

குறிப்பாக பிரிகேடியர் தர அதிகாரியாக சசிந்திர விஜேசிரிவர்தன அவர்கள் நியமிக்கப்பட்டதை கௌரவிக்கும் முகமாக இந்த பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது.

வெறும் கருத்துகளுக்காக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் விசாரணைகளை ஏவி விடும் ஜேவிபி இனவாதிகள் சம நேரத்தில் தலையறுத்து கொன்று புதைத்த கிரிமினல்களுக்கு பதவி உயர்வு வழங்கி கௌரவிக்கின்றார்கள்.

மறுமுனையில் இனப்படுகொலையை நினைவுகூர்வதையும் , வலுக்கட்டாயமாக காணாமல் போனவர்களுக்காக போராடுவதையும், நில அபகரிப்புக்கு எதிராகக் குரல் கொடுப்பதையும், சட்டவிரோத விகாரை கட்டுமானங்களுக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிப்பதையும் தமிழ் இனவாதமாக சித்தரிக்க திரு அனுர குமார திஸநாயக்க என்கிற பொய்யர் முயற்சிக்கின்றார்.

இனவாதத்திற்கு இடமில்லை என நாடகமாடுகின்றார்.

நிறுவன கட்டமைப்புகள், செயன்முறைகள் முழுமையாக தோல்வியடைந்த நாட்டிற்கு சுதந்திர தினம் ஒரு கேடு. - இனமொன்றின் குரல்

**விடுதலைப் போராட்டத்தில் மக்கள் வெறும் பார்வையாளர்களாக இராது, நேரடிப் பங்காளிகளாக மாற வேண்டும்**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# தென் தமிழீழம்
# சிறீலங்காவின் 78ஆவது சுதந்திர நாளைக் கரி நாளாக பிரகடனப்படுத்தி மட்டு. கல்லடியில் எழுச்சி போரணி

04.02.2026

மட்டக்களப்பில் சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்காவரை இன்று (4) முன்னெடுக்கப்பட்ட கரிநாள் எதிர்ப்பு ஆர்ப்பாட பேரணியை கோட்டமுனை பாலத் தில் வைத்து காவல்துறையினர் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

அதனையடுத்து காவல்துறையினருக்கும் ஆர்ப்பாட்டக் காரருக்கும் இடையே முறுகல் ஏற்பட்ட நிலையில் அங்கு வீதியில் அமர்ந்திருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.









மட்டக்களப்பில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் காணாமல் போன உறுவுகள் சங்கம் பொது அமைப் புக்கள் கரிநாள் ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

அதனையடுத்து மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இன்நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் வலிந்து காணாமல் போண உறவினர் மற்றும் அரசியல்பிரமுகர் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஒன்றிணைந்தனர்.

தமிழர்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரி எனும் தொனிப் பொருளில் காணாமல் போன உறவுகளுக்கு நீதி வேண்டும், வடக்கு கிழக்கு தமிழரின் தாயகம், எமது மண் எமக்கு வேண்டும், போன்ற அரசுக்கு எதிரான சுலோகங்கள் ஏந்தியவாறு கோசங்கள் எழுப்பியவாறு ஆர்பாட்ட ஊர்வலமாக காந்தி பூங்காவை நோக்கிச் சென்றனர்.

இந்நிலையில் கோட்டமுனை பாலத்தில் வைத்து ஆர்ப்பாட்ட காரரை காந்தி பூங்காவிற்கு செல்ல முடியாது அங்கு 78வது சுதந்திர தின நிகழ்வு ஒன்று இடம்பெற்று வருகின்றதென காவல்துறையினர் பேரணியைத் தடுத்து நிறுத்தினர்.

ஆர்ப்பாட்டக்கார் காவல்துறையினரின் தடுப்பை மீறி செல்ல முற் பட்டதையடுத்து காவல்துறையினருக்கும் ஆர்பாட்டகார்க ளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

பின்னர் கலகம் அடக்கும் காவல்துறையினர் வரவழைக்கப் பட்டு ஆர்ப்பாட்டகாரரை தடுத்து நிறுத்தியதையடுத்து அவர்கள் அங்கு வீதியில் அமர்ந்திருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.











www.sangathamil.ca

# வட தமிழீழம்
# சிறீலங்காவின் 78ஆவது சுதந்திர நாளைக் கரி நாளாகப் பிரகடனப்படுத்தி கிளிநொச்சியில் எழுச்சி பேரணி

04.02.2026

இலங்கையின் 78ஆவது சுதந்திர நாளை தமிழரின் கரி நாளாகப் பிரகடனப்படுத்தி இன்று புதன்கிழமை கிளிநொச்சியில் மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றுள்ளது.






யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவினர், சிவில் சமூக அமைப்புக்கள், தமிழ் அரசியல் பிரமுகரின் பங்கேற்புடன் இடம்பெற்ற மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியானது கிளிநொச்சி கந்த சுவாமி கோயில் முன்றலில் இருந்து ஆரம்பித்து, பசுமைப் பூங்கா வரையில் இடம்பெற்றது.

ஆர்ப்பட்டப் பேரணியில் பங்குபற்றியோர் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவருக்கான நீதி என்பவற்றைக் கோரி கோசங்களை எழுப்பியிருந்தனர். அத்தோடு, தமிழ் இனப்பிரச்சிற்கான தீர்வை வலியுறுத்தியும், தமிழர் தாயகப்பரப்பில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்புகளை நிறுத்துமாறு வலியுறுத்தியும் கோஷங்களை எழுப்பியவாறு, பாதைகளைத் தாங்கியவாறு கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட் டிருந்தனர்.

அதேவேளை "சிங்கொடி அவமானச் சின்னம், இலங்கையின் சுதந்திர நாள் தமிழருக்கு கரிநாள்" எனக் கோசங்களை எழுப்பியும் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரான துரைராசா ரவிகரன், சிவஞானம் சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்ததுடன், பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்மார் மற்றும் உறுப்பினர்மார், சிவில் சமூக செயற்பாட்டாளர் எனப் பெருந்திரளானோர் பங்கேற்றிருந்தனர்.






















# தமிழர் மீதான சிறீலங்கா அரசின் அடக்குமுறைகள் வலுப்பதாலேயே போராட்டங்களும் வலுப்பெறுகின்றன!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா இரவிகரன்

04.02.2026

ஆட்சியாளர் தமிழ் மக்களுக்கு பாரிய உதவிகளைச் செய்வதாக நாடக நடிகர்களைப்போல் ஒருபுறம் செயற்பட்டுக்கொண்டு, மறுபுறம் தமிழ் மக்கள் மீது பல்வேறு வழிகளிலும் அடக்குமுறைகளைப் பிரையோகிப்பதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் ஆட்சியாளரின் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் வலுப்பெறுவதனாலேயே, அடக்குமுறைகளுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டங்களும் வலுப்பெறுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திர நாளினை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி கிளிநொச்சியில் 04.02.2026 புதன்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் சுதந்திரநாள் தமிழர்களுக்கு கரிநாள் என்ற தொனிப்பொருளில் வருடாவருடம் இதேநாளில் எமது போராட்டம் தொடர்சியாக இடம்பெற்றுவருகின்றது.

இலங்கையின் ஆட்சியாளர் கடந்த 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களையும் இந்த நாட்டின் பிரஜைகளாகக் கருதி அதிகாரங்களை முறையாகப் பகிர்ந்தளித்தாருந்தால் இவ்வாறான போராட்டங்களே இடம்பெற்றிருக்காது.

ஆனால் நாட்டின் ஆட்சியாளர் அனைவரும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பரப்புக்களில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்பது, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது, பௌத்த விகாரைகள் மற்றும் புத்தர் சிலைகளை அமைப்பது, வடக்கு கிழக்கு கடற்றொழிலாளரின் வாழ்வாதாரங்களைச் சூறையாடுவதென அனைத்து வழிகளிலும் தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளை பிரையோகித்து வந்தனர்.

இவ்வாறு தமிழர் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டதற்கு எதிராக கடந்த காலங்களில் எம்மவர்கள் அகிம்சைவழியில் போராட்டங்களை மேற்கொண்டதுடன், அந்த அகிம்சை வழிப் போராட்டங்கள் பயனற்றுப்போன நிலையில் எமது இளையோர் ஆயுதங்களை ஏந்திப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு புள்ளிவிபரத்தை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் 222,006 ஏக்கர் காணிகளே வன வளத்திணைக்களத்திடம் காணப்பட்டது. ஆனால் தற்போது வனவளத்திணைக்களத்திடம் 432,000 ஏக்கருக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் வன இலாகாவிடம் மாத்திரமுள்ளன.

குறிப்பாக்தமிழர் தாயகப் பரப்புகளில் யுத்தம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, படையினர் உள்ளிட அரச இயந்திரங்களைப் பயன்படுத்தி மிகப் பாரிய அளவில் தமிழரின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எமக்கு நிலமில்லையேல் எமக்கு எதுவுமில்லை. தமிழரின் நிலங்கள் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டால் அந்த நிலங்களுக்குரிய தமிழ் மக்கள் எங்கு போவது.

தமிழர்களுக்கு உதவிகளைச் செய்கின்றோமென ஆட்சியாளர் ஒருபுறம் நாடக நடிகர்களைப்போல செயற்பட்டுக் கொண்டு, மறுபுறம் தமிழரின் காணிகளை ஆட்சியாளர்கள் கபளீகரம் செய்கின்றனர்.

எமது கடற்பரப்புக்களில் எமது கடற்றொழிலாளர் சுதந்திர மாக கடற்தொழில் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாத நிலையை ஆட்சியாளர் ஏற்படுத்துகின்றனர்.

நில அபகரிப்புக்களின் மூலம் எமது தமிழ் மக்கள் சுதந்திரமாக விவசாயத்தை மேற்கொள்ளமுடியாதநிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்துவதுடன், கால்நடை வளர்ப்பாளர்களுக்குரிய மேச்சல் தரைகளும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் கால்நடைவளர்ப்பாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஆட்சியாளர் உரிய கவனஞ்செலுத்துவதில்லை.

இறுதிக்கட்டப் போரின்போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்டும், கடத்தப்பட்டும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவுகளுக்கான நீதியை வழங்குவதிலிருந்து ஆட்சியாளர் தொடர்ந்தும் தவறிவருகின்றனர்.

இவ்வாறாக வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் வாழும் எமது தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும் ஆட்சியாளரினால் துன்பப்படுகின்றனர்.

தற்போது தமிழர் தாயகப் பரப்பில் பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் தீவிரப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய அளவில் திட்டமிட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏற்கனவே தமிழர் தாயகப்பரப்பில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இவ்வாறான திட்டமிடப்பட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு அங்கு திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியதன்மூலம் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களை பெரும்பான்மையினத்தவர்களின் ஆதிக்கத்தின்கீழ் தற்போது ஆட்சியாளர் கொண்டுவந்துள்ளனர்.

ஆட்சியாளரின் திட்டமிட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்களின் அடுத்தகட்ட செயற்பாடுகள் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களை நோக்கி நகர்கின்றன.

எனவே இவ்வாறாக தமிழர்களுக்கு ஆட்சியாளரினால் அநீதி இழைக்கப்படும்போது நாம் அதற்கெதிராக நீதிக்குரல் எழுப்பாமல் இருக்கமுடியாது.

இவ்வாறு தமிழர் மீது ஆட்சியாளர் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும்போது, இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் தமிழரினால் எவ்வாறு பங்கேற்கமுடியும்.

ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது இவ்வாறாக அடக்குமுறைகளை பிரயோகிக்கின்றபோது, தமிழ் மக்கள் அதற்கெதிராக போராடுவதற்காக வீதிக்கு இறங்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே ஆட்சியாளர் தமிழரை இந்தநாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கு இடமளிக்கவேண்டும்.

ஆட்சியாளரினால் இவ்வாறு பலவழிகளிலும் தமிழர் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்ற நிலையில், சில அமைச்சர் வேடிக்கையான கருத்துக்களைத் தெரிவித்துவருகின்றனர். தமிழ் மக்களுக்கு நன்மைகளைச் செய்வதாகவும், உதவிகளைச் செய்வதாகவும் பாரிய பொய்களைக் கூறிவருகின்றனர்.

தமிழர் தாயகப்பரப்பிலுள்ள தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நிலையில் இல்லை. எனவே தமிழ் மக்களுக்குரிய அதிகாரங்களைப் பகிர்ந்தளியுங்கள். தமிழர்களுக்கு ஒரு அர்த்தமுள்ள அரசியல் தீர்வைவழங்க முன்வாருங்கள். உரிமைகளை வழங்குங்கள். கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை வழங்குங்கள். தமிழ் மக்களை இந்தநாட்டில் சுதந்திரமாக வாழவிடுங்கள்.

இந்தநாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரமாக இல்லை. ஆட்சியாளரினால் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்பதாலேயே இலங்கையின் சுதந்திரநாளை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களால் வீதியில் இறங்கி இவ்வாறான மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கு, கிழக்கு தமிழர்தாயகப் பரப்பில் தமிழ் மக்கள் தமக்குரிய அதிகாரங்கள், உரிமைகளுடன் எப்போது தன்நிறைவுபெற்று சுதந்திரமாக வாழ்கின்றார்களோ அன்று தான் தமிழ் மக்களுக்கு சுதந்திரநாள் – என்றார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயல் முறையில் தமிழர் அரசியல் தீர்வு உள்வாங்கப்படுவது அவசியம்

## கலாநிதி குமாரவடிவேல் குரபரன்

05.01.2026



தற்போது பேசப்படும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயல் முறையில் தமிழர் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு நிச்சயமாக உள்வாங்கப்படவேண்டும். அன்றேல் அந்த அரசியலமைப்பிலிருந்து ஒரு சமூகம் வெளித்தள்ளப்பட்டுவிடும் என கலாநிதி குமாரவடிவேல் குருபரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது புதிய அரசியலமைப்பு உருவாக்கம் முக்கிய பேசு பொருளாக மாறியிருக்கும் நிலையில், அப்புதிய அரசியலமைப்புக்கான ஒரு மாதிரி வரைவை உருவாக்குவதற்காக தேசிய ரீதியில் நம்பகத்தன்மை வாய்ந்ததும், தொழில்நுட்ப ரீதியாக உறுதியானதும், உண்மையிலேயே சகலரையும் உள்ளடக்கியதுமான ஓர் அணுகுமுறையை நிறுவும் நோக்கில் 'வன் டெக்ஸ்ட் இனிஸியேட்டிவ்' (One Text Initiative) எனும் அமைப்பினால் செவ்வாய்க்கிழமை (3) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு கலந்துரையாடல் செயன்முறையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது மாத்திரமன்றி இது பற்றிய தகவல்களைப் பகிர்வதுடன், கருத்தாடல்களைக் கட்டியெழுப்பும் நோக்கில் citizen's constitution.lk என்ற இணையத்தளமும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயன்முறை குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துரைக்கையிலேயே குருபரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் 2022 ஆம் ஆண்டு உருவான 'அரகலய' மக்கள் எழுச்சிப்போராட்டத்தின் பின்னரேயே தீவிரமடைந்திருக்கின்றன. இருப்பினும் அதன் பின்னரான தேர்தல்களில் வாக்களித்த தமிழ்மக்கள், தமக்கான அரசியல் தீர்வுக்கு முன்னுரிமையளித்து, அதனைப் பிரதிபலிக்கும் வகையிலேயே வாக்களித்திருக்கிறார்கள்.

அந்தவகையில் தற்போது பேசப்படும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு செயன்முறையில் தமிழர் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு நிச்சயமாக உள்வாங்கப்படவேண்டும். அன்றேல் அந்த அரசியலமைப்பிலிருந்து ஒரு சமூகம் வெளித்தள்ளப்பட்டுவிடும்.

அதேபோன்று இலங்கை ஒரு பல்லின அரசு என்பதை நாமனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோமா என்ற கேள்விக்கான பதிலைக் கண்டறியவேண்டும். அதனூடாக மாத்திரமே சகலரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அரசியலமைப்பை உருவாக்கமுடியும்.

அதுமாத்திரமன்றி அரசியலமைப்பில் சில சொற்பதங்களை உள்ளடக்கிவிட்டு, அதனை சிங்களவர்களுக்கு ஒருவிதமாகவும், தமிழர்களுக்குப் பிறிதொரு விதமாகவும் கூறி சமாளிக்க முடியாது. அதனடிப்படையிலேயே கடந்த காலங்களில் 'ஒருமித்த நாடு' மற்றும் 'ஏக்கிய இராச்சிய' உள்ளிட்ட சொற்பதங்கள் தொடர்பான தர்க்கங்கள் உருவாகின.

தற்போது பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சிபீடம் ஏறியிருக்கும் இந்தப் புதிய அரசாங்கத்துக்கு, சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறான அரசியலமைப்பை உருவாக்குவதற்கும், அதனை அனைத்து மக்களையும் ஏற்றுக்கொள்ளச்செய்வதற்குமான பெருவாய்ப்பு காணப்படுகின்றது. அவ்வாய்ப்பு உரியமுறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்றார்.

# கோட்டாபய இராஜபக்சேவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கோரி யாழில் போராட்டம்

06.02.2026

யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் தொடர்பிலான விபரங்களை வெளிப்படுத்த கோரி யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்கு அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய இராஜபக்சே நீதிமன்றில் முன்னிலையாவதை தவிர்த்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




யாழ் . நீதவான் நீதிமன்றில் லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணமால் ஆக்கப்பட்டுள்ள நிலைமையில் அவர்கள் தொடர்பிலான விபரங்களை வெளிப்படுத்த கோரி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு விசாரணைக்காக யாழ் . நீதவான் நீதிமன்றில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்சே முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் வருகை தருவதற்கு தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்து, இணைய வழியில் சாட்சியம் அளிக்க தயார் என மன்றுக்கு கோட்டாபய இராஜபக்சே சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு ஜனாதிபதி தேர்தல் காலங்களிலும், அதன் பின்னர் ஜனாதிபதியான பின்னரும் யாழ்ப்பாணம் வந்து சென்ற நிலையில், வழக்கு விசாரணைக்காக வருவதை தவிர்ப்பதனை வழக்கு தொடுநர் தரப்பு சட்டத்தரணிகள் மன்றில் சுட்டிக்காட்டி இருந்தனர்.

அதனால், மன்று கோட்டாபய இராஜபக்சேவிற்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் சத்திய கடதாசி ஊடாக மன்றுக்கு தெரிவிக்குமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்றைய தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதிலும் கோட்டபாய இராஜபக்சே மன்றில் முன்னிலையாகவில்லை.

அதனை அடுத்து இரு தரப்பு சட்டத்தரணிகளும் எழுத்து மூல சமர்ப்பனங்களை செய்யுமாறு மன்று கட்டளையிட்டு , வழக்கினை மார்ச் மாதம் 06ஆம் திகதிக்கு திகதியிட்டுள்ளது.

இந்நிலையில், கோட்டாபய இராஜபக்சே நீதிமன்றத்தைத் தொடர்ச்சியாகப் புறக்கணிப்பதற்கு எதிராகவும் அனைத்துக் காணாமலாக்கப்படல்களுக்கும் நீதியை நிலைநாட்ட கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில், செம்மணியை மீண்டும் புதைக்க இடமளியோம், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய், மேலதிக அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம், PTA ஐ நீக்கு, அனைத்து இன மக்களுக்கும் சமவுரிமையை உறுதிசெய்யும் புதிய அரசியலமைப்பை வென்றெடுப்போம் என கோஷங்கள் எழுப்பப்பட்டன.







**போரும் – கல்வியும் இணைந்த வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# அரசைப் பாதுகாக்கும் சட்டவரைவு: சட்டமாக்கப்படின் ஒட்டுமொத்த நாடும் திறந்தவெளிச் சிறைக்குள் சிக்கிவிடும்!

## சிவில் சமூகச் செயற்பாட்டாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

08.02.2026

வட, கிழக்கில் நிலவும் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, தெற்கில் உருவாகிவரும் அரசியல், பொருளாதார மற்றும் சர்வதேச நாடுகளுடனான ஒப்பந்தங்கள் சார்ந்த பிரச்சினைகளைக் கையாள்வதற்கு அரசாங்கத்துக்கு வழி தெரியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்டம் கொண்டுவரப்படும் பட்சத்தில், இளைஞர்கள், மாற்றுக்கருத்துடையவர்கள், அரசியல் ஆர்வலர்கள் என யாருக்குமே எதிர்காலம் இல்லாமல் போய்விடும். அதன் பின்னர் நாட்டு மக்கள் அனைவரும் ஒரு திறந்தவெளி சிறைக்குள்ளேயே வாழவேண்டியிருக்கும் என சிவில் சமூகச் செயற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலக்காகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டிருப்பதுடன், அதுபற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் எனவும், புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை வாபஸ் பெறவேண்டும் எனவும் வலியுறுத்தி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் இணைந்து நாடளாவிய ரீதியில் பல்வேறு கலந்துரையாடல்கள், விழிப்புணர்வூட்டல் கூட்டங்கள், எதிர்ப்புப்போராட்டங்களை நடாத்திவருகின்றனர்.

அந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஓரங்கமாக சிவில் சமூக அமைப்புக்கள் சில இணைந்து கொழும்பில் அமைந்துள்ள நீதியமைச்சுக்கு முன்பாக கடந்த வாரம் வெள்ளிக்கிழமை (30) தொடர் கவனயீர்ப்புப்போராட்ட பிரசாரமொன்றை ஆரம்பித்திருந்தன.

அப்போராட்டம் தொடர்ந்து இரண்டாவது வாரமாக நீர்கொழும்பு பிரஜைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பி.ப 2.00 - 4.00 மணிவரை நீதியமைச்சுக்கு முன்பாக நடைபெற்றது.

அதன்படி இப்போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியம். குறித்து அவற்றை ஒருங்கிணைத்துவரும் சிவில் சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் மேலும் கூறியதாவது,

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் ஊடாக வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் பயங்கரவாதிகளாக்கப்பட்டதைத் தவிர, இதனூடாக தமிழ்மக்களின் பிரச்சினைகள் எவையும் தீர்க்கப்படவில்லை.

இந்நிலையில் தற்போது அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவானது மக்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் அல்ல. மாறாக அது அரசைப் பாதுகாப்பதற்கான சட்டம் மாத்திரமேயாகும். அதிலும் குறிப்பாக இது தேசிய மக்கள் சக்தியைப் பாதுகாப்பதற்கான சட்டமாகவே இருக்கிறது.

ஏனெனில் வட, கிழக்கில் நிலவும் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, தெற்கில் உருவாகிவரும் அரசியல், பொருளாதார மற்றும் சர்வதேச நாடுகளுடனான ஒப்பந்தங்கள் சார்ந்த பிரச்சினைகளைக் கையாள்வதற்கு அரசாங்கத்துக்கு வழி தெரியவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் புதிதாகக் கொண்டுவரப்படும் இச்சட்டத்தின் ஊடாக மதவழிபாட்டுத்தலங்கள், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், தற்போது நான் கூறுவதைப்போன்று வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் என சகல விடயங்களும் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவையாக மாற்றப்படும்.

எனவே இவ்வரைவு சட்டமாக்கப்படும் பட்சத்தில் அதன்விளைவாக இளைஞர்கள், மாற்றுக்கருத்துடையவர்கள், அரசியல் ஆர்வலர்கள் என யாருக்குமே எதிர்காலம் இல்லாமல் போய்விடும்.

அதன்பின்னர் நாட்டுமக்கள் அனைவரும் ஒரு திறந்தவெளி சிறைக்குள்ளேயே வாழவேண்டியிருக்கும். எனவே எமது நாட்டின் ஜனநாயகம் சிதைவடைந்துபோவதைத் தடுப்பதற்கு நாம் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்போம் என்றார்.

# பட்டதாரி ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் கிழக்கு மாகாணம் புறக்கணிப்பு

## மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்களம்

09.02.2026

பட்டதாரி ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தமக்கான நியமனங்களை உறுதிப்படுத்தி அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நேற்று (8.2.2026)ஆம் திகதி மட்டு. ஊடக அமையத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




கிழக்கு மாகாணம் புறக்கணிப்பு, இதன்போது கருத்து தெரிவித்த சங்க உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் என்று சொல்வதை விட ஏமாற்றப்பட்டவர்கள் என்றே சொல்ல வேண்டும்.

நாங்கள் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் அல்ல. எமது உரிமைகளுக்காகப் போராடுகின்றவர்கள். அந்த வகையில் இந்த ஆண்டில் அரசாங்கத்தினால் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அனைத்து மாகாணத்தையும் எடுத்து நோக்கும் போது கிழக்கு மாகாணம் மாத்திரம் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் அதிகளவான ஆசிரியர் - களை ஆட்சேர்ப்புச் செய்வதாகக் கூறி அதிகளவான விளம்பரங்கள் விடப்பட்டாலும், உண்மை நிலவரம் இந்த அறிக்கையைப் பார்க்கும் போதே தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக எதுவித போட்டிப் பரீட்சைகளுக்கும் உள்வாங்கப்படாமல் இருக்கின்றார்கள்.

நாங்கள் விசேட சலுகைகள் எதுவும் கேட்கவில்லை. போட்டிப் பரீட்சைகளுக்கான வாய்ப்புகளையே தருமாறு கேட்கின்றோம் என்று தெரிவித்தனர்.

**ஒரு பிரச்சினையை ஆராய்வதற்கும் தீர்ப்பு வழங்குவதற்கும் பிரத்தியேகமான மனப்பக்குவம் அவசியம். சுயநலமற்ற, சொந்த விருப்பு – வெறுப்புக்களற்ற, உணர்வு–களுக்கும் பந்த பாசங்களுக்கும் இடமளிக்காத, ஒரு நேர்மையான பார்வை அவசியம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# செம்மணி மனிதப் புதைகுழிக்குள் தேங்கி நின்ற மழை நீரை வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுப்பு!

09.02.2026

செம்மணி மனிதப் புதைகுழிக்குள் தேங்கி நின்ற மழை நீரை வெளியேற்றும் நடவடிக்கைள் திங்கட்கிழமை (09) முன் னெடுக்கப்பட்டுள்ளது.



செம்மணி மனிதப்புதைகுழியில் இருந்து இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட் டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வாய்வு பணிகளை முன் னெடுக்க இருந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் கடும் மழை பெய்தமையால் புதைகுழிக்குள் மழைநீர் தேங்கி நின்றது.

இந்நிலையில் புதைகுழிக்குள் தேங்கி நிற்கும் மழை நீரை வெளியேற்றும் நடவடிக்கை திங்கட்கிழமை (09) நல்லூர் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

மழை நீரை வெளியேற்றிய பின்னர் புதைகுழி சேற்று தன் மையாக காணப்படுவதால் அடுத்த கட்ட அகழ்வுபணிகளை முன்னெடுப்பது தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டு, அன்றைய தினத்திற்கு வழக்கு திகதியிடப்பட்டுள்ளது.

அதேவேளை புதைகுழிக்குள் இருந்து வெள்ளம் வெளி யேற்றும் நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார், சட்டவைத்திய அதிகாரி செல் லையா பிரணவன் , சட்டத்தரணிகளான நிரஞ்சன், ஞா.ரஜித்தா உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் நேரில் இன்றையதினம் சென்று பார்வையிட்டனர்.

மூன்றாம் கட்ட அகழ்வு பணிக்காக கடந்த ஆண்டு நீதி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பியுள்ளமையால் இவ் வாண்டுக்கு புதிய பாதீடு சமர்ப்பிக்கப்பட்டு, நிதியினை மீள பெற வேண்டியுள்ளமையால் புதிய பாதீட்டை மன்றில் சமர்ப்பிக்க சட்ட வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.



# சிறீலங்கா பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 17 வயது இளைஞன் அல்லைப்பிட்டியில் படுகொலை

10.02.2026

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்லைப்பிட்டி பகுதியில் சிறீலங்காப் பொலிசார் இன்று அதிகாலை மேற் காண்ட துப்பாக்கி சூட்டில் 17 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

இன்று அதிகாலை குறித்த சிறுவன் உட்பட மூவர் அல்லைப் பிட்டி பகுதியால் வாகனத்தில் சென்றுகொண்டு இருந்தவேளை வீதி கடமையில் இருந்த பொலிசார் அவர்களை வழி மறித்தனர். பொலிசாரின் சமிக்ஞையை மீறி பயணித்தமையால் பொலிசார் துப்பாக்கி சூடு நடாத்தினர் என பொலிஸ் தரப்பில் தெரியப்படுத் தப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கி சூட்டில் சித்தங்கேணியை சேர்ந்த குறித்த இளைஞன் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவருடன் சென்ற நல்லூர் மற்றும் வட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்த இருவர் ஊர்காவற்துறை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.




# சிறீலங்கா பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞனின் நெற்றியில் ஊடறுத்து சென்ற குண்டு!

10.02.2026

யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா பொலிசாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞனின் உடற்கூற்று ஆய்வில் குண்டு நெற்றியில் பட்டு, தலைக்குள் ஊடுவி மூளையை துளைத்து சென்றமையால் மரணம் சம்பவித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

அல்லைப்பிட்டி பகுதியில் காவல்துறையின் கட்டளையை மீறி பயணித்த வாகனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில், வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த அல்பினோ அருள் பயாஸ் என்ற 17 வயதுடைய இளைஞன் உயிரிழந் திருந்தான்.

இளைஞனது உடற்கூற்று பரிசோதனை யாழ் போதனா வைத் தியசாலையில் இன்றைய தினம் சட்ட வைத்திய அதிகாரி எம். மயூரதன் முன்னிலையில் நடைபெற்றிருந்தது.

துப்பாக்கி சன்னம் இளைஞனின் நெற்றியில் பட்டு ஊடுருவி மூளையை தாக்கியமையால் மரணம் சம்பவித்துள்ளது என உடற்கூற்று அறிக்கையில் அறிக்கையிடப்பட்டுள்ளது முன்ன தாக சமிக்ஞையை மீறி சென்றதாக கூறி இன்று அதிகாலை அல்லைப்பட்டி பகுதியில் வைத்து, ஹையேஸ் வாகனம் ஒன் றின் மீது ஊர்காவல்துறை காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் வட்டுக்கோட்டை - சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் ஒருவன் உயிரிழந் திருந்தான்.

சம்பவத்தின் போது மேலும் இரண்டு இளைஞர்கள் குறித்த வாகனத்தில் இருந்த நிலையில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் வீதி தடையினை தாண்டி செல்ல முற்பட்ட வாகனம் மீது பின்னாலிருந்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட் டதாக காவல்துறை தெரிவித்திருந்தது.

# அருவி வெட்டுக்கு வேலையாட்களை ஏற்ற சென்றவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம்

## யாழில். உயிரிழந்த இளைஞனின் சித்தி

10.02.2026

அருவி வெட்டுக்கு வேலையாட்களை ஏற்ற சென்ற போதே தனது பெறாமகன் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்துள்ளதாக , உயிரிழந்த இளைஞனின் சித்தி தெரிவித்துள்ளார்.

யாழில். பொலிசாரின் கட்டளையை மீறி சென்ற வாகனத்தின் மீது பொலிசார் துப்பாக்கி சூடு நடத்திய போது , வாகனத்தினை ஓட்டி சென்ற இளைஞன் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயி ரிழந்துள்ளான்.

அந்நிலையில் இளைஞனின் உயிரிழப்பு தொடர்பில் சித்தியார் தெரிவிக்கையில் , இளைஞனுக்கு சாரதி அனுமதி பத்திரம் இல்லாத போதிலும், அவர் வாகனம் ஓட்டுவதனை தொழிலாக செய்து வந்தார். பொலிசாருக்கு கையூட்டுக்களை வழங்கி சாரதி அனுமதி பத்திரம் இன்றி சாரத்தியம் செய்து வந்தார்.

அருவி வெட்டு நடவடிக்கைக்காக வேலணையில் வேலை யாட்களை ஏற்றுவதற்காக சென்ற போது தன்னிடம் பணம் இல்லாததால் தான் பொலிசார் மறித்த போது நிறுத்தாமல் பயணித்துள்ளனர். அதனாலயே பொலிசார் சுட்டுள்ளனர்.

அவருடன் வாகனத்தில் பயணித்த ஏனைய இருவரும் நெருங் கிய உறவினர்களே. குடும்ப கஷ்டம் காரணமாகவே 17 வயதில் அவர் உழைக்க சென்றவர். அவரை அநியாயமாக சுட்டு கொன்று விட்டார்கள் என கண்ணீர் மல்க தெரிவித்தார்.



# தமிழ் மக்களுக்கு மரணத்தை ஏற்படுத்துகின்ற வலியே மகாவலி அதிகாரசபையின் கிவுல் ஓயாத் திட்டம்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

09.02.2026

தமக்கு மரணத்தை ஏற்படுத்துகின்ற வலியாகவே மகாவலி அதிகாரசபையை தமிழ் மக்கள் நோக்குவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுடன், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்து மேற்கொள்ளப்படும் மகாவலி அதிகாரசபையின் கிவுல் ஓயாத்திட்டத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மிகக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடும் மகாவலி அதிகாரசபை போன்ற திணைக்களங்களினாலேயே தேசியமக்கள் சக்தியின் ஆட்சி வீழ்ச்சியடையுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

மகாவலி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் 09.02.2026இன்று இடம்பெற்ற தெளிவூட்டல் கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போது நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

### கடுமையான அழுத்தங்களினாலேயே மகாவலி கலந்துரையாடலுக்கு அழைப்பு

தற்போதுதான் இந்த கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பில் விளக்கம் தருவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டு, கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த திட்டத்தால் பாதிக்கப்படப்போகின்ற மக்களை ஒருபோதும் மகாவலி அதிகாரசபை அழைத்து கலந்துரையாடவில்லை.

கடந்த 23.01.2026அன்று பாராளுமன்ற குழு அறையில் இடம்பெற்ற கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் இந்த கிவுல் ஓயாத் திட்டத்தினால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மக்களோடு கலந்துரையாடலை ஏற்படுத்துமாறு கோரியிருந்தோம்.

அதனைத் தொடர்ந்து எம்மால் இந்த கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிராக கடந்த 02.02.2026அன்று பாரிய எதிர்ப்பு ஆரப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இத்தகைய எமது கோரிக்கைகள் மற்றும் ஆரப்பாட்டத்தின் மூலம் எழுந்த அழுத்தங்கள் காரணமாகவே இவ்வாறு இந்த கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

### கிவுல் ஓயா திட்டத்திற்காக அபகரிக்கும் தமிழர் இடங்கள் தொடர்பான விபரங்களை மூடி மறைக்கும் மகாவலி அதிகாரசபை

அதேவேளை இந்த திட்டத்திற்காக அபகரிக்கப்படுகின்ற தமிழ் மக்களின் விபரங்கள் இதிலே மகாவலி அதிகாரசபையால் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை.

குறிப்பாக கூழாங்குளம் வயல்காணிகள் 88 ஏக்கர், வெடிவைத்தகல்லு 87 ஏக்கர், வெடிவைத்த கல்லு கிராமம் 124 ஏக்கர், ஈச்சங்குளம் வயல் 95 ஏக்கர், கோவில் புளியங்குளம் 158 ஏக்கர், காட்டுப்பூவரசங்குளம் 258 ஏக்கர், காஞ்சூரமோட்டைக்கிராமம் 100 ஏக்கர் உள்ளடங்கலாக மொத்தம் 910 ஏக்கர் அபகரிக்கப்பட்டுள்ளதாக கிவுல் ஓயா திட்டம் தொடர்பான அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் தற்போது அந்த விடயங்கள் தொடர்பில் தற்போது வெளிப்படுத்தப்படவில்லை. என நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

### தமிழ் மக்களுக்கு மரணத்தை ஏற்படுத்துகின்றவலியே மகாவலி அதிகாரசபை

மகாவலி அதிகாரசபை என்றால், மரணத்தை ஏற்படுத்துகின்ற வலி என்றே தமிழ் மக்கள் மத்தியில் ஒரு அபிப்பிராயம் இருக்கின்றது. மகாவலி அதிகாரசபையினை தமிழ்மக்கள் அவ்வாறே கருதுகின்றனர்.

மகாவலி அதிகாரசபையினால் முல்லைத்தீவிலையோ, வவுனியாவிலையோ ஒரு தமிழ் மக்களுக்கும் மகாவலி அதிகாரசபை காணிகளை வழங்கவில்லை. தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை அபகரித்து பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிகின்ற வேலைகளையே மகாவலி அதிகாரசபை மேற்கொண்டுவருகின்றது.

எனவேதான் மாகவலி அதிகாரசபையை மரணத்தைத் தருகின்ற வலி எனத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

### கிவுல் ஓயாத் திட்டத்தில் பாதிக்கப்படுகின்ற தமிழ் மக்கள் அழைக்கப்படவில்லை

குறிப்பாக கடந்த 1984, 1985ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இந்தப் பகுதிகளில் பெரும்பான்மையினத்தவர்கள் வலிந்து குடியேற்றப்பட்டனர்.

மேலும் தற்போதைய ஆட்சியாளர்கள் இவ்விதமான திட்டங்களைச் செயற்படுத்த முயற்சிக்கும்போது பாதிக்கப்படுகின்ற மக்கள் அனைவரையும் அழைத்துத் தெளிவுபடுத்த வேண்டும். இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட பெரும்பான்மையின கமக்கார அமைப்புக்களைச் சாரந்தவர்களுக்கு கருத்துக்கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. எனினும் இத்திட்டத்தால் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்ற, இத்திட்டத்தினால் தமது நிலங்களை இழக்கின்ற தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. எனவே பாதிக்கப்படுகின்ற எமது அப்பாவித் தமிழ் மக்களுக்கு இந்தக் கலந்துரையாடலில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சந்தப்பம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கூழாங்குளம் கமக்கார அமைப்பு, வெடிவைத்தகல்லு கமக்கார அமைப்பு, ஈச்சங்குளம் கமக்கார அமைப்பு, கோவில் புளியங்குளம் கமக்கார்அமைப்பு என்பன இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இவ்வாறாக மகாவலி அதிகாரசபை இத்திட்டத்தினால் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள எமது தமிழ் மக்களைப் புறக்கணித்து இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடுசெய்துள்ளது. இவ்வாறே ஒவ்வொரு விடயங்களிலும் மகாவலி அதிகாரசபை எமது தமிழ் மக்களைப் புறக்கணிப்புச் செய்துவருகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை இந்தக் கலந்துரையாடலில் புறக்கணித்துவிட்டு ஏற்கனவே மணலாற்றில் வலிந்து குடியேற்றப்பட்ட 4,372 பெரும்பான்மையினக் குடும்பங்களையும், குடியேற்றப்படவுள்ள 1,626 பெரும்பான்மையினக் குடும்பங்களையும் இத்திட்டத்தில் உள்வாங்க மகாவலி அதிகாரசபை முயற்சிக்கின்றது.

என்னால் முன்வைக்கப்படுகின்ற இந்த குற்றச்சாட்டுக்களை மகாவலி அதிகாரசபை ஒருபோதும் மறுத்துப்பேச முடியாது.

### கிவுல் ஓயாத்திட்டத்தால் நில அதிர்வு அபாயம்

இத்திட்டத்தை செயற்படுவதானால் வானிலை ஆய்வாளர்களுடைய மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதா?

இந்த இடங்கள் பருவப்பெயர்ச்சி மழையுடன் தொடர்புடைய இடங்களாகும். எனவே இத்திட்டத்திற்காக பாரிய அளவில்



காடுகள் அழிக்கப்படுவதால் மழைவீழ்ச்சி குறைவடையுமென சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அண்மையில் முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் ஒரு நில அதிர்வொன்று ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான பாரிய நீர்த்தேக்கங்களை அமைப்பதன்மூலம் புவித்தட்டில் ஏற்படுகின்ற பாரத்தினாலேயே நிலதிர்வுகள் ஏற்படுவதாகவும் ஆய்வாளர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அத்தோடு இத்தகைய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ள போது நில அதிர்வுகள் காரணமாக அணைக்கட்டுக்கள் உடைப்பெடுத்தால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படுமெனவும் ஆய்வாளர்களால் கூறப்படுகின்றது.

எனவே இந்த பாரிய நீர்த்தேக்கத்தால் அத்தகைய பாதிப்புக்கள் ஏற்பட்டால் என்னசெய்வது. அத்தகைய பாதிப்புநிலைகள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதா?

எவ்வித முறையான அறிக்கைகளுமின்றி இங்குவருகைதந்து இங்கு எமது மக்களின் பூர்வீக காணிகளையும், அடர் வனங்களையும் ஆக்கிரமித்து தமிழ்மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையிலான மற்றும் முறையற்ற திட்டங்களையும் மகாவலி அதிகாரசபை மேற்கொள்ள முனைகின்றது.

நாம் சிங்கள மக்களுக்கோ, முஸ்லிம் மக்களுக்கோ எந்த இன மக்களுக்கும் எதிரானவர்கள் கிடையாது. பெரும்பான்மையின இனவாதிகளுக்கே எதிரானவர்கள்.

இவ்விதமான பாதிப்புக்களை தோற்றுவிக்கின்ற வகையிலான முறையற்ற திட்டங்களை மகாவலி அதிகாரசபை இங்கு ஏற்படுத்த முனைவதை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் வீழ்சிக்கு மகாவலி காரணமாக அமையும்.

மேலும் எமது தமிழர் தாயகப்பரப்புக்களில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்ற திணைக்களங்களே தமிழ் மக்களின் காணிகளை அதிகளவில் அபகரிப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்ற வகையில் செயற்படுகின்றன. இந்த திணைக்களங்களே இந்த ஆட்சியாளர்களின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைவார்கள். எனவே இந்த திணைக்களங்களின் அத்துமீறிய அபகரிப்புச் செயற்பாடுகளுக்கு கடிவாளமிடுமாறு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவிடம் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# தேசியத் தலைவரின் இல்லத்ததை அருங்காட்சியகமாக மாற்ற நடவடிக்கை!

## வல்வெட்டித்துறை நகரசபை சபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம்

10.02.2026

வல்வெட்டித்துறையில் உள்ள தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டினை அருங்காட்சியகமாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக வல்வெட்டித்துறை நகரசபை சபைத் தலைவர எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டினை பார்வையிட ஆயிரக்கணக்கில் படையெடுத்த மக்களில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள மக்கள்.

அவர்கள் அந்த மண்ணை எடுத்து சென்றதால் ஏற்பட்ட கோபத்தில், அந்த வீட்டை இலங்கை இராணுவம் முற்றாக இடித்து அகற்றி வெறும் மணல் தரையாக மாற்றினர்.

இந்நிலையில் தமிழ் மக்களின் கருத்துக்களுக்கு இடம் கொடுக்கும் வகையில் உலகத்தலைவர்கள் பலரின் வீடுகள் நினைவுச் சின்னங்களாக மாற்றப்பட்டதை போல தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டையும் அருங்காட்சியகமாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். எனினும் அதில் கட்டப்படுவதாக கூறப்படும் நூலகத்துக்கு எந்த தடையும் இல்லை.

அதில் தலைவர் பிரபாகரனின் வீட்டின் மாதிரியையும், அவரின் பெற்றோர்களின் திருவுருவச்சிலைகளையும் நிறுவவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்துள்ளோம்" எனவும் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.



# மூதூர், கிளிவெட்டி – குமாரபும் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல்

11.02.2026

மூதூர் , கிளிவெட்டி - குமாரபுரம் பகுதியில் இடம்பெற்ற மனிதப் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவு நாள் புதன் கிழமை (11) குமாரபுரம் கிராமத்தில் நினைவுகூரப்பட்டது பாதிக்கப்பட்ட மக்கள் நீதி கோரி நினைவு நாளை நினைவு கூர்த்தனர் .






நினைவு நிகழ்வில் சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஊடகவிய லாளர்கள், பொது மக்கள், பிரதேச அரசியல் வாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

இக் கொடூர சம்பவத்தில் 26 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் காயமடைந்திருந்தார்கள்.

குறித்த படுகொலைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தமது உறவுக ளுக்கு 30 ஆண்டுகள் கடந்தும் நீதி கிடைக்காத நிலையில் அதற்கான நீதியைக் கோரி குறித்த படுகொலையின் 30வது நினைவேந்தல் நிகழ்வை பாதிக்கப்பட்டவர்களின் உற வினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து முன்னெடுத்தனர்.

குறித்த பாதிப்பில் இருந்து மீளாத மக்கள் பொருளாதார ரீதி யாகவும் மிகவும் பாதிக்கப்பட்டநிலையில் வாழ்ந்து வரு கின்றார்கள்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் கிரா மத்தில் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுச் சம்பவத்தின் காரணமாக பெண்டிர், சிறுவர் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்ததுடன் 15வயதான சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட் டிருந்தார். இக் கொடூர சம்பவம் 1996.02.11ஆம் திகதி மாலை இடம்பெற்றிருந்தது.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக 1996ஆம் ஆண்டு மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் தெகிவத்தை இராணுவ முகாமில் சேவையில் இருந்த 8 இரா ணுவ வீரர் சாட்சியாளர்களினால் அடையாளம் காணப்பட்டு அனைவருக்கும் எதிராக குற்றவியல் பத்திரம் தாக்கல் செய்யப் பட்டது. பின்னர் குறித்த வழக்கு திருகோணமலை மேல் நீதி மன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டு நடைபெற்று வந்தது.

இந்நிலையில், அன்றைய யுத்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிரிகளின் வேண்டுகோளுக்கு அமைய சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் பாதுகாப்பு கருதி குறித்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட் டிருந்தது.









# யாழ். பல்கலைக்கழகத்தில் குமாரபுரம் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல்

11.02.2026

திருகோணமலை - கிளிவெட்டி, குமாரபுரம் படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்







கழகத்தில் இன்றைய நாள் புதன்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நடை பெற்ற நினைவேந்தலில் உயிரிழந்தவர்களுக்கு மலர்தூவி, சுடரேற்றி, வணக்கம் செலுத்தப்பட்டது.

1996.02.11 அன்று இடம்பெற்ற குமாரபுரம் படுகொலையில், 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட 09 சிறுவர், 09 பெண்டிர் உட்பட 26 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

**இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்கு முறையாலும்,தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

www.sangathamil.ca

# அல்லைப்பிட்டியில் படுகொலை செய்யப்பட்ட இளைஞனின் உறவினர் சவப்பெட்டியுடன் வீதியில் மறியல் போராட்டம்

12.02.2026

அல்லைப்பிட்டியில் வைத்து சிறீலங்கா காவல்துறையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டஇளைஞனின் இறுதிக் கிரியைகள் வட்டுக்கோட்டை - சித்தங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் வியாழக்கிழமை (12) அன்று இடம்பெற்றிருந்தது.





இதனிடையே இறுதிக்கிரியைகளின் பின்னர் பதாகைகளை தாங்கியவாறு சவப்பெட்டியுடன் வந்த உறவுகள் வீதியில் மறியல் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

முன்னதாக இறுதிக்கிரியைகளின் பின்னராக குழப்பங்களை எதிர்பார்த்து காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும் அவர்களை தாண்டி கொலையாளிகளான காவல் துறையினரை கைது செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கொல்லப்பட்ட தமது பிள்ளைக்கு நீதி வேண்டும், காவல்துறையினரின் அராஜகம் தொடர்கிறது என கோசமிட்டவாறு ஆர்பாட்டத்தில் குடும்பத்தவர்கள் ஈடுபட்டனர்.





அதேவேளை அல்லைப்பிட்டி துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த இளைஞனின் சம்பவத்தைச் சுற்றி பல சர்ச்சைகள் உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.





காவல்துறை வெளியிட்ட புகைப்படங்களும் அவர்கள் கூறும் தகவல்களும் ஒன்றுக்கொன்று முரண்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.







# வெடுக்குநாறி ஆதிலிங்கேசுவரர் ஆலயத்தில் சுதந்திரமான சிவராத்திரி வழிபாடுகளுக்கு இடமளிக்கப்படவேண்டும்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

13.02.2026

வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட, ஒலுமடு வெடுக்குநாறி ஆதிலிங்கேசுவரர் ஆலயத்தில் சைவமக்கள் சுதந்திரமாக சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படவேண்டுமெனவும், சைவ மக்களின் வழிபாட்டுரிமை பாதுக்கப்படவேண்டுமெனவும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இம்முறை வெடுக்குநாறி மலையில் சைவ மக்கள் சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபடுவதற்குரிய வழிவகைகள் ஏற்படுத்தப்படுமென வவுனியாவடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் உபாலி சமரசிங்கவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் 13.02.2026இன்று இடம்பெற்ற நிலையில், குறித்த கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப் பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
வெடுக்குநாறி மலையில் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற சிவராத்திரி தின வழிபாடுகளில் இடையூறுகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.



குறிப்பாக சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பக்தர்கள் மீது பொலிசாரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு பக்தர்களுக்குரிய குடிநீரை ஆலயப்பகுதிக்குள் எடுத்துச்செல்வதற்குத் தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதனால் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பக்கதர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

எனவே இம்முறை சிவராத்திரி தினவழிபாடுகளுக்கு அவ்வாறான இடையூறுகள் ஏற்படுத்தக்கூடாது. சைவமக்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு இடமளிக்கப்படவேண்டும். அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான சைவமக்களின் வழிபாட்டுரிமை பாதுகாக்கப்படவேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிலையில் இம்முறை தடைகளின்றி சுதந்திரமாக மக்கள் வழிபடுவதற்குரிய வழிவகைகள் ஏற்படுத்தப்படுமென வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் உபாலி சமரசிங்க மற்றும் தேசிய மக்கள் சக்தி சார்பான பாராளுமன்ற உறுப்பினர்களால் பதில் வழங்கப் பட்டிருந்தது.

மேலும் சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி ஆதிலிங்கேசுவரர் ஆலயத்திற்கு வருகைதருகின்ற அடியவர்களுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்குமாறு வவுனியா வடக்கு பிரதேசசபைத் தவிசாளருக்கு இதன்போது நாடாளமேன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்கள் உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மீன்பிடித்தலை தடை செய்யுமாறு கோரி முல்லைத்தீவு மீனவர் போராட்டம்

13.02.2026

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை தடை செய்யுமாறு கோரி முல்லைத்தீவு மீனவர் இன்று (13) போராட்டம் நடத்தினர்.



முல்லைத்தீவு கடற்கரையில் ஆரம்பமான பேரணியில் “சட்ட விரோத தொழில் அதிகரிப்பு”, “சிறுதொழில் மீனவரின் வாழ்வு பாதிப்பு”, “சட்டவிரோத தொழிலை தடைசெய்”, “சட்டவிரோத தொழில் நடவடிக்கைக்கு எதிராக அனுர அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை பின்வாங்காதே” என பல கோஷங்களுடன் போராட்டக்காரர் நடைபவனியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு சென்று தமது கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் கையளித்தனர்.

தொடர்ந்து, போராட்டக்காரர்களுக்கும் ஊடகங்களுக்கும் அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 20 வீதமானவர் மீன்பிடித்துறையில் ஈடுபட்டுள்ளதாகவும், சுமார் 71 கிலோமீட்டருக்கும் அதிகமாக கடல் உள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், மீன் வளம் சட்டவிரோத முறையில் அழிக்கப்படுவதாகவும், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாக இயன்ற வரை சட்டவிரோத செயற்பாடுகளை நிறுத்துவதாகும் என தெரிவித்ததுடன், எமது மாவட்டத்தில் மீன்பிடித்துறை தொடர்பான பிரச்சினையிலும் பார்க்க அதிகமாக இருந்த போதைப்பொருள் பிரச்சினை தற்போது ஓரளவு கட்டுப் படுத்தப்பட்டுள்ளதாகவும், போராட்டக்காரரின் கோரிக்கை யினை தாம் அரசாங்கத்திற்கு அனுப்புவதாகவும் அரசாங் கத்தின் கோரிக்கைகள் மீனவர்களுக்கு சாதகமாக இருக்கும் என நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்தார்.







# மாடுகளை திருடும் கும்பலை கட்டுப்படுத்தக் கோரி தீவகம் வேலணையில் பண்ணையாளர் போராட்டம்!

10.02.2026

சட்டவிரோத கால்நடைகளை திருடி இறைச்சியாக்கும் கும்பலை இல்லாதொழிக்க சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் தரப்பினர் முழுமையாக பங்களிப்பை வழங்க வேண்டும் எனக் கோரி வேலணையில் போராட்டம் நேற்று (12.02.2026) முன்னெடுக்கப்பட்டது.

தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தினரால் குறித்த போராடடம் வேலணை வங்ககாவடியில் நடைபெற்றது.





வங்களாவடி சந்தியில் ஆரம்பமான குறித்த போராட்டம் நடைபவனியாக வேலணை பிரதேச செயலகம் வரை, “வறிய பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதே” ”சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்த பொலிசாருக்கு துணை நிற்போம்” ” வாழ்வாதாரத்தை பறிக்காதே” “ஊர் கூடித் திருட்டை ஒழிப்போம்” உள்ளிட்ட பல்வேறு கோசங்களுடன் சென்று பிரதேச செயலர் தனபாலசிங்கம் அகிலனிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்திருந்தனர்.

இது தொடர்பில் போராட்டக்காரர் கூறுகையில் - யாழ் மாவட்டத்க்தின் ஏனைய இடங்களிலும் இந்த மாடு கடத்தல், இறைச்சியாக்கல், பிரச்சினை இருக்கின்றது.

ஆனாலும் தீவகத்தில் இது பாரதூரமாக உருவெடுத்துள்ளது.

வேலணை பிரதேசத்தில் 420 இற்கும் மேற்பட்ட பதிவுசெய்யப் பட பண்ணையாளர் இருகுகின்றார்கள்.

இவர்கள் சுமார் 3000 வரையான நல்லிப கறவை மாடுகளை கொண்டு குறித்த பால் உற்பத்தியை முன்னெடுக்கின்றனர்.

இதேநேரம் தீவக மக்களின் நுகர்வை தாண்டி மேலதிகமாக நாளாந்தம் 2000 லீற்றர் பால் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

அதேபோன்று 4000 வரையான ஆடுகளுகும் இங்கு வளர்க்கப்படுகின்றன.

அத்துடன் அல்லைப்பிட்டி பகுதியில் இதுவரை 4000 ஆயிரத்துக்கும் அதிகமான மாடுகள் திருட்டுக் கும்பல்களால் களவாடப்பட்டு இறைச்சியாக்கப்பட்டுவிட்டன.

அத்துடன் ஒட்டுமொத்த வேலணையை எடுத்துக்கொண்டால் அது 30 ஆயிரத்தை கடந்துவிட்டது.

இதில் நல்லின கறவை மாடுகளும் அடங்கும். இதே நேரம் இலங்கையில் 1959 ஆண்டின் 29 ஆம் இலக்கத்தில் கால் நடைகளை பாதுகாக்க மிகப்பெரும் சட்டம் இருக்கின்றது.

ஆனால் அது முழுமைதாக நடைமுறையாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

அத்துடன் எமது பிரதேசத்தில் தற்போது நாம் கொடுக்கும் அழுத்தம் காரணமாக பொலிசாரும் அதிகளவான திருடர்களை கைது செய்துள்ளனர். இது வரவேற்கத்தக்க விடையம்.

அந்தவகையில் கால்நடை திருட்டுக் கும்பலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் சட்டம் ஒழுங்கு தரப்பினருக்கு எமது ஒத்துழைப்பு இருக்கும் என்றும் தெரிவித்தனர்.

**நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.ca**




# ரொரான்ரோவில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 7 பொலிசார் கைது

05.2.2026

பொதுமக்கள் பாதுகாப்புக்காகப் பணியாற்ற வேண்டிய பொலிஸ் துறையிலேயே திட்டமிட்ட குற்றச் செயல்கள் ஈடுபட்டுள்ளமை கனடா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரொரான்ரோ பொலிஸ் சேவையில் பணியாற்றிய ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

யோர்க் பிராந்திய பொலிசார் முன்னெடுத்த நீண்டகால இரகசிய விசாரணையின் பின்னணியில் இந்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டத்தை அமல்படுத்த வேண்டியவர்களே சட்டத்தை மீறியதாகக் கூறப்படும் இந்த சம்பவம், பொலிஸ் அமைப்பின் நம்பகத்தன்மையை கடுமையாக கேள்விக்குறியாக்கியுள்ளது.







கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் உடனடியாக சம்பளமின்றி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் ரொரான்ரோ பொலிசின் 11 மற்றும் 12 பிரிவுகள் மற்றும் துப்பாக்கி மற்றும் வன்முறைக் கும்பல் போன்ற முக்கியப் பிரிவுகளில் பணியாற்றியவர்கள் என்பதும் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விசாரணையில் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் உத்தியோகத்தர்களில் இருவரின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

டிம் பார்ன்ஹார்ட் (12வது பிரிவு) மற்றும் ராப் பிளாக் ஆகியோரின் பெயர்களே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் சட்ட அமலாக்க அமைப்புகள் மீது வைத்திருந்த நம்பிக்கையை குலைக்கும் இந்த சம்பவம், கனடாவில் பொலிஸ் துறையின் உள்ளக கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விவாதங்களை மேலும் தீவிரப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கனடா பாரியளவில் பாதீட்டுப் பற்றாக்குறை குறித்து எச்சரிக்கை

05.2.2026

கனடா பாரியளவில் பாதீட்டுப் பாற்றாக்குறையை எதிர்நோக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2035ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)யின் 5 சதவீதத்தை பாதுகாப்புத் துறைக்கு செலவிட, கனடாவின் பிரதமர் மார்க் கார்ணி திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறு பாதுகாப்பு செலவுகள் உயர்த்தப்பட்டால் மத்திய அரசின் பாதீட்டு பற்றாக்குறையை 63 பில்லியன் டாலராக உயர்த்தும் என பாராளுமன்ற செலவுக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட அலுவலர் (PBO) ஜேசன் ஜாக்ஸ் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

புதிய இலக்கை அடைவதற்காக பாதுகாப்புச் செலவுகளை படிப்படியாக உயர்த்துவது, ஆண்டுக்கு கூடுதலாக சுமார் 33.5 பில்லியன் டாலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் அழுத்தத்தின்பேரில், நேட்டோ (NATO) உறுப்புநாடுகள் இராணுவச் செலவுகளை அதிகரிக்க ஒப்புக் கொண்டன.

குறிப்பாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதம் என்ற புதிய உயர்ந்த இலக்கை ஏற்றுக் கொண்டன.

கார்ணி அரசின் முதல் மத்திய வரவு-செலவுத் திட்டம் கடந்த இலையுதிர்காலத்தில் வெளியிடப்பட்டபோது, "புதிய நேட்டோ செலவுத் இலக்கை அடைவதற்கான பாதையில் கனடாவை கொண்டு செல்லும்" என உறுதி அளிக்கப்பட்டிருந்தது.

எனினும், அந்த இலக்கை எவ்வாறு அடைவது என்பதற்கான கணிப்புகளுக்கு ஆதாரமான தரவுகளை அரசு வெளியிடவில்லை என ஜாக்ஸ் தனது அறிக்கையில் விமர்சித்துள்ளார்.



அடுத்த ஒரு தசாப்த காலத்தில் பாதுகாப்புச் செலவுகளை அதிகரிப்பது, 2035ஆம் ஆண்டில் கனடாவின் மத்திய அரசின் கடன்-மொத்த தேசிய உற்பத்தி விகிதத்தை 6.3 சதவீத புள்ளிகளால் உயர்த்தும் அபாயம் உள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் சனவரியில் 25,000 வேலைகள் இழப்பு

06.02.2026

சனவரி மாதத்தில் கனடா பொருளாதாரம் 25,000 வேலை வாய்ப்புகளை இழந்துள்ளதாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், வேலை தேடுபவர்களின் எண்ணிக்கை குறைந்ததன் காரணமாக, வேலைவாய்ப்பில்லா விகிதம் 6.8 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதமாக குறைந்துள்ளது.

சனவரியில் ஏற்பட்ட வேலை இழப்புகள் பெரும்பாலும் தனியார் துறையிலும், பகுதி நேர வேலைகளிலும் பதிவாகியுள்ளன.

குறிப்பாக 25 முதல் 54 வயதுக்குட்பட்ட பெண்களிடையே இந்த இழப்புகள் அதிகமாக இருந்ததாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் வேலை இழப்புகளின் மிகப்பெரிய தாக்கத்தை ஒன்ராரியோ மாகாணம் சந்தித்துள்ளது. குறிப்பாக உற்பத்தித் துறையில் (Manufacturing) கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

சனவரியில் மட்டும் உற்பத்தித் துறை 28,000 வேலைகளை இழந்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்க வரித் தடைகள் (Tariffs) துறையை பாதிப்பதற்கு முன்பே, இந்த துறையில் மொத்தமாக சுமார் 51,000 வேலைகள் குறைந்துள்ளன.

இதனுடன், கல்வித் துறை மற்றும் அறிவியல், தொழில்நுட்ப சேவைத் துறைகளிலும் வேலை இழப்புகள் பதிவாகின.

ஆனால் தகவல், கலாசாரம், பொழுதுபோக்கு துறைகளிலும், வணிகம், கட்டிடம் மற்றும் பிற ஆதரவு சேவைத் துறைகளிலும் ஏற்பட்ட வேலை உயர்வுகள், சில அளவுக்கு இழப்புகளை சமநிலைப்படுத்தின.

சனவரியில் சராசரி மணிநேர ஊதியம் வருடாந்த அடிப்படையில் 3.3 சதவீதம் உயர்ந்துள்ளது. இது டிசம்பர் மாதத்தை விட சற்றுக் குறைவான உயர்வாகும்.




இந்த ஜனவரி தொழிலாளர் சந்தை கணக்கெடுப்பு, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குப் பிறகு பதிவான முதல் மொத்த வேலை இழப்பாகும்.



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# கிரீன்லாந்தில் கனடா தூதரகத்தைத் திறந்தது!

06.02.2026

டென்மார்க்கிலிருந்து கிரீன்லாந்தை எடுத்துக்கொள்வதாக அமெரிக்கா அச்சுறுத்தல் விடுத்த நிலையில் கனடாவும் பிரான்சும் ஆர்க்டிக் தீவில் புதிய தூதரகங்களைத் திறக்கின்றன. அத்துடன் கனடாவும் மற்றும் பிரான்சும் ஆர்க்டிக் பாதுகாப்பை அதிகரிக்க விரும்புவதாகக் கூறுகின்றன.



டென்மார்க் மற்றும் அரை தன்னாட்சி பெற்ற டென்மார்க் பிரதேசமான கிரீன்லாந்துக்கு அமெரிக்காவிடமிருந்து தொடர்ச்சியான மற்றும் ஆக்கிரோஷமான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதால் அதற்கான ஆதரவைக் குறிக்கிறது.

நேற்று வெள்ளிக்கிழமை கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த், நூக்கில் ஒட்டாவாவின் துணைத் தூதரகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

கிரீன்லாந்தில் உள்ள கனடியர்களுக்கு தூதரக சேவைகளை இந்த தூதரகம் வழங்கும், அத்துடன் கனடா-கிரீன்லாந்து இருதரப்பு மற்றும் வணிக உறவுகளை வலுப்படுத்தும், மக்களிடையேயான உறவுகள் மற்றும் இயக்கம் ஆகியவற்றை வளர்க்கும் மற்றும் ஆர்க்டிக் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பில் ஒத்துழைப்பை மேம்படுத்தும்" என்று கனடாவின் வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கிரீன்லாந்தில் தூதரகத்தைத் திறந்த முதல் ஐரோப்பிய ஒன்றிய நாடாக பிரான்ஸ் திகழ்கிறது.

கிரீன்லாந்தில் திறக்கப்பட்ட முதல் பிரான்சின் புதிய துணைத்



தூதரகத்தை, வரும் வாரங்களுக்குள் அதன் வெளியுறவு அமைச்சர் பார்வையிடுவார் என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

டென்மார்க் இராச்சியத்தின் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிப்பதில் பிரான்ஸ் தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது என்று பிரெஞ்சு வெளியுறவு அமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கனடாவில் இரத்த அழுத்த மருந்துகள் திரும்பப்பெறல் அறிவிப்பு: எச்சரிக்கை

09.02.2026

உயர் இரத்த அழுத்தத்திற்கு பயன்படுத்தப்படும் மருந்து தொடர்பாக ஏற்பட்ட சிக்கலால், நாடு முழுவதும் அவசர திரும்பப்பெறல் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுகாதார திணைக்களம் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது. MAR-Amlodipine 5 mg மாத்திரைகளின் இரண்டு தொகுதிகள் திரும்பப்பெறப்பட்டுள்ளன.

சில மருந்து போத்தல்களில் தவறான மருந்து நிரப்பப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

MAR-Amlodipine பொதுவாக உயர்ந்த இரத்த அழுத்தம் மற்றும் மார்பு வலி சிகிச்சைக்காக வழங்கப்படும் மருந்து என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் உற்பத்தியாளர் Marcan Pharmaceuticals Inc. நிறுவனத்தின் தவறுதலால், குறைந்த இரத்த அழுத்தத்தை சிகிச்சை செய்யப் பயன்படுத்தப்படும் Midodrine 2.5 mg மாத்திரைகள் சில MAR-Amlodipine பாட்டில்களில் நிரப்பப்பட்டிருக்கலாம் என கனடிய சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

சரியான MAR-Amlodipine 5 mg மாத்திரைகள்:

• எட்டு பக்கங்களுடன் (Octagonal Shape) இருக்கும்

• வெள்ளை அல்லது ஓரளவு வெண்மை நிறத்தில் இருக்கும்

• "210" மற்றும் "5" என்ற எண்கள் அச்சிடப்பட்டிருக்கும்

தவறுதலாக நிரப்பப்பட்ட Midodrine 2.5 mg மாத்திரைகள்:

• வட்ட வடிவில் இருக்கும்

• "M2" என்ற குறியீடு பொறிக்கப்பட்டிருக்கும்




உயர் இரத்த அழுத்தம் கொண்ட நோயாளிகள் தவறுதலாக Midodrine எடுத்தால், ஆபத்தான அளவில் இரத்த அழுத்தம் அதிகரித்தல், தலைச்சுற்றல், மயக்கம் மற்றும் உடல் உறுப்புகள் சேதமடையும் அபாயம் ஏற்படலாம் என கனடிய சுகாதார திணைக்களம் எச்சரித்துள்ளது.

# கனடாவில் 400இக்கும் மேற்பட்ட கனடியப் பொலிஸ் (RCMP) உத்தியோகத்தர் மீது தவறான நடத்தை குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றனர்!

09.02.2026

கனடாவில் 2024 ஆம் ஆண்டில் 400-க்கும் மேற்பட்ட கனடிய பொலிஸ் (RCMP) உத்தியோகத்தர் மீது ஒழுங்கீன குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

கனடிய பொலிஸ் வெளியிட்ட தகவலின்படி இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில் 408 ஊழியர்களைச் சார்ந்து மொத்தம் 443 ஒழுங்கீன குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் விசாரணை முடிவடைந்த வழக்குகளில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பகுதி "கடுமையான" ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு வழிவகுத்துள்ளது.

கடுமையான நடவடிக்கைகளில் பதவி உயர்வு தகுதி நீக்கம், 80 மணிநேரத்திற்கும் அதிகமான சம்பளத்தை இழக்க வேண்டிய நிலை போன்றவை அடங்கும்.

மேலும், 10 உத்தியோகத்தர் தாழ்ந்த பதவிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இரட்டிப்பு அளவாகும். மிகவும் கடுமையான நடவடிக்கையாக, 7 சந்தர்ப்பங்களில் பணிநீக்கம் அல்லது தன்னார்வ இராஜினாமைக்கு உத்தரவு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவரங்கள் ஜனவரி 21 ஆம் திகதி அமைதியாக வெளியிடப்பட்ட "கனடிய பொலிஸ் ஒழுங்கு மேலாண்மை அறிக்கை" யில் இடம்பெற்றுள்ளன.

தனிப்பட்ட வழக்குகள் குறித்து விரிவான தகவல்கள் வழங்கப்படாதபோதிலும், ஒழுங்கீன நடத்தைகளில் தவறான சமூக ஊடக பதிவுகள், பாலியல் ஒழுங்கீனம், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் குற்றச் சட்ட மீறல்கள் போன்றவை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள உயர்நிலைப் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு: பத்து பேர் பலி

11.02.2026

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள டம்ப்ளர் ரிட்ஜ் உயர்நிலைப் பாடசாலையில் நேற்று (10) பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலர் உயிரிழந்துள்ளனர்.



இந்தத் தாக்குதலில் சந்தேகநபர் உட்பட குறைந்தது 10 பேர் உயிரிழந்திருக்கலாம் எனவும், 25-க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கலாம் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டம்ப்ளர் ரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள குறித்த பாடசாலைக்குள் நேற்று மதியம் புகுந்த மர்ம நபர் ஒருவர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இதனையடுத்து அப்பகுதியில் அவசரகால எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களைப் பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு பொலிசார் அறிவுறுத்தினர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் பழுப்பு நிற முடி மற்றும் ஆடை அணிந்திருந்ததாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், குறித்த சந்தேகநபர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.



பாடசாலைத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மற்றுமொரு சம்பவம் அருகில் உள்ள வீடொன்றிலும் இடம்பெற்றுள்ளது. அங்கிருந்தும் இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர் மற்றும் அம்பியுலன்ஸ் மூலம் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவம் கனடா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சுகாதாரத் தகவல்களுக்கு நோயாளிகள் செயற்கை நுண்ணறிவுத் தளங்களை நாடுவது குறித்து எச்சரிக்கை!

## கனடிய மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் மார்கோட் பர்னெல்

10.02.2026

சுகாதார தகவல்களுக்கு அதிகமான நோயாளிகள் செயற்கை நுண்ணறிவு (AI) தளங்களை நாடி வருவது கவலைக்குரியது என கனடிய மருத்துவ சங்கம் (Canadian Medical Association – CMA) எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் மருத்துவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த தேசிய அமைப்பு, முதன்மை சுகாதார சேவை வழங்குநர்களை (Primary Care Providers) அணுக முடியாத பலர், எளிதில் கிடைக்கும் மற்றும் விரைவான பதில்களை வழங்கும் AI தளங்களை நாடி வருவதாக தெரிவித்துள்ளது.

இதில் அதிகமான தகவல்கள் தவறானவை, வழித் தவறவைக்கும் தகவல்கள் அல்லது முற்றிலும் பொய்யானவை. இது நோயாளிகள் மற்றும் மருத்துவர்களுக்கிடையேயான நம்பிக்கையை பாதிக்கிறது என கனடிய மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் மார்கோட் பர்னெல் கூறியுள்ளார்.

Abacus Data என்னும் நிறுவனத்தினால் நடத்தியுமுள்ள புதிய கருத்துக்கணிப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.


5,001 கனடியர்களிடம் அவர்கள் சுகாதார தகவல்களை எங்கிருந்து பெறுகிறார்கள், எந்த மூலங்களை நம்பகமானவை என கருதுகிறார்கள் என்பது குறித்து கருத்து அறியப்பட்டுள்ளது.

பங்கேற்றவர்களில் பெரும்பாலானோர், குறிப்பாக ஒரு நோய், அறிகுறி அல்லது சிகிச்சை முறைகள் குறித்த தகவல்களை அறிய இணையத்தை நாடுவதாக தெரிவித்துள்ளனர்.

64% பேர் இணையத்தில் பார்த்த சுகாதார தகவல்கள் பின்னர் தவறானவை அல்லது வழித்தவற வைப்பவை என தெரிந்ததாக கூறியுள்ளனர்.

மேலும் 29% பேர் இது அரிதாகவே நடக்கும் என தெரிவித்துள்ளனர். AI மூலம் வழங்கப்படும் சுகாதார தகவல்களை நம்புகிறோம் என கூறியவர்கள் 27% மட்டுமே. இருப்பினும், சுமார் அரைபங்கு பேர் Google AI தேடல்கள் அல்லது ChatGPT போன்ற தளங்களை சுகாதார தகவல்களுக்கு பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

38% பேர் சிகிச்சை ஆலோசனைக்காக ChatGPT பயன்படுத்தியதாக கூறியுள்ளனர்.




AI ஆலோசனைகளை பின்பற்றியவர்கள், அதனால் உடல் நலத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்பட்டதாக கூறும் வாய்ப்பு, மற்றவர்களை விட ஐந்து மடங்கு அதிகம் என கருத்துக்கணிப்பு கூறுகிறது.

நோயாளிகள் இணையத்தில் தகவல் தேடி வருவது புதியது அல்ல. ஆனால் AI தளங்கள் ஒருவரின் முழுமையான மருத்துவ வரலாற்றை கருத்தில் கொள்ளாமல் 'தெளிவான' பதில்களை வழங்குகின்றன," என டாக்டர் பர்னெல் கூறியுள்ளார்.

# அமெரிக்கா மற்றும் கனடாவை இணைக்கும் புதிய பாலம் திறப்பது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி எச்சரிக்கை

10.02.2026

அமெரிக்கா மற்றும் கனடாவை இணைக்கும் புதிய "கோர்டி ஹவ் சர்வதேச பாலம்" திறப்பைத் தடுக்கலாம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வாஷிங்டன்-ஒட்டாவா உறவில் ஏற்பட்டுள்ள பொருளாதார பதற்றம் மேலும் தீவிரமடைந்துள்ள சூழலில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

டிட்ராய்ட் (அமெரிக்கா) மற்றும் ஒனராரியோ மாகாணத்தின் விண்ட்சர் (கனடா) நகரங்களை இணைக்கும் 1.5 மைல் நீளமுடைய இந்தப் பாலத்தின் முக்கிய கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பரிசோதனை காலத்தைத் தொடர்ந்து இந்த ஆண்டுக்குள் திறக்கப்பட உள்ளது.

ஆனால், "அமெரிக்கா வழங்கிய அனைத்திற்கும் முழுமையான இழப்பீடு கிடைக்கும் வரை, மேலும் கனடா அமெரிக்காவுக்கு உரிய நியாயமும் மரியாதையும் வழங்கும் வரை இந்தப் பாலத்தை திறக்க நான் அனுமதிக்க மாட்டேன். உடனடியாக பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவோம்," என டிரம்ப் தனது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாலத் திறப்பைத் தடுக்க டிரம்ப் எந்த அதிகாரத்தின் கீழ் செயல்படுவார் என்பது தெளிவாக இல்லை.

கனடா "அமெரிக்கா மற்றும் கனடா இரு பக்கங்களையும் முழு மையாகக் கட்டுப்படுத்துகிறது; மேலும் அமெரிக்கப் பொருட்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்படவில்லை" என டிரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், 4 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான இந்தப் பாலம் கனடா அரசால் முழுமையாக நிதியளிக்கப்பட்டு கட்டப்பட்டாலும், 2012 ஒப்பந்தத்தின் படி இது கனடா அரசு மற்றும் மிச்சிகன் மாநிலம் ஆகியவற்றின் கூட்டு உரிமையில் இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் இரும்பு மற்றும் எஃகு அமெரிக்கா அல்லது கனடாவில் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும் ஒரு நாடு மற்றொன்றை விட முன்னுரிமை



பெறக்கூடாது என்றும் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

விண்ட்சர் நகர மேயர் ட்ரூ டில்கென்ஸ், "மிச்சிகன் பகுதி கட்டுமானத்தில் அமெரிக்க எஃகு பயன்படுத்தப்பட்டுள்ளது. இது நம்ப முடியாத குற்றச்சாட்டு," என தெரிவித்துள்ளார்.

# கனடா – கியூபா நாட்டுக்கு இடையிலான விமான சேவை இடை நிறுத்தம்

## ஏர் கனடா விமான நிறுவனம்

10.02.2026

கனடாவுக்கும் கியூபாவுக்கும் இடையிலான விமான சேவையை ஏர் கனடா விமான நிறுவனம் நிறுத்தியுள்ளது.

சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாகவே, கியூபா நாட்டுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உரசல் காணப்படுகிறது.

ஏற்கனவே சரியான மின்சாரம் கிடைக்காததால் அவதியுற்று வரும் கியூபா, ட்ரம்பின் அச்சுறுத்தல்களால் கூடுதல் அவதிக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில், தடை செய்யப்பட்ட வெனிசுலா எண்ணெய் டேங்கர்களை அமெரிக்க நிர்வாகம் கைப்பற்றியுள்ளதால் நிலைமை மேலும் மோசமாகி எரிபொருள் மற்று மின்சார நெருக்கடி ஏற்பட்டுள்ளது அந்நாட்டில்.

மேலும், கியூபாவுக்கு எந்த நாடாவது எண்ணெய் வழங்கினால், அந்த நாட்டின் மீது அமெரிக்கா தடைகள் விதிக்கும் என்று வேறு ட்ரம்ப் மிரட்டியுள்ளார்.

கியூபா, கனேடியர்கள் விரும்பி சுற்றுலா செல்லும் நாடுகளில் ஒன்றாகும். விடயம் என்னவென்றால், கியூபாவுக்குச் செல்லும் விமானங்கள், அங்கிருந்து திரும்பும்போது, அவற்றிற்கு எரிபொருள் நிரப்பப்படவேண்டும்.

ஆனால், கியூபாவில் விமானத்துக்கான எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஆகவே, கியூபாவுக்கும் கனடாவுக்கும் இடையி லான விமான சேவையை நிறுத்தவேண்டிய நிலை உருவாகியுள்ளதாக ஏர் கனடா நிறுவனம் தெரிவித்துள்ளது.

என்றாலும், ஏற்கனவே கியூபாவிலிருக்கும் கனேடியர்கள் சுமார் 3,000 பேரை, எப்படியாவது வரும் நாட்களில் கனடா




வுக்கு திரும்ப அழைத்துவர இருப்பதாகவும் ஏர் கனடா நிறுவனம் தெரிவித்துள்ளது.


# முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# ரொரான்ரோ மாநகரில் பனிப்பதையில் வாகனம் நிறுத்தியவர்களுக்கு அபராதம் விதிப்பு!

10.02.2026

சனவரி மாதத்தில் பதிவான சாதனை அளவிலான பனிப் பொழிவுக்கு பின்னர், ரொரான்ரோ மாநகரில் “பனிப்பாதை” எனக் குறிக்கப்பட்ட சாலைகளில் வாகனங்களை நிறுத்திய ஓட்டுநர்களுக்கு தண்டப்பணஅபராதங்கள் விதிக்கப்பட்டுள ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் நகரம் பாரிய பனிப்பொழிவு தொடர்பில் அறி வித்ததையடுத்து, பனியை அகற்றுவதற்காக பனிப்பாதைகளில் வாகன நிறுத்தம் முழுமையாகத் தடைசெய்யப்பட்டது.

இதனை மீறியதாக 21,508 அபராதச்சீட்டுகள் வழங்கப் பட்டுள்ளன.

சனவரி 25ஆம் திகதி, ரொரான்ரோவின் சில பகுதிகளில் சுமார் 60 சென்டிமீட்டர் அளவிற்கு பனிப்பொழிவு பதிவானதைத் தொடர்ந்து இந்த அவசரநிலை அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புகள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நிறைவுக்கு வந்தன.

இந்த காலப்பகுதியில் பனிப்பாதைகளிலும், பனியை அகற்றும் நடவடிக்கைக்கு முன் தற்காலிகமாக நிறுவப்பட்ட ஆரஞ்சு நிற “No Parking – Snow Removal” பலகைகள் உள்ள இடங்களிலும் வாகனங்களை நிறுத்தியவர்கள் அதிகபட்சமாக 500 டொலர் வரை அபராதமும், வாகன இழுத்துச் செல்லும் (towing) நடவடிக்கையும் எதிர்கொண்டனர்.

மேலும், பனியை அகற்றும் பணிகளைத் தடை செய்த குற்றச் சாட்டில் 152 கூடுதல் அபராதச்சீட்டுகள் வழங்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

சனவரி 15 முதல் 30ஆம் திகதி வரை மட்டுமே வழங்கப்பட்ட அபராதங்களின் மொத்த தொகை 2,193,600 டொலராகும்.




எனினும், இந்த கணக்கில் குறிப்பிட்ட நாட்களுக்கு வெளியான அபராதங்கள் சேர்க்கப்படாததால், உண்மையான தொகை இதைவிட அதிகமாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# எக்லிண்டன் நகரூடான இலகுதொடரிப் போக்குவரத்து வழித்தடம் 05 திறப்பு: போக்குவரத்துச் சேவையில் முக்கிய படிக்கல்

13.02.2026

எக்லிண்டன் நகரூடான இலகு தொடரிப் போக்கு வரத்து வழித் தடம் (5) பிப்ரவரி 8 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அதி காரப்பூர்வமாக திறக்கப்பட்டது. இது ரொரான்ரோ முழுவதும் உள்ள போக்குவரத்து பயணிகளுக்கு ஒரு முக்கிய மைல்கல் லாகும். முதல்வர் டக் ஃபோர்டின் தலைமையில், மெட்ரோ லின்க்ஸ்“டன் (MetroLinx) இணைந்து இந்த திட்டம் நிறைவு செய்யப்பட்டு, செயற்பாட்டு பொறுப்பு ரி.ரி.சி.க்கு (TTC) மாற்றப் பட்டது.



10 கிலோமீட்டருக்கும் மேல் நிலக்கீழ்த் தடத்தை உள்ளடக்கி, மொத்தமாக 19 கிலோமீட்டர் நீளத்தில், 25 நிலையங்கள் மற் றும் நிறுத்தங்களுடன் இயங்கும் எக்லிண்டன் வழித்தடம் 5, வாரத்தின் ஒவ்வொரு வேலை நாளிலும் 1,23,000-க்கும் மேற்பட்ட பயணிகளுக்கு சேவை வழங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. கென்னடி முதல் மவுண்ட் டென்னிஸ் வரைக்குமான பயண நேரத்தை சுமார் ஒரு மணி நேரம் குறைப்பதன் மூலம், நகரின் கிழக்கு - மேற்கு போக்குவரத்தை குறிப்பிடத்தக்க வகை யில் மேம்படுத்தும். திறப்பு நாளை முன்னிட்டு, பிப்ரவரி 8 அன்று இந்த சேவை பயணிகளுக்கு இலவசமாக வழங்கப் பட்டது.

“இது குடும்பங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உண்மை யான போக்குவரத்து தீர்வுகளை வழங்குவதற்கான முயற்சி யாகும்” என்று அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், “எக்லிண்டன் நகரூடான திட்டம் நிறைவு பெற்றதன் மூலம் பயணிகளுக்கு வேகமான, நம்பகமான போக்குவரத்து, குறைந்த நெரிசல், மற்றும் நேர மிச்சம் ஆகியவை பயனாகக் கிடைக்கின்றன. எங்கள் அரசு திட்டங்களை நிறைவேற்றி, ஒன்ராறியோவை முன்னேற்றும் பணியில் உறுதியாக உள்ளது” என்றார்.

ஸ்கார்பரோ மக்களுக்காக, வழித்தடம் 5 நகரம் முழுவதும் இணைப்புகளை மேம்படுத்துவதோடு, மூன்று ரி.ரி.சி. மெட்ரோ நிலையங்கள், இரண்டு கோ (GO) இணைப்பு வழித்தடங்கள், மற்றும் 68 பேருந்து வழித்தடங்களுடன் இணைந்து, எளிதான மாற்றுப் பயண வசதிகளையும் வேலை, கல்வி, மற்றும் சேவைகளுக்கான அணுகலையும் மேம்படுத்துகிறது. இந்த




திட்டம் மண்டல போக்குவரத்து ஒருங்கிணைப்பை வலுப் படுத்தி, ஒன்ராரியோவின் “ஒற்றைக்கட்டண” திட்டத்தையும் ஆதரிக்கிறது.

எக்லிண்டன் நகரூடான சேவை ஒன்ராரியோவின் சுமார் 70 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான போக்குவரத்து விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்த திட்டம் மாநிலம்ம் முழு வதும் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட போக்குவரத்துத் திட் டங்களைச் செயற்படுத்தி, நெரிசலைக் குறைத்து, பொருளாதார வளர்ச்சியை ஆதரித்து, ரொரான்ரோ பெரும்பாகம் முழுவதும் உள்ள சமூகங்களுக்கு மேலும் இணைந்த எதிர்காலத்தை உருவாக்குகிறது.

வெளிவந்துவிட்டது

2026 வணிகம்

வர்த்தகக் கையேடு

மேலதிக தொடர்புகளுக்கு: 437.345.4203

மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக – எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக – எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டன.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# தமிழக செய்திகள்



## புரட்சித் தமிழகம் கட்சித் தலைவர் ஏர்போர்ட் மூர்த்தி மீதான குண்டர் தடுப்புச் சட்டம் ரத்து

01.02.2026



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் மீது தாக்குதல் நடத் தியாக, ஏர்போர்ட் மூர்த்தி மீது பொலிசார் வழக்கு பதிவு செய்து அவரை கடந்த ஆண்டு கைது செய்தனர்.

பின்னர் ஏர்போர்ட் மூர்த்தியை குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறை யில் அடைக்க மாநகர காவல் ஆணையர் உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து ஏர்போர்ட் மூர்த்தி சார்பில் அவரது மனைவி ஜெய்குமாரி, சென்னை உயர் நீதிமன்றத் தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசா ரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் வி.பார்த்திபன் ஆஜராகி, "பொலிசார் இந்த வழக்கை சரிவர விசாரிக்கவில்லை.

தாக்குதல் நடத்தியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்காமல், தாக்குதலுக்கு உள்ளானவரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறை யில் அடைத்துள்ளனர்.

எனவே, குண்டர் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்" என வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஏர்போர்ட் மூர்த்தி மீதான குண்டர் தடுப்புச் சட்ட உத்தர வை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளனர்.

## ஈழத்தமிழருக்காக உயிர் நீத்த பள்ளப்பட்டி இரவி அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நாள்!

02.02.2026

2009ஆம் ஆண்டு சனவரி 29ஆம் ஈழத்தமிழருக்காக தீக் குளித்த முத்துக்குமாரின் மரணம் தமிழகத்தையே உலுக்கிப் போட்ட ஒரு நிகழ்வாகும்.

தொலைக்காட்சியிலும், செய்தித்தாள்களிலும் இதனைப் பார்த்து மனமுடைந்து போனார் ஒரு இளைஞர். இது பற்றி தனது மனைவியிடம், இலங்கையிலே நமது தமிழர்கள் அநியாய மாக கொல்லப்படுகிறார்களே?" என்று மனம் நொந்து பேசினார்.

சனவவரி 31ஆம் நாள் மாலை 6 மணிக்கு தனது வீட்டை விட்டுப் புறப்பட்டார். தான் கொண்டு வந்த மண்ணெண் ணெயை உடம்பில் ஊற்றிக் கொண்டு "இலங்கைத் தமி ழர்களை காப்பாற்றுங்கள்" என்று முழக்கமிட்டபடி தன் உடம் பில் தீ வைத்துக் கொண்டார்.

அந்த இளைஞரின் பெயர் இரவி. திண்டுக்கல் மாவட்டம் நிலக் கோட்டை அருகில் உள்ள பள்ளப்பட்டி ஊரைச் சேர்ந்தவர். அவருக்கு சித்ரா என்ற மனைவியும், பிரபாகரன் ஒரு மகனும் உண்டு.

மனைவி சித்ரா தனது கணவரின் கருகிய உடலை எடுத்துக் கொண்டு நிலக்கோட்டை மருத்துவமனைக்கு ஓடினார். மருத் துவர்கள் சிகிச்சை அளிக்க மறுத்தனர்.

அதன் பிறகு உயிருக்கு போராடிய நிலையில் மதுரை இராசாசி மருத்துவமனையில் இரவி அனுமதிக்கப்பட்டார்.

அன்றைய கருணாநிதி அரசு 1965 மொழிப்போரில் பக்தவத் சலம் அரசு கையாண்ட வழிமுறையை மேற்கொண்டது.

முத்துக்குமாரின் மரணத்தால் எழுந்த மாணவர் சமூகத்தின் எழுச்சியை தடுக்க நினைத்தது. கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை என்று அறிவித்தது.

முத்துக்குமார் மரணசாசனம் எழுதிவிட்ட காரணத்தால் அதனை கொச்சைப்படுத்த முயன்று தோற்றுப்போனது.

மீண்டும் அதே வழி முறையை பள்ளப்பட்டி இரவியின் மரணத் திலும் கடைபிடித்தது. அதன்படி ஸ்டவ் அடுப்பு வெடித்து தீக்காய மடைந்ததாக பொய்த் தகவலை காவல்துறை மூலம் வெளி யிட்டது.

எங்கள் குடிசை வீட்டில் ஸ்டவ் அடுப்பு என்பதே இல்லை, விறகு அடுப்பு மட்டுமே பயன்படுத்துவதாக இரவியின் மனைவி சித்ரா குற்றம் சாட்டினார்.

பிறகு மீண்டும் காவல்துறை கூடுதல் டி.ஜி.பி. இராசேந்திரன் என்பவர், "கணவன்- மனைவி குடும்பச் சண்டையே தீக்குளிப் பிற்கு காரணம்" என்று கதை கட்டினார்.

ஆனால், இரவி கொடுத்த வாக்குமூலமானது முதல் தகவல் அறிக்கையில் ஒரு பெண் காவலர் மூலம் எழுதப்பட்டு தீக்குளிப் பிற்கான காரணம் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது.


அது வருமாறு:
"நான், இலங்கைத் தமிழர்களுக்காக வீட்டில் இருந்த மண்ணெண்ணெயை என் மீது ஊற்றிக் கொண்டு, வீதிக்கு வந்து தீக்குளித்தேன். அப்போது என் மனைவி தண்ணீர் எடுக்க கிணற்றடிக்குப் போய் இருந்தாள். என் பிள்ளைகள் வீட்டுக்கு உள்ளே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

என் உடம்பை நெருப்பு பற்றி எரிந்த போது உடைகள் கருகிய தால், அம்மணமாக கிடக்க நேரிட்டதால் மானத்தை மறைக்க பக்கத்தில் இருந்த ஈரச்சாக்கை எடுத்து என் இடுப்பில் சுற்றிக் கொண்டேன்."

ஒரு காவல்துறை உயர் அதிகாரி மூலம் முதல் தகவல் அறிக் கையை மூடி மறைத்து இரவியின் மரணத்தை கொச்சைப் படுத்தி பேச வைத்தவர் 'குடும்பச்சண்டை' புகழ் கருணாநிதி தான் என்பது அன்றைக்கு வெட்ட வெளிச்சமானது.

80 விழுக்காடு தீக்காயங்களோடு உள்ள ஒருவரை காப்பாற்ற முடியாது என்று மருத்துவர்கள் கைவிட்ட நிலையிலே, பிப். 2ஆம் நாள் தனது மகனுக்கு தலைவர் பிரபாகரன் பெயரைச் சூட்டி மகிழ்ந்த அந்தப் பெருவீரன் தமிழின உணர்வாளர்களை துயரம் கொள்ளச் செய்திடும் வகையில் வீரச்சாவைத் தழு வினான்.

பள்ளப்பட்டி இரவிக்கு வீரவணக்கம்!




-கதிர் நிலவன்

www.sangathamil.ca

# தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரிய மனு: வழக்கு ஒத்திவைப்பு

06.02.2026





தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான மத்திய அரசின் தடைக்கு எதிராக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தொடர்ந்த வழக்கில் மத்திய அரசு அவகாசம் கேட்டதால் வழக்கின் விசாரணையை சென்னை உயர்நீதிமன்றம் பெப்ரவரி 16-ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி 2013இல் வைகோ தொடர்ந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை (06) அன்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் வைகோ நேரில் ஆஜராகி, இந்தத் தடை ஏன் சட்ட விரோதமானது என்பதற்கான முதற்கட்ட வாதங்களை முன் வைத்தார்.

வெள்ளிக்கிழமை (06) அன்று இடம்பெற்ற விசாரணையின் போது மத்திய அரசு அவகாசம் கேட்டதால் வழக்கு பெப்ரவரி 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெள ்ளிக்கிழமை (06) அன்று இடம்பெற்ற வழக்கு விசாரணை குறித்து வைகோ கூறுகையில், "விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டையும் இணைத்து தமிழீழம் அமைக்க முயல்கிறார்கள்" என்பதுதான் மத்திய அரசின் முக்கியமான குற்றச்சாட்டு. இதை நான் முற்றிலுமாக மறுக்கிறேன். வட்டுக் கோட்டை தீர்மானத்திலோ, தலைவர் பிரபாகரன் மாவீரர் நாள் உரைகளிலோ ஒருபோதும் தமிழ்நாட்டை இணைக்கும் நோக்கம் இருந்ததில்லை என்பதை ஆதாரங்களுடன் விளக்கினேன்.

பிரபாகரன் பின்னால் இருக்கும் தமிழீழ வரைபடத்தில் கூட தமிழ்நாட்டின் ஒரு சிறு துளி இடம் கூட இருந்ததில்லை. ஈழ மண்ணை மீட்பது மட்டுமே அவர்களின் நோக்கம். மத்திய அரசின் அடிப்படை வாதமே பொய்யானது எனும்போது, இந்தத் தடையின் மொத்த கட்டுமானமும் (The whole edifice of the ban) சரிந்து விழுகிறது.

ஆயுதப் போராட்டம் பற்றி கேள்வி எழுப்பப்பட்ட போது, 1948 ஐநா மனித உரிமைகள் பிரகடனத்தின் முகவுரையை மேற்கோள் காட்டினேன். ஒரு நாட்டில் அடக்குமுறையும் சர்வாதிகாரமும் நிலவும் போது, அதை எதிர்த்துப் புரட்சி செய்வது (Rebellion against tyranny) நியாயமானது என ஐநா-வே அங்கீகரிக்கிறது.

மாபெரும் தலைவர் நெல்சன் மண்டேலா ரிவோனியா நீதிமன்றத்தில் சொன்னது போல - அரசாங்கம் ஆயுதங்களால் மக்களை ஒடுக்கும் போது, மக்கள் தற்காப்புக்காக ஆயுதம் ஏந்துவது தவிர்க்க முடியாதது. ஈழத்தில் நடந்தது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை (Genocide). அதற்கான நீதியை வென்றெடுக்கும் வரை எனது சட்டப்போராட்டம் ஓயாது என்றார்.

# சமூக ஊடகங்களுக்கு இந்தியா புதிய கட்டுப்பாடு

13.01.2026

சமூக ஊடகங்களுக்கு மிகக்கடுமையான புதிய கட்டுப்பாடுகளை இந்தியா விதித்துள்ளது. சட்டவிரோதமானதாகக் கருதப்படும் பதிவுகளை வெறும் 03 மணித்தியாலங்களுக்குள் நீக்க வேண்டும் என்பதே இந்தப் புதிய கட்டுப்பாடாகும்.

புதிய கட்டுப்பாடு எதிர்வரும் 20ஆம் திகதி நடைமுறைக்கு வரவுள்ளது.


இதற்கு முன்னர் நிறுவனங்களுக்கு 36 மணித்தியாலங்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. இனி வரும் காலங்களில் நீதிமன்றம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அதிகாரி உத்தரவிட்ட 03 மணித்தியாலங்களுக்குள் அந்தப் பதிவை நீக்க வேண்டும்.

சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவும் டீப்ஃபேக் (Deepfake) எனப்படும் போலி வீடியோக்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் உருவாக்கப்படும் தவறான தகவல்களைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு செய்தி வைரலாகி சமூகப் பதற்றத்தை உருவாக்கும் முன்பே அதை முடக்குவதே அரசின் நோக்கம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

புதிய கட்டுப்பாடுகளை செயல்படுவது மெட்டா, யூடியூப் மற்றும் எக்ஸ் போன்ற சமூக ஊடக நிறுவனங்களுக்கு சவாலாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.





## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# உலக செய்திகள்

## காசா மீது இசுரவேலியத் தாக்குதல்களில் சிறுவர் உட்பட 30 பாலஸ்தீனியர் உயிரிழந்தனர்

01.02.2026

இன்று (ஜனவரி 31) காசா மீது இசுரவேல் நடத்திய தாக்குதல்களில் பல சிறுவர் உட்பட குறைந்தது 30 பாலஸ்தீனியர் கொல்லப்பட்டதாக காசாவில் உள்ள மருத்துவமனைகள் தெரிவித்தன. இது அக்டோபர் மாத போர்நிறுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட மிக உயர்ந்த உயிரிழப்புகளில் ஒன்றாகும்.

இந்தத் தாக்குதல்கள் காசா முழுவதும் உள்ள இடங்களில் நடந்துள்ளது. கான் யூனிஸில் உள்ள முகாமில் நடந்த தாக்குதல் தீ விபத்தை ஏற்படுத்தியதாகவும், இதில் ஒரு தந்தை, அவரது மூன்று குழந்தைகள் மற்றும் மூன்று பேரக்குழந்தையர் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டதாகவும் நாசர் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

காசா நகரில் உள்ள அடுக்குமாடிக் கட்டிடத்தின் மீதான தாக்குதலில் மூன்று சிறுவர், அவர்களின் அத்தை மற்றும் பாட்டி ஆகியோர் கொல்லப்பட்டதாக ஷிஃபா மருத்துவமனை தெரிவித்துள்ளது. அதேபோல காவல் நிலையம் மீதான தாக்குதலில் நான்கு பெண் காவலர், பொதுமக்கள் மற்றும் கைதியினர் உட்பட 14 பேர் கொல்லப்பட்டதாக ஷிஃபா மருத்துவமனை தெரிவித்துள்ளது. ஜபாலியா அகதிகள் முகாமுக்கு கிழக்குப் பகுதியில் நடந்த தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் ஷிஃபா மருத்துவமனை கூறியது.

காசாவின் தென்கோடி நகரமான ரஃபாவில் எகிப்துடனான எல்லைப்பகுதி நாளை திறக்கப்படவுள்ள நிலையில் இந்த தாக்குதல்கள் நடந்துள்ளன. பெரும்பாலான மருத்துவ உள்கட்டமைப்புகள் அழிக்கப்பட்ட காசாவுக்கு வெளியே சிகிச்சை தேவைப்படும் பாலஸ்தீனியர் ரஃபாவை ஒரு உயிர்நாடியாக பார்க்கின்றனர்.

போர்நிறுத்தத்தின் மத்தியஸ்தரின் ஒருவரான எகிப்து, தனது அறிக்கையில் இசுரவேலியத் தாக்குதல்களை மிகக் கடுமையாக கண்டித்ததுடன், இந்த தாக்குதல்கள் போர்நிறுத்தத்தின் அரசியல் போக்கிற்கு நேரடி அச்சுறுத்தலாக இருக்கின்றன என்றும் எச்சரித்தது.

இசுரவேலின் தாக்குதல்களை "மீண்டும் ஒரு அப்பட்டமான போர் நிறுத்த மீறல்" என்று ஹமாஸ் அழைத்ததுடன், இந்தத் தாக்குதல்களை நிறுத்த இசுரவேலை வலியுறுத்துமாறு அமெரிக்காவையும் மற்ற மத்தியஸ்த நாடுகளையும் கேட்டுக் கொண்டது. அக்டோபர் மாதம் முதல் ஹமாஸின் போர்நிறுத்த ஒப்பந்த மீறல்களுக்குப் பதிலடியாகவே தனது தாக்குதல்கள் இருந்தன என்றும் இசுரவேல் பதிலளித்துள்ளது. போர்நிறுத்தம் தொடங்கியதிலிருந்து இசுரவேலியத் தாக்குதல்களில் இதுவரை 520 பாலஸ்தீனியர் கொல்லப்பட்டதாக காசா நிர்வாகம் தெரிவித்துள்ளது.



## வங்கதேசத் தேர்தல்: பி.என்.பி. கட்சி அமோக வெற்றி

12.02.2026

வங்கதேசத்தில் கடந்த 2024ஆம் ஆண்டு நடந்த மாணவர் போராட்டத்தால் பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதனால் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்றது. சுமார் 18 மாதத்துக்கு பிறகு நேற்று அங்கு தேர்தல் நடத்தப்பட்டது.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மீதான வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அவரது அவாமி லீக் கட்சிக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து, தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி), அதன் முன்னாள் கூட்டாளியான ஜமாத்-இ-இஸ்லாமி ஆகிய கட்சிகளுக்கு இடையே நேரடி போட்டி நடந்தது. வங்கதேச நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 300 தொகுதியில் ஒரு தொகுதியில் வேட்பாளர் மறைவால் மீதமுள்ள 299 தொகுதிகளில் நேற்று தேர்தல் நடந்தது. இதில் 50 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 1,755 வேட்பாளர்கள், 273 சுயேட்சைகள் போட்டியிட்டனர். நாடு முழுவதும் உள்ள 42,779 வாக்குச் சாவடிகளில் நேற்று காலை 7.30 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

8 இலட்சம் ஊழியர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டனர். 9 இலட்சம் பாதுகாப்பு வீரர்கள் பணியில் ஈடுபட்டனர். இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ், பி.என்.பி தலைவர் தாரிக் ரஹ்மான் ஆகியோர் முன்கூட்டியே வாக்குப்பதிவு செய்தனர். வங்கதேச தேசியவாதக் கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மான், டாக்காவின் உயர்மட்ட குல்ஷன் பகுதியில் உள்ள குல்ஷன் மாதிரி பள்ளி மற்றும் கல்லூரி மையத்தில் வாக்களித்தார்.

இந்நிலையில், வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. தொடக்கத்தில் பி.என்.பி. கட்சிக்கும், ஜமாத்-இ-இஸ்லாமி கட்சிக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டது.நேரம் செல்ல செல்ல பி.என்.பி. கட்சி பல்வேறு இடங்களில் வெற்றி பெற்றது. அதன்பின் பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைவிட அதிக தொகுதிகளில் பி.என்.பி. கட்சி அமோக வெற்றி பெற்றது என உள்ளூர் செய்தி ஊடகங்கள் தெரிவித்தன. 150 தொகுதிகளுக்கும் அதிகமான தொகுதிகளில் பி.என்.பி. கட்சி அபார வெற்றி பெற்றதை அக்கட்சி தொண்டர்கள் கொண்டாடி வருகின்றனர். தாரிக் ரஹ்மான் முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.



## உலகம் தழுவிய தமிழ்; எகிப்திய பிரமிட்களில் தமிழ் எழுத்துகள்

12.02.2026

எகிப்து பிரமிட் கல்லறைகளில் தமிழ் - பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட 2000 ஆண்டுகள் பழமையான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




எகிப்தில் உள்ள புகழ்பெற்ற யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமான கிங்ஸ் பள்ளத்தாக்கில் உள்ள பாறையில் செதுக்கப்பட்ட கல்லறைகளில் இருந்து தமிழ்-பிராமி, பிராகிருதத்தில் பொறிக்கப்பட்ட 30 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆய்வாளர்கள் நடத்திய இந்த ஆய்வில், இது சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கும் மத்திய கிழக்கு நாடான எகிப்துக்கும் இடையிலான பண்டைய வர்த்தக தொடர்புகளுக்கு மற்றொரு சான்றாக அமைந்துள்ளது.

6 கல்லறைகளில் காணப்படும் கல்வெட்டுகளில், 20 தமிழ் மொழியிலும், மீதமுள்ள 10 சமஸ்கிருதம் மற்றும் பிராகிருத மொழியிலும் உள்ளதாகக் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறை ஏற்பாடு செய்த தமிழ் கல்வெட்டு குறித்த சர்வதேச மாநாட்டில், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் இங்கோ ஸ்ட்ராச் மற்றும் பிரான்சின் பரிஸில் உள்ள பேராசிரியர் சார்லோட் ஷ்மிட் ஆகியோர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.






'சிகை கொற்றன்' என்ற தமிழ் வணிகரின் பெயர், 5 வெவ்வேறு பிரமிட்களில் 8 முறை கண்டறியப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் "சிகை கொற்றன் - வர கண்ட" (சிகை கொற்றன் இங்கே வந்து பார்த்தான்) என பொறிக்கப்பட்டுள்ளது.

www.sangathamil.ca







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்கள், தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறைகாயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும், அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்க வேண்டும். நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் பளுவை பொதுமக்களே சுமந்து வருகின்றார்கள். சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இரத்தமும், கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்தரிக்க முடியாது.

உலகில், எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்கு முறையின் நெருப்பில் குளிப்பது பொதசனங்களே. ஏனென்றால் அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிடப் பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒரு பொழுதும் வெற்றியளிப்பதில்லை. மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது.

ஏனென்றால், விடுதலைப் உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்கு சாவையும், அழிவையும், தாங்கொணாத்துயரையும் கொடுத்த போதும் என்றுமில்லாத வகையில் தேசியப் பற்றுணர்வையும் சுதந்திர தாகத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கின்றது. இந்தச் சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது. இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள். இந்த வரலாற்றின் படைப்பாக, எமது தேசிய மண், ஒரு சுதந்திர பூமியாக பிறப்பெடுக்கும் என்பது திண்ணம்.


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிட்னியில்
ஐங்கரன்
விக்கினேஸ்வராவின்
ஆறு நூல்கள்
வெளியீட்டு விழா!
இடம்:
பெமுள்வே சமூக மண்டபம்.
Allan G Ezzy Community Centre,
(Near Woolworths) 1 Newport St,
Pemulwuy, NSW 2145.
காலம்:
27 பெப்ரவரி 2026
வெள்ளிக்கிழமை
மாலை 18:30
அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்....


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# சிலுவையூன்றாச் சவக்காலை



கழுத்தை வளைத்த
சுருக்குக்கயிற்றைப் பழிதீர்க்க
துர்நாற்றம் மிகுந்த உண்மைகளை
*மண்தூர்த்தகைகள் கக்கின.

உண்மைகள்
காணமல்போன மனிதர்களை பிணங்களாய்
கிளர்த்தின.
மண்ணகழ்ந்த கிடங்குகளில் மனிதர்களை நிரவி
செம்மணிவயலில் சாவிளைத்த இராணுவச்சாகசம்
சந்தி சிரித்தது.

உயிர்ப்பொறை உரியுண்டு உயிர்கூண்டிய
எம்புருஷர் தேகப்பொதிகள்
செம்மணியின் கள்ளறையுள்ளிருந்து புகைந்தன.

வனப்புமிகு எம் பெண்டிர்
தசைபுசித்த வெறியுடல்கள்
தசைகுளிரும் பொழுதுவரை புசித்த
தசைவெறி உடல்கள்
செம்மணியின் பசியமண்ணில் பதனமிட்ட
வார்த்தையாடின.

குழிகளில் புழுத்த
உடல்கிளைத்த வயிறுகளின்
ஒப்பாரிப்பாடல்பெற்ற ஸ்தலமாயிற்று
செம்மணி.

சுடலை சூடிச் சுடர்ந்த செம்மணியின்
சிலுவையூன்றாச் சவக்காலைக் குரூரம்
மனங்களைத் தின்கிறது.

கம்பிச்சிறையொன்றுள்
உயிரைக் கிடுக்கிக் கிடக்கும் என்ற
குருதித்துயர் தேற்றலில்
அழுகியகுருதி நாறிற்று.

கண்ணிலொற்றிய தாலிகள் அறுந்தன.
சுமந்த சூலறைகள் கருவழிந்தவாறாய்க் கலங்கின.
உண்டியொழித்து
வயிறுசுண்ட நோற்ற நோன்புகள் பொய்த்தனவா?

பிணவீச்சம் கமழ 'வெட்டியான்'கள்
பவனிவருகிறார்கள்.
எந்த ஒப்பனைகளாலும் முடியவில்லை
சவக்களை பொருந்திய முகங்களைச் சிங்காரிக்க.
வயல் வெளிகளில் இடுகாட்டின்
அமைதியுறைகிறது சொப்பனங்கள் வியர்க்க
நெற்குலைகள் பிணங்களாய் ஊசலிடுகின்றன.
நடுநிசிமயமான பல்லிடுக்கில் கந்தலாய்க்கிழிகிறது
இருப்பு.

சிலுவையூன்றாச் சவக்காலைக்கிரையாகுமோ வாழ்வு?
வாழ்வைச் சப்புகிறது எண்ணம்!

* சிறீலங்காப் படையினன்
லான்ஸ் கோப்ரல் டி. சோமரட்ண இராஜபக்ஷ

– எஸ். உமாஜப்ரான் –


நன்றி: எரிமலை, 02.2000




# வரலாறு சொல்லும் பாடம்

## தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு

– தமிழீழக் கல்விக் கழகம் –




### சோல்பரி வகுத்த சிறுபான்மையினருக்கான காப்பீடு

சிறுபான்மையினருக்குக் காப்பீடாகச் சிலவற்றைத் தமது அரசியற்றிட்டத்திலே சோல்பரி வரைந்திருந்தார் என்பது உண்மையே. அதுவும்கூட சிறுபான்மையினரின் பல்வேறு அழுத்தங்களினாலேயே செய்யப்பட்டது. “ஆணைக்குழு இலங்கையிலிருந்தபோது சில சிங்கள அரசியல்வாதிகளின் பேச்சு, சிங்கள மக்களின் ஒருமைப்பாட்டையும் தமிழர்களை அடக்கி அழுத்துவதையும் நோக்கிய பேச்சுக்களாய் அமைந்திருந்தன. டீ.எஸ்சேனநாயக்காவிலும் அவரது கீழ் அமைந்த அரசிலும் ஆணைக்குழுவுக்கு நம்பிக்கை இருந்தபோதிலும், சிறுபான்மையோரின் சார்பாகச் சில சட்டக்காப்பீடுகளை வைக்க வேண்டிய தேவையை இத்தகைய பேச்சுக்களே அவசியமாக்கியது” என சோல்பரி மனந்திறந்து பேசியிருக்கின்றார். இலங்கைத் தமிழர்களை பிரித்தானியா எப்படி நோக்கியது என்பதற்கு, அன்றைய இங்கிலாந்துப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் கம்மன்ஸ் அவர்களின் வெளிப்படையான கூற்று ஒரு அசையாச் சான்றாகும். “தமிழர்கள் அளவுக்கு மீறி ஆசைப்படக் கூடாது தருவதைப் பெற்றுத் திருப்தி கொள்ளவேண்டும். தமிழர்கள் பொதுவுடமைக் கருத்தின் பாற்பட்டவராதலால் அவர்களுக்கு வழங்கப்படும் பெரும் உரிமைகள் பிரித்தானிய முடிக்குப் பாதகமாய் அமையக்கூடும்.” என்று இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும் தீர்மானத்தின்போது இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் கம்மன்ஸ் வெளிப்படையாகவே கூறினார். சோல்பரி அரசியற் சட்டத்தின் 29(2)ஆம் பிரிவு சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட சிறந்த காப்பீடாக அப்போது சொல்லப்பட்டது. அதன்படி,

அ. எந்த ஒரு மதத்தினதும் சுயமான செயற்பாட்டைத் தடுக்கும் வகையில் அல்லது கட்டுப்படுத்தும் வகையிலான சட்டத்தை,

ஆ. எந்தவொரு சமூகத்திற்கோ அல்லது மதத்திற்கோ விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அல்லது தகுதியின்மையை பிறிதொரு சமூகத்திற்கு அல்லது மதத்திற்கு வழங்குகின்ற சட்டத்தை,

இ. எந்வொரு சமூகத்திற்கோ அல்லது மதத்திற்கோ வழங்கப்படாத சலுகைகளை அல்லது முன்னுரிமையை இன்னொரு சமூகத்திற்கு அல்லது மதத்திற்கு வழங்குகின்ற சட்டத்தை,

ஈ. எந்த ஒரு மதத்தினதும் சட்டத்தை அம்மதத்தின் ஆளும் குழுவின் ஒருமைப்பாடின்றி மாற்றும் சட்டத்தை நாடாளுமன்றம் ஆக்க முடியாது.


இவ்வகையிற் செயற்படும் அளவிற்கு செல்லுபடியற்றதாக்கும். சிங்களப் பெரும்பான்மை நாடாளுமன்றத்திலே தமக்கு வரக்கூடிய பெரும்பான்மை வலுவைக் கொண்டு சிறுபான்மையின ரைக் கீழ்த்தள்ள முடியாத அளவிற்கு மிகவும் இறுக்கமான காப் பீடாகவே இது அமைகின்றது என்று சோல்பரியும், அவரைச் சேர்ந்தவர்களும் அன்று கருதினர். நாடாளுமன்ற மொத்த உறுப்பினர்களின் (மன்றத்திற்கு வருகை தராதவர்கள் உட்பட) 2/3 பேர் ஒருப்பாடு வேண்டுமென்று 29(4) இல் விதிக்கப் பட்டது. ஆயினும், சோல்பரி அரசியல் யாப்பின்படியான தேர்தல் முறையில் சிங்களவர் 2/3 பங்கு பெரும்பான்மை பெறக்கூடிய வாய்ப்பு இருக்கவே செய்தது. கட்சி வேறுபாடுகள் காரணமாகச்

சிங்களவர்களால் 1970வரை 2/3 பெரும் பான்மைகொண்ட அரசை அமைக்க முடியவில்லையே தவிர, பிரதிநிதித்துவ வலுவில் அந்த இலக்கினைத் தரக்கூடிய வலுவைச் சிங்கள இனத்தவர் கொண்டேயிருந்தனர்.





1948 இலங்கை சுதந்திர நாளில் டீ.எஸ். சேனநாயக்காவால் ஏற்றப்பட்ட சிங்கக்கொடி



**செ. கோடீஸ்வரன் அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவர்**

“தனிச்சிங்களச் சட்டம் சட்டவிரோதமானது, அரசியற் சட்டத்தின் 29ஆவது பிரிவை மீறுகிறது. இச்சட்டத்தின் விளைவாக தமிழ் அரச ஊழியர்களது ஊதிய உயர்வை நிறுத்துவது தவறானது; செல்லுபடியாகாதது” என்று அரசாங்க எழுவினைஞர் சங்கத்தின் சார்பில் கோமறைக்கழகம் (பிரிவிகவுன்சில்) வரை வழக்கை நடத்தி வெற்றிபெற்றவர்.


### சோல்பரியின் காப்பீட்டைத் தகர்த்தெறிந்த சிங்கள இனவாதம்

பெரும்பான்மைச் சிங்களவரின் பேரினவாத வெறிக்கு ஓரளவு கடிவாளமாக இச்சட்டப்பிரிவு இருக்க முடிந்ததே தவிர, 1948இல் சுதந்திரத்துக்குப் பின்னர்வந்த மிகச் சுருங்கிய காலத்திலேயே இச்சட்டப்பிரிவின் காப்பீடு சிங்கள அரசியல்வாதிகளாலே தகர்த்து எறியப்பட்டதென்பதே வரலாறு. 1970ஆம் ஆண்டு வரை சிங்கள அரசு தமிழர்களின் நலனுக்கெதிராகச் செய்த எந்த ஒரு சட்டத்தினின்றும் பாதுகாப்பளிக்க இந்த 29ஆம் பிரிவுச் சட்டம் துணைக்கு வரவில்லை. 1948இல், இலங்கைக் குடியுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 9 இலட்சம் இந்தியத் தமிழர் குடியுரிமையிழந்தனர். 1949இல் வாக்குரிமை இழந்தனர். இக்குடியுரிமைச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் 29 ஆம் பிரிவுக்கு முரணானதென இலண்டனிலுள்ள கோமறைக் கழகத்துக்கு (பிரிவிக் கவுன்சிலுக்கு) முறையிடப்பட்டபோது இத்தகைய சட்டம் நிறைவேற்ற இலங்கை அரசுக்கு உரிமை உண்டு என்றே கோமறைக் கழகம் தீர்ப்புச் சொன்னது. 1956 இல், தனிச் சிங்களச் சட்டம் (சிங்கள ஆட்சிமொழிச் சட்டம்) கொண்டு வரப்பட்டது. இது அரசியற் சட்டத்தின் 29ஆம் பிரிவை மீறுகின்றதென்ற வழக்கு கோமறைக் கழகத்துக்குப் போனது. தனிச் சிங்களச் சட்டம் 29ஆவது பிரிவை மீறுகின்றதென்ற தீர்ப்பையே கோமறைக்கழகம் வழங்கினாலும் இலங்கையில் சிங்கள அரசாங்கம் சோல்பரிச்சட்டத்தைப் புறந்தள்ளி, மிக மூர்க்கமாகச் சிங்களம் மட்டும் சட்டத்தை நடைமுறைப்படுத்தியது. 29ஆம் பிரிவு, சட்டத்தினளவில் சிறுபான்மையோருக்கு எழுத்தில் அமைந்த காப்பீடு என்ற போதிலும் நடைமுறையிற் செயலற்றதாகவே அது இருந்தது.

அதுபோலவே:
01.) மூதவை (செனற்சபை)
02.) நியமன உறுப்பினர்கள்
03.) பல உறுப்பினர் தொகுதி
04.) கோமறைக்கழகம் (பிரிவிக்கவுன்சில்)
05.) சுதந்திரமான பொதுச்சேவை நீதிச்சேவை ஆணைக்குழு

போன்றவையை, சிறுபான்மையினருக்குக் காப்பீடுக ளாகச் சோல்பரி நினைத்தபோதும், சிங்களப் பேரின வாதத்தின் இன, மதப் பேரவாவிற்குமுன் இவை, ஒன்றுமே நின்று நிலைக்க முடியவில்லை. மூதவை நியமனம் சிங்களத் தலைமையமைச்சரின் பரிந்துரையில் ஆளுநராற் செய்யப்பட்டது. இதனால், மூதவையும் சிங்களப் பெரும்பான்மையால் நிறைந்தது. நியமனம் பெற்ற ஓரிரண்டு சிறுபான்மையோரும் வாய்மூடி இருந்தனர். அல்லது தமது நலன்பேண பெரும்பான்மைப் பக்கம் சரிந்தனர்.

குடியுரிமைச் சட்டம், தேர்தல் திருத்தச் சட்டம், தனிச் சிங்களச் சட்டம் என்பவை மூதவையின் முன்னே வந்தபோது சிங்களப் பெரும்பான்மை கண்ணை மூடிக்கொண்டு அவற்றை ஆதரித்தது. ஆதலால், போர்த்துக்கேயருடைய வரவு வரை இலங்கைத் தீவின் ஒருபுறத்திலே தனியாட்சி செய்த தமிழினம், இலங்கை



யின் தேசிய ஒருமைப்பாட்டுக்குள்ளே தனது தனித் தன்மையை ஒருவாறு பேணக்கூடுமென்று எண்ணியிருந்த தமிழினம் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகவேண்டிய காலக்கட்டாயத்திற்கு ஆளாகியது. பாராளுமன்றத்திற்கான நியமன உறுப்பினர்கள் சிறுபான்மையினரிலிருந்து தெரிவுசெய்யப்படுவது சிங்களப் பெரும்பான்மையின் வேகத்தைக் குறைக்குமென்று சோல்பரி வாதித்திருந்தாலும், நடைமுறையிலே அவரின் எதிர்பார்ப்புக்கு மாறாகப் பெரும்பான்மை இனத்தவரே நியமிக்கப்பட்டனர். மாறாகப் சிறுபான்மையினர் ஒருவர் இவ்வாய்ப்பைப் பெறும்பொழுதுகூட தமது இன நலனைப் புறக்கணித்து. பேரின நலன்பேண வாக்குத்தத்தம் செய்தவர்களாகவே பார்த்து நியமிக்கப்பட்டனர்.

1970ஆம் ஆண்டு நியமன உறுப்பினரான எம்.சி.சுப்பிரமணியமும், மூதவை கலைக்கப்பட்டதன் பின் நியமன உறுப்பினரான செல்லையா குமாரசூரியரும் 1972 இல் உருவான இலங்கையின் "சிங்கள பௌத்த குடியரசு யாப்பை" ஆதரித்து, தமிழ் மக்களின் வாழ்வுரிமையைக் கேள்விக்குறியாக்குவதற்குக் காரணமாயினர். சிங்கள அரசின் எந்தவிதமான இன ஒதுக்கல்களுக்கும் கை உயர்த்தக்கூடிய "விசுவாச" அடிமைகளாகவே இவர்கள் தமிழ் மக்களால் இன்றும் (இறந்தபின்பும்கூட) கணிக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்துக்கான பல உறுப்பினர் தொகுதிகள் மூலம் சிறுபான்மையோர் தமது உறுப்புரிமையைப் பல்லினத் தேர்தல் தொகுதிகளில் உறுதிசெய்ய முடியுமென்று எதிர்பார்க்கப்பட்டது. கொழும்பு மத்தி. அங்கு வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உறுப்புரிமையைக் கருத்திற் கொண்டு மூன்று உறுப்பினர் தொகுதியாக உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பு, மூதூர், அக்குறணை, பலாங்கொடை, பதுளை, கொழும்பு தெற்குப் போன்றவை இரட்டை உறுப்பினர் தொகுதிகளாகக் காலத்துக்குக் காலம் மாற்றி அமைக்கப்பட்டிருந்தன. சோல்பரி அரசியற் சட்டம் நடைமுறையில் இருந்த காலம் வரை, இத் தொகுதிகள் சிறுபான்மையோருக்கு எதிர்பார்க்கப்பட்ட உறுப்புரிமையை வழங்க வேயில்லை. குறிப்பாகச் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக உள்ள தொகுதிகளில் இந்தக் காப்பீடு மண்ணைக் கவ்வியது. கோமறைக் கழகம் நீதி கோரும் சிறுபான்மையோருக்கு அதை வழங்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதன் தீர்ப்புக்களின் செயற்பாடு வெறும் தாள்களிலேதான் இருந்தது. 1956இல், தனிச்சிங்களச் சட்டம் அரசியல் அமைப்பின் 29ஆம் பிரிவுக்கு முரணானது என, கோமறைக்கழகம் தீர்மானித்தது. ஆனால், அதன்பிறகுதான் சிங்கள அரசு தனிச்சிங்களச் சட்டத்தை மிகுந்த முனைப்போடு நடைமுறைப்படுத்தியது. தகுந்த காப்பீட்டை சிறுபான்மையோருக்குச் செய்யத்தவறியதாக சோல்பரி பிற்காலத்தில் வருத்தப்பட்டாலும் அது காலங்கடந்த வருத்தமே. நோகாமல் கைகளிலே தாரைவார்க்கப்பட்ட ஆட்சி உரிமையைக் கொண்டு தமிழர்களின் இன, மொழி, நில பண்பாட்டுக் கோலங்களை முற்றாக அழிக்க முனைந்த சிங்கள ஆட்சியாளர்களின் போக்கினால் ஏற்பட்ட இனமோதல்கள், இரத்தக்களரிகளைக் கண்டு இலங்கை தடுமாறிய வேளையிலேயே தான். தமது மேலோட்டமான பார்வையின் அறுவடை யைக் கண்டு சோல்பரி கவலைப்பட்டார். 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் நாள் பிரித்தானிய முடிக்குக் கீழான சுதந்திரம் இலங்கைக்கு வழங்கப்பட்டது. முதலாவது தலைமை அமைச்சராக (பிரதமராக) டீ.எஸ். சேனநாயக்கா சிங்கக் கொடியை ஏற்றினார்.

இந்தச் சுதந்திரத்திற்கான செயற்பாட்டிற் சிங்களவர்களுக்கு உரிய பங்களிப்பு எத்தகையது என்பது கேள்விக் குரியதாகும். 1948 ஆம் ஆண்டுக் குப் பின்னால் திடீரென சிங்களத் தலைவர்களின் மூளைக்குள் முளைத்த சிங்களத் தேசிய உணர்வு சுதந்திரத்திற்கு முற்பட்ட நாட்களில் பெரிதாக இருந்ததில்லை.


மகாத்மாகாந்தி 1927இல் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார்

1927ஆம் ஆண்டு இலங்கைக்குவந்த நவபாரதத்தின் தந்தை மகாத்மாகாந்தி தனது உரையில் இதை வெளிப்படையாகவே கூறினார். "எந்தவொரு சிங்களவரினதும் வாயிலிருந்தும் சுதந்திரம் என்ற பேச்சைக் கடந்த 15 நாட்களில் நான் கேட்கவில்லை. இங்கு (யாழ்ப்பாணத்திற்கு) வந்த பிறகு தமிழர்களின் வாயிலிருந்துதான் சுதந்திரம் என்ற வார்த்தை வரக் கேட்கின்றேன்." மகாத்மா காந்தியின் கூற்று இது. 1948இல் கிடைத்த சுதந்திரத்தைத் தனது செல்லக் குழந்தையாகவே சிங்களத் தலைமை நினைத்தது. இலங்கைக்கு என்று ஒரு தேசியக் கொடி வரையப்படாத நிலையில், கண்டியின் கடைசி மன்னன் "கண்ணுச்சாமி" ஏந்திய கொடியான "சிங்கக்கொடி"தான் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஏற்றப்பட்டது. நாடு முழுவதும் "சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்குக் கொடியேற்றுவது பற்றிய ஒரு சுற்றறிக்கை அமைச்சினால் அனுப்பப்பட்டது. சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது சிங்கக்கொடி ஏற்றமுடியாத நிலையிருப்பின் விரும்பினால் பிரித்தானியரின் "யூனியன்யாக்" கொடியை ஏற்றலாம். ஆனால், எக்காரணம் கொண்டும் நந்திக் கொடி ஏற்றப்படக்கூடாது" என்று கண்டிப்பான உத்தரவு வழங்கப்பட்டது. நந்திக்கொடியே யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்தின் கொடி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டுவரை யாழ்ப்பாண அரசின் கொடியாகவும் தமிழர்களின் இறைமையைத் தாங்கிநின்ற கொடியாகவும் மிளிர்ந்து வந்தது நந்திக் கொடியே. சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்தே தமிழரின் அடையாளத்தை அழித்து ஒழிக்க முனையும் சிங்களப் பேரினவாதச் செயற்பாடு தொடங்கிவிட்டது என்பதற்கு, இது பொருத்தமானதொரு சான்றாகும். இதனைத் தொடர்ந்து தமிழர்களின் நில, மொழி, கல்வி, பண்பாட்டு உரிமைகளைப் பிடுங்க சிங்கள அரசுகள் திட்டமிட்டுச் செய்த கொடிய நடவடிக்கைகள், மனித நாகரிகம் நிலவுகின்ற எங்குமே நடந்ததில்லை.

1948 இல் இருந்து 1956 வரையுள்ள 8ஆண்டுகள் இலங்கை அரசியலில் முதன்மைப் பொறுப்பை வகித்து வந்தது. டீ.எஸ். சேனநாயக்காவினால் தொடக்கப்பட்ட ஐக்கியதேசியக் கட்சியே. "மக்கள் எல்லோராலும் மக்கள் எல்லோரினதுமான அரசாங்கம்" என்ற டீ.எஸ். சேனநாயக்காவின் தொடக்கால உறுதியை சோல்பரியிலிருந்து தமிழ்த்தலைவர்கள் வரை நம்பினார்கள். அல்லது நம்பவைக்கப்பட்டார்கள். அதனாற்றான் 50 இற்கு 50 என்ற தனது கோரிக்கையில் மிக உறுதியாக வாதிட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தனது கட்சியினருடன் அரசாங்கக்கட்சி வரிசையிலேபோய் உட்கார்ந்தார்.

டீ.எஸ்.சேனநாக்கா உள்ளூர் சிங்களக் குடியேற்றங்களை மிக விரைவாகக் கொண்டு நடத்தி, தமிழர் நிலங்களைப் பிடுங்கி சிங்களமயமாக்கும் கொள்கையைக் கொண்டிருந்தாலும், அனைத்து மக்களுக்குமான இனமத உரிமைகளைப் பேணுகின்ற ஒரு உத்தமமான அரசியல் தலைவராகவே தம்மைக் காட்டிக்கொள்ள முயற்சித்தார். புத்த சமயத்திற்கு அரசியல் அமைப்பில் முதன்மையிடம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையோடு வந்த புத்த பிக்குகளிடம் "மூன்று மணிகளான புத்தம், தர்மம், சங்கம் என்பவற்றோடு நான்காவதாக ஒன்றைச் சேர்க்கப்போகிறீர்களா?" என்று கிண்டல் செய்து அவர்தம் கோரிக்கையைப் புறந்தள்ளியதாக நம்பப்படுகின்றது. (SRI LANKA AFTER INDEPNDENCE "சிறீலங்கா ஆப்ரர் இன்டிப்பெண்டன்ஸ்" என்ற நூலின் அடிக்குறிப்பு 8 எழுதியவர் சின்னப்பா அரசரத்தினம்)

## மலையகத் தமிழர் வாழ்வுரிமைக்கு டீ.எஸ் வைத்த கத்தி

சோல்பரி அரசியல் திட்டத்தின்படி இலங்கைப் பாராளுமன்றத்தில் மலையகத் தமிழர்களின் உறுப்புரிமை 14 ஆக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முதலாவது பாராளுமன்றத்தேர்தலில் 7மலையகத் தமிழர்கள் மட்டும் உறுப்புரிமை பெற்றனர். அந்த 7 உறுப்பினர்கள் கூடத் தனக்கு எதிர் வரிசையில் இருந்தது டீ.எஸ். சேனநாக்காவின் கண்களைக் குத்தவே செய்தது. வெறும் கூலிகளாகச் சிங்கள மேல்மட்டத்தினரின் கண்களுக்குத் தென்பட்ட இந்தியத் தமிழர்களின் அரசியல் உறுப்புரிமை நீக்கப்பட வேண்டுமென்றும் அதன் மூலம் பாராளுமன்றத்தில் சிங்களப்பெரும்பான்மையைக் கூட்டுவதோடு தமிழர்களை வலுக்குன்றியவர்களாக்க வேண்டும் என்றும் குறிப்பாகத் தனது அரசுக்கு எதிரானவர்களின் வலுக்குறைக்கப்படவேண்டும் எனவும் டீ.எஸ். சேனநாயக்கா கணக்குப் போட்டார். அதன் விளைவாக 1948 இல் இலங்கைக் குடியுரிமைச் சட்டம் இல 18 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதனால், மலையகத் தமிழர்கள் 900,000 பேர் தமது


கே. வீ. நடராசா (பண்டாரவல) | டீ. இராமானுஜம் (அளுத்துவர)
சி.வேலுப்பிள்ளை (தலவாக்கொல்ல) | கே.இராஜலிங்கம் (நாவலப்பிட்டி)

குடியுரிமையைத் திடீரென ஒரேநாளில் இழந்தனர். இலங்கைக்கான சுதந்திரக் கோரிக்கையின்போது "இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டுமானால் அனைத்து இனத்தவரும் ஒற்றுமையாகக் கோரவேண்டும்" என ஆங்கிலேயர் தட்டிக்கழித்தபோது சுதந்திரத்தின் பின் தமிழர் உரிமைகள் வழங்கப்படுமென்று கூறி டீ.எஸ். சேனநாயக்கா அன்று தமிழர் ஒத்துழைப்பைக் கோரினார். அரசியலமைப்பு முன் வரைவின்படி 58:43 பிரதிநிதித்துவம் பேணப்பட்டால் அது சிறுபான்மையினருக்குப் பெரும் பாதுகாப்பே என எண்ணியிருந்த தமிழருக்கு டீ.எஸ். சேனநாயக்காவின் குடியுரி மைச் சட்டம் பேரிடியாக அமைந்தது.

58:43 என்ற சிங்களவர்கள், தமிழர்கள் விகிதாசார எதிர்பார்ப்பு முதலாவது தேர்தலின் போது 1947 இல் 67:33ஆகத்தான் இருந்தது. மலையகத் தமிழரின் குடியுரிமை பறிப்பினால் அடுத்த தேர்தலின் பின் (1952இன்பின்) அது 73:28 ஆகக்குறைந்தது சுதந்திரத்திற்குப் பின் டீ.எஸ். சேன நாயக்கா திட்டமிட்டு மேற்கொண்ட இச் செய்கைதான் சோல்பரியின்29(2) எனும் சிறுபான்மையினத்தவருக்கான பாதுகாப்பு அரணை உடைத்துச் சுக்குநூறாக்கியது. இதற்கான வழக்கு சோல்பரி அரசியலமைப்பு பிரிவு 29(2)இன் கீழான சிறுபான்மையோரின் காப்பீட்டுக்கு முரண்பட்டது என்ற வாதத்தோடு கோமறைக்கழகத்தில் வைக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின்னால் தமிழர்களுக்கு விளைந்த முதலாவது பேரிடியாக, குடியுரிமைச் சட்டத்திற்குச் சார்பாகவே கோமறைக்கழகம் தீர்ப்பளித்தது. இச்சட்டமூலம் பற்றிய விவாதம் நடைபெற்ற வேளைகளிலெல்லாம், "குடியுரிமை இழப்பால் வாக்குரிமைக்கு எவ்வித பாதிப்புமில்லை" என்ற அரசியல் வாக்குறுதிகள் டீ.எஸ். சேனநாயக்காவினாலும் ஐக்கிய தேசியக்கட்சியினாலும் கபடநோக்கத்துடன் வழங்கப்பட்டன. ஆனால், சொன்ன வேகத்திலேயே இந்த வாக்குறுதி காற்றிலே பறக்கவிடப்பட்டது. 1949 இல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட இந்திய பாக்கிஸ்தானிய வதிவுரிமைச்சட்டம் இல:3 இனாலும் தேர்தல் திருத்தச்சட்டம் 48 இனாலும் இந்தியத் தமிழரின் வாக்குரிமை பிடுங்கப்பட்டுவிட்டது. இந்தக் கொடிய சிங்களப் பேரினவாதச்சட்டங்களினால் 7 உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பும் வலுவைக் கொண்டிருந்த மலையகத் தமிழர்கள் 1952 ஆம் ஆண்டின் 2ஆவது நாடாளுமன்றத்தில் தமது உறுப்புரிமையை அறவே இழந்தனர்.

## மலையகம் இழந்த உறுப்புரிமை

இந்தியத் தமிழர்கள் பெரும்பான்மையினராக இருந்த தேர்தல் தொகுதிகளில் மிகச் சிறுபான்மையினராக விளங்கிய சிங்களவர் உறுப்பினர்களாக வெற்றிக்கொடி நாட்டி (முதலாவது தேர்தலில் 67ஆக இருந்த) தமது உறுப்புரிமையை 2ஆவது தேர்தலில் 73ஆக உயர்த்திக் கொண்டனர். ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் தோட்டக் கூலிகளாகக் கொண்டுவரப்பட்ட இந்தத் தமிழர்களுக்கு இலங்கையில் எவ்வகை உரிமையும் இல்லையென்பதும் அவர்களது வேர்வழி நாடான இந்தியாவிற்குச் செல்ல வேண்டும் என்பதும் சிங்களப் பேரினவாதத்தின் அன்றைய பெருங்கூச்சலாகவிருந்தது. மலையகத் தமிழர்கள், இலங்கைத் தமிழர்கள், நடுநிலையாளர்களின் இதற்கெதிரான சொல்லாடல்கள், மென்வழிப்போராட்டங்கள் அனைத்துமே


எஸ்.எம். சுப்பையா (பதுளை) | கே.குமாரவேலு (கொட்டக்கலை) | தொண்டமான் (நுவரெலியா)





சேர் ஜோன் கொத்தலாவல


டட்லி சேனநாயக்கா

செவிடன் காதில் ஒலிக்கப்பட்ட சங்கென வீணாகிப் போயின.

ஆனால், இந்தியத் தமிழர்களை இலங்கைக்குக் கொண்டு வருவதில் முன்நின்று உழைத்தவர்களும் இந்தப் பேரினவாதச் சிங்களவர்கள்தான். இந்தியத் தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்கு எதிராக 1937 இல் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த என்.எம்.பெரேரா அரசாங்க சபையில் ஒரு தீர்மானத்தை முன் மொழிய, அதை எதிர்த்து இந்தியத் தொழிலாளர்களை இலங் கைக்குக் கொண்டு வரவேண்டுமென்று வாக்களித்தவர்களில் முதன்மையானவர்கள் பின்னர் மலையகத் தமிழர் குடி யுரிமைப் பறிப்புக்கு ஆதரவாக வாக்களித்த டட்லிசேனநாயக்கா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா ஆகியோர் ஆவர். டீ.எஸ். சேனநாயக்கா, ஜேஆர் ஜெயவர்த்தனா. சேர் ஜோன் கொத் தலாவல ஆகியோர்வாக்களிக்கும் போது அரசாங்கசபையில் அன்று இல்லாவிடினும் அவர்களும் இந்தியத் தொழிலாளர்கள் கொண்டுவரப்பட வேண்டும்மென்பதில் அன்று பிடிவாதமாக இருந்தவர்களே.

சிங்களப் பேரினவாதத்தின் ஆலோசனையுடன் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட அப்பாவி இந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள் கால்நடைகள்போல அழைத்து வரப்பட்டு, வழிகளில் மலேரியா போன்ற கொடிய நோயில் மடிய, எஞ்சியோர் ஆடு, மாடுகள் கூட உறங்கமறுக்கும் லயங்களுக்குள் வாழ்ந்து, அட்டைக்கடிகளை ஏற்று, பனிக்குளிரில் கொழுந்து கிள்ளி, காடுகளைக் களனி யாக்கி இலங்கையின் பொருளாதார முதுகெலும்பை நிமிர வைத்தனர். ஆனால், வலிந்து அவர்களைக்கொண்டு வந்த சிங்களப் பேரினவாதம் 48, 49ஆம் ஆண்டுகளில் கொடிய குடி யுரிமைச் சட்டங்களால் அவர்களை "நாடற்றவர்களாக்கியது" இந்திய அரசின் கடும் எதிர்ப்பையும் புறக்கணித்து விட்டு, தமது இனமத அரசியல் நலன்களுக்காக இந்தியத் தமிழர்களின் முதுகிலே ஈனத்தனமாகக் குத்தியது சிங்களப் பேரினவாதமே.

## ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறல்

இலங்கை சுதந்திரம்பெற்ற காலத்தில் டீ.எஸ். சேனநாயக்கா வின் நம்பிக்கைக்குரியவராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா 1951 இல், பிரிந்து போய் 2ஆவது பேரின வாதக் கட்சியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தொடங் கினார். மாறிமாறி ஆட்சிக்கு வந்த ஐ.தே.க, சி.ல.சு.க ஆகிய இரண்டுமே தமது அரசியல் வெற்றியை "தமிழர்களின் அழிவிலிருந்தே" அறுவடைசெய்து கொண்டன. சிங்களப்பொது மக்களினது மனதிலே இன, மத வெறியைத் தூண்டிவிட்டு சிங்கள பௌத்த மேலாண்மைத் தத்துவத்தில் ஊறிய பௌத்த மகாசங்கங்களைத் மனங்குளிரவைத்துமே தமது அரசியல் இருப்பை அவர்கள் தக்கவைக்க முயன்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து எவ்வகையிலேனும் ஆட்சி உரிமையைக் கைப்பற்ற நினைத்த எஸ். டபிள்யு. ஆ.ர்.டி பண்டாரநாயக்கா தனது வாக்கு வங்கியைக் கொழுக்கவைக் கும் நோக்கில் கடைந்தெடுத்த இனவெறியராக மாறினார்.

"நான் பிரதமரானால் 24மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவருவேன்" என்று மேடைகளில் முழங் கினார். வெற்றியும் பெற்றார். இந்த அரசியல் இனவாதத்திற்கு புத்தரகித்ததேரோ போன்ற இனவெறிப் புத்தபிக்குகளின் துணையை உழைப்பையும் அவர் பெற்றுக்கொண்டார்.

பௌத்த மதத்திற்கும் சிங்கள மொழிக்கும் முதன்மை இடம் கொடுக்கப்பட வேண்டுமென்ற முழக்கம் டீ.எஸ்.சேனநாயக் காவின் காலத்திலேயே இருந்தது தான். ஆனால், ஆங்கில மேல்மட்ட அரசியல் தத்துவத்திற் செழித்திருந்த சிங்களத் தலைவர்கள் இந்த முழக்கங்களை அவ்வளவாகப் பொருட்படுத் தவில்லையெனினும், பௌத்தசங்கத்தை நீண்ட காலம் அடக் கிவைத்திருக்க அவர்களால் முடியவில்லை. 1954இல் இக் கோரிக்கை கூர்மையானதைத் தொடர்ந்து சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்ட முன்னாள் கிருத்தவரான எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா பௌத்த துறவிகளை விட ஒருபடி மேலேயே போய், தன்னைப் பௌத்த இலங்கைக் காவலனாய்க் காட்டியே, 1956 ஆம் ஆண்டு தேர்தலை வெற்றி கொண்டு ஆட்சியிலமர்ந்தார்.

ஆட்சியிலமர்ந்த மூன்று மாதங்களுள் யூன் 56இல் "சிங்களம் மட்டும்" என்ற ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றினார். 1948இல் இந்தியத் தமிழர்களின் எதிர்காலத்தின் மேல் விழுந்த இருட்டடி, 1956இல் இலங்கையின் முழுத்தமிழர்களின் மேலும் விழுந்தது. சட்ட ரீதியான பங்களிப்பைத் தமிழும், தமிழர்களும் முற்றாக இழக்க நேரிட்டது. தமிழர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழ் அணிதிரண்டு இந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார்கள். காலிமுகத்திடலிலே பாராளுமன்றத்திற்கு முன்னர் மென்வழிப் போராட்டம் நடத்தினர். இதனைத் தொடர்ந்து, கிளர்ச்சி செய்த தமிழர்களின்மேல், சிங்களக் குண் டர்களின் தாக்குதல் மிக்கொடுமையாக நடாத்தப்பட்டது. சிங் களக் குண்டர்களினதும், ஆயுதப்படையினரதும் தமிழர்கள் மீதான வெறியாட்டத்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா பாராளுமன்றப் பலகணியில் நின்று வேடிக்கை பார்த்து நையாண்டி செய்தார்.

இனவன்முறை கொழும்பிலும், இலங்கையின் பலபகுதிகளி லும் வெடித்துப் பரவியது. தமிழ் சிங்களம் இரண்டும் இலங்கை முழுவதற்குமான ஆளுகை மொழிகளாக்கப்படவேண்டு மென்ற கோரிக்கையில் தமிழரசுக் கட்சி உறுதியாக நின்றது. இடதுசாரிகளும் இந்தப் பொருந்தாச் சட்டத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தனர். இந்தச் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு 2/3 பங்கு ஆதரவு கிடைக்கவில்லை. எனினும், சோல்பரியின் 2/3 பங்கு காப்பீடு ஏட்டளவிலேயே நின்றது. இதற்கு எதிராக கோமறைக் கழகத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் தமிழர் வென்றனர். ஆனால், நடைமுறையில் சிங்களம் மட்டுமே வென்றது. இவ் வன்முறையில் தமிழர்கள் தமது உடைமை, உயிர்களைப் பெருமளவு இழந்தனர். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சிங்களவர்களின் வன்முறைகளைக் கண்டும் காணதவராகச் சில நாட்கள் இருந்துவிட்டு, வெளிநாடுகளின் அழுத்தங்களின் பிறகுதான் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச் செயற்பட்டார். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மட்டு மல்ல, சிங்களத் தலைவர்கள் அனைவருமே தமிழ்மக்கள் தமது உயிர், உடைமைகளை இழந்து அல்லற்படுவதைப் பார்ப் பதில், ஒருவித "குரூரத் திருப்தியை" எப்போதுமே அடைந்தனர்.

மிகப்பெரிய துன்பத்தை இன வன்முறை அளித்தபோது, தமிழர்கள் மிக உறுதியாகச் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த் துப் போராடியதால். எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்கா கொஞ்சம் இறங்கி வந்து தமிழரசுக்கட்சியுடன் ஓர் உடன்படிக் கையையும் செய்ய முனைந்தார். இந்த உடன்படிக்கைதான் மிகவும் பேசப்படும் "பண்டா, செல்வா" உடன் படிக்கையாகும். ஏற் கெனவே இரண்டு முறை உடன்படிக்கை என்ற பெயரில் சிங்களத் தலை மையால் ஏமாற்றப்பட்ட பட்டறிவை தமிழ்த் தலைமை கொண் டிருந் தும் வழங்கியவாக் குறு திகளிலிருந்து பல தட வைகள் ஏமாற்றப்பட் டிருந்தும் ஒன்றிணைந்த இலங்கையென்ற கொள் கையிலிருந்து இன்னும் விடு படாததால், பண்டா, செல்வா உடன்படிக்கை 26 யூலை 1957 இல் செய்யப்பட்டது.

- தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு தொடரும்....


சுதந்திரன்

SUTANTIRAN

சத்யாக்கிரகத் தொண்டர்மீது போலீஸ்

மலையகத் தமிழரின் சத்தியாக்கிரகம் பற்றிய பத்திரிகைச் செய்தி 1952




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# உடும்பன்குளம் படுகொலை 19.02.1986

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் மக்கள் விவசாய நிலங்களில் அறுவடை செய்யும் காலமாகும். உடும்பன் குளத்தில் தங்களது வயல்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கொட்டகை அமைத்து வயல் வேலைகள் முடியுமட்டும் அங்கேயே தங்கியிருந்து தமது அறுவடையினை முடித்துககொண்டு நெல் மூட்டைகளுடனேயே திரும்புவது வழக்கமாகும். இவ்வாறே 1986ஆம் ஆண்டு மாசி மாதமும் வயல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது பிள்ளைகளுடன் தங்கியிருந்து வயலில் அறுவடை செய்து கொண்டிருந்தார்கள். 1986.02.19 அன்று காலை 6.30 மணியளவில் கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினரால் உடும்பன் குள வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்களும், அங்கு தங்கியிருந்தவர்களும் சுற்றி வளைக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கைகள், கண்கள் கட்டப்பட்டார்கள். இவ்வாறு கைது செய்தவர்களில் பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவிற்குட்படுத் தப்பட்டார்கள். ஆண்களின் ஆண் உறுப்பு வயலில் நெல் வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் அரிவாளினால் வெட்டப்பட்டது. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் மிகவும் மோசமான முறையில் துன்புறுத்தப்பட்டார்கள் பலர் இராணுவத்தினரின் துன்புறுத்தலினாலேயே தமது உயிரினை இழந்தார்கள். பின்னர் எஞ்சியிருந்தவர்களைச் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்ததுடன், அவர்களின் உடலினை அறுவடை செய்யப்பட்ட நெற்சூட்டினுள் ஒன்றாகப் போட்டு எரித்தார்கள். இவ்வாறு 1986.02.19 அன்று காலை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள், வாடியில் தங்கியிருந்தவர்கள் என நூற்று முப்பத்து மூன்று பேலிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இவரகளில் ஒரு சிலர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து 21.02.1986 அன்று மட்டக்களப்பு பிரசைகள் குழு வணபிதா சந்திரா பெர்ணான்டோ, நாளேட்டாளர்கள் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அரைகுறையாக எரிந்த




நிலையிலிருந்த தொண்ணூற்றெட்டுப் பேரினது உடல்களை எடுத்து அடக்கம் செய்தார்கள். உடும்பன் குளத்தில் வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்கள் மீதான தாக்குதலை நடத்திய இராணுவத்தினருக்குப் பொறுப்பாக லெப்டினன்ட் சந்திரபால தலைமை தாங்கினார். இச்சம்பவத்தில் இராணுவத்தினருடன் இணைந்து முசுலிம் குழுக்களும் தாக்குதல்களை நடத்தியிருந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. இராசையா தவேந்திரன் 18
02. இராமசாமி கந்தையா 48
03. ந.கோபாலகிருஸ்ணன் -
04. ந.விநாயகமூர்த்தி -
05. க.பாக்கியராசா -
06. கதிரேசபிள்ளை வைரமுத்து -
07. குமரவேல் நாகராசா 27
08. கணேசமூர்த்தி பேரின்பன் 28
09. கணேசபிள்ளை மோகனராசா 22
10. கணபதி வடிவேல் 27
11. பத்மநாதன் -
12. மைலன் தியாகராசா 18
13. த.சுமன் 22
14. தாசப்பு செபமாலை -
15. தாசப்பு செல்லையா -
16. துரை இராமலிங்கம் -
17. தம்பிப்பிள்ளை குமாரவேல் -
18. மயில்வாகனம் தியாகராசா. 13
19. மார்க்கண்டு ரவீந்திரன் -
20. முத்துப்போடி சுமனாவதி -
21. முத்துசாமி முத்துலிங்கம் -
22. மசன்னா ஜெயராஜ் -
23. ஆ.நல்லதம்பி -
24. ஆ.சோமசுந்தரம் -
25. பொன்னன் இராசதுரை -
26. பொன்னம்பலம் யோகராசா 18
27. சோமசுந்தரம் கருணாநிதி 21
28. வெங்கிட்டன் குழந்தை -
29. ஞானமுத்து புவனேந்திரன் -
30. சுந்தரம் சின்னவன் 20
31. சீனித்தம்பி -
32. சீனித்தம்பி தவநாகன் 30
33. சீனித்தம்பி அருள்செல்வன் 18
34. சில்வஸ்ரர் இன்னாச்சி 32
35. சுவாமி டேவிட் 29
36. வயிரமுத்து சுந்தரலிங்கம் -
37. வர்ணகுலசிங்கம் புண்ணியமூர்த்தி 21
38. விஸ்வகேது இராசா 23
39. ரங்கன் போல் -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை.

# வங்காலை படுகொலை 17.02.1991

வங்காலைக் கிராமமானது, மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் வடக்குத் திசையாக கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார்த்தீவின் நுழைவாயிலிலுள்ள பாரிய சங்கிலிப் பாலமும் தொடருந்துப் பாலமும் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை உண்டாகியதன் காரணமாக தாழ்வுப்பாட்டுக் கடற்கரையிலிருந்து கடல் வழியாக கற்பிட்டியூடாகக் கொழும்புக்கு மக்கள் பிரயாணம் செய்தனர். இந்நிலையில் வங்காலையைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தின் கெடுபிடிகளினால் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். வீடுகளிலிருந்து வெளியேறாதவர்களை இராணுவத்தினர் பலவந்தமாக வெளியேற்றிவிட்டு வீடுகளிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் அனைத்தையும் சூறையாடினார்கள். வங்காலை மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய செபமாலை அவர்களும் ஜஸ்டின் லம்பேட் என்ற வங்காலையைச் சேர்ந்த ஆசிரியரும் இன்னும் சிலரும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காகக் கற்பிட்டி வழியாக கொழும்பு சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு 16.02.1991 இல் படகில் தாழ்வுப்பாட்டுக்கு வந்து அன்றிரவு அங்கு தங்கியிருந்து மறுநாள் 17.02.1991ன்று காலை பத்து மணிக்கு துவிச்சக்கர வண்டியில் வங்காலை வழியாக காத்தான்குளம் சென்றார்கள். இவர்கள் வங்காலைப் பாடசாலைச் சந்திக்கு வரும்போது இராணுவத்தினர் செபமாலை (அதிபர்), ஜஸ்டின் லம்பேட் (ஆசிரியர்), சூசையப்பு (ஆசிரியர்), நவரட்ணம் குருவிக்கந்தையா ஆகியோருடன் ஒரு சிறுவனையும் தடுத்து நிறுத்தி கயிற்றினால் கைகளையும் துணியினால் கண்களையும் கட்டிவிட்டு சூசையப்பு ஆசிரியரைக் கத்தியால் குத்தினார்கள். பின்னால் வந்தவர்கள் இந்த நிகழ்ச்சியை நேரிற் பார்த்துக்கொண்டு சென்று முருங்கன் பங்குத்தந்தையிடம் முறையிட்டனர். மறுநாளாகியும் கைது செய்யப்பட்டவர்கள் வீடு




திரும்பாததினால் உறவினர்களும் பங்குத்தந்தையும் தள்ளாடி இராணுவமுகாமிற்குச் சென்று உத்தரவுபெற்று அவர்களைத் தேடுவதற்கு வங்காலைக்கு வந்தபோது வங்காலைச் சந்தியிலிருந்து உள்ளே செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்தனர். அப்படியிருந்தும் உறவினர்களில் இருவர் மட்டும் சென்று, சந்திக்கு அருகிலிருந்த பூர்சியல் பீரிஸ் ஆசிரியரின் பூட்டியிருந்த வீடு திறந்திருந்ததைக் கண்டு அதனுள் சென்றபொழுது அந்த வீட்டு அறைகளெல்லாம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது. இரத்தத் தடயங்களின் வழியே சென்று பார்த்தபொழுது வீட்டின் பின்னாலிருந்த கிணற்றுக்குள் ஐந்து சடலங்களும் துண்டங்களாக்கப்பட்டுப் போடப்பட்டிருந்தது. எனினும் அப்போதைய சூழ்நிலையில் உடனடியாக சடலங்களை மீட்க முடியாதிருந்தது.

1993ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்தபோது பூர்சியன் ஆசிரியரின் வீட்டிற்குப் சென்று பார்த்த பொழுது கிணறு மட்டமாக்கப்பட்டிருந்தது. பூர்சியன் ஆசிரியரின் வீட்டுக் கிணற்றில் முன்னர் ஐந்து சடலங்கள் போடப்பட்டிருந்தன என்பதைக் காவற்றுறையினருக்குத் தெரியப்படுத்தி, அவர்களின் உதவியுடன் உயிரிழந்த ஐவரினதும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் ஐவரின் எலும்புக்கூடுகளும் மேலதிக பரிசோதனைகக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இனறு வரை இவை தொடர்பாக எந்த மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோனி கொபின்லெம்பேட் ஆசிரியர் -36
02. அந்தோனிப்பிள்ளை செபமாலை - பாடசாலை அதிபர் - 49
03. அப்புக்குட்டி கந்தையா - கமம் - 51
04. செபமாலை அந்தோனி - விவசாயம் - 30
05. சீமான் தற்குரூஸ் சூசையப்பு - பாடசாலை உப அதிபர் - 43

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# வட்டக்கச்சி அரசநெற்பண்ணை குண்டுவீச்சு - 28.02.1991

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் வட்டக்கச்சி என்னும் கிராமம் காணப்படுகிறது. இங்கு வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். அத்தோடு சிலர் பகுதிநேர நன்னீர் மீன்பிடி மற்றும் கூலித்தொழிலிலும் ஈடுபட்டுள்ளார்கள். இப்பிரதேசத்தில் "அரச நெற்பண்ணை" என்னும் பெயரில் நெல்வயல்கள் காணப்பட்டன. இங்கு வேலை செய்பவர்கள் தங்கி வேலை செய்வதற்காக வட்டக்கச்சி மூன்றாம் வாய்க்காற் பகுதியில் அரச நெற்பண்ணை விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு ஐந்து குடும்பத்தை சேர்ந்தவர்கள் தங்கியிருந்தனர்.

28.02.1991 அன்று காலை 7.00 மணியளவில் வேலைக்குச் செல்வதற்காக விவசாயிகள் விடுதிகளில் காலை உணவு அருந்திக்கொண்டிருந்த வேளையில் விமானப்படையினரின் இரண்டு "பொம்பர்" விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றிவந்து மூன்று குண்டுகளை வீசியது. இதில் ஒரு குண்டு விடுதிக்குள் வெடிக்க மற்றைய இரண்டும் வயற்பிரதேசங்களிலும் வீழ்ந்து வெடித்தன. இதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர். உயிரிழந்த ஒன்பது பேரில் ஆறு பேரின் உடல்கள் சிதறுண்டு உருக்குலைந்துபோக ஏனைய மூன்று பேரின் உடல்களையும் காயப்பட்ட மூவரையும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து தம் உறவுகளை இழந்த நிலையில் அக்குடும்பங்கள் விடுதிகளை விட்டு வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றன. இந்தச் சம்ப்பவத்தின் போது சம்பவ இடத்திலிருந்த இராமையா பரமசுந்த்தரம் அவர்க்கள் தெரிவித்ததாவது,

"நான் நெற்பண்ணையில் இருந்த வேளை 28.02.1991 அன்று பொம்மர் விமானம் வந்து குண்டு போட்டது. இந்தச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள். மூன்று பேர் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு போய் காப்பாற்றிவிட்டார்கள். இறந்தவர்கள் அனைவரையும் ஒரே குழியிற் போட்டு புதைத்தோம். இச்சம்பவத்தில் பண்ணையிலிருந்த கிட்டத்தட்ட நாற்பது ஆடுகள், இருபது கோழிகள் இறந்தன. அவற்றையும் மனித உடல்களுடன் ஒரே குழியிற் போட்டுப் புதைக்க வேண்டிய சூழல் இருந்தது. ஏனென்றால் திரும்பவும் புக்காரா வந்து குண்டு போடுமோ என்ற பயம் இருந்துகொண்டே இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வந்து பார்வையிட்டுச் சென்றது. மக்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த இடத்தில் குண்டு போட்டதாக நான் கருதுகிறேன். ஏனென்றால் காலையில் தொழிலுக்குப் போகமுன் 7.30 மணியளவில் வந்து குண்டு போட்டால் எல்லோரும் இறப்பார்கள் என்ற திட்டம்தான். இன்று நேற்றல்ல, 1990ம் ஆண்டிலிருந்தே சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களை கொலை செய்து கொண்டுதான் இருக்கிறது."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம்



01. இராசேந்திரம் சித்திரம்மா
02. நாகமுத்து ஆறுமுகம்
03. முனியாண்டி செல்வம்
04. முருகையா சுமதி
05. முருகையா சித்திரா
06. ஆறுமுகம் இராசேந்திரன்
07. ஆறுமுகம் கமலாதேவி
08. ஆறுமுகம் விஜயலட்சுமி
09. சின்னத்தம்பி உமாதேவி

# சுண்டிக்குளம் மீனவர் படுகொலை - 18.02.1994

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் அடங்கியுள்ள சுண்டிக்குளம் எனும் பிரசேத்திலுள்ள ஒரு மீனவர் குடியிருப்பு தொடுவை வாய்க்கால் ஆகும். இங்கு வாழ்பவர்களது சீவனோபாயத் தொழில் மீன்பிடி ஆகும். 18.02.1994 அன்று அதிகாலை 5:15 மணியளவில் இப்பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதற்காகக் கட்டு மரங்களில் கடலை நோக்கிச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த கடற்படையின் "டோறாப்படகு" மீனவர்கள் மீது திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவேளை அங்கிருந்த மீனவர்கள் சிலர் தப்பிச் செல்லும் நோக்கில் கட்டுமரங்களை விட்டு கடலில் குதித்து நீந்தியவண்ணமும் மற்றவர்கள் வலைகளை அறுத்து விட்டும் கரையை நோக்கிக் கட்டுமரங்களை நகர்த்திய வண்ணமும் இருந்தனர். கடற்படையினரோ மீனவர்களை நோக்கித் தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கரையோரக் குடியிருப்புக்களிலிருந்த அனைவருக்கும் தெளிவாகக் கேட்க தங்கள் உறவுகள் மீன் பிடிக்கச் சென்றதை எண்ணி ஏங்கிக் கரையை நோக்கி ஓடி வந்து அவர்கள் பார்த்தவேளை கடற்படையின் டோறாப்படகு கடற்கரையை மிகவும் அண்மித்து வந்து மீனவர்களைச் சுடுவதைக் கண்டனர். தாக்குதலுக்கு இலக்காகி மீனவர்கள் கடல் நீரில் சோர்ந்து விழுவதைக்கண்டு மக்கள் கதறியழுதனர். கடற்படையின் தாக்குதலில் பத்து மீனவர்கள் கடலில் உயிரிழந் தனர். தாக்குதல் நடந்தன்று மூன்று பேரின் உடல்களே கிடைக் கப்பெற்றன. ஏனைய ஏழு பேரது உடல்களும் மறுதினமே கரையொதுங்கியன. இந்த தாக்குதலினால் பீதியுற்ற மீனவர்கள் சிலமாதங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. இதனால் அன்றைய காலகட்டத்தில் அப்பிரதேச மீனவர்கள் மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இயக்கோ கபிரியேல்பிள்ளை 29
02. இயக்கோப்பிள்ளை நிக்சன் 20
03. கரியோப்பிள்ளை அருள்ஜெயசீலன் 25
04. மனுவேற்ப்பிள்ளை மரியசீலன் 26
05. அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை 46
06. அமிர்தநாயகம் யோன்பெர்னான்டோ 35






# பூநகரியில் சிறீலங்கா விமானப்படை தாக்குதலில் 8 பொதுமக்கள் படுகொலை - 22.02.2008

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரிவில் உள்ள கிராஞ்சியில் உள்ள பொதுமக்கள் குடியிருப்பு மீது சிறீலங்கா விமானப் படை வெள்ளிக்கிழமை காலை 8:10 மணிக்கு நடத்திய வான் வழித் தாக்குதலில் 6 மாதக் குழந்தை, 4 வயது சிறுவன், அவனது தாய், 8 வயது சிறுமி மற்றும் ஒரு ஆங்கில ஆசிரியர் உட்பட எட்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர், நான்கு குழந் தைகள் மற்றும் ஒரு ஆசிரியர் உட்பட 14 பேர் காயமடைந்தனர். நான்கு விமானங்களில் இருந்து 20க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்ட கண்மூடித்தனமான வான்வழித் தாக்குதலில் மூன்று வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டன, பல வீடுகள் சேதமடைந் தன. இதற்கிடையில், கொழும்பில் உள்ள சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சகம், கிராங்கஞ்சியில் உள்ள "உள்நாட்டு கடல் புலிகள் தளத்தை" சிறீலங்கா விமானப்படை தாக்கியதாகக் கூறியது.



விமானப்படை தாக்குதலில் 3 குழந்தைகள் கொல்லப்பட்டனர் மற்றும் நான்கு குழந்தைகள் காயமடைந்தனர்

தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளை இழந்த 34 வயதான சசிகரன், மார்பில் பலத்த காயமடைந்த மற்றொரு மகனை கவனித்துக் கொள்ள கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மூன்று பொதுமக்களின் வீடுகள் அழிக்கப்பட்டதாக சசிகரன் கூறுகிறார், கொல்லப்பட்டவர்களில் பலர் அவரது உறவினர்கள். அவர் தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளை இழந் தார், மற்றொரு மகன் படுகாயமடைந்தார்.

வீரவில் பள்ளியின் ஆங்கில ஆசிரியை ஜ. சிவநாயகி, 27, தனது வீட்டை பள்ளி நோக்கி விட்டுச் செல்லத் தயாராகும் போது கொல்லப்பட்டார். சிறீலங்கா விமானப்படை குண்டுவீச்சில் அவர்களின் வீடு அழிக்கப்பட்டதில் 34 வயதான கௌரிநாயகி சசிதரன், அவரது 06 மாத குழந்தை எஸ். தமிழ்வேந்தன் மற்றும் 04 வயது எஸ். கஜீவன் ஆகியோர் கொல்லப்பட்டனர். அவர்களின் தந்தை காயங்களுடன் தப்பினார், மற்றொரு மகன் மார்பில் பலத்த காயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனை யில் உயிருக்குப் போராடி வருகிறார். இந்தத் தாக்குதலில் 27 வயதான சுதாகரன் சுமதி என்ற மற்றொரு தாயார் கொல்லப் பட்டார், அவரது இரண்டு குழந்தைகளான எஸ். பானுஷன், 06, மற்றும் எஸ். சபீனா, 05, ஆகியோர் காயமடைந்தனர். அவர்களின் தந்தை கிளிநொச்சிக்குச் சென்று கொண் டிருந்தபோது, அவரது வீடு விமானப்படையினரால் குண்டு வீசப்பட்டதால் தாக்குதலில் இருந்து தப்பினார்.





கொல்லப்பட்ட மற்றவர்கள் விஜயகுமார் விதுஷா, 08, மற்றொரு குழந்தை, கதிரவேலு திருநீலகண்டர், 79, மற்றும் இந்திரன் லலிதா என அடையாளம் காணப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் முழங்காவில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், மேலும் பலத்த காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை நண்பகல் கிழிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட காயமடைந்தவர்களில் நால்வர் பானுஷன் சுதாஹரன், 06, காருண்யன் சசிதரன், 08, அருளானந்தம், 72, தர்மலிங்கம் பூமணி, 68 என அடையாளம் காணப் பட்டனர்.

பானுஷாவின் சகோதரி 05 வயதுடைய சபீனா சுதாஹரன் இரண்டாவது அம்புலன்ஸ் வண்டியில் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சசிகரன் கௌரிநாயகி, 34
02. சசிகரன் தமிழ்வேந்தன், 06மாதம்
03. சசிகரன் கஜீவன், 04
04. கதிரவேலு திருநீலகண்டன், 79
05. கிருஸ்ணசாமி சிவாநந்தி, 27
06. விஜயகுமார் விதுஜா, 21
07. இந்திரன் லலிதா
08. சுதாகரன் சுமதி, 30
09. தர்மலிங்கம் பூமணி, 68

22.02.2008 அன்று கிராஞ்சியில் காணமடைந்தவர்களின் விரபம்

1. சசிகரன் காருன்னியன் (08)
2. சிறீபதி இராஜேஸ்வரி (33)
3. சத்தியநாதன் தேவநாயகி (43)
4. சதாசிவம் கமலாதேவி (60)
5. சுதாகரன் பானுசன் (06)
6. விஜயகுமார் சிவாநந்தினி (36)
7. விஜயகுமார் டினோசன் (21)
8. அருளாநந்தம் லீலாதேவி (68)
9. அருளாநந்தம் சத்தியவரதன் (43)
10. தேவநாயகி (43)
11. தர்மலிங்கம் பூமணி (68)
12. விஜயகுமார் கிநோசன் (02)







# வன்னியில் இருந்து கடல் வழியாக 400 படுகாயமடைந்த பொதுமக்களை ஐ.சி.ஆர்.சி. வெளியேற்றியது – 16.02.2009

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுமாத்தாளனில் இருந்து சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் 400க்கும் மேற்பட்ட படுகாயமடைந்த பொதுமக்களை







ஐ.சி.ஆர்.சி. திங்கள்கிழமை வெளியேற்றியது. உயர் மருத்துவமனைகளில் மேலதிக சிகிச்சைக்காகக் காத்திருக்கும் படுகாயமடைந்த பொதுமக்களை கடல் வழியாக அழைத்துச் செல்லும் மூன்றாவது தொகுதி இது என்று ஐ.சி.ஆர்.சி.யின் உள்ளூர் ஊழியர்கள் தெரிவித்தனர். ஐ.சி.ஆர்.சி.யின் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு சிறீலங்கா அரசு தேவையான பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்காததால், வன்னியில் இருந்து வெளிநாட்டு ஊழியர்களை திரும்பப் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், வன்னியில் உள்ள ஐ.சி.ஆர்.சி. சேவைகள் அதன் உள்ளூர் ஊழியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

# தேவிபுரம் மற்றும் வல்லிபுனம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல் 260 பேர் படுகொலை – 16.02.2009

சிறீலங்கா இராணுவம் பழைய "பாதுகாப்பு வலயத்திற்குள்" உள்ள தேவிபுரம் மற்றும் வல்லிபுனம் கிராமங்களை பீரங்கித் தாக்குதல் நடத்தி, ஆயிரக்கணக்கான பொதுமக்கள் புதிய "பாதுகாப்பு வலயத்திற்கு" செல்வதைத் தடுத்தது. சனிக்கிழமை முதல் சுமார் 250 மேல் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மேலும் சாலைகள் தொடர்ந்து பலத்த பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன என்று அப்பகுதியிலிருந்து தப்பி ஓடிய பொதுமக்கள் திங்களன்று தெரிவித்தனர். "தேவவிபுரம் பெட்டியில்" சிக்கிய பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது குறைந்தது 5 மனிதாபிமானப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.

கரைத்துறைப்பட்டு பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தைச் (MPCS) சேர்ந்த மூன்று தொழிலாளர்கள் திங்கள்கிழமை தேவிபுரத்தில் மனிதாபிமானப் பொருட்களை விநியோகிக்கும் போது கொல்லப்பட்டனர். நான்கு நாட்களுக்கு முன்பு, தேவிபுரம், வல்லிபுனம் பகுதியில் பீரங்கித் தாக்குதலில் சிக்கிய பொதுமக்களுக்கு உதவி செய்தபோது, இரண்டு மனிதாபிமானப் பணியாளர்கள், ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் கொல்லப்பட்டனர்.

பெரும்பாலான பொதுமக்கள் உயிரிழப்புகள் பெட்டிப் பகுதியிலும் சாலைகளிலும் பதிவாகியுள்ளன.

இரானைப்பாலையில் இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல், சனிக்கிழமை இரவு இரானைப்பாலையில் இலங்கை இராணுவத்தின் கிளஸ்டர் ஷெல் தாக்குதல், ஏற்கனவே காலை இழந்த ஒரு சிறுவன் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார். இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவனின் செயற்கை கால் கிடப்படை அறியலாம்.



வட்டுவாக்கலில் இருந்து புதுமாத்தாளன் வரையிலான ஒரு குறுகிய பகுதியில் ஒரு புதிய பாதுகாப்பு வலயத்தை ஒரு தலைப்பட்சமாக அறிவித்த சிறீலங்கா இராணுவம், புதிய பாதுகாப்பு வலயத்திற்கு இடம்பெயர்வதற்கு ஏதுவாக பீரங்கித் தாக்குதலை நிறுத்தவில்லை. குறைந்தது 30,000 பொதுமக்கள் பழைய பாதுகாப்பு வலயத்தில் உள்ள பதுங்கு குழிகளுக்குள் இருந்தனர், அதே நேரத்தில் 70,000 க்கும் மேற்பட்டோர் தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலுக்கு மத்தியில் அப்பகுதியை விட்டு வெளியேறினர்.

பழைய பாதுகாப்பு மண்டலத்திலிருந்து பொதுமக்கள் தப்பிச் செல்லப் பயன்படுத்தும் இரண்டு சாலைகளையும் சிறீலங்கா இராணுவம் குறிவைத்து பீரங்கித் தாக்குதல் நடத்தியது. கண்காணிப்பு விமானங்கள் பறந்து சென்று சிறீலங்கா இராணுவத்திற்கு ஒருங்கிணைப்புகளை வழங்கின, அவை தப்பியோடிய பொதுமக்களை குறிவைத்து பல உயிர்களைக் கொன்றன, மேலும் பலருக்கு காயங்களை ஏற்படுத்தின. இடைவிடாத பீரங்கித் தாக்குதலால், தீவிரமாக காயமடைந்து, நகர முடியாமல் தவித்தவர்கள், தங்கள் தலைவிதியை தாங்களாகவே எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களுக்கு ஆரம்ப முதலுதவி மட்டுமே வழங்கப்பட்டது.

புதிய மற்றும் பழைய பாதுகாப்பு மண்டலங்களுக்கு இடையில் அமைந்துள்ள இரணைப்பாலையில் சனிக்கிழமை இரவு 8:30 மணியளவில் பீரங்கி பொருத்தப்பட்ட கொத்து குண்டுகள் அவர்களின் தற்காலிக குடிசைகளைத் தாக்கியபோது, மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு புதிய பாதுகாப்பு மண்டலத்திற்குள் உள்ள பொக்கணாயில் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணியளவில் முல்லைத் தீவு அருகே உள்ள கடலில், கைவிடப்பட்ட கப்பலுக்கு அருகில் சிறீலங்கா விமானப்படை குண்டுவீச்சுத் தாக்குதலில் 3 மீனவர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.









# இரணைப்பாலையில் சிறீலங்கா விமானப்படை நடாத்திய குண்டு வீச்சில் 50 பொதுமக்கள் படுகொலை – 18.02.2009

புதன்கிழமை (18.02.2009) மதியம் 12:50 மணியளவில், சிறீலங்கா விமானப்படையின் நான்கு குண்டுவீச்சு விமானங்கள், இரணைப்பாலையில் உள்ள ஆனந்தபுரத்தில் உள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்த பொதுமக்கள் மீது கொத்து குண்டுகளை வீசியதில் குறைந்தது 50 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்களின் ஆரம்ப அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதுவரை 70 க்கும் மேற்பட்ட காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், மேலும் பாதிக்கப்பட்டவர்களில் 10 பேர் மாத்தளன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்துள்ளனர். இதற்கிடையில், சிறீலங்கா இராணுவம் பீரங்கித் தாக்குதலை நடத்தி காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதைத் தடுத்தது. ஐ.சி.ஆர்.சி.யால் பலத்த காயமடைந்தவர்களை திருகோணமலை அல்லது வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படாவிட்டால், பலர் மருத்துவமனையில் இறந்துவிடுவார்கள் என்று தற்காலிக மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் உடகத்திற்கு தெரிவித்தனர். டிசம்பர் 2008 முதல் வன்னிக்கு மருத்துவப் பொருட்களை வழங்க கொழும்பு மறுத்து வருவதால் மருத்துவமனையில் மருந்துகள் எதுவும் இல்லை.



புதன்கிழமை ஆனந்தபுரத்தில் விமானப்படை குண்டு வீச்சில் ஒரு குழந்தை கொல்லப்பட்டது.

புலிகளின் குரல் இன் விளம்பர ஒளிபரப்பான “தமிழீழ வானோலி” அதன் செய்தி ஒளிபரப்பில், தாக்குதல் நடந்த இடத்தில் பல மனிதாபிமான நிறுவல்கள் அமைந்துள்ளதாகக் கூறியது. அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், ஊனமுற்றோர் வீடுகள் ஆகியவை இலக்கு பகுதியில் இருந்ததாகக் கூறப்படுகிறது.



குண்டுவீச்சுகளில் ஒன்றில் குறைந்தது 50 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன, ஆனால் இறப்பு எண்ணிக்கை 100 க்கும் அதிகமாக இருக்கலாம் என்றும் சுமார் 300 பேர் காயமடையக்கூடும் என்றும் அச்சம் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு வந்த மீட்புப் பணியாளர் ஒருவர், பதுங்கு குழிகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும், மீட்பு நடவடிக்கை முடிந்த பின்னரே சரியான உயிரிழப்பு எண்ணிக்கை வெளிவரும் என்றும் கூறினார்.

மாத்தளன் மருத்துவமனை ஏற்கனவே காயமடைந்த பொதுமக்களால் நிரம்பி வழிகிறது.

கட்டுப்பாடற்ற பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் பல பீப்பாய் ராக்கெட் தாக்குதல்களில் இருந்து தப்பிக்க உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சென்று கொண்டிருந்த நேரத்தில் சமீபத்திய குண்டுவெடிப்பு நிகழ்ந்தது.

முல்லைத்தீவில் கடந்த 10 மணி நேரத்திற்குள் குறைந்தது 160 பேர் கொல்லப்பட்டதாக மாத்தளன் மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

# ‘பாதுகாப்பு வலயம்’ மீது சிறீலங்கா இராணுவம் தாக்கியதில் 108 பொதுமக்கள் படுகொலை – 18.02.2009

புதிதாக அறிவிக்கப்பட்ட “பாதுகாப்பு வலய”த்திற்குள் சிறீலங்கா இராணுவம் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலை நடத்தியது, குறைந்தது 108 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று அப்பகுதியின் மருத்துவ வட்டாரங்களின் ஆரம்ப விவரங்களின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைத் தாக்கிய ஒவ்வொரு ஷெல்லும் உயிரிழப்புகளை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது என்று மாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர் தெரிவித்தார். முல்லைத்தீவு நகரத்திற்கு வடக்கே, கடற்கரையோரத்தில் உள்ள ஒரு சமவெளி மற்றும் குறுகிய பகுதியில் 100,000 க்கும் மேற்பட்ட மக்கள் குடிநீர் இல்லாமல் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கிடையில், சிறீலங்கா இராணுவத்தின் இடைவிடாத பீரங்கித் தாக்குதல் பழைய வலயத்திற்குள் உள்ள தேவவிபுரம் மற்றும் வல்லிபுனம் கிராமங்களை முற்றுகையிட்டுள்ளது, இதனால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் புதிய “பாதுகாப்பு வலயத்திற்கு” செல்வதைத் தடுக்கின்றனர்.















அதிகாலை 1:00 மணி முதல் அதிகாலை 5:00 மணி வரை நீடித்த பீரங்கித் தாக்குதல், பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள மாதாளன், பொக்கனை, முள்ளிவாய்க்கால் மற்றும் இரணைப்பாலை ஆகியவற்றை குறிவைத்தது.

இதற்கிடையில், புதிய மற்றும் பழைய பாதுகாப்பு வலயங்களுக்கு இடையில் அமைந்துள்ள மனிதாபிமான மற்றும் அடிப்படை வசதிகளுக்கான புதிய மையமான இரணைப்பாலையை சிறீலங்கா விமானப்படை போர் விமானங்கள் தாக்கியுள்ளன.

செவ்வாய்க்கிழமை, பழைய “பாதுகாப்பு வலயத்திலிருந்து” மாத்தளன் நோக்கி தப்பிச் சென்ற குறைந்தது 15 பேர் பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

சிறீலங்கா இராணுவத்தின் எறிகணை தாக்குதலில் தாய் கொல்லப்பட்டார். புதன்கிழமை அதிகாலையில் இரணைப்பாலையில் மரத்தடியில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு தாய் கொல்லப்பட்டார். புதன்கிழமை இரணைப்பாலையில் மற்றொரு பொதுமக்கள் உயிரிழந்தனர்.

# சிறீலங்கா அரச படையின் தாக்குதலில் 30 குடும்பங்கள் படுகொலை – 18.02.2009

இரணைப்பாலை அனந்தன்புரம் சாலையில் அனாதை இல்லங்கள், இடம்பெயர்ந்தோர் வீடுகள் மற்றும் முதியோர் இல்லங்கள் உள்ளிட்ட மனிதாபிமான நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதியில், சிறீலங்கா விமானப் படை 32 குண்டுகளை வீசியது, சிறீலங்கா இராணுவம் 200க்கும் மேற்பட்ட பீரங்கி குண்டுகளை வீசியது, 30க்கும் மேற்பட்ட குடும்பங்களை அழித்ததாக வன்னியில் உள்ள தமிழ்நெட் நிருபர் வியாழக்கிழமை தெரிவித்தார். பாரிய குண்டுவீச்சில் 180க்கும் மேற்பட்ட குடிசைகள் அழிக்கப்பட்டன. இதற்கிடையில், வியாழக்கிழமை அதிகாலையில் புதுக்குடியிருப்பில் சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் 24 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இரணைப்பாலை, ஆனந்தபுரம் மற்றும் வலைஞர்மடம் கிராமங்களில் மேலும் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



வியாழக்கிழமை 70 பொதுமக்கள் காயமடைந்தனர்.

மாத்தளன் மருத்துவமனையில் 350க்கும் மேற்பட்ட காயமடைந்த நோயாளிகள் உள்ளனர். தற்காலிக மருத்துவமனையின் அருகே உள்ள மரங்களுக்கு அடியில் பெரும்பாலான நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். புதன்கிழமை போதுமான மனிதாபிமானப் பொருட்களுடன் வன்னிக்கு வந்த ஐ.சி.ஆர்.சி அதிகாரி ஒருவர் தற்காலிக மருத்துவமனைக்கு அழைக்கப்பட்டு காயமடைந்தவர்களின் அவல நிலையைப் பார்க்க வைக்கப்பட்டதாக மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

வியாழக்கிழமை, புதிய பாதுகாப்பு வலயத்தின் கீழ் வரும் வலைஞர்மடத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டனர்.

பீரங்கித் தாக்குதல் அதிகாலை 2:00 மணி முதல் நடந்ததாக அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இணைக்கப்பட்ட துணைத் திட்டமிடல் இயக்குநர் 43 வயதான ஸ்ரீஸ்கந்தராஜா சாந்தி, சிறீலங்கா படையின் தாக்குதலில் தனது இடது காலை இழந்துள்ளார்.

கொல்லப்பட்ட பொதுமக்களில் பெரும்பாலானோர் உறவினர்களால் எந்த ஆய்வும் பதிவும் இல்லாமல் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மாத்தளன் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட இறந்த உடல்கள், அடையாளம் காணப்படாத உடல்கள் உட்பட, புதைக்கப்பட்டன. ஏனெனில் இறந்தவர்களை அடையாளம் காண சரியான பிணவறை வசதிகள் இல்லை; துவமனையின் மருத்துவ ஊழியர்கள் தெரிவித்தனர்.





# வன்னிப் பகுதியில் சிறீலங்கா அரச படையின் தாக்குதலில் 50 பொதுமக்கள் படுகொலை – 20,21.02.2009

சிறீலங்கா இராணுவம் நடத்திய பீரங்கித் தாக்குதலில் சனிக்கிழமை 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர், மேலும் 73 பேர் காயங்களுடன் மாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனையால் 14 பேர் இறந்ததாக பதிவு செய்யப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை, சிறீலங்கா இராணுவத்தின் சரமாரி தாக்குதலில் சுமார் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 60 பேர் காயமடைந்தனர் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளை சமாளிக்க மருத்துவ ஊழியர்கள் சிரமப்பட்டனர்.

கொழும்பு மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய வான் வழித் தாக்குதலைத் தொடர்ந்து, சிறீலங்கா இராணுவம் இரவில் ஷெல் தாக்குதலை தீவிரப்படுத்தியது, இதில் வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் மற்றும் பொக்காணி ஆகிய இடங்களில் உள்ள பாதுகாப்பு வலயத்திற்குள் 14 பேர் கொல்லப்பட்டனர். சனிக்கிழமை பகலில் மேலும் 19 பேர் கொல்லப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரணைப்பாலை, அனந்தபுரம் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட கடுமையான ஷெல் தாக்குதல்களில் 20க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.



# "பாதுகாப்பு வலயத்தில்" சிறீலங்கா விமானப்படையின் தாக்குதலில் 60 பொதுமக்கள் படுகொலை – 27.02.2009

சிறீலங்கா விமானப்படையின் போர் விமானம் வெள்ளிக்கிழமை வெடித்துச் சிதறியது, ஆனந்தபுரம் மற்றும் செம்மண்குண்டுவில் பொதுமக்கள் வசிக்கும் இடங்களில் கம்பள குண்டுவீச்சில் ஈடுபட்டிருந்ததாக வெள்ளிக்கிழமை மாலை "பாதுகாப்பு மண்டலம்" நோக்கி தப்பிச் சென்ற பொதுமக்கள் தெரிவித்தனர். முல்லைத்தீவு கடற்கரையில்



அறிவிக்கப்பட்ட "பாதுகாப்பு மண்டலம்" ஒரு தரிசுப் பகுதியாகவும், மேலும் தங்குமிடங்களுக்கு அப்பால் நெரிசலாகவும் இருப்பதால், பல பொதுமக்கள் நிழல் மற்றும் குடிநீர் வசதியுடன் உயிர்வாழ்வதற்கு ஏற்றதாகக் கருதப்படும் இடங்களில் தங்க விரும்பினர். வெள்ளிக்கிழமை மட்டும் கம்பள குண்டுவீச்சு மற்றும் தீவிர பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதலில் சுமார் 60 பொதுமக்கள் இறந்ததாகக் கூறப்படுகிறது.





இதற்கிடையில், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் பொதுமக்கள் இறந்தவர்களின் எண்ணிக்கை 75 ஆகவும், பலர் காயமடைந்ததாகவும் வன்னியில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதன்கிழமை பாதிக்கப்பட்டவர்களில் 18 பேரும், வியாழக்கிழமை பாதிக்கப்பட்டவர்களில் 2 பேரும் பீரங்கித் தாக்குதலில் "பாதுகாப்பு மண்டலத்திற்குள்" கொல்லப்பட்டனர்.

# “பாதுகாப்பு வலயம்” மீது சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதல் – 24.02.2009

முழுப் பகுதியும் மக்கள் தொகை அடர்த்தியாக இருப்பதால், “பாதுகாப்பு வலயத்தில்” சிறீலங்கா இராணுவத்தால் வீசப்படும் ஒவ்வொரு ஷெல்லும் பொதுமக்களுக்கு உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது என்று தமிழ்நெட் நிருபர் செவ்வாயன்று தெரிவித்தார். செவ்வாய்க்கிழமை அதிகாலை 5:00 மணியளவில் ஒரு பீரங்கி ஷெல் வீசப்பட்டதில் இரண்டு டீனேஜ் சிறுவர்கள் உட்பட 6 பொதுமக்கள் உயிரிழந்தனர். புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனைக்கு அருகில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்ட 98 காயமடைந்த பொதுமக்களில் பலர் குழந்தைகளும் அடங்குவர் என்று மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.













செவ்வாய்க்கிழமை காலை 5:00 மணியளவில், “பாதுகாப்பு வலயத்திற்குள்” செயல்படும் ஒரே தற்காலிக மருத்துவமனை அருகே, சிறீலங்கா இராணுவம் ஒரு பீரங்கி எறிகணை வீசியது, இதில் திங்கள்கிழமை இரவு இரணைப்பாலையிலிருந்து இடம்பெயர்ந்து அங்கு குடியேறிய 6 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.



செவ்வாய்க்கிழமை காலை கொல்லப்பட்ட ஆறு பேரில், உறவினர்கள் என அடையாளம் காணப்பட்ட நான்கு பேர், என். இயலவன், 12,ஶ்ரீதரன் கிரிதாஸ், 17, ஜெயபாலசிங்கம் பார்த்திபன், 20 மற்றும் வி. கமலேஸ்வரி, 40. அவர்கள் திங்கள்கிழமை இரவு இரணைப்பாலையிலிருந்து புதுமாத்தளனுக்கு குடிபெயர்ந்தனர். கொல்லப்பட்ட மற்ற இருவரின் அடையாளம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை, அவர்களின் சடலங்கள் அருகிலுள்ள புதுமாத்தளன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன.

திங்கட்கிழமை, பொதுமக்களின் 3 சடலங்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டன, பல குழந்தைகள் உட்பட 11 பேர் காயமடைந்தனர். திங்கட்கிழமை மேலும் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், உள்ளூர் ஊடக அறிக்கைகளின படி, திங்கட்கிழமை 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

# வன்னிப் பகுதியில் “பாதுகாப்பு வலயத்தில்” சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல் பொதுமக்கள் படுகொலை 29.01.2009

வியாழக்கிழமை நண்பகல் முதல் “பாதுகாப்பு வலயத்தின்” மையப்பகுதியை நோக்கி சிறீலங்கா இராணுவம் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது, இதில் குறைந்தது 44 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 178 பேர் காயமடைந்தனர் என்று வன்னியிலிருந்து வந்த ஆரம்ப தகவல்கள் தெரிவிக்கின்றன. சுதந்திரபுரம் 100 குடியிருப்புத் திட்டத்தை குறிவைத்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, அங்கு குறைந்தது 7 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. சுதந்திர புரத்தில் உள்ள புனித அந்தோணி தேவாலயத்திற்கு அருகில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

“பாதுகாப்பு வலயம்” தொடங்கும் இருட்டுமடுவில் குறைந்தது 7 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**எமது மக்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதனின்றும் மக்களை விடுவித்து எமது மக்களின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்டும் வரை, நாம் ஆயுதம் ஏந்திப் போரிடுவதைக் கைவிடமாட்டோம்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டம் தமிழர் சுயநிர்ணய உரிமையை நசுக்குகிறது!

***தமிழ மக்கள் இலங்கையின் அரசியலமைப்புகளையே ஏற்றுக்கொள்ளவில்லை***

இலங்கைத்தீவு முழுவதும் என்று ஒரே அரசியலமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை,

1. கோல்புறூக் - கமெரன் அரசியல் திட்டம் - 1833
2. குறூ - மக்கலம் அரசியல் திட்டம் - 1910
3. மானிங் தற்காலிக அரசியல் திட்டம் - 1921
4. மானிங் அரசியல் திட்டம் - 1924
5. டொனமூர் அரசியல் திட்டம் - 1931
6. சோல்பரி அரசியல் திட்டம் - 1947
7. கொல்வின் அரசியல் திட்டம் - 1972
8. ஜெயவர்த்தனா அரசின் அரசியல் திட்டம் - 1978

மேற்படி அரசியலமைப்புகளை ஆதரித்த தமிழ் பேசும் தலைவர்களோ உறுப்பினர்களோ பின்னர் நடந்த தேர்தல்களின் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். 1972ஆம் ஆண்டு சிறீமாவோ ஆட்சியினால் கொண்டுவரப்பட்ட ஏற்கெனவே இருந்து வந்த தமிழ் மக்களின் அரை குறை உரிமைகளையும் புறக்கணித்த குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் கடுமையாக எதிர்த்தன. சிங்கள கட்சிகளிலிருந்த தமிழ் பேசும் உறுப்பினர்களும், சுயநலங்களுக்காக தமிழ் இயக்கங்களில் இருந்து கட்டுப்பாட்டை மீறிய சில தமிழ் பேசும் உறுப்பினர்களும் அந்த அரசியலமைப்பை ஆதரித்துக் கை யெழுத்திட்டனர். அவர்கள் அனைவரும் தமிழீழ மக்களால் (வடகிழக்கு மாகாண மக்களால்) அடுத்த தேர்தலில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டனர்.




என எட்டு அரசியல் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை எவையும் தமிழ் மக்களின் ஒப்புதலுடனேயோ அல்லது ஒத்துழைப்புடனேயே கொண்டுவரப்பட்டவை அல்ல.

மாறாக, 1931 இல் கொண்டு வரப்பட்ட டொனமூர் அரசியலமைப்பிலிருந்து நடைமுறைக்கு வந்த எல்லா அரசியலமைப்புச் சட்டங்களும் தமிழ் இயக்கங்களின், தமிழ் மக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே தமிழ் மக்களின் உணர்வுகளை உதாசீனம் செய்துவிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.



மேற்படி அரசியலமைப்பை ஆதரித்து கையெழுத்திட்ட ராஜன் செல்வநாயகம், சி. எக்ஸ். மார்ட்டின், குமாரசூரியர், அருளம்பலம், தியாகராஜா, பதியுதீன் மொகமட், எம்.சி. அகமட், ஏ.எல். அப்துல்மஜீத் ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி சிறீமாவோவின் அரசியலமைப்பையும் ஆட்சியையும் ஆதரித்த தம்பிராசா, M.M. முஸ்தபா ஆகியோரும் அடுத்து வந்த 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது தமிழீழ மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் கட்டுப்பணத்தைக்கூடப் பெற முடியாத அளவுக்கு பரிதாபகரமான முறையில் தோல்வியைத் தழுவினர்.

அதேபோன்று 1978இல் ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த ஆளுங் கட்சியைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகளும், பின்னர் அரசயில் சட்டத்துக்கும் ஜெயவர்த்தனா அரசுக்கும் ஆதரவாகச் செயற்பட்ட தமிழ் பேசும் பிரதிநிதிகளுமான K. அப்துல் மஜீத், ராஜதுரை, K.W. தேவநாயகம், மன்சூர், மஃரூப் ஜலால்தீன், ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோர் 1989ஆம் ஆண்டு தேர்தலில் தமிழீழ மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். அல்லது தேர்தலில் போட்டியிட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

எனவே கடந்தகால வரலாற்று நிகழ்வுகளிலிருந்து தமிழீழ மக்கள் சிறீலங்காவின் அரசியலமைப்பை ஏற்றோ, அதற்குக் கட்டுப்பட்டோ தாம் நடக்க விரும்பியவர்களல்லர் என்பதை தமக்குக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

***தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கவே ஆறாவது திருத்தச் சட்டம்***

ஒரு தேசிய இனத்துக்கு உரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனித்துவமான அரசொன்றை அமைத்து தமது தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என்று தெளிவான முடிவெடுத்த தமிழீழ மக்கள் அதற்காக உறுதியாக நின்று போராடிவரும் விடுதலைப்புலிகளுக்கு தங்களின் பேராதரவையும் ஒத்துழைப்பையும் கொடுத்துவருகின்றனர்.

அடக்கு முறைகளுக்கு எதிராக வரலாற்று ரீதியாக தொடர்ந்து வரும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புகளை முனை மழுங்கச் செய்யவும், தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை நசுக்கவும், தமிழ் பேசும் மக்களை தொடந்து அடிமைகளாக வைத்திருக்கவும் ஒரு கருவியாகவே ஜெயவர்த்தனா ஆட்சியாளரால் 1983 ஆகஸ்ட் 08ஆம் நாள் அரசியல் அமைப்பில் 06ஆவது திருத்தச்




சட்டம் கொண்டுவரப்பட்டது.

அத்திருத்தச் சட்டத்தின்படி,

157 A

(1) எந்த மனிதனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தனிநாடு ஒன்றை சிறீலங்காவின் எல்லைக்குள் அமைக்க, சிறீலங்காவின் எல்லைக்கு உள்ளேயோ வெளியேயோ இருந்து தூண்டவோ, நிதியளிக்கவோ, ஊக்கப்படுத்தவோ, பிரச்சாரம் செய்யவோ, ஆலோசனை தரவோ ஆதரவளிக்கவோ கூடாது.

(2) சிறீலங்காவின் எல்லைக்குள் தனி நாடு அமைப்பதை எந்தவொரு அரசயிற் கட்சியோ - சங்கமோ - அமைப்போ தன் கொள்கைகளிலொன்றாகக் கொண்டிருக்கக் கூடாது.

என்று கூறப்பட்டுள்ளது. இவற்றை மீறுபவர்கள் நீதிமன்றில் விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால்,

- மீறும் தனநபர் ஏழு ஆண்டுகள் அரசயில் உரிமையை இழப்பார்.



- அவரது சொத்துக்கள் நீதிமன்றத் தீர்ப்பினால் பறிமுதலாகும்.
- பாராளுமன்ற உறுப்பினராயின் அவர் பதவி பறிக்கப்படும். பின்னர் 7 ஆண்டுகளுக்கு உறுப்பினராகும் வாய்ப்பை அவர் இழப்பார்.
- கடவுச்சீட்டைப் பெறும் உரிமை, பரீட்சைகள் எதிலும் பங்குபற்றும் உரிமை, அசையாச் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை, சட்டத்துக்கு அமைய அனுமதிப் பத்திரமோ, பதிவோ அன்றி அரசின் ஒப்புதலோ தேவைப்படும் வணிகத்திலோ தொழிலிலோ ஈடுபடும் உரிமை இவைகளை நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்து அவர் இழப்பார்.

பிரிவினைக் கொள்கையைக் கொண்டிருப்பதாக அரசியற் கட்சியொன்றோ - அமைப்போ - சங்கமோ குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து மேலே குறிப்பிட்ட தண்டனைகள் அக்கட்சியின் - அமைப்பின் - சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படும்.


அதுமட்டுமல்ல, இச்சட்டம் நடைமுறைக்கு வந்து ஒரு மாத காலத்துக்குள், பாராளுமன்ற உறுப்பினர்களோ அரசு அதிகாரிகளோ "இலங்கை அரசின் அரசயிலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்குப் பாதுகாப்பாகச் செயற்படுவதுடன் சிறீலங்காவின் ஆட்சிப் பகுதிக்குள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, சிறீலங்காவுக்கு உள்ளேயொ, வெளியேயோ இருந்து கொண்டு தனி நாடொன்றை உருவாக்கும் கொள்கையைக் கொண்டிருக்கவோ, அதற்கு நிதியுதவியளிக்கவோ, ஊக்கம் கொடுக்கவோ ஆதரவாக பிரச்சாரம் செய்யவோ மாட்டேன்" என்று சத்தியப்பிரமாணம் எடுத்தல் வேண்டும். இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின் நியமனம் பெறும் பாராளுமன்ற உறுப்பினரோ, அரசு அலுவலகர்களோ, நியமனம் பெற்ற ஒரு மாத காலத்துக்குள் மேற்படி சத்தியப்பிரமாணத்தை எடுக்க வேண்டும்.

அப்படி சத்தியப்பிரமாணம் எடுக்கத் தவறினால் அவர்கள் பதவியை இழப்பார்கள் என்றும் அரசியலமைப்பின் 06ஆவது திருத்தச் சட்டம் கூறுகிறது.

***இந்தச் சட்டமானது தமிழர்களின் உரிமைகளைமட்டும் பறிக்கவில்லை; நசுக்கவில்லை. தமிழர்கள் தம் உரிமைகளுக்காகப் போராடும் உரிமைகளையும் கூட இச்சட்டம் நசுக்குகிறது.***




1983ஆம் அண்டு ஆகஸ்ட் மாதம் அரசியலமைப்பின் 06ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய அரசியலமைப்புக்கு விசுவாசமாக பிரிவினைக்கு எதிராகச் சத்தியப்பிரமாணம் செய்ய சூழ்நிலை சாதகமாக, பாதுகாப்பாக இல்லாததால் பதவி பறிபோனாலும் சத்தியப் பிரமாணம் எடுக்கமாட்டோம் என்று பத்தினி வேடம் போட்டு வீரம் பேசி வெளிநாட்டுக்கு ஓடிவிட்டு, அதனால் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்த கூட்டணித் "தம்பிரான்கள்" தாம் பிரிவினைக்கோஷத்தை முன்வைத்து எம்.பி. பதவியைப் பெற்றதையும் மறந்து, கொண்ட கொள்கைகளைக் கைவிட்டு, இன்று தமிழ் மக்களின் நலன்களைப் புறக்கணித்து எம்.பி. பதவிக்காக சிங்கள ஏகாதிபத்தியவாதிகளிடம் சரணடைந்து, பிரிவினை கேட்கமாட்டோம் பிரிவினைக்கு ஆதர வளிக்கமாட்டோம். அது எங்கள் கொள்கை அல்ல நாம் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு விசுவாசமாக இருப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்து




தேர்தலில் நின்றனர். இவர்கள் அனைவரையும் தமிழீழ மக்கள் தேர்தலில் படுதோல்வி அடையச் செய்திருக்கின்றனர்.

தமிழீழ மக்கள் விழிப்புடனேயே இருக்கிறார்கள். அவர்களை சுயநலவாதிகளும் பச்சோந்திகளும் என்றும் ஏமாற்றிவிட முடியாது. திம்பு பேச்சுவார்த்தையின்போது "இலங்கை அரசுடன் சமரசம்பற்றி பேசுவதானால் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிக்கப்படவேண்டும்" என்பது உட்பட நாலு நிபந்தனைகளை விடுதலைப் புலிகளுடன் கூட்டணியும் மற்றும் நான்கு அமைப்புக்களும் இலங்கை அரசுக்கு விதித்தன. பின்னர் இந்திய அரசின் நெருக்குதல் காரணமாக இலங்கை அரசு நிபந்தனை எதையும் நிறைவேற்றாத போதிலும் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நடைபெற்ற தேர்தல்களில் பங்கேற்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு படிமேலே போய் திம்பு பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகள் நான்கும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை உட்பட நிறை வேற்றப்பட்டால்தான் இலங்கை அரசியல் அமைப்பின் 06ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய தாம் சத்தியப்பிரமாணம் எடுக்க முடிவெடுத்ததாக தமது தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருந்தனர்.

சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? ஒரு தேசிய இனம் தன் தலைவிதியைத் தானே முடிவு செய்யும் உரிமை அதாவது பிரிந்து செல்லும் உரிமை. அந்த உரிமையை இலங்கை அரசு வழங்கிவிட்டதாக பொய் கூறிய கூட்டணியினர் தமிழர்களை ஏமாற்ற முனைந்தனர்.

ஆனால் சுட்டணியினர் ஏற்றுக்கொண்ட அரசியலமைப்பின் 06ஆவது திருத்தச் சட்டம் கூறுவதெனன்? இலங்கை ஆட்சிப் பகுதிக்குள் பிரிவினை ஏற்படுத்தும் கொள்கையை எவரும் எந்த அமைப்பும் கொண்டிருக்கக்கூடாது. அப்படிக் கொண்டிருப்பவர்கள் கொண்டிருக்கும் இயக்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் குடியுரிமையை இழப்பர், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும், பதவிகள் பறிக்கப்படும், இதில் எங்கே தமிழர்களின் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது? தமிழர்கள் சுயநிர்ணய உரிமை கேட்கக்கூடாது - அதன் அடிப்படையில் தனியரசு அமைக்க எண்ணக்கூடாது - அதைக் கொள்கையாகக் கொண்டிருக்கக்கூடாது என்றுதானே 06ஆவது திருத்தச் சட்டம் கூறுகிறது.

நன்றி: தமிழீழம் - ஏப்ரல் 1989 - குரல் 10

# தொல்லியல் சுவடுகள்...




# மாந்தை: பண்டைய இலங்கையின் நெடுங்கடல் வர்த்தகத் துறைநகர்

## பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

### மாந்தை (மாதோட்டம்)

இலங்கையிலுள்ள துறைமுக நகரங்களில் மிகப் பழைமையான துறைமுக நகரங்களில் ஒன்று மாந்தை. இலங்கையில் இது 'மாந்தைத்துறை' என நெடுங்காலமாக அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழ் இலக்கியங்களில் இது மாந்தை, மாதோட்டம், பெருந்துறை ஆகிய பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. சங்ககால இலக்கியங்களில் வரும் 'மாந்தை' என்ற துறை இந்தத் துறைமுகத்தையா அல்லது தென்னிந்தியாவிலுள்ள வேறு ஒரு துறையையா குறிப்பிடுகின்றது என்ற மயக்கம் இன்னும் உள்ளது. திருவாசகத்தில் குயில் பாட்டில் மாணிக்கவாசகர் கூறும் 'பெருந்துறை' இந்த மாந்தைத்துறை ஆகும். இலங்கை மன்னன் இராவணனின் அரசி வண்டோதரியை (மண்டோதரி) பெருந்துறையிலிருந்த சிவன் ஆசீர்வதித்ததாக அவர் கூறியுள்ளார். அப்பர், சுந்தரர் ஆகிய சைவ நாயன்மார்கள் 'மாதோட்டம்', 'கேதீச்சரம்' (திருக்கேதீஸ்வரம்) ஆகிய பெயர்களால் இத்துறைமுக நகரத்தைக் குறிப்பிடுகிறார்கள். பதினொராம் நூற்றாண்டில் இலங்கை சோழர் ஆட்சியின் கீழிருந்த காலத்தில் இந்தத் துறைமுக நகரம் 'இராஜராஜபுரம்' என அழைக்கப்பட்டதை அக்காலத்தைய கல்வெட்டு ஒன்று எடுத்துரைக்கிறது.


மனித நாகரிகம் வளர்ச்சி பெற்ற ஆரம்ப காலங்களில் உலகெங்கும் பெரும்பாலும் துறைமுகங்களே ஒரு நாட்டின் முதல் நகரங்களாக உருவாகின. இந்து சமுத்திரத்தின் மத்தியில், இந்திய உபகண்டத்தின் தென்முனையில், இந்து சமுத்திரத்தின் மேற்கிலும் கிழக்கிலுமிருந்து வரும் கடற்பாதைகள் சங்கமிக்கும் கேந்திர நிலையமாக விளங்கிய மாந்தை இலங்கையின் ஆதித் துறைமுக நகரங்களில் ஒன்றாக விளங்கியதில் ஆச்சரியமில்லை. இந்துமாகடலில் கிழக்குலகிற்கும் மேற்குலகிற்கும் இடையே நடைபெற்ற வர்த்தக வலைப்பின்னலின் மையத்தில் அமைந்த மாந்தை அந்த வர்த்தகப் பரிமாற்றத்தின் முக்கியமான நடுவமாகவும் பரிணாம வளர்ச்சி பெற்றது. அருவி ஆற்றின் (மல்வத்து ஓயா) கழிமுகத்துறையான மாந்தை, அந்த ஆற்றங்கரையில் தோற்றம் பெற்ற இரும்புக்கால நகரமான அநுராதபுரத்தினதும், அந்த ஆறுபாயும் நாகநாட்டினதும் முக்கியமான வெளிநாட்டு வர்த்தகத் துறையாகவும் விளங்கியது.




தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் காலத்தைக் காட்டும் படம்

இந்துமாகடலின் மத்தியில், இந்திய உபகண்டத்தின் தென்முனையில், இந்துமாகடலிற்கு இருபுறமும் நெடுந்தொலைவிலிருந்த நாடுகளை இணைக்கும் கடற்பாதையின் மையத்திலமைந்த வட இலங்கையின் யம்புகோவளம், யாழ்ப்பாணப் பட்டினம் போன்று மாந்தை ஒரு சர்வதேசப் பண்டப் பெருநிலையமாக - சர்வதேச வாணிப மையமாக விளங்கியது. ஏறக்குறைய 3,000 ஆண்டுகளுக்கும் மேலாக - கி.மு. 2000 ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து (பீனீசிய - கிரேக்க - ரோம - பாரசீக - அரேபிய வர்த்தகம்) கி.பி. 1170 ஆண்டுக்காலம் வரை (அரேபிய - சீன வணிகம்) - சமீப கிழக்கு, தூரகிழக்கு நாடுகளினதும், மேற்கு உலகத்தினதும் வாணிப மையமாகவும், பண்டகசாலைக் களஞ்சியமாகவும் (Emporium and Entrepot) பரிணமித்தது மாந்தை. சீனாவிலிருந்து பட்டுத்துணிகளையும், பீங்கான் பாண்டங்களையும் கொண்டு கிழக்கு ஆபிரிக்கா நோக்கிச் செல்லும் கப்பல்களும், ரோமாபுரியிலிருந்து மதுச்சாடிகளை ஏந்தி வந்து பின் வாசனைத் திரவியங்களை ஏற்றிச் செல்லும் மரக்கலங்களும், அரேபியாவிலிருந்து வந்து கீழைத்தேசப் பாண்டங்களையும் சரக்குகளையும் ஏற்றிச்செல்லும் பாய்க் கப்பல்களும் கடற்பாதையின் மத்தியிலிருந்த மாந்தைத் துறையில் தங்கவும், உணவு குடிநீர் பெறவும், பண்டங்களைப் பரிமாறிப் பெற்றுக்கொள்ளவும் வந்தவண்ணம் இருந்தன.

நெடுங்கடலோடும் சர்வதேச வர்த்தகர்கள் தூர தேசங்களான சீனா, அரேபிய வளைகுடா, செங்கடல், மத்திய தரைக்கடல், கிழக்கு ஆபிரிக்க நாடுகளிடமிருந்தும், மற்றும் இலங்கை - இந்திய உபகண்ட நாடுகளிடமிருந்தும் பொருள், பண்டங்கள் வணிகம் செய்ய வருவது மாந்தையிலிருந்த பண்டகசாலைக் களஞ்சியத்திற்குத்தான். சீனாவிலிருந்து பட்டுத் துணிகளையும், பீங்கான் பாத்திரங்களையும் கிழக்கு ஆபிரிக்கக் கரையோர




பண்டைக்காலக் கடற்பாதை

நாடுகளுக்கென எடுத்துச்செல்லும் கப்பல்களும், மத்திய கிழக்குச் சந்தைகளுக்கு கிழக்குலகின் நறுமணச் சரக்குகளையும் (ஏலம், கறுவா, இஞ்சி, கராம்பு போன்றவை), சீனப் பண்டங்களையும் எடுத்துப்போக வரும் அரேபியக் கப்பல்களும் வந்து தங்கும் துறை மாந்தை (Carswell, J. 2013: 12). அரேபியக் கப்பல்கள் இலங்கைக்கு அப்பால் தூரகிழக்கு நாடுகளுக்குச் சென்றதில்லை. அவைகள் மாந்தையில் தங்கி, பண்டகசாலைக் களஞ்சியத்திலிருந்து வேண்டிய பொருட்களையும், உணவுகளையும், குடிநீரையும் பெற்று, திரும்பிச் செல்வார்கள். அது போன்று சீனாவிலிருந்து வரும் கப்பல்கள் சில கிழக்கு ஆபிரிக்கா வரை சென்றிருக்கின்றனவே ஒழிய, அவை பொதுவாக அரேபியா, பாரசீகம், மத்தியகிழக்கு நாடுகள் வரை செல்வதில்லை. மாந்தையில் தங்கும் அரேபிய வர்த்தகர்களுடன் அவர்களது வணிகம் நடைபெற்றுவிடும்.

மேற்கு நாடுகளிலிருந்தும், கிழக்கு நாடுகளிலிருந்தும் கடல் மார்க்கமாகப் பயணம் செய்யும் பாய்க் கப்பல்கள் இலங்கையின் மாந்தை, யாழ்ப்பாணப் பட்டினம் போன்ற துறைகளில் கட்டாயமாகத் தங்க வேண்டியிருப்பதற்கு இந்துமாகடலின் காற்று விசை முறைமை (Wind System) முக்கியமான காரணமாகும். இந்துமாகடலில் தென் - மேற்குப் பருவப்பெயர்ச்சிக் காற்று (South-west Monsoon) கோடை காலங்களில் தென்மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசியடிக்கும். அந்த மாதங்களில் மேற்கு நாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் காற்றின் உதவியோடு சுலபமாக இந்திய - இலங்கைக் கரைகளை வந்தடைந்து கிழக்காசிய நாடுகள் வரை செல்ல முடியும். ஆனால் இக்காற்று மூன்று மாதங்கள் மட்டுமே (மே முதல் ஜுலை வரை) வீசியடிக்கும். வட - கிழக்குப் பருவப்பெயர்ச்சிக் காற்று (வாடைக் காற்று) (North-East Monsoon) மாரி காலங்களில் வடகிழக்கிலிருந்து மேற்குத் திசை நோக்கி அடிக்கும். இக்காலத்தில் காற்றின் உதவியோடு பாய்க் கப்பல்கள் சுலபமாக மேற்கு நாடுகளை நோக்கிப் பயணம் செய்யும்.



மாந்தைத் துறைமுகநகரத்தைச் சுற்றவர உள்ள இரட்டை மதில்சுவரைக் காட்டும் வான்வெளிப் படம்

Image Source - 1980 Aerial Photograph


மேற்கு நாடுகளிலிருந்து தென்மேற்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றின் துணையோடு இந்தியா, இலங்கை வரும் உரோம, அரேபிய பாய்க்கப்பல்கள் மேற்கு இந்திய அல்லது கிழக்கிலங்கைத் துறைகளில் காற்றின் அடிதிசை மாறும் வரை ஆறுமாத காலம் வரை தங்கியிருக்க நேரிடலாம். இவ்வாறு தங்குவதற்கு மேற்கு இந்தியத் துறை முகங்களைக் காட்டிலும் இலங்கைத் துறைமுகங்கள் மிகுந்த பாதுகாப்பானவை.

நீண்டகாலமாக மேற்கு நாடுகளிலிருந்து இலங்கை, கிழக்கிந்தியா நோக்கி வரும் கப்பல்கள் தென்னிந்தியக் கரையோரமாக கன்யாகுமரியைச் சுற்றிவந்து மன்னார்க் குடாவில் நுழைந்து மேற்கிலங்கைக் கடலோரமாக மாந்தையிலும், யாழ்ப்பாணப் பட்டினத்திலுமே தரித்து நின்றன. தென்னிந்தியக் கரைவழியாக கிழக்கு - இந்தியத் துறைகளை சுலபமக அடையக்கூடிய - இராமேஸ்வரத்திற்கும் இந்திய நிலத்திற்கும் இடையிலான பாம்பன் கால்வாய் மணல்படிந்து ஆழம் குறைந்த கடற்பாதையாதலால் இலங்கைக்கரை வழியாகவே கப்பல்கள் மன்னார்க் குடாவிலிருந்து பாக்கு நீரிணையைச் சென்றடைந்தன. தூரகிழக்கு நாடுகளுக்குச் செல்லவேண்டிய கப்பல்கள் இலங்கைக் கரையைக் கடந்து பாக்கு நீரிணையில் நுழைந்தபின் சோழகக் காற்றின் துணையோடு 'பத்தாம் பாகைக் கடல்வழியில்' கிழக்கு நோக்கி நேரே பயணித்தன (Thiagarajah, Siva 2016: 152).

சீனாவிலிருந்தும், மற்றைய தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்தும் வரும் கப்பல்கள் பெரும்பாலும் நேரே மேற்கு நாடுகளைச் சென்றடைவதில்லை. அவை இலங்கை, இந்தியத் துறைகளில் தங்கியிருக்கும்போது, அவர்கள் கொண்டு வரும் பொருட்களை அத்துறைகளில் தங்கியிருக்கும் அரேபிய, பாரசீக வர்த்தகர்கள் பெற்றுக்கொண்டு அரேபிய, மத்தியகிழக்கு நாடுகளின் சந்தைகளில் விலைப்படுத்துவார்கள்.

### சமுத்திரப் பண்பாடு


இந்தியக் குடாநாட்டின் நீண்ட கடற்கரை எங்கும் நெடுங்காலமாக வாழ்ந்து வரும் மீனவர்கள் உலோகப் பொருட்கள் எதையும் உபயோகிக்காமலேயே நீண்ட படகுகளை உருவாக்கி வந்திருக்கிறார்கள். நெடிதுயர்ந்த மரங்கள் தேர்ச்சித் திறமையுடன் செப்பமாக உருவரைத் தோற்றமாக வெட்டப்பட்டு, நெருப்பின் உதவியுடன் வளைக்கப்பட்டு, நெருப்பின் உதவியுடன் துளையிடப்பட்டு, மர ஆணிகளால் இணைக்கப்பட்டு, மரச்சட்டங்கள் பொருத்தப்பட்டு, கயிறுகளால் இறுக்கப்பட்டு அமைக்கப்பட்டன. இத்தகைய நீண்ட படகுகள் அவர்களது மூதாதையர்களால் உபயோகிக்கப்பட்டிருக்கலாம். பண்டைய தென்னாசிய மக்கள் கிழக்குலகில் பரவலாக நாடு பெயர்வதற்கான விளக்கம் இதுவாகவே இருக்கும். அவர்களின் கிழக்கு நோக்கிய இடப்பெயர்வு மலேசியா, இந்தோனேசியா, சுண்டா தீவுகள், மெலனேசியா, ஆஸ்திரேலியா, சிலி ஆகிய நாடுகளையும், மேற்கு நோக்கிய பெயர்வு மடகஸ்கார், சொக்கோற்றா, அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளையும் உள்ளடக்கியிருக்கிறது (Alain Danielou, 2003: 4).




கடல் வழியாக தென்கிழக்கு ஆசிய, தூர கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் கடற் பாதையைக் காட்டும் படம்

Image Source - கலாநிதி இரகுபதி

அதே காலகட்டத்தில், பனியுக காலத்தில், இலங்கை தென்னிந்தியாவின் நில நீட்சியாக இருந்ததை ஏற்கனவே பார்த்தோம். இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் தென்னிந்தியாவின் அதே மரபியல் இனத்தவர்தாம். அவர்களும் படகுகள் தயாரிப்பதில் கைதேர்ந்தவர்களாக இருந்திருப்பார்கள். காலப் போக்கில் தமிழக மக்கள் பெருங்கலன்கள் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைக் கற்று, நெடுங்கடலோடும் வித்தையை அறிந்திருந்தார்கள். இச்சமுத்திரப் பண்பாட்டின் தொடர்ச்சியை பிற்காலச் சங்ககாலப் பாடல்களில் காணக்கூடியதாக இருக்கிறது. இலங்கை வர்த்தகர்கள் இலங்கையின் இயற்கை வளங்களான மணிக்கற்கள், இரத்தினம், முத்துக்கள், யானைத்தந்தம், கறுவா ஆகிய பொருட்களை முதலில் அண்டை நாடான இந்தி யாவுக்கு எடுத்துச் சென்று, உலக வர்த்தக சமூகத்துடன் பரிச்சய மாகி, பின்னர் கடல்வழி வர்த்தகக் குழுவின் ஓர் அங்கமாக ஆனார்கள். உலகளாவிய வர்த்தகர்கள் இலங்கை வர்த்தகர் களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு இவர்கள் மூலம் தமது நாட்டின் வர்த்தக வளங்களை இலங்கைக்கும், இந்தியா விற்கும் பரப்பீடு செய்தார்கள் (Thiagarajah, Siva 2016: 156).



பண்டைக்கால பீனிசிய ஆயுதபாணியான வர்த்தகக் கப்பல்

Image Source - Live Science 2013

## நீண்டதூரக் கடல் வர்த்தகத் தங்குதுறை

இலங்கையின் வரலாற்றில் இற்றைக்கு 3,800 ஆண்டுகள் முன்பிருந்தே மாந்தை ஒரு பெருந்துறையாக, தென்னாசியாவில் ஒரு தனித்துவமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. இது அத்துறையில் கண்டெடுக்கப்பட்ட செப்புக் கழிவுகளிலிருந்து கணிக்கப்பட்ட திகதி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எகிப்தில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட பிரித்தானிய ஆய்வாளர்களால் இற்றைக்கு 3,200 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எகிப்திய அரசனான இரண்டாவது ரமெஸெஸ் (Ramses II) அரசனுடைய ‘மம்மி’யினுள்ளே (இறந்தவர்களைப் புதைக்கமுன் துணியினால் சுற்றிப் பதப்படுத்தும் முறை) கறுப்பு மிளகு (Black Pepper) கண்டெடுக்கப்பட்டது. அக்காலத்தில் எகிப்திற்குச் சமீபமாக கறுப்பு மிளகு காணப்பட்ட இடங்கள் இலங்கையும் தென்னிந்தியாவுந்தான். அக்காலத்தில் இலங்கைக்கு வந்த தூரதேசக் கப்பல்கள் பீனீசிய வர்த்தகர்களின் கப்பல்களாகவே இருந்தன. பீனீசியக் கப்பல்கள் ஆபிரிக்காவைச் சுற்றி தென்னாசியா நோக்கி வரும்போது அவர்கள் சந்திக்கும் முதல் துறைமுகம் மாந்தைத் துறை. ரமெஸெஸ் மன்னனின் ‘மம்மியில்’ கண்ட மிளகு மாந்தையிலிருந்து பீனீசிய வர்த்தகர்களால் எடுத்துச் சென்றதாகக் கருதப்படுகிறது (Markoe, G.E. 1951).

2013 ஆம் ஆண்டில் இஸ்ரேல் நாட்டில் மேற்கொண்ட அகழ்வுகளில் அகழ்வாராய்ச்சியாளர்கள் இற்றைக்கு 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட 27 அடைக்கப்பட்ட குடுவைகளைக் (Sealed Flasks) கண்டெடுத்தார்கள். அவற்றில் 10 குடுவைகளில் ‘சின்னமல்டிஹைட்’ (Cinnamaldehyde) என்ற இராசயனப் பொருள் காணப்பட்டது. இப்பொருள் கறுவாவிற்கு அதன் நறுமணச் சுவையைக் கொடுக்கும் இரசாயனப் பொருள். அந்தக் குப்பிகளில் கறுவாவைச் சேகரித்து வைத்ததனால் அப்பொருள் அங்கே காணப்பட்டது. அக்காலத்தில் இஸ்ரேலுக்குச் சமீபமாக கறுவா காணப்பட்ட இடம் இலங்கை. இஸ்ரேலிலிருந்து ஆபிரிக்காவைச் சுற்றி இலங்கை வர 3,000 மைல்கள் (ஏறக்குறைய 5,000 கிலோ மீற்றர்). இந்தக் கண்டுபிடிப்பு 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கிழக்கிலிருந்து மேற்குலகம் வரை நறுமணப் பொருட்களின் வர்த்தகம் நடைபெற்றிருக்கிறது என்பதை உறுதி செய்கிறது (Live Science, 20 August 2013).

இந்த வர்த்தகம் நடைபெற்ற காலத்தில் அன்றைய வடக்கு இஸ்ரேலின் கரையோரப் பகுதி பீனீசியாவின் ஒரு பகுதியாக இருந்தது. பீனீசியர்களே உலகின் முதலாவது நீண்டதூர நெடுங்கடல் வர்த்தகர்களாவர். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் கிரேக்க வரலாற்றாசிரியரான ஹீரோடோற்றஸ் (Herodotus) பீனீசியர்களின் கடல் வன்மையைப் பாராட்டி, அவர் எழுதுவதற்கு ஆயிரம் ஆண்டுகள் முன்பிருந்தே பீனீசியர்களின் கப்பல்கள் ஆபிரிக்காவைச் சுற்றி தென்னாசிய நாடுகளுக்குப் பயணம் செய்ததைப் பதிவு செய்திருக்கிறார். பீனீசியர்களால் கொண்டு வரப்பட்ட கறுவா வட இஸ்ரேலியர்களால் செய்யப்பட்ட தடித்த சுவர்களும், ஒடுங்கிய வாயும் கொண்ட குடுவைகளில் அடைத்துவைக்கப்பட்டிருக்கிறது (Live Science, 20 August 2013). இலங்கையை அடைந்த பீனீசியக் கப்பல்கள் மாந்தைத் துறையில் தரித்திருந்திருக்கக்கூடிய சாத்தியம் அதிகம்.


தென்னிந்தியக் கரையோரமாக இராமேஸ்வரத்திலிருந்து இலங்கையின் மன்னார் தீவு வரை வரிசையாக ‘இராமர் அணை’ (Adam’s Bridge) என அழைக்கப்படும் கடலடிப் பாறைகளும், சிறுசிறு தீவுக் கூட்டங்களும் காணப்படுகின்றன. இதன் காரணமாக தென்இந்தியக் கரையோரமாகப் பெரிய கப்பல்களைச் செலுத்த இயலாமல் உள்ளது. மணல் படிந்த பாம்பன் கால்வாய் வழியாக சிறிய கப்பல்கள் செல்லலாமே ஒழிய பெரிய பாய்க்கப்பல்கள் செல்ல இயலாது. இக்கப்பல்கள் மன்னார்க் குடா (Gulf of Mannar) வழியாக - மன்னார்த் தீவுக்கும் இலங்கையின் மேற்குக் கடற்கரைக்கும் இடையிலான குடா வழியாக மட்டுமே செல்ல முடிந்தது. இக்குடாப் பாதையில் அமைந்திருந்த பெருந்துறை மாந்தை.

இலங்கையின் தென்பகுதியிலிருந்த வலிமைமிக்க கடல் நீரோட்டங்களும், ஹம்பாந்தோட்டைப் பகுதியிலிருந்த கடற் பாறைகளும், இப்பெரிய பாய்க் கப்பல்கள் இலங்கையின் தென் பகுதியைச் சுற்றி தென்கிழக்காசிய நாடுகளுக்குச் செல்வதற்குத் தடையாக இருந்தன. அடிக்கடி கிழக்கும், மேற்குமாகச் செல்லும் அரேபிய மற்றும் சீனக் கப்பல்களுக்கு மன்னார்க்குடா வழியும், பத்தாம் பாகைக் கடற்பாதையுமே விரும்பத்தக்க, பாதுகாப்பான, நிலைநாட்டப்பட்ட கடற்பாதையாகப் பல நூற்றாண்டுகளாக விளங்கின. அப்பாதையில் மாந்தைத் துறை தங்குமிடமாகவும், தரித்துத் திரும்புமிடமாகவும், கப்பல்களைப் பழுதுபார்த்துத் திருத்துமிடமாகவும், உணவு நீராகாரங்களைச் சேமித்துச் செல்லும் இடமாகவும் இருந்தது. அங்கிருந்த பண்டகச்சேமிப்புக் களஞ்சியம் கிரேக்க யாத்திரிகர் கொஸ்மஸ்ஸினால் ‘மோதுற்றி பண்டகப் பெருநிலையம்’ (Modutti Emporium - மாந்தைக் களஞ்சியம்) எனப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (Cosmas Indicopleustes).

கி.மு. 1,800 ஆம் ஆண்டுகளில் மாந்தையிலிருந்து செம்பு உலோகம் தென் இந்தியாவிற்கும், பிற இடங்களுக்கும் ஏற்றுமதியாகியிருக்கிறது. மாதோட்டத் துறையில் கண்ட செப்புத் துண்டுகளும், செம்புக் கழிவுகளும் இ.மு. 3,800 ஆண்டுக் காலத்தைக் காட்டிநிற்கின்றன (Deraniyagala, S.U. 1996). இரும்பு கண்டுபிடிப்பதற்கு முன்னர் இந்த உலோகத்தின் ஏற்றுமதி உயர்ந்த வருவாயைக் கொண்டுவந்திருக்கும். அக்காலத்தைய மற்றொரு சிறந்த வருவாய் தந்த ஏற்றுமதி கறுப்பு மிளகு ஆகும். இற்றைக்கு 3,000 ஆண்டுகளுக்கு முன்னர் பேஹ்றோ மன்னர்கள் ஆட்சிபுரிந்த எகிப்தை கறுப்பு மிளகு சென்றடைந்திருக்கிறது. அக்காலத்தில் இந்த மிளகு இலங்கையிலிருந்து அல்லது கேரளத்திலிருந்தே சென்றிருக்க முடியும் (Deraniyagala, S.U. 1996). அக்காலத்தில் கேரளத்தில் முசிறி ஒரு துறைமுகமாக இயங்கவில்லை. கறுப்பு மிளகு மாந்தையிலிருந்தே பீனீசிய வர்த்தகர்களால் எகிப்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்க முடியும்.



மாந்தையில் காணப்படும் பெருக்க மரங்களில் ஒன்று




மெகஸ்தனிஸ் எழுதிய இன்டிக்கா

கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட இரண்டாம் ஆயிரத்தாண்டின் பிற்பாதியில் மத்தியதரைக் கடல் வர்த்தகம் இலங்கையின் விளைபொருட்களுக்கு மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியது. தொலைதூர வர்த்தகர்களான பீனீசியர்களின் எழுச்சி, இந்து மாகடலில் மேற்கு ஆசிய வர்த்தகத்தை ஆரம்பித்து வைத்தது. தென்னிந்தியா - இலங்கையின் விளைபொருட்களுக்கும், வாசனைத் திரவியங்களுக்கும் மத்தியதரைக்கடல் நாடுகளில் ஏற்பட்ட பிரபலமான வேண்டுகோள் இப்பகுதியில் கடற்பாதை வலையமைப்பு ஏற்படக் காரணமானது. கடற் கரையோரங்களிலும், பெறுமதியான கனிமங்களும், வளங்களும் காணப்பட்ட இடங்களில் வர்த்தக நிலையங்களும், குடியிருப்புகளும் நிறுவப்பட்டன (Indrapala, K. 2005: 77).

## பிறநாட்டவரின் ஆரம்பகால அறிவிப்புகள்

கிறிஸ்தாப்த யுகத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இஸ்ரேலிய அரசனான ஸொலொமன், ஜெருசலத்தில் பிரம்மாண்டமானதொரு கோயில் கட்டுவதற்கான கனிமங்களைத் தேடி தென்னிந்தியாவிற்கும், இலங்கைக்கும் பீனீசிய மாலுமிகள் செலுத்திய கப்பல் கூட்டத்துடன் வந்து தங்கம், அல்கம் மரங்கள், மதிப்புமிக்க மணிக்கற்கள் ஆகியவற்றை ஓபிர் என்ற இடத்திலும், பெருந் தொகையான தங்கம், வெள்ளி, யானைத் தந்தம், குரங்குகள், தோகை மயில் ஆகியவற்றை தர்ஷிஷ் என்ற இடத்திலும் பெற்றுக்கொண்டு திரும்பினான் (The Bible, Kings X, v22).

வரலாற்றாசிரியர் செ. இராசநாயகம் ஓபிர் என்ற இடம் நாகர்கள் வாழ்ந்த நாடான மாந்தை என்றும், தர்ஷிஷ் அந்த நாட்டின் துறைமுகம் எனவும் இனம் காண்கிறார். ‘ஓபிஸ்’ என்ற சொற்பதம் கிரேக்க மொழியில் நாக பாம்பைக் குறிக்கும். நாகர்கள் வாழ்ந்த நாடு பைபிளில் ஓபிர் எனக் குறிப்பிடப்படுகிறது என்கிறார் (Rasanayagam, S. 1926: 87-88).

நாம் எதிர்பார்த்த வண்ணம் இலங்கையைப் பற்றிய மிக ஆதியான பதிவுகள் பீனீசியர்களின் எழுத்துகளிலேயே காணப்படுகின்றன. சாஞ்சுநியாத்தன் என்பவர் எழுதிய நூலான ‘பீனீசியர் வரலாறு’ (Phoenician History by Sanchuniathon) என்ற நூல் அழிந்துபோய் விட்டது. ஆனால் கிரேக்க ஆசிரியரான பைபிளொஸ் நகரத்து பைலோ (Philo of Byblos) சாஞ்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203




திருக்கேதீஸ்வரம் கோயிலின் இன்றைய தோற்றம்

சுநியாத்தனின் நூலை கிரேக்க மொழியில் மொழிபெயர்த்திருந்தார். அவர் எழுதிய 'பீனீசியர் வரலாறு' கிரேக்க மொழிபெயர்ப்பின் பல பகுதிகள் இன்றுவரை கிடைத்திருக்கின்றன. இதை அல்பேர்ட் போம்காட்டன் என்ற இஸ்ரேலிய பார்-இலன் பல்கலைக்கழகப் பேராசிரியர் 'The Phoenician History of Philo of Byblos' என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார் (Baumgarten, A.I. 1981).

'பீனீசியர் வரலாறு' என்ற நூலின்படி நான்கு அரசர்கள் இலங்கைத்தீவை அரசாண்டார்கள். இவர்களில் நான்காவது அரசர் இலங்கையின் வடபகுதியை ஆட்சி செய்தார். "--the other king rules the region towards the north which produces pearls. He has made a great rampart on the isthmus to control the passage of the barbarians from the opposite coast for they used to make incursions in great numbers."

"இலங்கையின் வடக்குப் பகுதியான முத்து விளையும் பிராந்தியத்தை மற்றைய அரசன் ஆட்சி செய்கிறார். அப்பிராந்தியத்தின் எதிர்க்கரையிலிருந்து பெருந்தொகையில் வரும் காட்டுமிராண்டிகளைத் தடைசெய்ய அந்த ஜலசந்திக் கரையில் பெரியதொரு கோட்டையை அமைத்திருக்கிறார்."




சண்முகநாதனின் அகழ்வு

இலங்கையின் முத்து விளையும் பிராந்தியத்தில் அக்காலத்திலிருந்த துறைமுக நகரம் மாந்தை மட்டுமே ஆகும்.

நான்கு கிரேக்க நூலாசிரியர்கள் இலங்கையைப் (தப்ரபேன்) பற்றிப் பதிவு செய்திருக்கிறார்கள்: கி.மு. 326 இல் பேரரசன் அலெக்ஸாந்தரின் இராணுவத் தளபதிகளில் ஒருவராக இருந்த ஒன்ஸிகிறிற்றஸ், கி.மு. 302 இல் மௌரிய அரசன் சந்திரகுப்தனின் சபையில் தூதுவராக இருந்த மெகஸ்தனிஸ், கி.மு. 276 இல் கிரேக்க வானிலையாளரும் புவியியலாளருமான இராற்




மாந்தை அகழ்வுகளில் கண்ட பாரஸீக மட்பாண்ட ஓடுகள்

Image Source - John Carswell




கட்டுக்கரை குளம்



மன்னார்க்குடாவில் முத்துக்குளித்தல்

றோஸ்தெனிஸ், கி.மு. 130 இல் கிரேக்க வானிலையாளரும் கணிதவியலாளருமாக இருந்த ஹிப்பார்க்கஸ்.




குளோடியஸ் தொலமி வரைந்த 'தப்ரபேன்' (இலங்கை) வரைபடம்

இவர்களின் எழுத்துகளில் மெகஸ்தனிஸ் எழுதிய இன்டிக்கா என்ற நூல் மட்டும்தான் இன்று கிடைக்கிறது. மற்றவர்களின் எழுத்துகளிலிருந்து சில பகுதிகள் ஸ்ராபோ, பிளினி ஆகியவர்களின் எழுத்துகளில் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. மெகஸ்தனிஸ் இலங்கை (தப்ரபேன்) இந்தியாவிலிருந்து ஒரு அகலமான ஆற்றினால் பிரிக்கப்பட்டிருக்கிறது என்கிறார். இலங்கை மக்களை 'பேலியோகோனொஸ்' (Paleologos) என்கிறார். இவர்கள் இந்தியர்களைக் காட்டிலும் அதிக அளவு தங்கத்தையும், பெரிய அளவு முத்துகளையும் தயாரிக்கிறார்கள். முத்துகளில் தாம்ரவர்ணிகா (இலங்கை முத்துகள்), பாண்டிய கபாடகா (கொற்கை முத்துகள்) ஆகிய இரு வகைகளுமே மிகச் சிறந்த முத்துகளாகும் (Mccrindle, J.W. 1887; Stoneman, R. 2021).

மூத்த பிளினி என்ற உரோம ஆசிரியர் (கி.பி. 23-79) உரோமாபுரிக்கும் தப்ரபேனுக்குமிடையிலுள்ள உறவுகள் பற்றிக் கூறுகிறார். உரோமர்கள் இலங்கையுடன் நீண்டகால வர்த்தக உறவுகள் கொண்டிருப்பதைக் குறிப்பிடுகிறார். சக்கரவர்த்தி குளொடியஸ் (கி.பி. 41-54) சபையில் இத்தீவிலிருந்து ராச்சியா என்ற தூதுவர் இருப்பதைக் கூறியுள்ளார். இலங்கை சீனாவுடன் வர்த்தக உறவுகள் கொண்டிருப்பதையும், ராச்சியாவின் தந்தையார் சீனாவிற்குப் பயணம் செய்திருக்கிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அக்காலத்தில் 'கிரேக்க - உரோமர்களின் வர்த்தக உறவுகள் இலங்கையின் வடக்குத் துறைமுகங்களுக்கும், வடமேற்கிலிருந்த துறைமுகங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது' என வரலாற்றாசிரியர் சைமன் காசிச்செட்டி குறிப்பிடுகிறார்: "There is no doubt, the commercial intercourse of the Greeks and the Romans with Ceylon was confined to the North and North-western ports" (Casie Chetty, S. 1947-48: 77).

## மாதோட்டப் பண்டகப் பெருநிலையம் (Modutti Emporium)

கி.பி. 98-160 ஆம் ஆண்டுக்காலத்தில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த கிரேக்க புவியியலாளர் குளோடியஸ் தொலமி எழுதிய புவியியல் நூல் இலத்தின் மொழியில் ஜோகிரபியா (Geographia) என அழைக்கப்படுகிறது. இது, 1406-1407 ஆம் ஆண்டுக்காலத்தில் இத்தாலியில் புளோரன்ஸ் நகரத்தில் வாழ்ந்த 'ஜேக்கோபஸ் ஏஞ்சலஸ்' என்பவரால் இலத்தின் மொழியில் 'Geographia Claudii Ptolemaei' என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. தொலமியின் மூலநூல் எழுதப்பட்ட பப்பிரஸ் ஓலைகளில் அதிகமானவை இன்று அழிந்துவிட்டபோதிலும் இலத்தின் மொழிபெயர்ப்பு இன்றும் கிடைக்கிறது. ஆனால் மூலநூலில் இருந்த வரைபடங்கள் ஏதும் அதில் இல்லை.

கிரேக்க நூலாசிரியர்கள் இலங்கைத் தீவை 'தப்ரபேன்' என அழைத்தார்கள். தொலமி வரைந்த வரைபடத்தில் இலங்கை 'தப்ரபேன்' என்றும் அத்தீவின் முந்தைய பெயர் 'சீமொண்டு' (Simoundou) என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது (Mccrindle, 1877: 101-103). வரலாற்றாசிரியர் முதலியார் இராசநாயகம் இலங்கையின் ஆதிப்பெயரான 'சீலமண்டலம்' (ஈழமண்டலம்) என்ற பெயரையே தொலமி 'சீமொண்டு' எனப் பதிவிட்டிருப்பதாகக் கருதுகிறார் (Rasanayagam S. 1926: 60-61).

தொலமியின் வரைபடத்தில் அநுராகிராமம் (அநுராதபுரம்) வடமேற்கிலும், நாகதீப நகரம் வடகிழக்கிலும், மாதோட்டம் (Modutti) நாகதீபத்தின் வடக்கில் இருப்பதாகவும் குறிக்கப்பட்டிருக்கிறது (படம் கீழே பார்க்கவும்).

கிரேக்க வர்த்தகரான கொஸ்மஸ் இன்டிகோபிளியுஸ்ரெஸ் (Cosmas Indicopleustes) தப்ரபேனின் வடக்கே இருந்த மாந்தைத் துறைமுகத்தில் 'மோதுற்றி பண்டகப் பெருநிலையம்' இருந்ததாகக் குறிப்பிடுகிறார். இங்கே உரோமர்கள், அரேபியர்கள், சீனர்கள் தங்கள் பொருட்களைக் கொண்டு வந்து வர்த்தகம் செய்தனர். இந்த மோதுற்றி பண்டக நிலையம் நீண்ட காலமாக உரோமர்களுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தது. துறைமுகத்திலிருந்த வர்த்தகர்களின் தங்குமனைகளில் உரோம வர்த்தகர்களின் குடியிருப்புப் பகுதிகள் காணப் பட்டன (Huvelin, P-L. 1904: 1733-34; Peck, H.T. 1962: 592).



மாந்தையில் செய்யப்படும் கண்ணாடி உருள் மணிகள்

நன்றி: சிவ. தியாகராஜா - எழுநா

# ஈழத்தமிழரின் அரசியல் ஆவணங்களும் இலங்கை அரசின் ஏமாற்றங்களும்!

பா. அரியநேத்திரன்

11.02.2026

கடந்த 2026 ஜனவரி 20இல் இலங்கை தமிழரசுக் கட்சி பதில் தலைவர் சி வி கே சிவஞானமும், பதில் செயலாளர் எம் ஏ சுமந்திரனும், ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணி என சங்கு சின்னத்துடன் இயங்கும் ஈபிஆர்எல்எவ் சுரேஷ் பிரமச்சந்திரன், ரெலோ செல்வம் அடைக்கலநாதன், புளொட் சித்தார்த்தன், ஜனநாய போராளிகள் கட்சி வேந்தன், சமத்துவக்கட்சி மு.சந்திரகுமார் ஆகியோர் கூடி தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பிரதிபலிக்கக்கூடிய ஒரு ஆவணம் ஒன்றை தயாரிக்க தாம் முடிவெடுத்துள்ளதாக ஊடகங்களில் சுமந்திரனும், சுரேசும் கூறியிருந்தனர்.

இதுவரையில் 78 வருடங்களாக தமிழ் தலைவர்கள் தயாரித்த ஆவணங்களும், கையளித்த உடன்படிக்கைகளும் குப்பைத் தொட்டியில் போனதுதான் மிச்சம். இப்போது இவர்கள் ஏதோ புதிதாக தயாரிக்கப் போகிறார்கள் என்று நாடகம் காட்டுகிறார்கள்.

1948 டிசம்பர் 18இல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை தந்தை செல்வா ஆரம்பித்ததன் நோக்கமே ஈழத்தமிழ் இனத்துக்கான சமஷ்டி அடிப்படையிலான "தமிழரசு" ஒன்றை நிறுவும் நோக்கிலேயே அந்த கட்சிக்கு இலங்கை "தமிழரசு" கட்சி என்ற பெயரை சூட்டினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 1949 டிசம்பர் 18இல் ஆரம்பித்து அன்று தந்தை செல்வா ஆற்றிய தலைமை உரையில் கூறியது. "இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்கவேண்டும் என்ற தனி நோக்கத்துடன் நாங்கள் எல்லோரும் இங்கு கூடியிருக்கிறோம் இப்போதிருக்கும் நிலைமையில் நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு "சுதந்திர தமிழரசை" நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திடமான நம்பிக்கை" என பேசியிருந்தார்.

அந்த கட்சியின் முதலாவது மாநாடு 1951 ஏப்ரல் 13, 14, 15 ஆம் திகதிகளில் திருகோணமலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வா தலைமையில் நடந்தது. இம்மாநாட்டில், தமிழ் பேசும் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்றும், சிங்களவர்களுடன் சமஷ்டி அடிப்படையில் இணைந்து வாழ விரும்புவதாகவும் பிரதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சமஷ்டி கொள்கை இருந்தமையால் அதனை சமஷ்டிக் கட்சி என்ற பெயரும் தமிழரசுக்கட்சி பெற்றது. ஈழத் தமிழர்களுக்கான தலை நகர் 'திருகோணமலை' என்பதும் அந்த மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.

1957 ஜூலை 26இல் பண்டா செல்வம் ஒப்பந்தம் முதன் முதலாக அப்போதைய இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. வரலாற்று முக்கியமான அரசியல் ஒப்பந்தத்தில் தமிழ் மக்களுக்கு பன்முக ஆட்சிப் பிராந்திய சபைகள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் 1957 அக்டோபர் 04இல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா உட்பட பல சிங்களத் தலைவர்கள் பலரும் கண்டித்து நடத்திய எதிர்ப்பு யாத்திரை காரணமாகவும் பௌத்த பிக்குகள் தீவிரமாக எதிர்த்தமையாலும் இந்த ஒப்பந்தமும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. 1965 மார்ச் 24இல் அப்போதைய இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கும் தமிழர் தரப்பு தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை யில் குறிப்பிடப்பட்டவை...

* வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகவும் ஆவணங்கள் பதிவு செய்யும் மொழியாகவும் ஏற்கப்பட்டது.

* வடக்கு - கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ் மொழி பயன்படுத்த உத்தரவாதம் தரப்பட்டது.

* பிரதேச ஆட்சிமுறை மன்றங்கள் தாபிக்கப்பட வேண்டும் என்று ஏற்கப்பட்டது. அவற்றிற்கடங்கலான விடயங்கள் இரு தலைவர்களாலும் பின்னர் நிர்ணயிக்கப்பட விருந்தது.

* காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிப்பங்கீடு சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் முக்கியமாகக் கருத்தில் எடுக்க உடன்பாடு ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தமும் சிங்களத்தலைவர்களால் நிராகரிக் கப்பட்டது. 1976 அதே 14இல் வட்டுக்கோட்டையில் தமிழர் விடு தலைகூட்டணி தந்தை செல்வா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஜி ஜி பொன்னம்பலம், இந்திய தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமான் உட்பட அன்றைய தமிழ் கட்சிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழீழ தனியரசு தீர்மானம் நிறைவேற்றியது.

அதில் ...

01. இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறை யாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும்.

02.அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியல் இலக்கை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் சுயாட்சி உரிமை வேண்டும்.

03.அதற்காக முழுமூச்சான பயணத்தை அஞ்சாத அர்ப்பணிப் புக்களோடு நாம் முன்னெடுக்கவேண்டும் என தந்தை செல்வ நாயகம் தலைமையில் கூடிய இந்த மாநாட்டில் தீர்மானிக்கப் பட்டது.

இந்த தீர்மானத்தை முன்னிறுத்தி 1977 ஜூலை 21 இல் வட கிழக்கு மக்கள் ஆணை தேர்தல் மூலம் கிடைத்தது.

அதன் பின்னர் 1985 ஜூலை 8-9, ஆகஸ்ட் 12,13 இல் பூட்டான் தலைநகர் திம்புவில் நடந்த பேச்சுவார்தையில் ஆயதப் போராட்ட இயக்கங்களின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில்: அன்ரன், திலகர் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில்: மு. சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் ஈ.பி.ஆர். எல்.எவ்.சார்பில்: அ. வரதராஜப் பெருமாள், எல். கேதிஸ்வரன், டெலோ சார்பில்: சார்ள்ஸ் அன்ரனி தாஸ், மோகன், ஈரோஸ் சார்பில்: ராஜி சங்கர், ஈ. இரத்தினசபாபதி, புளொட் சார்பில்: இரா வாசுதேவா, தர்மலிங்கம் சித்தார்த்தன், ஆகியோர் ஒப்பமிட்டு வழங்கிய ஆவணம் திம்பு கோட்பாடு என அழைக்கப்பட்டது.

அதில்...

* இலங்கைத் தமிழர்கள் ஒரு தனி தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல்.

* இலங்கையில் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தாயகம் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்வது.

* தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

* வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்து, அதற்கு சுயாட்சி வழங்குவதை அங்கீகரித்தல்.

ஆகியவைகளை உள்ளடக்கிய ஆவணம் கையளித்தும் அதனையும் இலங்கை அரசு தட்டிக்கழித்தது..

அதன்பின்னரே 1987 ஜூலை 29இல் "இந்தியா-இலங்கை ஒப்பந்தம்" இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன மற்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் கைச்சாத்திடப்பட்டு தொடர்ந்து அது அமுல் படுத்தப்படாமல் போனதால், அதன் விளைவுகளையும் அனுபவித்துக் கொண்டே இருக்கிறோம்.

2001 ஜனவரி 17இல் பொங்குதமிழ் பிரகடனம் சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே அதன் சுருக்கம்.

2016 செப்டம்பர் 24 இல் எழுக தமிழ் நிகழ்வில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி, ரெலோ, ஈபிஆர்எல்எவ், புளட் மற்றும் வட மாகாண முதலமைச்சர் சி வி விக்னேஸ்வரன் ஆகியோர் ஒரு ஆவணத்தை வெளியிட்டனர்.


அதில்...

அ) தற்போதைய அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் எமக்கு தந்த படிப்பினையின் அடிப்படையிலும், இலங்கை அரசியலின் சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியல் கலாசாரத்தில் தமிழர்களின் கடந்த 68 ஆண்டு கால கூட்டனுபவத்தின் பிரகாரமும் ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு எந்த வடிவத்திலும் சாத்தியம் இல்லை என நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

ஆ) தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்டத்தின் அடிப்படையில், தேசிய இனப்பிரச்சினைக்கான நடைமுறை சாத்தியமான தீர்வு, தமிழர்களை இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் ஒரு தேசமாக, அவர்களது சுயநிர்ணய உரிமையை மதிக்கும், தன்னளவில் இறைமை கொண்ட சுயாட்சி ஒன்றை நிறுவும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலமாகவே அடையப்படும் எனக் கூறுகின்றோம்.

இ) தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும் அதன் வழி தமிழ்த் தேசத்தின் இறைமையையும், நிறுவன ரீதியாக, சமஷ்டி முறைமை ஒன்றின் மூலமாக அடைந்து கொள்ளலாம் என நாம் கூறுகின்றோம்.

ஈ) தமிழர் தேசத்தின் தனித்துவத்தையோ, தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தையோ அங்கீகரிக்காத, உள்ளடக்கத்தில் தெளிவில்லாத அரை குறை தீர்வொன்றை ஏற்றுக் கொள்ள முடியாது என இப்பேரணி கூறுகின்றது.




உ) புதிய அரசியலமைப்பு மிகவும் இரகசியமான முறையில் உருவாக்கப்படுகின்றது. புதிய அரசியலமைப்பு தொடர்பாக நடாத்தப்பட்ட பொது மக்கள் கலந்தாய்வு தொடர்பிலான அறிக்கை தமிழ் மக்களின் முன் வைப்புக்களை புறந்தள்ளியே சமரப்பிக்கப்பட்டுள்ளது. உருவாக்கப்படுகின்ற அரசியலமைப்பு நகல் தொடர்பிலான மக்கள் வாக்கெடுப்பிற்கு முன்னர் வெளிப்படையானதும், சனநாயக ரீதியில் கலந்துரையாடல் ஒன்று மக்கள் மத்தியில் இடம்பெற போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அடக்கு முறையின் கீழ் அரசியல் தீர்வு தொடர்பிலான கலந்துரையாடலை நடாத்த முடியாது. வடக்கு கிழக்கில் கருத்துக் சுதந்திரத்துடன் புதிய அரசியலமைப்பு தொடர்பிலான திறந்த விவாதம் நடைபெற பயங்கரவாதத் தடை சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இராணுவமய நீக்கம் செய்யப்பட வேண்டும் என நாம் கூறுகின்றோம் என குறிப்பிடப்பட்டது. அதுவும் நடக்கவில்லை.

2019 அக்டோபர் 15இல் தமிழரசுக் கட்சி, புளொட், ஈபிஆர் எல்எப், ரெலோ ஆகிய கட்சிகள் தமது கருத்துக்களை அறிக்கைகளாகச் சமர்ப்பித்திருந்தார்கள். அவையெல்லாம் சேர்க்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் அனைத்தும் ஒரு பொது ஆவணமாக தயாரிக்கப்பட்டது. அந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் பல விடயங்களை ஏற்றுக் கொண்டது.

சில விடயங்களில் மாத்திரமே கலந்துரையாடப்பட்டது. அதுவே ஆவணமாகவும் தயாரிக்கப்பட்டது. ஆனாலும் புதிய யாப்புக்கான இடைக்கால வரைபு தொடர்பாக அவர்கள் தொடர்ந்து பேசினார்கள். எனினும் இந்த விடயங்கள் தற்போதைக்குத் தேவையில்லை. நாங்கள் பேசுகின்ற விடயங்கள் வேறு. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் கூறப்பட்டது அத்துடன் இடைக்கால வரைபு தற்போது பேசப்படுவதில்லை, கைவிடப்பட்டுள்ளது என்றெல்லாம் ஏனைய கட்சிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனாலும் புதிய வரைபை நிராகரிக்க வேண்டும் என்று பிடிவாதமாக நின்றார்கள். அப்படி இல்லையேல் இந்த ஆவணத்தில் கையொப்பமிட முடியாது என்றும் கூறிவிட்டு தாமாகவே வெளியேறினார்கள்.

இப்படியாக இணைந்த வடகிழக்கில் நிரந்தர அரசியல் தீர்வுக்காகவும், விடுதலைப்புலிகளின் நிர்வாக கட்டமைப்பு இருந்த 2009 மே 18 க்கு முன்னரும் சுனாமி கட்டமைப்பு ஆவணம் தயாரிக்கப்பட்டது அதுவும் இலங்கை அரசு ஏற்கவில்லை.

இப்படியான பல ஆவணங்கள் தமிழ் தலைவர்களால் காலத்துக் காலம் தயாரிக்கப்பட்ட வரலாறுகள் உண்டு எந்த ஆவணங்களையும் இனவாத இலங்கை அரசுகள் கணக்கெடுக்கவில்லை.

இப்போது தமிழரசுகட்சி, சங்கு கூட்டணி தயாரிக்கும் ஆவணங்களால் எதுவும் நடக்காது. மக்களை தேசமாக திரட்டாமல் எதையுமெ எந்த தமிழ்த்தேசிய கட்சிகளாலும் சாதிக்கமுடியாது. தேர்தல் கூட்டும், பதவி போட்டியும், கதிரை ஆசைகளால் இயங்கும் தமிழ்தேசிய கட்சிகளால் எந்த பிரயோசனங்களும் ஏற்படாது.

www.sangathamil.ca

# இஸ்ரேல் அதிபர் சிட்னி வருகை: மனித உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

08.02.2026






இஸ்ரேலிய அதிபர் ஐசக் ஹெர்சாக் (Isaac Herzog) ஐந்து நாள் பயணமாக அவுஸ்திரேலியா விஜயம் செய்துள்ளார். இஸ்ரேல் அதிபரின் அவுஸ்திரேலியா பயணத்திற்கு கடும் எதிர்ப்பு நாடாளவிய ரீதியில் கிளம்பியுள்ளது.

கடந்த டிசம்பரில் Bondi கடற்கரையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திப்பதே இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கமாகும் என்று அவுஸ்திரேலியா அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்ரேல் அதிபரின் அவுஸ்திரேலியா பயணத்திற்கு கடும் எதிர்ப்பு நாடாளவிய ரீதியில் கிளம்பியுள்ளதுடன், இந்த வருகைக்கு எதிராக சிட்னியில் எதிர்ப்பு பேரணி காரணமாக காவல் துறையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சட்டவிரோத போராட்டங்களில் ஈடுபட்டால் கைது செய்யப்படுவார்கள் என்று நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை எச்சரித்துள்ளது. சிட்னி டவுன் ஹாலில் இருந்து பாராளுமன்ற கட்டிடம் வரை பேரணியில் போராட்டக்காரர்கள் சென்றனர். ஆனால் அந்தப் பாதை சட்டப்பூர்வமாக தடைசெய்யப்பட்ட பகுதி என்று போலீசார் கூறியதால் போராட்டக்காரர்கள் இடையே கடும் பதற்றம் ஏற்பட்டது. அங்கீகரிக்கப்படாத சாலைகளில் போராட்டங்கள் நடத்தப்பட்டால், அந்தக் குழு கைது செய்யப்படும் என்று உதவி போலீஸ் கமிஷனர் பால் டன்ஸ்டன் ஊடகங்களுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்திருந்தார்.

காசா பகுதியில் வெளிப்படும் மனிதாபிமான துயரத்தைக் கருத்தில் கொண்டு, இஸ்ரேலிய அதிபருக்கான அழைப்பை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் முதலில் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அரசு உடனடியாக நிராகரித்து விட்டது.

ஆனால் இஸ்ரேலிய ஜனாதிபதி அவுஸ்திரேலியாவில் கௌரவ விருந்தினராக வரவேற்கப்படுவார் என்று தற்காலிக பிரதமர் ரிச்சர்ட் மார்லஸ் கூறியுள்ளார். இருப்பினும், இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, சிட்னியில் பாதுகாப்புக்காக 500க்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பொண்டி கடற்கரை படுகொலை:

சிட்னி, பொண்டி கடற்கரையில் கடந்த வருடம் டிசம்பர் 14 ஆம் திகதி யூத சமூகத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தால் அவுஸ்திரேலியா மற்றும் இஸ்ரேலுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து உறவை மேம்படுத்த இஸ்ரேலிய அதிபரை சிட்னி வருகை தர அரசு வரவேற்றது.

பொண்டி கடற்கரை படுகொலையை அடுத்து, அவுஸ்திரேலியாவில் வெறுப்பு பேச்சை கட்டுப்படுத்த புதிய சட்டம் (Hate Speech Legislation) கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த வருட இறுதியில் அவுஸ்திரேலியாவின் பொண்டி (Bondi) கடற்கரை பகுதியில் யூதர்களின் ஹனுக்கா விழாவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலர் உயிரிழந்த சம்பவத்தைத் தொடர்ந்து, வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறையைத் தூண்டும் செயல்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்துள்ளதாக பிரதமர் அந்தோணி அல்பனீஸ் அறிவித்துள்ளார்.

பொண்டி தாக்குதல், இஸ்லாமிய தீவிரவாத அமைப்பால் தூண்டப்பட்டதாக சிட்னி காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்த 50 வயது சாஜித் அக்ரம் மற்றும் அவரது 24 வயது மகன் நவீத் அக்ரம் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. சாஜித் பொலிஸாரால் உடனடியாக சுட்டுக் கொல்லப்பட்டார், நவீத் பல குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெறுப்பு பேச்சு புதிய சட்டத்தில் (Hate Speech Legislation) முக்கிய பல விடயங்கள் குறித்து தொடர்ந்து நாடளாவிய ரீதியாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறையை ஊக்குவிப்பவர்களை எளிதில் குற்றம் சாட்டும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அத்துடன் அதிகமான தண்டனைகள் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் வெறுப்பு பேச்சில் ஈடுபடும் அமைப்புகளை குறிவைக்கும் தனி நடைமுறை அமுல்படுத்தப்படும். இந்த சட்டத்தால் பல்லின கலாச்சார நாட்டின் அடிப்படை மனித உரிமைகள் பாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் யூத அமைப்புக்கள், அவுஸ்திரேலிய அரசு பல ஆண்டுகளாக யூத விரோத தாக்குதல்களை புறக்கணித்துள்ளது என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பாக குற்றம் சாட்டியுள்ளனர். பொண்டி கடற்கரை தாக்குதலில் பத்து வயது மடில்டா உள்ளிட்ட பலர் உயிரிழந்ததால், நாடு முழுவதும் துயரமும் கோபமும் ஏற்பட்டது. அதேவேளை சிட்னி மற்றும் மெல்போர்னில் நடந்த யூதர்களை குறிவைத்த தீக்கிரை சம்பவங்கள் காரணமாக, அவுஸ்திரேலியா கடந்த ஆகஸ்டில் ஈரான் நாட்டின் தூதுவரை வெளியேற்றியதும் குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீன ஆதரவு அமைப்புகள் எதிர்ப்பு

தற்போது யூத சமூகத்தின் பாதுகாப்பு அவுஸ்திரேலிய நாட்டில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இஸ்ரேல் வலியுறுத்தி வருகிறது. இந்நிலையிலேயே அவுஸ்திரேலிய நாட்டுக்கு வருகை தருமாறு இஸ்ரேல் அதிபருக்கு அவுஸ்திரேலியா அரசு அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பை ஏற்று ஜனவரி 8 ஆம் திகதி இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹர்சக் அவுஸ்திரேலியா வந்துள்ளார்.

## யார் இந்த ஐசக் ஹெர்சாக் ?

இஸ்ரேலின் அதிபரான மூத்த அரசியல்வாதியும் பாரம்பரிய இஸ்ரேலிய குடும்பத்தைச் சேர்ந்தவருமான ஐசக் ஹெர்சாக் 2021இல் தேர்வு செய்யப்பட்டார்.

கடந்த காலங்களில் 65வயதான ஐசக் ஹெர்சாக் இஸ்ரேலின் தொழிற்கட்சியின் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார். இவர் 2013 நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராகப் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்தத் தேர்தலில் இவரால் வெற்றி பெற முடியவில்லை.

ஐசக் ஹெர்சாக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் இஸ்ரேல் நாட்டின் முக்கிய பொறுப்புகளை வகித்தவர்கள். அவரது தந்தை சைம் ஹெர்சாக்கும் இஸ்ரேல் அதிபராக இருந்தவர். அதற்கு முன் ஐநா சபையின் இஸ்ரேல் தூதராகவும் சில காலம் இருந்துள்ளார். அவரது மாமா, அபா எபன், இஸ்ரேலின் முதல் வெளியுறவுத் துறை அமைச்சராகவும், ஐநா சபை மற்றும் அமெரிக்காவின் தூதராக இருந்துள்ளார்.

இஸ்ரேலில் கடந்த 2019-2021 ஆண்டுகளில் 4 முறை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இந்த 4 முறையும் தற்போது பிரதமராக உள்ள பெஞ்சமின் நெதன்யாகுவின் லிகுட் கட்சி பெரும்பான்மை தேவையான 61 இடங்களைக் கைப்பற்ற முடியவில்லை. இந்நிலையில், அங்கு எதிர்க்கட்சிகள் கொண்ட கூட்டணி ஆட்சியை அமைத்தமை அறிந்ததே.

## போர்க் குற்றவாளியா ?

2023இன் இறுதியில் இஸ்ரேல் தொடரும் இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் எனவே இதனை சர்வதேச நீதிமன்றம் போர்க்குற்றம் பற்றி விசாரிக்க முடியும் என திட்டவட்டமாக அறிவித்தது.

பாலஸ்தீனம் உடனான போரில் அதிகமான சட்டவிதி மீறல்கள் இடம் பெற்றுள்ளதாகவும், இவ்வாறானதொரு போருக்கே அவசியம் இல்லை என்றும் சர்வதேச நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்நிலையில், இஸ்ரேல் - ஹமாஸ் போரில் 74 000 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதுடன் அதில், பெண்களும், குழந்தைகளுமே அதிகமாக உயிரிழந்தனர்.

போரை நிறுத்ததை கோரி ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் (United Nations Security Council, UNSC) பாலஸ்தீன ஆதரவு நாடுகளின் தீர்மானங்களை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ரத்து செய்து வந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில், இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கைது செய்ய சர்வதேச நீதிமன்றத்தினால் (International Court of Justice) பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகுவுக்கு அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம் கைதாணை பிறப்பித்ததுடன், இதனை தொடர்ந்து இஸ்ரேல் அதிபரும் போர்க் குற்றவாளி என பல நாடுகளால் அறிவிக்கப்பட்டார்.

அத்துடன் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகுவுக்குக் கைதாணை பிறப்பிக்க அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம் முடிவு செய்தது. இஸ்ரேலும் அதன் நட்பு நாடுகளும் பகிரங்கமாக அதற்கு கண்டனம் தெரிவித்தன. மறுபுறம், துரக்கியும் பல அரபு நாடுகளும், மனித உரிமைக் குழுக்களும் இதனை வரவேற்றன.

மேலும் இஸ்ரேலின் முன்னாள் தற்காப்பு அமைச்சர் யோயேவ் காலண்ட், ஹமாஸ் இராணுவத் தலைவர் முகம்மது டெய்ஃப் இருவருக்கும் நீதிமன்றம் கைதாணை பிறப்பித்தது. மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், காஸாவில் பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேலின் போர்க் குற்றங்கள் தொடர்பில் இந்தக் கை-தாணை பிறப்பிக்கப்பட்டது. இஸ்ரேலியத் தலைவர்களுக்குக் கைதாணை பிறப்பிக்கப்பட்டதை அமெரிக்க அரசு கடுமையாக எதிர்த்தது.

இஸ்ரேலிய அரசின் அதிபரின் வருகைக்கு பலஸ்தீன ஆதரவு அமைப்புகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. போராட்டங்களை பாரிய அளவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் 12 ஆம் திகதிவரை தங்கியிருப்பதற்கு திட்டமிட்டுள்ள இஸ்ரேல் அதிபர், யூத சமூகத்தினருடன் சந்திப்புகளை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹர்சக்கின் அவுஸ்திரேலிய வருகைக்கு எதிராக சிட்னியில் போராட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிலையில், போராட்டங்கள் மீதான தடையை நியூ சவுத் வேல்ஸ் மாநில நீதிமன்றம் நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# பெப்ரவரி-14

மதியவேளை. காலையில் பெய்த பனிக்கு பதிலடி கொடுப்பதாய் வெய்யில் வெளுத்துக்கட்டியது.

மிகுதியாய் இருந்த மூவிங் பங்கரை வெட்டிமுடித்த பின்னர் மதிய உணவை எடுத்துக்கொண்டேன். மதிய உணவை அடுத்துக் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தி தின அறிக்கை எழுதுவதற்காக கொப்பி எடுத்து அருகில் இருந்த மரத்தின் கீழ் அமர்ந்த போதுதான் அது என் நினைவுக்கு வந்தது.

அடடா. இன்னும் ஐந்து நாள்கள்தான் இருக்கின்றன அந்த தினத்திற்கு. பத்து நாள்களுக்கு முன்னமே முடிவு செய்து விட்டேன் ஏதாவது அன்பளிப்பு கொடுப்பதென்று. ஆனால் இது வரையில் கொடுப்பதற்கு எதுவுமே என் கைக்கு கிடைக்கவில்லை. ஏன் இப்படி முடிவெடுத்தேன்? எண்ணத்தில் முடி - வெடுத்துவிட்டால் அதனை செயற்படுத்திவிட வேண்டும் என்பதில் தீவிரம் சின்ன வயதில் இருந்தே என்னுடன் ஒட்டிக் கொண்ட பழக்கம். இதனால் சிலவேளைகளில் விபரீதங்களில் சிக்கி மீண்ட அனுபவங்கள் ஏராளம். எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது. இதுதான் காதலின் மகிமையோ என எண்ணத் தோன்றுகின்றது.

பயம், பதற்றம், தெளிவு, மகிழ்ச்சி என எல்லா உணர்வுகளின் கலவைதானோ காதல் என நினைத்துக்கொண்டு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன்.

எது எப்படியாயினும் ஏதாவது கொடுத்தேயாவது என்ற முடிவில் உறுதியாக இருந்தேன். ஏனெனில், என் காதல் அரும்பிய பின்னர் நான் சந்திக்கும் முதலாவது உலகக் காதலர் தினம் அல்லவா அது.

எல்லாமே நேற்று நடந்தது போல இருக்கிறது. முகம் அறிய முதல் என் காதில் விழுந்த அந்த இனிமையான குரல் நிர்வாகப்பொறுப்பாளரின் அனுமதியுடன் முதன்முதலாக சந்தித்தது, விருப்பத்தை தெரியப்படுத்திக் கொண்டது, அறிக்கைப் படிவத்தில் பதிந்தது, எதை நினைப்பது? எதை மறப்பது? பாசறையில் இருந்து இப்ப எதிரியை எதிர்பார்த்திருக்கும் பதுங்கு குழி வரை எதையுமே மறக்க முடியவில்லை. நினைவழியா நிகழ்ச்சிகளின் அல்லது மறக்க முடியாத சம்பவங்களின் தொகுப்பே இயக்க வாழ்க்கை என்பதாகி விட்டது.

ஜயசிக்குறுய்க்கு அகவை இரண்டாகின்றது. எனது காதலோ வயது ஒன்றைப் பூர்த்தி செய்யப்போகிறது. தேடல் இல்லாத வாழ்க்கையில் துடிப்பு இருக்காது என நான் எப்பவோ படித்த அந்த வரிகள் முற்றிலும் உண்மைதான். அன்புக்கான தேடல், அறிவுக்கான தேடல், அவலங்களுக்குள் விடுதலையைத் தேடல், துயரங்களுக்குள் மகிழ்வைத் தேடல் என வாழ்க்கையே ஒரு தேடல்தானே.

விடுதலைக்கான தேடல் முதன்மை பெற கல்விக்கான தேடலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வந்துவிட்டேன். இருப்பினும் அதனை முற்று முழுதாக விட்டுவிட முடியவில்லை. “பொசிசன் லைனில்” இருக்கும் வேளைகளில் ஓய்வு கிடைக்கும் போது உணவுப் பொதிகள் சுற்றி வந்த ஆங்கில நாளிதழ்களைச் சேர்த்துவைத்து கைக்கடக்கமான ஆங்கில அகராதியின் உதவியுடன் ஆங்கிலம் படித்து வந்தேன். இப்போதெல்லாம் உணவு பழுதடையாமல் இருப்பதற்காக “சொப்பிங்” பைகளில் வருவதினால் எனது முயற்சி நின்று விட்டது.




த.ம.சேந்தன்

காதல் எவ்வளவு இனிமையானது! பக்குவம் அடையத்தான் அதன் மகத்துவம் புரிகின்றது.

பரீட்சைக்குப் படித்த நளன் அன்னத்தை தூதுவிடும் கதையெல்லாம் பாசி படர்ந்தது போல மனதில் கிடந்து இப்போது புத்துயிர்ப்புப்பெற்று துள்ளிவிளையாடுகிறது. நானும் ஏதாவதொன்றை தூது விடலாமோ என குறும்புத்தனமாக நினைப்பதுண்டு. “சேரா நவம்பர்” லைனில் அவள் இருக்கின்றாள். நானோ “சேரா டாங்கோ” லைனில் இருக்கின்றேன். வெல்லாவெளிக்கு எண்டால் மேகத்தை தூது அனுப்பலாம். அருகில் இருக்கும் அவளுக்கு என்னத்தை அனுப்புவது?

வண்ணத்துப்பூச்சிகளோ வேறு திசைகளில் பறந்து போகின்றன.

இப்பதான் இப்படியான வினோதமான கற்பனைகள் எல்லாம் மனதில் துளிர்விடுகிறது. எனக்குள்தானோ இத்தனையும் இவ்வளவு காலமும் புதையுண்டு போய்க் கிடந்திருக்கின்றது. காட்டுப்பூக்கள், மரங்கள், செடிகள், கொடிகள், வண்ணத்துப் பூச்சிகள், பற்றைக்குள் இருந்து துள்ளி ஓடும் முயல்கள் எல்லாம் என்னோடு உறவாடுவதாய்..... காட்டு வாழ்க்கை எவ்வளவு இனிமையானது. சின்னவயதில் அம்மா பயமூட்டிய காடு வேறு, இந்தக் காடு வேறு என எண்ணத்தோன்றுகின்றது. காட்டுக்கும் எனக்குமான உறவு பதினெட்டு மாதங்களுக்கு மோலாகி விட்டது. பதினெட்டு மாதங்கள் என்ன, பதினெட்டு வருடங்கள் கூட இருந்து விட்டுப்போய்விடலாம். கண்ணியமாக இருந்த காட்டை கயவன் கருவறுத்துக்கொண்டிருக்கிறான் என்பதை நினைக்கையில் நரம்புகள் புடைக்கின்றன. நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளான் போல அவனது காப்பரணும் அதற்குள் அவனும் இருப்பது இங்கிருந்து பார்க்கத் தெளிவாகத்

தெரிகின்றது.

இவையளுக்கு முடிவு கட்டாமலா விடப்போகின்றோம். இவற்றையெல்லாம் நினைக்கும் போது மண் மீதான நேசிப்பு மேலும், மேலும் வலுவடைந்து கொண்டே போகின்றது. என்னயிருந்தாலும் மண்ணை நேசித்த படியாத்தான் அவளது நேசிப்புக்கிட்டியது.

இம்முறை விடுமுறையில் வீடு சென்றால் கட்டாயமாக அம்மாவுக்கு எனது காதல் விடயத்தை தெரியப்படுத்த வேண்டும். எனக்காக இந்த மண்ணில் இதுவரையும் வாழ்ந்த இனியும் வாழப்போகும் ஒரே ஜீவன் அம்மாதானே. “போராடப் போன உனக்கேதடா காதல்” இப்படித்தான் அம்மா கேட்பாள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். மனதில் படுவதை பட்டென கேட்டுவிடும் கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் அம்மாவுக்கு. போருக்குள் காதல் தவிர்க்கப்படமுடியாது என்பதை அம்மாவுக்கு எப்படித்தான் புரியவைக்கப்போகின்றேனோ?

வெளிநாட்டில் வசிக்கும் அண்ணா எனக்கு அண்ணி கிடைத்திருப்பதாகவும் பேனா நண்பியாகவே முதலில் அறிமுகம் ஏற்பட்டதாகவும் கடிதம் எழுதியதும், அதற்கு “கண்கள் சந்தித்து கைகள் கோர்த்து” எடுத்த முடிவுகள் கனவுகளில் சருகாகிப் போகும் காலத்தில் காகித வானில் மடல்கள் சஞ்சரித்து எடுத்துக் கொண்ட தீர்க்கமான முடிவினை எப்படிச்சொல்வது? அண்ணா, உனது காதலுக்கு நான் இட்ட பெயர்தான் கின்னஸ் காதல் என நான் பதில் எழுதியதும் அதற்கு பதிலடி கொடுப்பதாய் அண்ணா எனது காதலுக்கு ஜயசிக்குறு காதல் என பெயர் சூட்டியதும் என எல்லாமே என் நினைவுகளில் வந்து போகின்றன.

இந்தத் தினத்திற்காக நான் அளவுக்கதிகமாக ஆரவாரப்படுவது எனக்கு ஏதோ ஒரு குற்ற உணர்வாகப் படுகின்றது. இதுதான் இளமையின் துடிப்போ, காதலின் கிளுகிளுப்போ எதுவென்று எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் சூழல் பாதுகாப்புத் தினம், பெற்றோர் தினம், முதியோர் தினம், சிறுவர் பாதுகாப்புத் தினம் என எத்தனையோ தினங்கள் வந்து போகின்றன. அவை அனைத்தும் எம் வாழ்வில் மறக்கப்பட முடியா தினங்கள் அல்லவா? எனது வாழ்வோடு ஒன்றித்துப் போயிருக்கும் இந்த மரத்திற்கு நான் எந்தப் பரிசு கொடுத்தாலும் ஈடாகுமா? நிம்மதியாக சொற்பநேரம் இளைப்பாற நிழல் தருகின்றது; வெப்பக் காற்றை குளிர்வித்து தென்றலாக மேனியில் தடவிச் செல்லவிடுகின்றது. எனது உயிரை உருவியெடுக்க எதிரி உருவேற்றிவிடும் எறிகணைச் சிதறல்களைத் தானும் தாங்கிக் கொண்டு... எனக்கும் அதற்குமான உறவு ஒருபோதும் பிரிக்க முடியாது. வாய்விட்டுப் பேச முடியுமென்றால் நானும் அதுவும் நிறையக் கதைத்து விடுவோம். அது சரி,

பரிசாக நிறைய பெறுமதியான பொருட்களை விதம் விதமாக கொடுக்க வேண்டும் என நான் நினைப்பது தவறல்லவா? நான் யார்? ஒரு போராளி அல்லவா? அதிக கனவுகளும் ஆசைகளும் மனதில் வளர இடம் கொடுக்கக்கூடாது. மனம் ஒரு குரங்கு என்று சும்மாவா சொல்லிவைத்தார்கள். நல்லவேளை, நிர்வாகத்தில் இருக்கும் போது தியானப் பயிற்சியும், யோகாசனப் பயிற்சியும் பெற்றதனால் மனதை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் எனது போராட்டச் செயற்பாடுகளில் காதல் நினைவுகள் குறுக்கிடாமல் ஒதுங்கியே இருந்து வருகிறது.

என்னவளுக்கு எதைக் கொடுப்பது? இதற்கு விடை காண்பதென்பதே எனக்குப் பெரிய சிக்கலாகிவிட்டது. எதைக்கொடுப்பது என்பதற்கு முடிவுவெடுக்க முடியாமல் தத்தளிப்பதற்கு நான் கொடுப்பது என்னவளுக்கு மட்டுமல்லாமல் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்படவேண்டும் என்பதில் நான் விடாப்பிடியாய் இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

என்ன இருக்கிறது என்னிடம் கொடுப்பதற்கு? இப்போது என்னிடம் இருப்பதெல்லாம் துப்பாக்கியும் கோல்சரும், வோக்கி, இடுப்புக்கோல்சர், சாக்குத்தொப்பி, பேனாவும் குறிப்புப்புத்தகமும் இரண்டு சீருடைகள், ஒரு சாறம், ஒரு சோடி செருப்பு ஆகியனதான். இவை எதுவுமே எனக்குச் சொந்தமானவை அல்ல. துப்பாக்கியும் கோல்சரும் சகபோராளிகள் குருதி சிந்தி எதிரியின் முகாம்களுள் புகுந்து எடுத்தவை. மற்றவை அனைத்தும் மக்களுடையது. பங்களிப்பாக மக்களிடம் திரட்டிய பணத்தில் இயக்கம் தந்தது. குறிப்புப்புத்தகத்தில் எழுதப்படும் கவிதைகள்-வசனங்களுக்கு மட்டுமே நான் சொந்தக்காரன்.

போதிமரத்தின் கீழிருந்து புத்தர் ஞானம் பெற்றது போல அன்பை வெளிப்படுத்த, அன்பளிப்பாகக் கொடுக்க அறுகம் புல்லும் போதும் என முடிவெடுத்தவனாக மரத்தின் வேரில் தலைசாய்த்து மல்லாக்கப்படுத்தேன். அப்போது அது என் கண்ணில்பட்டது.

- பெப்ரவரி 14.1999.

தனது காவற்கடமை முடிந்த கையுடன் நேராகச் சென்று மரத்தில் தெங்கவிடப்பட்ட நாள்காட்டியை அவதானித்து அன்றைய நாளில் அதில் உள்ள அறிவுத் துணுக்குகளை படித்து குறிப்பெடுத்துக் கொள்வதை அவள் பழக்கப்படுத்தியிருந்தாள். இன்றும் வழமை போல நாள்காட்டியைப் பார்த்தவளுக்கு உலக காதலர் தினம் என்ற அறிவுத்துணுக்கு நெஞ்சில் ஆயிரம் செய்திகளைச் சொல்லி நின்றது.

அப்படியென்றால் எனக்கும்... என்று நினைத்துக் கொண்டவளின் எதிர்பார்ப்பிற்கு கிடைத்ததாய் அமைந்தது அணித்தலைவியின் அழைப்பு.

“ஓமக்கா” என்று அணித்தலைவி நின்ற இடத்திற்குச் சென்றவள் திரும்பி வரும்போது கடிதம் ஒன்றுடன் வந்தாள்.

அவளுக்கு ஒரே பரபரப்பாக இருந்தது. இதுவரை வந்த கடிதங்களைவிட அந்தக் கடிதம் சற்று பருமனாக இருந்தது. அவளுக்கு இனம்புரியாத மகிழ்ச்சியைத் தோற்றுவித்தது.

கடித உறையைக் கிழித்தாள். உள்ளே கடதாசியில் மாத்திரைகள் சுற்றியது போல சிறிய சரையும் கடிதமும் இருந்தன.

கடிதத்தை ஆர்வத்தோடு படித்தாள்.

அன்பே!
தாய் மீதான நேசிப்பு
மண் மீதான நேசிப்பு
மரங்கள் மீதான நேசிப்பு
அண்ணா மீதான நேசிப்பு
நேசிப்பே
எல்லாவற்றிக்கும் மூலம்.
உன் மீதான நேசிப்புக்கு
உலக காதலர் தினமாகிய
இன்று
நான் தரும் பரிசு,
இதுதான்.
அவள் அதை இதயத்தில் ஒற்றிக்கொண்டாள்.

•••

”அக்கா நீங்க நாட்டின விதை முளைச்சிட்டுது” என்று ஆரவாரமாக ஓடி வந்தாள் அந்த அணியில் உள்ளவர்களில் வயதில் இளையவள். காப்பரணில் இருந்து பார்க்கக்கூடிய தூரத்திலேயே அதனை அவள் நாட்டியிருந்தாள். அவளும் ஆவலுடன் நோக்கினாள். அது முளைவிட்டு மெல்ல மெல்ல வளரத் தொடங்கியது அவளது காதலைப்போல.

- நன்றி: எரிமலை பெப்ரவரி 2000



# சீனாவில் உய்குர் மக்கள் மீதான அடக்குமுறை: கலாச்சார ஆதிக்கமும் இன முரண்பாடும்!


-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

12.02.2026

உய்குர் (Uyghur) இன மக்களுக்கு எதிராக சீனா இனப் படுகொலை செய்வதாக தொடர்ந்தும் மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டி வருகின்றன. சர்வதேச சட்டங்களின்படி, இனப்படுகொலை என்பது ஒரு தேசிய, இன அல்லது மதக் குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கம் ஆகும். அதன்படி முகாம்களில் உய்குர்களைத் தடுத்து நிறுத்துவதோடு, உய்குர் குழந்தைகளை அவர்களது குடும்பங்களிலிருந்து பிரிப்பது, மக்கள் தொகையை அடக்குவதற்கு உய்குர் பெண்களை சீனா பலவந்தமாக கருத்தடை செய்ய வைப்பதாக சில குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

சீனாவில் சிஞ்சியாங் வடமேற்கு பிராந்தியத்தில் பெரும்பாலும் முஸ்லீம் உய்குர் சமூகத்தை சேர்ந்த மக்கள் தொடர்பாக சீனா உலகம் முழுவதிலும் இருந்து பல்வேறு கண்டனங்களையும், விமர்சனங்களையும் எதிர்கொண்டு வருகிறது.

கடந்த சில ஆண்டுகளில் மறு கல்வி முகாம்கள் என்று அரசு வரையறுக்கும் விஷயத்தில் சீனா ஒரு மில்லியனுக்கும் அதிகமான உய்குர்களை தடுத்து வைத்திருப்பதாக சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் நம்புகின்றன. அந்த முகாம்களில் உய்குர்கள் கட்டாய உழைப்பிற்கு பயன்படுத்தப் படுவதாகவும், பெண்கள் வலுக்கட்டாயமாக கருத்தடை செய்யப்படுவதற்கு உட்படுத்தப்படுவதாகவும் அதிக சான்றுகள் உள்ளன.




**உய்குர் இன மக்கள் நெடுங்காலமாக, சீனாவிடமிருந்து விடுதலை கோருகின்றனர். ஆனால், சீனா இதைப் பல ஆண்டுகளாக மறுத்துவருகிறது. திபெத்தைப் போல சிஞ்சியாங்கும் ஒரு தன்னாட்சி பெற்ற பிராந்தியம். ஆனால், நடைமுறையில் அது நிகழ்வதில்லை. சீன அரசுதான் சிஞ்சியானை கட்டுப்படுத்தி வருகிறது**




உய்குர்களை அடக்குவதன் மூலம் சீனா மனிதகுலத்திற்கு எதிரான இனப்படுகொலை மற்றும் குற்றங்களைச் செய்ததாக அமெரிக்கா நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகிறது. உய்குர் இன மக்கள் நெடுங்காலமாக, சீனாவிடமிருந்து விடுதலை பெறக் கோருகின்றனர். ஆனால், சீனா இதைப் பல ஆண்டுகளாக மறுத்துவருகிறது.




## சீனா மீது குற்றச்சாட்டு:

சிஞ்சியாங்கில் உள்ள தீவிரவாத எதிர்ப்பு மையங்களில் சீனர்கள் ஒரு மில்லியன் மக்களை வைத்திருப்பதாக நம்பத்தகுந்த தகவல்கள் இருப்பதாக 2018 ஆம் ஆண்டில் ஐ.நா மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது. முகாம்களில் இருந்து தப்பிக்க முயற்சிக்கும் நபர்கள் உடல், மன மற்றும் பாலியல் சித்திரவதைகளை எதிர்கொண்டதாகவும், பெண்கள் கூட்டு கற்பழிப்பு மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாகவும் குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன. டிசம்பர் 2020இல் நடந்த ஆய்வில் அரை மில்லியன் மக்கள் பருத்தி எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும், மறு கல்வி முகாம்களின் அடிப்படையில் புதிய தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன என்பதற்கான சான்றுகள் இருப்பதையும் கண்டறிந்துள்ளது.

## யார் இந்த உய்குர்கள்?

மண்ணின் மைந்தர்களான "உய்குர்" மக்கள், துருக்கி மொழிக் குடும்பத்தை சேர்ந்த மொழி பேசுவதுடன், இஸ்லாமிய மதத்தை பின்பற்றுகின்றனர். சின்ஜியாங் பிராந்தியத்தில் வடமேற்கு சீனாவில் சுமார் 12 மில்லியன் உய்குர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழும் பகுதி அதிகாரப்பூர்வமாக சிஞ்சியாங் உய்குர் தன்னாட்சி மண்டலம் (XUAR) என்று அழைக்கப்படுகிறது. உய்குர்கள் துருக்கியைப் போலவே தங்கள் சொந்த மொழியைப் பேசுகிறார்கள். மேலும் தங்களை கலாச்சார ரீதியாகவும் இன ரீதியாகவும் மத்திய ஆசிய நாடுகளுடன் மிக நெருக்கமானவர்களாக பார்க்கப்படுகிறார்கள்.

கிட்டத்தட்ட ஈரான் அளவான மாநிலத்தில், பாலைவனத்தையும், அதில் திரியும் அடர்ந்த ரோமங்கள் கொண்ட ஒட்டகங்களையும் அங்கே காணலாம். எரிபொருள் தாகம் கொண்ட சீன பொருளாதாரத்திற்கு, சிங்ஜியாங்கில் கொட்டிக் கிடக்கும் எண்ணையும், எரிவாயுவும் வரப்பிரசாதங்கள். இதனால் சின்ஜியாங் "சீனாவின் குவைத்" என்று பொருளாதார அறிஞர்கள் பெயர் சூட்டியிருந்தனர்.

செல்வச் செழிப்புடன் திகழ வேண்டிய மாநிலத்தில், பொருளாதார ஏற்றத்தாழ்வு இரு வேறுபட்ட இனங்களை எதிரிகளாக்கியுள்ளது. சீனர்களால் சுரண்டப்படுவதாக துருக்கி இனத்தவர்கள் குமுறுகின்றனர். தொழிற்துறை விருத்தி சீனர்களுக்கே சாதகமாக அமைவதாக மனம் வெதும்புகின்றனர். வசதிபடைத்த நகரமயமாக்கப்பட்ட இடங்கள் சீனரின் வாழ்விடமாகவும், ஏழ்மையும், குறைபாடுகளும் கொண்ட குடியிருப்புகளில் உய்குர் மக்களும் இரு வேறு உலகங்களில் வாழ்கின்றனர்.

இந்த உய்குர் இனத்தவர் சின்ஜியாங் மக்கள் தொகையில் பாதிக்கும் குறைவாகவே உள்ளனர். கடந்த தசாப்தங்களில், சீனாவின் பெரும்பான்மை இனத்தவரான ஹான் சீனர்கள் சின்ஜியாங்கிற்கு பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர். இதன் காரணமாக உய்குர்கள் தங்கள் கலாச்சாரமும், வாழ்வாதாரமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாக உணர்கின்றனர். திட்டமிட்ட அல்லது பொருளாதார நலன்களுக்காக குடியேறும் சீன மக்கள், மாநிலத்தின் குடிசனப் பரம்பலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் தமது பாரம்பரிய மண்ணில், தாம் சிறுபான்மையினராகி வருவதாக உய்குர் இனத்தவர்கள் முறையிடுகின்றனர்.

## ஒடுக்குமுறை உருவாக காரணம்?

1990-களில் இருந்து சின்ஜியாங்கில் உய்குர் மக்களிடையே எதிர்ப்பு மற்றும் பிரிவினைவாத உணர்வு உயர்ந்தது. சில சமயங்களில் இப்பிராந்தியம் முழுமையாக வன்முறையில் மூழ்கியது. 2009 ஆம் ஆண்டில் சின்ஜியாங்கில் ஏற்பட்ட மோதல்களில் சுமார் 200 பேர் இறந்தனர். இந்த சம்பவத்திற்கு சீனர்கள் தங்கள் சொந்த மாநிலத்தை விரும்பும் உய்குர்கள் மீது குற்றம் சாட்டினர்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கூற்றுப்படி, அப்பகுதியில் மக்கள் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறார்கள். எத்தனை முறை தங்கள் வீட்டுக் கதவைப் பயன்படுத்துகிறார்கள் போன்ற மக்களின் நடத்தைகளைக் கண்காணிக்க ஒரு மொபைல் பயன்பாட்டையும் போலீசார் பயன்படுத்துவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

சீனாவில் உள்ள அனைத்து மதங்களும் பொது நோக்குநிலையில் சீனர்களாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஜி ஜின்பிங் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் உத்தரவு பிறப்பித்ததில் இருந்து, அங்கு மேலும் ஒடுக்குமுறைகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் உய்குர் கலாச்சாரத்தை ஒழிக்க சீனா முயற்சிப்பதாக பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

சுமார் ஒரு மில்லியன் உய்குர்கள், கசாக் மற்றும் பிற முஸ்லிம்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்கள் தங்கள் அடையாளத்தை விடுவதற்கான கல்வி கற்பிக்கப்படுவதாகவும், அவர்கள் ஹான் சீனர்கள் ஆதிக்கம் செலுத்தும் கம்யூனிச நாட்டில் ஒடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். குடும்பங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. மொத்த மக்களும் கண்காணிப்பில் வைக்கப்பட்டு உலகின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டிலிருந்து தப்பிக்க முடிந்த சிலரே இந்த முகாம்களில் நிலவும் உடல், மன ரீதியான சித்திரவதைகளையும் பாலியல் சித்திரவதைகளையும் பற்றி பேசுவதாகக் கூறப்படுகிறது.









## இன அழிப்பில் சீனா?

சீனா, இந்த உய்குர் முஸ்லிம் இனத்தை அழிப்பதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. அந்த மக்களை தீவிரமாகக் கண்காணிப்பது, சித்ரவதை செய்வது, காரணமின்றி முகாம்களில் அடைப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் சீனா உய்குர் முஸ்லிம் மக்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறது.

உய்குர் இன மக்கள் நெடுங்காலமாக, சீனாவிடமிருந்து விடுதலை கோருகின்றனர். ஆனால், சீனா இதைப் பல ஆண்டுகளாக மறுத்துவருகிறது.

திபெத்தைப்போல சிஞ்சியாங்கும் ஒரு தன்னாட்சி பெற்ற பிராந்தியம். ஆனால், நடைமுறையில் அது நிகழ்வதில்லை. சீன அரசுதான் சிஞ்சியானை கட்டுப்படுத்திவருகிறது. இது அதிகமாக பருத்தி விளையக்கூடிய ஓர் இடம். மேலும், எண்ணெய் வளம் மிகுந்த ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது. உய்குர் முஸ்லிம்கள் தங்களின் பகுதியை விடுதலை பெற்ற பகுதியாக அறிவித்திருந்தனர்.

ஆனால் 1949ஆம் ஆண்டு மாவோ தலைமையில் சீனாவில் ஏற்பட்ட புதிய கம்யூனிஸ்ட் அரசு, அதன் கட்டுப்பாட்டை முழுவதுமாக தனக்குள் கொண்டுவந்தது.

கம்யூனிச கோட்பாடுகளுடன் மத நம்பிக்கை ஒத்துப் போகாத காரணத்தால், மத நம்பிக்கைகளை அழித்தொழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சீன அரசின் உதவியோடு சீனாவின் பெரும்பான்மை இனமான ஹான் குழுவினர் 1950-களில் உய்குர் மக்கள் வாழும் பகுதிகளுக்குக் குடிபெயரத் தொடங்கினர். ஹான் மக்கள் அவர்களுக்கென கட்டமைப்புகளையும், வர்த்தகங்களையும் உருவாக்கினர். தற்போது அங்கு 40 சதவிகித அளவில் ஹான் மக்கள் இருக்கிறார்கள்.






## சீனா ஏன் உய்குர்களை குறிவைக்கிறது?

சீனாவின் மிகப்பெரிய பகுதியான சிஞ்சியாங் நிர்வாக ரீதியாக சீனாவிற்குள் ஒரு தன்னாட்சி பகுதி. தாதுக்கள் நிறைந்துள்ள பகுதி. மேலும், அது இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட எட்டு நாடுகளுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது.

உய்குர்கள் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மாண்டரின் மொழியை தங்கள் சொந்த மொழியாகப் பேசமாட்டார்கள். அவர்கள் சீனாவின் பிரதான நிலப்பகுதியிலிருந்து வேறுபட்ட இனமும் கலாச்சாரமும் கொண்டவர்கள்.


கடந்த சில தசாப்தங்களாக, பொருளாதார செழிப்பு சிஞ்சியாங்கில் வந்துள்ளதால், அது அதிக எண்ணிக்கையிலான ஹான் சீனர்களை அங்கே கொண்டு வந்துள்ளது. அவர்கள் சிறந்த வேலைகளை குறிவைத்துள்ளனர். மேலும், உய்குர்கள் தங்களுடைய வாழ்வாதாரங்களையும் அடையாளத்தையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளதாக உணர்ந்தனர்.

2014 இல், ஜனாதிபதி ஷி ஜின்பிங் சிஞ்சியாங்கிற்கு வருகை தந்தார்.

சீன அரசாங்கம் எப்படியோ உய்குர்க்களை வெற்றிகொண்டது.

உலகின் பிற பகுதிகளில் பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா விலகிய நிலையில், ஒரு உள்ளூர் போர்க்குணமானது ஒரு பயங்கரவாத-பிரிவினைவாத சக்தியாக வளரக்கூடிய ஒன்றாக கருதப்பட்டது. இது சீனாவிலிருந்து விலகி ஒரு சுயாதீனமான 'கிழக்கு துர்கிஸ்தான்' அமைப்பதில் உறுதியாக இருந்தது.

இங்கிருந்து வரும் சீனக் கொள்கை முழு சமூகத்தையும் சந்தேக நபர்களாகக் கருதுவதோடு, ஒரு தனித்துவமான உய்குர் அடையாளத்தை மெதுவாக நீக்குவதற்கு முறைப்படுத்தப்பட்ட திட்டத்தைத் தொடங்குகிறது.




www.sangathamil.ca

# நீறு பூத்த நெருப்பாக செச்னியா: ரஷ்ய ஆதிக்கத்தால் அமைதி திரும்பியதா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

07.02.2026

செச்னியாவில் நிலவிய போர் முடிந்து இரு தசாப்தங்கள் ஆகிவிட்டன. சுமார் முன்னூறு ஆண்டு கால பிரச்சனையாக குமுறிய கவ்காஷிய மலைகளில் நீறு பூத்த நெருப்பாக எரிந்து கொண்டு இருந்த தேசம் இப்போது அமைதி திரும்பி அபிவிருத்தியில் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.






**முன்னூறு ஆண்டுகளாக கவ்காஷிய மலைகளில் நீறு பூத்த நெருப்பாக எரிந்து கொண்டு இருந்த தேசம் இப்போது அமைதி திரும்பி அபிவிருத்தியில் முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பாவின் மிகப் பெரிய பள்ளிவாசல் செச்னியாவில் ஆறு வருடங்கள் முன்பு திறந்து வைக்கப்பட்டது.**

## ஐரோப்பாவின் மிகப் பெரிய பள்ளிவாசல்:

அது மாத்திரமன்றி, ஐரோப்பாவின் மிகப் பெரிய பள்ளிவாசல் செச்னியாவில் (Chechnya) ஆறு வருடங்கள் முன்பு திறந்து வைக்கப்பட்டது. “பக்ர் அல் முஸ்லிமீன்” (முஸ்லிம்களின் பெருமைக்குரிய தளம்) எனும் பெயரில் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டதுடன் இதற்கு ரஷ்ய, சவுதி அரேபியா நிதியுத வியும் உதவிகளையும் செய்ததாக தெரிவிக்கப்பட்டது.



ஒரே நேரத்தில் 30,000 பேரை உள்ளடக்கக்கூடிய வகையில் நான்கு பிரதான வாயில்கள் கொண்ட நவீன கட்டிடக் கலைத் தொழி நுட்பத்தில் குறித்த பள்ளிவாசல் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவே ஐரோப்பாவில் அளவில் பெரியதும் அதேவேளை அழ கானதுமான பள்ளிவாசல் எனவும் செச்னிய தலைவர் ரம்சான் தெரிவித்துள்ளார். ரஷ்ய ஜனாதிபதி புட்டின் பல தடவை இந்த பள்ளிவாசலுக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்னூறு ஆண்டு கால பிணக்கு:

ரஷ்யாவின் ஜார் (Czar) ஆட்சியாளர்களின் படைகள் செச் சினியர்களின் நிலங்களை 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆக்கிரமைத்தனர். அன்று ஆரம்பித்த பிரச்சனை நீண்ட கால மாக நீடித்து வந்தது. அன்றிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் தனிநாடு கோரி போராடி வந்தனர்.




1991 இல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் செச் னியா விடுதலையை நாடியது. ரஷ்யாவுடனான முதலாவது செச் சினியப் போரின் போது (1994-1996) செச்னியரல்லாத சிறு பான்மையோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் அது நிழல் அரசை அறிவித்தது. ஆனாலும் 1999 இல் இடம் பெற்ற இரண்டாம் போரின் பின்னர் ரஷ்யா தனது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் செச்னியாவைக் கொண்டுவந்தது.

ரஷ்யாவோடு எல்லையைக் கொண்டுள்ள மத்திய ஆசியாவின் முஸ்லிம் பிராந்தியமான செச்னியா சுமார் 12,300 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு மட்டுமே கொண்டது. இங்கு வாழும் மக்கள் தொகை 1.5 மில்லியன்.

செச்னியா கிட்டத்தட்ட எல்லா பக்கங்களிலும் ரஷ்ய பிரதேசத் தால் சூழப்பட்டுள்ளது, வடக்கு கவ்காசஸ் மலைத்தொடரில் வட மேற்கே ஸ்தாவ்ரபோல் பிரதேசம் , வடகிழக்கு மற்றும் கிழக்கில் தாகெஸ்தான் குடியரசும், தெற்கில் ஜோர்ஜியா, மேற்கே இங்கு ஷேத்தியா மற்றும் வடக்கு அசேத்தியா ஆகிய ரஷ்யக் குடியர சுகளும் அமைந்துள்ளன.

## நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு:

நீண்ட கால போரின் பின்னர் நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு தான் இப்போது செச்னியா மக்களுக்கு தேவை என் றும் கூறுகின்றனர். பெரும்பாலான செச்சின்ய மக்களை பொறுத்த வரை இந்த நிரந்தர அமைதி மற்றும் பாதுகாப்பு என்பது செச்னியா சுதந்திர நாடாவதால் மட்டுமே சாத்தியம் என்றும் கருதினர். ஆயினும் ரஷ்ய அரசு அவர்களது மண் ணில் இருந்து ஒரு பகுதி பிரிவதை அனுமதிக்க முடியாது என்று அறிவித்தனர்.

ரஷ்யா என்னதான் செச்னியா தங்களது பகுதி என்று சொன் னாலும், செச்னியா மக்களை பொறுத்தவரை அவர்கள் என் றுமே தங்களை ரஷ்யாவின் ஒரு பகுதியாக நினைத்ததில்லை, அத்துடன் விரும்பியதில்லை. மேலும் செச்னியா ரஷ்யாவின் நிலப்பகுதியும் இல்லை என்றும் வாதிடுகின்றனர்.

## சோவியத் ஒன்றிய பிளவு :

சோவியத் ஒன்றிய பிளவின் பின்னர் 1991 ஆம் ஆண்டு கால கட்டத்தில் தாங்கள் ஒரு சுதந்திர நாடு என்று செச்னியர்கள் அறிவித்து கொண்டார்கள். அதன் பின் ரஷ்ய கூட்டரசிற்கும், செச்னியாவிற்கும் இடையே இரு யுத்தங்கள் தொடர்ந்து மறு படியும் செச்னியா, ரஷ்ய கூட்டரசு ஆதிக்கத்தின் கீழ் 2000 ஆண்டின் இறுதியில் வந்தது.

ரஷ்ய தேசம் ஐரோப்பாவின் கிழக்கிலிருந்து ஆசியாவின் கிழக்கு வரை பரந்து விரிந்த பகுதி. ரஷ்ய அரசியல் சாசனத்தின் படி, ரஷ்யா, 83 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. (83 Federal Members of Federation). அவற்றில் 21 குடியரசுகள் (Republics) உள்ளன.

1991 இல் ரஷ்ய சம்மேளனம் உருவான போது, ரஷ்யாவில் இருந்த வெவ்வேறு இனத்தவருக்கு (உதாரணத்திற்கு செச் னியர்கள்) அவர்கள் சார்ந்த இனம், மொழி வாரியாக குடி யரசுகள் உருவாக்கப்பட்டன. இந்த குடியரசுகள் சுதந்திர நாடுகள் கிடையாது. இவை ரஷ்யாவின் கட்டுபாட்டுக்குள்லேயே இருந்தன. ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே அறியப்படும்.

## ரஷ்ய சம்மேளனமும் குடியரசுகளும் :

ஆனால் ரஷ்ய சம்மேளனத்தின் மற்ற பகுதிகளை விட இவற் றுக்கு அதிகாரம் அதிகம். இந்த குடியரசுகளுக்கு தன்னாட்சி அதி காரமும் (Autonomous) உண்டு. ஒவ்வொரு குடியரசும் தங்க ளுடைய அரசியல் சாசனத்தை (Constitution) உருவாக்கி கொண்டது. பாராளுமன்றம், குடியரசு அதிபர் என்று ஒரு நாட்டிற்கு இருக்கக்கூடிய எல்லா பதவிகளும் உள்ளன. குடியர சின் உள்விவகாரங்களை (Internal Affairs) எல்லாம் அவர்-களே பார்த்துக் கொள்வார்கள். ஆனால் வெளியுறவு மற்றும் இராணுவ அதிகாரங்கள் (External Affairs and Military) எல்லாம் ரஷ்யாவிடம் இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், இந்த குடியரசுகளின் அதிபரை, ரஷ்ய அதிபர் தான் தேர்ந்தெடுப்பார். ஆனாலும் இன்றைய அதிபர் புடின் அவர்கள் ரஷ்யாவின் தலைமை பொறுப்புக்கு வந்த பிறகு குடியரசுகளின் அதிகாரங்களை பெருமளவு குறைத்து விட்டார்.

## ரஷ்யாவின் அச்சம்:

வரலாற்றில் சோவியத் யூனியனில் (USSR) இருந்து பிரிந்து சென்ற 14 நாடுகளும் (1991), சோவியத் யூனியனின் குடியரசுக ளாக இருந்தவைதான். இதுதான் இன்றைய ரஷ்யாவின் மற்று மொரு அச்சம். தற்போது ரஷ்ய கூட்டரசின் பகுதிகளாக உள்ள குடியரசுகளும் சுதந்திரம் கேட்க ஆரம்பித்து விட்டால் ரஷ்யா வின் நிலை என்ன ஆகலாம் என அச்சமடைந்துள்ளனர்.

1990களில் பிரிவினை சமிக்ஞையாக, சுதந்திர கோஷமும் எழுந்தது. செச்னியாவில் தான் இது மிக அதிகம் என்றாலும் மற்றய குடியரசுகளிலும் (குறிப்பாக செச்னியாவை சுற்றியுள்ள குடியரசுகளான இங்குஷேடியா (Ingushetia) மற்றும் டகெஸ்டான் (Dagestan) ஆங்காங்கே எழுந்தன.

வரலாற்றில் 1785 - 1791இல் ரஷ்யர்களுடனான செச்னியர் களின் மோதல் ஆரம்பித்தது. அப்போது ரஷ்யா தன் நிலப் பகுதிகளை விரிவுப்படுத்த ஆரம்பிக்க, அதன் ஒரு பகுதியாக காகசஸ்சை ஆக்கிரமைக்க தொடங்கியது. ஆனால் ஆக்கிர மிப்பு என்பது சுலபத்தில் முடிந்து விடவில்லை. ரஷ்ய படைகள் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டி வந்தது. ஏனென் றால் அந்த பகுதியில் இருந்த மக்களின் போர்த்திறமையும், கொரில்லா யுத்த முறைகளுக்கு பேர் போனவர்களாக இருந் தனர். இன்று வரை மலைப்பகுதியில் செச்னியர்களை தோற் கடிப்பது என்பது ரஷ்ய படைகளுக்கு முடியாத காரியமாகவே உள்ளது.

### ரஷ்ய அரசின் ஆட்சி :

இதன் பிறகு 1834 முதல் 1859 வரை, ஷேக் மன்சூர் விட்டுச் சென்ற பணியை இமாம் ஷமீல் (Imam Shameel) தொடர்ந்தார். கடுமையான யுத்தத்திற்கு பிறகு 1859 இல், ரஷ்ய படை காகசஸ் பகுதியை முழுமையாக ஆக்கிரமைத்து ரஷ்ய அரசின் ஆட்சி தொடங்கியது.

www.sangathamil.ca

இதன் பின் 1917 ஆம் ஆண்டு, ரஷ்ய புரட்சிக்கு பிறகு தங்களை சுதந்திர நாடாக செசன்னியர்கள் பிரகடனப்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால் அது நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. ரஷ்ய படைகள் மறுபடியும் (சோவியத் படைகள்) 1923-இல் செச்ன்யாவையும் இங்குஷேடியாவையும் சேர்த்து செச்சினியா - இங்குஷேடிய தன்னாட்சி பகுதி (Chechen-Ingush Autonomous Region) உருவாக்கப்பட்டது.

பிறகு இதுவே 1930-இல், செச்னியா - இங்குஷேடிய தன்னாட்சி குடியரசு (Chechen-Ingush Autonomous Republic) என்று மாறியது.

1917இல் சோவியத் உருவாக்கத்தின் பிறகு தம்மை விடுவிததுக் கொள்வதற்காக செச்னிய மக்கள் அவ்வப் போது நடத்திய போராட்டங்களும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. அதன் தொடராக 1922இல் செச்னியா சோவியத்தின் ஒரு அங்கமாக குடியரசானது.

## இரண்டாம் உலகப்போர் :

1944-ஆம் ஆண்டு, தங்கள் விடுதலைக்காக, ஹிட்லரின் நாஜி படைகளுக்கு செச்னியர்கள் உதவுவதாக ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார். அதற்கு தண்டனை என்று, செச்னியா மக்களை கஜகஸ்தானுக்கும், சைபீரியாவிற்கும் நாடு கடத்த உத்தரவிட்டார்.

1944இல் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட செச்னியர்கள் இங்குஷ் மற்றும் வட கோகாஷிய மக்கள் இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டு சைபீரியா மற்றும் மத்திய ஆசியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

1991இல் சோவியத் யூனியன் சரிவடைந்த பிறகு ரஷ்ய கூட்டமைப்பில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட சுதந்திரப் போராட்டத்தை செச்னியா மக்கள் மீள மீண்டும் தொடங்கினர்.

1991 ஆகஸ்ட்டில் செச்னியா அரசியல் வாதியும் முன்னாள் சோவியத்தின் விமாப்படை ஜெனரலுமான ஜகார் டுடாயேவ் என்பவர் உள்ளூர் கம்யூனிஸ அரசுக்கு எதிராக ஒரு சதிப் புரட்சியை மேற்கொண்டார். 1991 அக்டோபரில் ஜகார் டுடாயேவ் செச்னியாவின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். நவம்பர் மாதத்தில் அவர் செச்னியா ரஷ்யாவிடம் இருந்து சுதந்திரம் பெற்று விட்டதாக ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனம் செய்தார்.

## 1994 முதல் யுத்தம் :

1994 டிசம்பர் 11இல் ரஷ்யா செச்னியாவை மீண்டும் ஆக்கிரமித்தது. விரைவாக 1995 மார்ச்சில் ரஷ்யப் படைகள் செச்னியாவின் தலைநகரான குரொஸ்னியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அதன் பிறகு 1996 ஏப்பிரல் 21இல் ஜகார் டுடாயேவ் ரஷ்யாவின் இலக்கு வைக்கப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அதன் பிறகு முன்னாள் கெரில்லாத் தலைவர் அஸ்லன் மஷ்கடோவ் செச்னிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். 1997 மே இல் அன்றைய ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ஸ்டின் மற்றும் அஸ்லான் மஷ்கடோவ் ஆகியோர் ஒரு இடைக்கால சமாதான உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.

ரஷ்யாவுக்கு எதிராக செச்னியாவில் இரண்டு ஆயுதப் போராட்டங்கள் நடந்துள்ளன. ஒன்று 1994 டிசம்பர் முதல் 1996 ஆகஸ்ட் வரை நீடித்தது.

1996 நவம்பர் நடுப்பகுதியில் யெல்ட்ஸின் மற்றும் மஷ்கடோவ் ஆகியோர் பொருளாதார உறவுகள் மற்றும் 1994 முதல் 96 வரையான யுத்தக் காலத்தில் பாதிக்கப்பட்ட செச்னிய மக்களுக்கான இழப்பீடுகள் என்பன தொடர்பன ஒரு உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.

1997 மே 12இல் செச்னியாவின் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அஸ்லான் மஷ்கடோவ் மொஸ்கோவுக்கு விஜயம் மேற் கொண்டார். அங்கு அவர் ரஷ்ய ஜனாதிபதியுடன் ரஷ்யா செச்னியா உறவுகள் பற்றிய கொள்கைகளும் சமாதானமும் என்ற உடன்படிக்கையில் முறைப்படி ஒப்பமிட்டார்.

## 1999இல் இரண்டாவது போர்:

இரண்டாவது போர் 1999 ஆகஸ்ட் ஆரம்பித்தது. இவ்விரு போராட்டங்களின் போதும் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான செச்னிய மக்கள் கொல்லப்பட்டனர் நான்கு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் தங்களது சொந்த இருப்பிடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இருந்தாலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்றே கருதப்படுகின்றது.

நீண்ட போர்களின் பின்னர் 2003 புதிய ரஷ்ய அரசியலமைப்பு செச்னியாவுக்கு அதிக சுயாட்சியை அளித்தது. ரஷ்ய கூட்டமைப்பிற்குள் அதன் அந்தஸ்தை உள்ளடக்கியதாக, அக்மத் கதிரோவ் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயினும் 2004 ஜனாதிபதி கதிரோவ் வெடிகுண்டு மூலம் கொல்லப்பட்டார். 2005 மார்ச் பிரிவினைவாதத் தலைவர் அஸ்லான் மஸ்கடோவ் ரஷ்யப் படைகளால் கொல்லப்பட்டார். இதன் பின் 2006 மார்ச படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி அக்மத் கதிரோவின் மகன் ரம்ஜான் கதிரோவ் பிரதமரானார். 2006 ஜுலை ரஷ்யாவின் பரம வைரி ஷமில் பசாயேவ், அண்டை நாடான இங்குஷெட்டியாவில் நடந்த வெடிவிபத்தில் இறந்தார்.



நீண்ட கால இரண்டு மோசமான போர் அழிவை ஏற்படுத்திய மோதல்களில் குரொஸ்னி நகரம் உலகின் மிகவும் உருக்குலைக்கப்பட்ட நகரமாக மாற்றப்பட்டது. தலைநகர் குரொஸ்னி தான் இந்த மோதல்களின் மத்தியப் புள்ளியாக என்றும் இருந்தது. 2003ஆம் ஆண்டளவில் இந்த நகரில் சேதமடையாத கட்டிடங்களே இல்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது.



## புட்டினின் புனரமைப்பு :

அதன் பிறகு, போர் முடிவில் குரொஷ்னி நகரம் ரஷ்ய நிதி உத வித் திட்டத்தின் கீழ் புதுத் தோற்றம் பெறும் வகையில் மீள் கட்டமைப்புக்கும் உற்படுத்தப்பட்டது.

ஒரு காலத்தில் யுத்ததால் பாதிக்கப்பட்ட இந்த நகரில் இன்று வானை முட்டும் அளவுக்கு உயரமான நவீன கட்டிடங்களைக் காண முடிகின்றது. இங்கு தான் ரஷ்யாவின் மிக உயரமான மினாரத் கோபுரத்தைக் கொண்ட மிகப் பெரிய பள்ளிவாசலும் அமைந்துள்ளது. புட்டினின் அரசால் புனரமைப்பு என கட்டப்பட்ட இப்பள்ளிவாசல் செச்னியாவின் இதயமாக கருதப்படுகின்றது.

கடந்த 20 ஆண்டுகளாக நடந்த போரில் மட்டும் ஐந்தில் ஒரு செச்னியர் உயிரிழந்திருக்கின்றனர். எண்ணற்றவர்கள் அகதிகளாய் வெளியேறினர். ஆயுனும் ரஷ்யா தன் முடிவில் உறுதியாய், தனக்கு ஆதரவான அரசாங்கத்தை செச்ன்யாவில் நிறுவி யுள்ளது. 2004 இருந்து இன்று வரை ரஷ்யா ஆதரவு அரசாங்கம் தான் செச்ன்யாவில் செயற்பட்டு வருகிறது.

2009 ஆம் ஆண்டு ஏப்ரலில் ரஷ்யா தன் படை - களை செச்னியாவிலிருந்து திரும்பப்பெற்றது. அதேபோல் செச்சினிய போராட் டகாரர்களும் ஆகஸ்ட் 2009இல் சண்டையை நிறுத்தினர். ரஷ்யாவின் வரலாற்றில் நடந்த நீண்ட கால உள்நாட்டு போரின் பின் செச்னியாவை தன்னுள் வைத்திருக்க முழுமுதற்காரணம் அந்த பகுதியின் இயற்கை வளம் மற்றும் கஸ்பியன் கடலில் கண்டெடுக்கப்பட்டுள்ள எண்ணெய் வளம் ஆகும். அத்துடன் செச்னியா பிரிந்து சுதந்திரம் அடைந்து விட்டால் அது ரஷ்யா விற்கு தர்ம சங்கடமான நிலையைத் தரும்.

செச்னியா பிரிந்து விடுதலை பெற்றால் மற்றய குடியரசுகளை பிரிவினைக்கு தூண்டிவிட்டதாய் அமையும் என ரஷ்யா அஞ்சுகிறது. மற்றும் அடிப்படைவாத இஸ்லாமிய ஆட்சி கவ்காஸ் பிராந்தியத்தில் அமைந்து விடும் என்றும் ரஷ்யா அச்சமடைகிறது.

தற்போது செச்னியாவில் அமைதி நிலவினாலும் எப்போதாவது செச்னியர்கள் மலைகளிலிருந்து படையோடு வருவார்கள் என்ற அச்சம் இருந்து கொண்டேதானிருக்கும் (ஏனென்றால் 1996 ஆம் ஆண்டு இப்படித்தான் நடந்தது). ரஷ்யா, இதையெல்லாம் நன்கு உணர்ந்தேயிருக்கிறது என்பதும் உண்மை.

ஒருவேளை, ரஷ்யா எதிர்பார்ப்பது போல, செச்னியர்கள் இன்று சமாதானமாக அமைதிக்கு திரும்பியிருந்தாலும், செச்சினியர்கள் கடந்த காலத்தை மறப்பார்களா என்பது சவாலான கேள்வியாகும்.



# 39 ஆம் ஆண்டு வீரவணக்கம்





மேஜர் கேடில்ஸ்
[மகாலிங்கம் திலீபன்
கண்டாவளை, கிளி
11.05.1966]



கப்டன் வாசு
[உருத்திராபதி சுதாகர்
வல்வெட்டித்துறை, யாழ்
13.03.1961]



லெப். சித்தார்த்தன்
[வைத்திலிங்கம் வசீகரன்
சுண்டுக்குளி, யாழ்
09.05.1959]



2 ம் லெப். பரன்
[கிருட்னர் அர்ச்சுனன்
வல்வெட்டித்துறை, யாழ்
27.05.1967]

## லெப். கேணல் பொன்னம்மான் [அற்புதன்]
## [யோகரத்தினம் குகன்]
## கலட்டி, யாழ் - 23.12.1956]

**14.02.1987 அன்று கைதடியில் சிறீலங்காப் படையின் நாவற்குழிமுகாமைத் தாக்கும் முயற்சியின்போது எதிர்பாராது ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்கள்**



வீரவேங்கை குமணன்
[கந்தையா மோகனலிங்கம்
மட்டுவில், யாழ்
20.10.1965]



வீரவேங்கை தேவன்
[தம்பிப்பிள்ளை வசந்தகுமார்
மீசாலை, யாழ்
24.02.1963]



வீரவேங்கை யோகேஸ்
[சுந்தரன் தனபாலசிங்கம்
ஆழியவளை, யாழ்
09.06.1960]



வீரவேங்கை கவர்
[கதிர்காமு நகுலேஸ்வரன்
வவுனியா
23.12.1966]



வீரவேங்கை அக்பர்
[அருளம்பலம் யோகநாதன்
மட்டுவில், யாழ்
22.05.1963]

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# கடல் முற்றுகையும், பொருளாதார வீழ்ச்சியும்!

# கியூபா அடுத்த அமெரிக்க இலக்கு?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

01.02.2026



அமெரிக்கவுக்கு அருகில் இருக்கும் கியூபா, நீண்ட காலமாக அமெரிக்காவின் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை எதிர் கொண்டு வருகிறது. வெனிசுலாவில் நிக்கோலஸ் மதுரோவை ஆட்சியில் இருந்து நீக்கி, கைது செய்துள்ள டிரம்ப் நிர்வாகம், அடுத்து கியூபா மீது தொடர்ச்சியாக நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகிறது.

கியூபா கம்யூனிஸ்ட் அரசு எண்பது ஆண்டு காலத்துக்கு மேல் அமெரிக்காவுடன் மோதி வருகிறது. பல காரணங்களுக்காக அதனை அமெரிக்காவினால் தொட முடியவில்லை. ஆனால் அமெரிக்காவால் பல தசாப்தங்களாக அந்த நாட்டின் மீது விதிக் கப்பட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக, கியூபாவின் பொருளாதாரம் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

## கியூபாவை அடக்க முயன்ற கென்னடி:

1960களில் கியூபாவினை அடக்கி காட்டுவேன் என முதலில் கிளம்பியவர் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கென்னடி. அடுத்து என்ன செய்யலாம் என கென்னடி திட்டமிடும் போது தான் கென்னடி யாரும் எதிர்பார்க்கத வகையில் சுட்டு கொல்ல பட்டார். கென்னடியின் படுகொலையில் யாரும் நேரடியாக சிக்க வில்லை என்பதும் குற்றம் சாட்டபடவில்லை என்பதும் இன் னும் மர்மமாகவே உள்ளது.

ஆனாலும் கியூபாவினை இலகுவாக அமெரிக்காவால் கட்டுப் படுத்த முடியவில்லை. ஆனால் பதிலுக்கு கியூபாவின் தோழமை வீரர் சே குவாரேவை பொலிவியாவில் கொன்று தனது பலியை தீர்த்துக் கொண்டது.

1991இல் சோவியத் யூனியன் வீழ்ந்தாலும், கியூபாவில் காஸ்ட் ரோவினால் அமெரிக்க எதிர்ப்பை தொடர முடிந்தது. நீண்ட வாழ்வை பெற்ற பிடல் காஸ்ட்ரோ தன் பழைய சோசலிச நாடு களின் தொடர்பால் கியூபாவினை ஓரளவு காத்தார். அவருக்கு பின் அவர் தம்பி ராவுல் காஸ்ட்ரோ அதை தொடர்ந்தார். ஆனால் கியூபாவில் படைகளை அனுப்பி, உட்புகுந்து தாக்கும் எண்ணம் அமெரிக்கவுக்கு இல்லை. அப்படி செய்தால் பாரிய குழப்பம் வரும் என யோசித்தார்கள். அத்துடன் பெரிய எதிர்ப்பு கியூபாவில் முன்போல் இல்லை என்றாலும் கம்யூனிச ஆட் சியை அமெரிக்காவால் வீழ்த்த முடியவில்லை.

சோவியத் யூனியன் வீழ்ந்த பிறகு வெனிசுலாவின் எண்ணெய் தான், கியூபாவுக்கு பெரும் பொருளாதார பலமாக அமைந்தது. வெனிசுலா மதுரோவின் வீழ்ச்சியை அடுத்து, கியூபாவினை நோக்கி அமெரிக்க அரசு அழுத்தத்தை செலுத்தி வருகிறது. ஏனெனில் இப்போது வெனிசுலா எண்ணெய் கியூபாவுக்கு செல் வதில்லை என்பதால், ஹவானா அரசு வீழ துவங்குகின்றது என்று அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

வெனிசுலா, ரஷ்யா, ஈரான், சீனா, கியூபா என எல்லாம் அமெரிக்க எதிர்ப்பு அணியாகும். இந்த நாடுகளுக்கு ரஷ்யா ஆயுத உதவி கொடுக்கலாம். ஈரானுடன் எண்ணெய் வர்த் தகத்தை செய்யலாம். இப்படியான அணியில் வெனிசுலாவின் எண்ணெய் கியூபாவுக்கு பெரும் பலமாக இருந்து வந்தது.

அமெரிக்காவில் இருந்து தொன்னூறு மைல் தொலைவில் உள்ள கியூபாவின் எரிபொருள்தான் இந்த நாட்டின் மிகப்பெரிய மூலதனமாகும். தற்போது எரிபொருள் விலை உயர்ந்து வரு வதால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அத்துடன் எப்போதெல்லாம் அமெரிக்காவில் வலுவான தலைமை வருமோ அப்போதெல்லாம் கியூபாவை நோக்கிய அழுத்தம் அதி கரிக்கும்.

## நீண்ட பகை தீர்க்க்கும் டிரம்ப்:

கியூபா இப்போது பெரும் சிக்கலில் உள்ளது. கென்னடியால், ரீக னால் சாதிக்க முடியாததை நான் சாதித்து அமெரிக்காவின் களங்கம் துடைப்பேன் என்று டிரம்ப் மார்தட்டியுள்ளார். இம் முறை அமெரிக்காவிற்கு வெற்றி கிடைக்கலாம். அதை பெற்று விட்டால் நிச்சயம் அமெரிக்க வரலாற்றில் மிக வலுவான தலைவர், பெரிய காரியங்களை செய்த இரும்பு தலைவர் என அவர் வரலாற்றில் இடம்பெறுவார் என்பது உறுதியாகும். கியூ












பாவில் அமெரிக்க ஆதரவு ஆட்சி அமையுமா என்பதை பொறுத் திருந்து பார்க்கலாம்.

## கியூபாவிற்கு சீன உதவி:

அமெரிக்காவின் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை எதிர் கொண்டு வரும் கியூபாவிற்கு ஆதரவையும் உதவியையும் வழங்குவதாக சீனா உறுதியளித்துள்ளது. வெனிசுலாவில் நிக்கோலஸ் மதுரோவை ஆட்சியில் இருந்து நீக்கி, கைது செய் துள்ள டிரம்ப் நிர்வாகம், அடுத்து கியூபா மீது தொடர்ச்சியாக நெருக்கடி அளித்து வந்தது.

இந்த நிலையிலேயே, கியூபாவிற்கு ஆதரவாக சீனா களமிறங்கி யுள்ளது. சீனாவும் கியூபாவும் நீண்டகாலமாக சோசலிச நேச நாடுகளாகும். மேலும், அமெரிக்காவால் பல தசாப்தங்களாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை சீன நிர்வாகம் தொடர்ச்சியாக எதிர்த்தும் வந்துள்ளது. கியூபா வின் வீழ்ச்சி உறுதி என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் எச்சரித்ததைத் தொடர்ந்து, இந்த பதட்டங்கள் தீவிர மடைந்துள்ளன.

கியூபாவிடம் ஒப்பந்தம் செய்துகொள்ளுங்கள் அல்லது வெனிசு லாவைப் போன்ற நிலைக்கு தள்ளப்படுவீர்கள் என டிரம்ப் மிரட் டல் விடுத்துள்ளார். இதனால் கியூபா மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு சீனா தனது எதிர்ப்பையும் வெளிப்படுத் துகிறது. பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை குறை மதிப்பிற்கு உட்படுத்துவதை நிறுத்துமாறு அமெரிக்காவை சீனாவும், ரஷ்யாவும் வலியுறுத்தி வருகின்றன.

## கடல் முற்றுகையில் கியூபா :

கியூபாவிற்கு எதிரான முற்றுகையையும் தடைகளையும் உட னடியாக நீக்குமாறு அமெரிக்காவை பல நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. கியூபாவிற்கு முடிந்தவரை அதிக ஆதரவையும் உதவியையும் சீனா தொடர்ந்து வழங்கும் என கூறப்படுகிறது. இதற்கு முன்னதாக, கியூபாவிற்குள் நுழையும் அனைத்து எண்ணெய் இறக்குமதிகளையும் நிறுத்துவதற்காக, டிரம்ப் நிர்வாகம் ஒரு கடற்படை முற்றுகையை தொடங்கியுள்ளது.

கியூபாவில் எண்ணெய் இறக்குமதியை முடக்கினால் ஆட்சியை

**அமெரிக்காவுடன் இணைந்து ஒப்பந்தம் செய்துகொள்ளுங்கள், அல்லது வெனிசுலாவைப் போன்ற நிலைக்கு தள்ளப்படுவீர்கள் என டிரம்ப் கியூபாவிடம் மிரட்டல் விடுத்துள்ளார். கியூபாவின் வீழ்ச்சி உறுதி என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் எச்சரித்ததைத் தொடர்ந்து, கரீபிய நாடுகளில் பதட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.**

**தற்போது டிரம்ப் அமெரிக்காவின் எண்பது ஆண்டுகால பகையினை தீர்க்க முயற்சிக்கிறார். கியூபாவில் அமெரிக்க ஆதரவு ஆட்சி எனும் பெரும் கனவுடன் களமிறங்குகின்றார். கென்னடியால், ரீகனால் சாதிக்க முடியாததை நான் சாதித்து அமெரிக்காவின் களங்கம் துடைப்பேன் என டிரம்ப் தெரிவித்துள்ளார்**



வீழ்த்த முடியும் என டிரம்ப் நிர்வாகத்தின் முதன்மை அதிகாரி குறிப்பிட்டிருந்ததார். ஆனாலும் கியூப ஜனாதிபதி மிகுவல் டயஸ்-கனெல் அமெரிக்காவிலிருந்து ஏற்படக்கூடிய சாத்திய மான ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று அண்மையில் தெரிவித்திருந்தார்.



## லத்தீன் அமெரிக்க "மன்ரோ கோட்பாடு"

வெனிசுலாவை தொடர்ந்து இலத்தீன் அமெரிக்காவின் மற்ற இரு நாடுகளான கொலம்பியா மற்றும் மெக்சிகோ மீது நட வடிக்கை எடுக்கப்போவதாக அமெரிக்க அதிபர் அச்சுறுத்தி யுள்ளார். இதனால் கியூபா தானாகவே வீழப் போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

19ஆம் நூற்றாண்டின் "மன்ரோ கோட்பாடு" என்பது, அதாவது மேற்கு அரைக்கோளத்தை அமெரிக்காவின் செல்வாக்கு மண்டலமாக அறிவிக்கும் கொள்கை. இதனையே தற்போது டிரம்ப் பின்பற்றுவது போல தெரிகிறது.




## கொலம்பிய இடதுசாரி அதிபர்:

கடந்த 25 ஆண்டுகளில் அமெரிக்காவின் நெருக்கமான பாது காப்பு கூட்டாளியாக கொலம்பியா இருந்து வருகிறது. 2012இல் இரு நாடுகளுக்கும் இடையே தாராள வர்த்தக ஒப்பந்தம் கை யெழுத்தானதில் இருந்து, அமெரிக்காவே கொலம்பியாவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாகவும் உள்ளது. ஆனால் தற் போது கொலம்பியா இன்று சட்டவிரோத போதைப்பொருளான கோகோயின் மற்றும் அதன் மூலப்பொருளான கோகா தாவரத் தின் முன்னணி உலகளாவிய உற்பத்தியாளராக அறியப் படுகிறது.

அங்கே அரசியல் வன்முறைகள் குறைந்திருந்தாலும், 2013 முதல் போதைப்பொருள் உற்பத்தி அதிகரித்துள்ளது. கொலம்பி யாவின் முதல் இடதுசாரி அதிபராக குஸ்டாவோ பெட்ரோ பதவி யேற்ற பிறகு, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் விரிசலடைந்தது. பெட்ரோ அமெரிக்காவின் போதைப்பொருள் கொள்கைகளுக்கு ஒத்துழைக்க மறுப்பதுடன், பிரிக்ஸ் கூட் டமைப்பில் இணைய ஆர்வம் காட்டி வருகிறார். மேலும் இஸ்ரே லுடனான உறவையும் அவர் துண்டித்துள்ளார்.




அத்துடன் டிரம்பின் இரண்டாவது பதவிக்காலத்தில் இந்த உறவு மேலும் மோசமடைந்துள்ளது. வெளிநாட்டு உதவிக் குறைப்பு மற்றும் வரி விதிப்பு அச்சுறுத்தல்களால் பெட்ரோ அதிருப்தி அடைந்துள்ளார்.

## மெக்சிகோ எல்லைச் சுவர்:

அமெரிக்காவும் மெக்சிகோவும் நீண்ட கால வரலாற்றைக் கொண்டிருந்தாலும், நீண்டகாலமாக ஆழமான பொருளாதாரத் தொடர்புகளைப் பகிர்ந்து கொள்கின்றன. 2023இல் அமெரிக் காவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாக மெக்சிகோ இருந்தது.

இருப்பினும், 3,145 கி.மீ நீளமுள்ள எல்லை வழியாக நடக்கும் சட்டவிரோதக் குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் பெரும் சவாலாக உள்ளது. குறிப்பாக, அமெரிக்காவில் போதைப் பொருள் உயிரிழப்புகளுக்குக் காரணமாக இருக்கும் "பெண்டனில்" உற்பத்தியில் மெக்சிகோ முன்னணியில் உள்ளது.



டிரம்ப் அதிபராக மீண்டும் வெள்ளை மாளிகைக்குத் திரும்பிய பிறகு, எல்லைச் சுவரை மீண்டும் கட்ட முயன்று வருகிறார். போதைப்பொருள் கடத்தலைத் தடுக்கத் தவறினால் மெக்சிகோ மீது அபராத வரி விதிக்கப்படும் என்றும், போதைப்பொருள் கும் பல்களை ஒடுக்க மெக்சிகோவிற்குள் ட்ரோன் தாக்குதல்களை நடத்தப் போவதாகவும் அவர் மிரட்டியுள்ளார். ஆனால், அமெரிக்கப் படைகளை மெக்சிகோவிற்குள் அனுமதிக்கும் முன்மொழிவை அந்நாட்டு அதிபர் கிளாடியா ஷீன்பாம் நிராகரித் துள்ளார்.

## கியூபா மீதான பொருளாதாரத் தடை:

பனிப்போர் காலத்தில் பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான புரட் சிக்குப் பிறகு அமெரிக்காவுடனான உறவு துண்டிக்கப்பட்டது. ஆனாலும் பராக் ஒபாமா காலத்தில் உறவைச் சீராக்க முயற் சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், டிரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில் கியூபா மீது மீண்டும் கடுமையான தடைகளை விதித்தார்.

2020 முதல் கியூபா கடும் பொருளாதார வீழ்ச்சியில் உள்ளது. வரலாற்று ரீதியாகவே அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையே சுமுகமான உறவு ஒருபோதும் இருந்ததில்லை. இன்று கியூபா தனது பொருளாதார எண்ணெய் தேவைக்காக வெனிசுலாவைச் சார்ந்துள்ளது. மேலும் சீனா மற்றும் ரஷ்யாவி லிருந்து முதலீடுகளைப் பெற்று வருகிறது. இன்றைய நிலை யில் வெனிசுலாவின் பொருளாதாரம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், கியூபா ரஷ்யாவுடம் மீண்டும் உதவியை நாடி யுள்ளது.

இரண்டாவது பதவிக்காலத்திலும் டிரம்ப் கியூபா மீது கடும் பொருளாதாரத் தடைகளைத் தொடர்ந்து வருகிறார். மேலும் குறிப்பாக கியூபாவின் பொருளாதாரத் தூணான சுற்றுலாத் துறையை அவர் குறிவைத்துள்ளார்.

வெனிசுலாவில் மதுரோவின் கைதால் கியூபா பொருளாதாரம் மேலும் சிதையும் என்றும், அது வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித் துள்ளார்.

**எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இர்த்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# பிரிட்டன் – சீனா வலுக்கும் புதிய உறவுகள்: உலக அரசியல் சமநிலையை மாற்றுமா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

31.01.2026

உலக அரசியலில் சமநிலை சக்திகள் மாறிவரும் சூழலில், பிரிட்டன்-சீனா உறவுகள் புதிய கட்டத்துக்குள் நுழைந்துள்ளது. இது அமெரிக்கா-பிரிட்டன் உறவுகளில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனால் இந்த மாற்றங்கள் பல சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் கவனிக்கத்தக்க கேள்விகளாக உள்ளன.

பிரிட்டனின் பிரதமர் கியார் ஸ்டார்மர் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் முயற்சியாக கடந்த ஜனவரி 28 அன்று சீனாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தில், சீன அதிபர் ஷி ஜிங்பிங்கை நேரில் சந்தித்து பிரதமர் ஸ்டார்மர் உரையாடினார். அத்துடன் இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு பொருளாதார ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.



கடந்த 2018 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டனின் பிரதமர் ஒருவர் முதல்முறையாக சீனா நாட்டுக்குச் செல்லும் நிலையில், அவருடன் பிரிட்டனின் வர்த்தகத் துறை அமைச்சர் பீட்டர் கையில் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளும் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் பிரிட்டன் பிரதமர்:

பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் (Keir Starmer) சீனாவுக்கு அதிகாரப்பூர்வ விஜயம் மேற்கொண்டதும், பல ஆண்டுகளாக இருந்து வந்த உறவு முறிவுகளை நிவிர்த்தி செய்ய, சீனாவில் பிரிட்டன் பிரதமர் விஜயம் மிக முக்கியத்துவம் கொண்டதாக அமைந்துள்ளது.

இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாக, சீனாவுடன் சீர்குலைந்துள்ள இருதரப்பு உறவுகளை சீரமைத்தல், வர்த்தகம், முதலீடு, காலநிலை மாற்றம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை அதிகரித்தல் என்பதாகும். மேலும் அமெரிக்காவை மட்டுமே சார்ந்திருக்கும் வெளிநாட்டு கொள்கையிலிருந்து பிரிட்டன் சிறிதளவு விலகும் முயற்சி எனவும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தற்போது பார்க்கின்றனர்.

கியார் ஸ்டார்மர் தலைமையிலான புதிய தொழிலாளர் அரசு (Labour Government) நடைமுறை சார்ந்த (Pragmatic) வெளிநாட்டு கொள்கையை முன்னெடுக்க முயற்சிப்பதாக இந்தப் பயணம் கருதப்படுகிறது. முன்னதாக, மனித உரிமைகள், ஹொங்காங், உளவுத்துறை குற்றச்சாட்டுகள் போன்ற விவகாரங்களில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவிற்கு விசா இல்லை:

பிரிட்டிஷ் பிரதமர் கியர் ஸ்டார்மரின் சீனாவுக்கான அதிகாரப்பூர்வ விஜயத்தின் போது, பிரிட்டிஷ் குடிமக்களுக்கு சீனாவிற்குள் விசா இல்லாத நுழைவை வழங்க சீன அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. சேவைத் துறையை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

முப்பது நாட்களுக்கும் குறைவாக சீனாவிற்கு வருகை தரும் பிரிட்டிஷ் குடிமக்கள் இப்போது விசா இல்லாமல் நாட்டிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். சீன அதிபர் ஜி ஜின்பிங் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் கியார் ஸ்டார்மர் இடையே பெய்ஜிங்கில் நடந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்த அறிவிப்பு வந்தது.

இந்த நடவடிக்கையை பிரிட்டிஷ் வணிகத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று பிரதமர் வர்ணித்ததோடு, லண்டன் தனது சேவைத் துறையை மேலும் வலுப்படுத்த நம்புவதாகவும் கூறினார். அறுபதுக்கும் மேற்பட்ட தொழிலதிபர்களுடன் சீனா சென்ற பிரதமர் ஸ்டார்மர், சீன அதிபர் ஜின்பிங்கை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து இந்த பயணத்தில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியதாகவும் கூறப்படுகிறது.

## அமெரிக்க உறவில் பிளவு?

தற்போதைய சூழலில் பிரிட்டன் - சீனா இடையிலான உறவுகள் சர்வதேச அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கூறப்படும் நிலையில், அமெரிக்காவுடனான உறவுகள் மேலும் பிளவுப்படக் கூடும் என அஞ்சப்படுகிறது. கிரீன்லாந்து விவகாரத்தில், நீண்டகால கூட்டாளிகளான பிரிட்டன் உள்ளிட்ட நேட்டோ நாடுகளின் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அதிகப்படியான வரிகளை விதித்து வருகின்றார்.

இதனால், அமெரிக்காவின் நேரடி எதிரிகளில் ஒன்றாகக் கருதப்படும் சீனாவுடன் முன்னணி நாடுகள் கைகோர்ப்பது புதிய வர்த்தகம் மற்றும் புதிய புவியியல் அரசியல் களத்தை உருவாக்கும் என அரசியல் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஏற்கெனவே, கனடா பிரதமர் மார்க் கார்ணி கடந்த சில வாரங்களுக்கு முன்பு சீனா சென்றிருந்தார். இதையடுத்து, எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஜெர்மனியின் தலைவர் ஃபிரெட்ரிக் மெர்ஸ் சீனாவுக்குச் செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனாவுடனான உறவின் மூலமாக பிரித்தானிய ஏற்றுமதியாளர்களுக்குப் பெரும் வாய்ப்பாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியப் பிரஜைகளுக்கு விசா இல்லா பயணச் சலுகை வழங்கப்பட்டமை ஒரு முக்கியமான விடயமாகும்.



மாக சீனாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 2017இக்கு பிறகு சீனாவிற்கு சென்ற முதல் கனடா பிரதமர் இவராவார்.

கனடாவை தொடர்ந்து, இப்போது இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் சீனாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். கனடா பிரதமர் மார்க் கார்ணி, சீனா சென்று அந்நாட்டுடன் பொருளாதார ஒப்பந்தங்களை மேற்கொண்டார். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த டொனால்டு டிரம்ப், கனடா மீது வரிகளை விதிக்கப் போவதாக அச்சுறுத்தினார். இந்நிலையில், பிரிட்டனின் நடவடிக்கை குறித்தும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை:

சீனாவுடன் வர்த்தக உறவை வலுப்படுத்த முயல்வது பிரிட்டனுக்கு மிகவும் ஆபத்தாக அமையும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் அடி ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபரின் அடாவடியான வரி விதிப்பு கொள்கைகளால் உலகின் பல்வேறு நாடுகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

**கடந்த 2018 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டனின் பிரதமர் ஒருவர் முதல் முறையாக சீனாவுக்கு செல்லும் நிலையில், அவருடன் பிரிட்டனின் வர்த்தகத் துறை அமைச்சர் பீட்டர் கையில் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளும் சென்றமை குறிப்பிடத்தக்கது**

அதேவேளை ஆள் கடத்தல் கும்பல்களுக்கு எதிராக இணைந்து செயல்பட இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வர்த்தகக் கொள்கைகளால் உலகளாவிய பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், பிரித்தானிய பிரதமரின் இந்தப் பயணம் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

சீனா உலக அரங்கில் ஒரு தவிர்க்க முடியாத சக்தி. கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பொருளாதார வளர்ச்சிக்காக நாம் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம் எனப் பிரதமர் கியார் ஸ்டார்மர் வலியுறுத்தியுள்ளார்.

இரு தலைவர்களின் சந்திப்பு பீஜிங்கில் உள்ள "கிரேட் ஹால் ஆஃப் த பீப்பிள்" மண்டபத்தில் எண்பது நிமிடங்கள் நடைபெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே ஆரோக்கியமான மற்றும் நிலையான உறவை வளர்க்க இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேலும், பிரித்தானியாவின் புகழ்பெற்ற "விஸ்கி" மதுபானம் மீதான இறக்குமதி வரியைக் குறைக்க சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

## சீனாவில் கனடா பிரதமர்:



உலக அரங்கில் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே வர்த்தகப் போர் முற்றியுள்ள நிலையில், பிற மேற்கத்திய நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்த சீனாவுடன் இணைந்து கைகோர்க்க தொடங்கியுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக சீனாவுடன் விரிசல் ஏற்பட்டிருந்த நிலையில், கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்ணி அரசு முறை பயண

குறிப்பாக ஏற்றுமதியை அதிகம் நம்பி இருக்கும் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவுக்கான தங்கள் ஏற்றுமதி குறையுமானால் அதை ஈடுகட்டுவதற்கு ஏற்ப, வேறு நாடுகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகள் ஆராய்ந்து வருகின்றன.

சீனாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரிட்டன் பிரதமர் கியார் ஸ்டார்மர்பெய்ஜிங்கில் அதிபர் ஜி ஜின்பிங்கைச் சந்தித்துப் பேசியமை குறித்து லண்டனில் உள்ள பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், "இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் சீரான, நீண்டகால மற்றும் வியூக ரீதியிலான கூட்டாண்மையை உருவாக்க இரு நாட்டு தலைவர்களும் உறுதி பூண்டுள்ளனர். கருத்து வேறுபாடுகள் உள்ள துறைகளில் வெளிப்படையான பேச்சுவார்த்தையைத் தொடர அவர்கள் ஒப்புக் கொண்டனர். பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் இந்த சந்திப்பின்போது உடன்பாடு எட்டப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டது.

சீனா செல்லும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கியார் ஸ்டார்மர், "அமெரிக்காவுடன் நெருக்கமாக பணியாற்றி உள்ளேன். எனவே, டிரம்ப்பை கோபப்படுத்தாமல் சீனாவோடு பொருளாதார உறவுகளைத் தொடர்ந்து வலுப்படுத்த பிரிட்டனால் முடியும்" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரிட்டன் பிரதமரின் சீன பயணம் குறித்து டிரம்ப் எச்சரிக்கை விடுத்தார். அப்படி செய்வது அவர்களுக்கு மிகவும் ஆபத்தானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், சீன அதிபர் ஜி ஜின்பிங் உடனான சந்திப்பு குறித்துப் பேசிய கியார் ஸ்டார்மர், "சந்திப்பு மிகவும் சுமுகமாக இருந்தது. நாங்கள் எதிர்பார்த்த விளைவுகளை வழங்கியுள்ளது. சில உண்மையான முன்னேற்றங்களை எட்டியுள்ளோம். ஏனெனில், வழங்குவதற்கு இங்கிலாந்திடம் நிறைய இருக்கிறது. விசா இல்லாத பயணம், விஸ்கி மீதான வரி குறைப்பு என முக்கிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. உறவை மேம்படுத்த நாங்கள் என்ன செய்கிறோம் என்பதற்கு இவை தான் அடையாளம். பரஸ்பர நம்பிக்கையையும் மரியாதையையும் உருவாக்கும் வழியாக இந்த சந்திப்பை நாங்கள் பார்க்கிறோம்." என தெரிவித்தார்.

# நீதி மறுக்கப்பட்ட நாள்: சிறீலங்கா சுதந்திர நாள்!

## அவுஸ்திரேலியத் தமிழ் காங்கிரஸ் வலியுறுத்தல்

04.02.2026

சிறீலங்காவின் 78ஆவது சுதந்திர தினத்தில், உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் ந்த நாளை ஒரு கருப்பு தினமாக நினைவுகூர்கின்றனர். இந்த நாள் தீர்க்கப்படாத ஒடுக்குமுறை, நீதி மறுப்பு மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான பாகுபாட்டின் 78 ஆண்டுகளைக் குறிக்கிறது. சிறீலங்கா சுதந்திர தினமான பெப்ரவரி நான்காம் நாளினை, தமிழர்களின் நீதி மறுக்கப்பட்ட நாளாக அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளது.




தற்போதைய சிறீலங்கா அரசாங்கத்தின் கீழ், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் சீர்திருத்தம் குறித்த வாக்குறுதிகள் அர்த்தமுள்ள மாற்றமாக மாறவில்லை. நில அபகரிப்பு, சிவில் சமூகத்தின் கண்காணிப்பு, காணாமல் போனவர்களின் குடம்பங்களை அச்சுறுத்துதல் மற்றும் உள்ளூர் தமிழ் மக்களுக்கு அந்நியமான மத கட்டமைப்புகளை திணித்தல் ஆகியவை இன்னமும் குறையாமல் தொடர்கின்றன. அடக்குமுறை மிகவும் மறைமுகமான மற்றும் சட்டப்பூர்வமாக்கப்பட்ட வடிவங்களுக்கு மாறியுள்ளது, சர்வதேச சமூகத்திற்கு சீர்திருத்தத்தின் பிம்பத்தை வெளிப்படுத்தும் அதே வேளையில் கட்டமைப்பு அநீதி நீடிக்க அனுமதிக்கிறது.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் (ATC) இலங்கை அதன் UNHRC உறுதிமொழிகளை செயல்படுத்துவதில், சுயாதீனமான பொறுப்புக்கூறல் வழிமுறைகளை நிறுவுவதில் அல்லது உண்மையான அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து தோல்வியடைந்ததை தீவிர கவலையுடன் குறிப்பிடுகிறது. உள்நாட்டு செயல்முறைகள் போதுமானதாக இல்லை, சர்வதேச சட்ட தரங்களை பூர்த்தி செய்யத் தவறிவிட்டன, மேலும் வேரூன்றிய பாகுபாடு மற்றும் நிறுவனமயமாக்கப்பட்ட தண்டனையின்மை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை இழக்கின்றன.

பெப்ரவரி 4, 2026 அன்று, சிறீலங்காவின் சுதந்திர தினத்தை தமிழர்களுக்கான கருப்பு தினமாகக் குறிக்கும் வகையில், பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் விதமாகவும், நீதியைப் பெறுவதற்காகவும், தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் வெகுஜன எதிர்ப்புப் பேரணிகளுக்கு ஒற்றுமையாகவும் அமைதியான உலகளாவிய போராட்டங்களுக்கு ATC அழைப்பு விடுக்கிறது.

அவஸ்திரேலிய அரசாங்கமும் சர்வதேச சமூகமும் தமிழ் மக்களின் அமைதி, கண்ணியம் மற்றும் நீதியைப் பெறுவதில் அவர்களுடன் நிற்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் வலியுறுத்துகிறது.

தாமதப்படுத்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகவே கருதப்படும்.

**Australian Tamil Congress**

A Unified Voice for All Tamils

ATC

**MEDIA RELEASE - 04 February 2026**

**TAMILS MARK SRI LANKA'S INDEPENDENCE DAY**
**AS A "BLACK DAY" AMID ONGOING INJUSTICE**

**On Sri Lanka's 78th Independence Day, the Tamil people in Sri Lanka and across the global diaspora commemorate this day as a Black Day, marking 78 years of unresolved oppression, denial of justice, and continuing discrimination against the Tamil people.**

For Tamils, independence from British rule in 1948 transferred power to the Sinhala majority without meaningful safeguards for the Tamil nation - the historic inhabitants of the North-East, who had their own independent Tamil kingdoms prior to European arrival on the island. This foundational failure led to decades of systemic discrimination, state-sponsored violence, and the denial of peaceful democratic avenues for justice.

From 1983 to 2009, Sri Lanka's armed conflict was marked by war crimes, crimes against humanity, and genocide, as documented by UN mechanisms and reflected in multiple United Nations Human Rights Council (UNHRC) resolutions. Despite the end of the war, seventeen years on, there has been no credible accountability, and Tamil areas in the North-East remain heavily militarised.

Under the current Sri Lankan government, promises of reconciliation, accountability, and reform have not translated into meaningful change. Land dispossession, surveillance of civil society, intimidation of families of the disappeared, and the imposition of religious structures alien to the local Tamil population continue unabated. Repression has shifted into more covert and legalised forms, allowing structural injustice to persist while projecting an image of reform to the international community.

The Australian Tamil Congress (ATC) notes with serious concern Sri Lanka's continued failure to implement its UNHRC commitments, establish independent accountability mechanisms, or advance genuine power-sharing arrangements. Domestic processes remain inadequate, fail to meet international legal standards, and lack the trust of victims due to entrenched discrimination and institutionalised impunity.

**The Australian Tamil Congress urges the Australian Government and the international community to stand with the Tamil people in their pursuit of peace, dignity, and justice.**

**Justice delayed is justice denied.**

For further information, please contact:

**Media Team - Australian Tamil Congress (ATC)**
Email: chairperson@australiantamilcongress.com

ABN: 97 138 993 882 www.australiantamilcongress.com




www.sangathamil.ca

# சிரியாவில் யாசிடி மக்களின் அவலநிலை: நூற்றாண்டுகளாக தொடரும் இனப்படுகொலை!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –




28.01.2026

சிரியாவிலும், ஈராக்கிலும் சிறுபான்மை இனமான யாசிடி மக்கள் (Yazidi) பல நூற்றாண்டுகளாக, அவர்கள் மீதான அகோரமான கொடுமைகளையும் பல இனப்படுகொலைகளையும் எதிர்கொண்டனர். காரணம் அவர்களின் மாறாத இன - மத நம்பிக்கைகள் தான்.

இன்று வரை, அவர்கள் தங்கள் நம்பிக்கைகள் மற்றும் மரபுகளில் மாற்றத்திற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் தொடர்ந்து வலுவாக இருக்கிறார்கள் என்பதேயாகும். அதனாலேயே உலகில் விரைவாக அழிக்கப்படும் ஆதி இனமாகி உள்ளனர்.

## சிரிய யாசிடி மக்கள்:

சிரியாவில் உள்ள யாசிடி மக்கள் (Yazidis) முக்கியமாக வடக்கு சிரியாவில், குறிப்பாக அஃப்ரினின் குர்த்-தாக் (Kurd-Dagh) மற்றும் அல்-ஜசிரா (Al-Jazirah) பகுதிகளில் வாழும் ஒரு பண்டைய சிறுபான்மை குர்தி மொழி பேசும் குழுவினர் ஆவார்.

2014இல் ISIS படையெடுப்பு மற்றும் தற்போதைய துருக்கிய ஆதரவு சிரியப் படைகளின் ஆக்கிரமிப்பால், இவர்கள் இனப்படுகொலை, இடம்பெயர்வு மற்றும் துன்புறுத்தல்களை எதிர்கொண்டு, சுமார் 12,000 முதல் 15,000 பேராகக் குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சிரியா யாசிடி மக்களின் மத நம்பிக்கை, மற்றய அரபு மக்களில் இருந்து மக் வேறுபட்டது. தற்போது யாசிதிகள் குர்தி மொழி பேசும், இஸ்லாமிய மற்றும் பண்டைய உள்ளூர் மரபுகளைக் கலந்த ஒரு தனித்துவமான சமரச மதத்தைப் பின்பற்றுபவர்கள் ஆவார்கள்.

ஆரம்ப காலத்தில் 1963இல் சுமார் 10,000-மாக இருந்த சமூக எண்ணிக்கை, 2014இல் 50,000-மாக உயர்ந்து, பின் போர்கள் காரணமாக தற்போது 12,000-15,000 வரை குறைந்துள்ளது. 2014 முதல் ISIS-ன் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட இவர்கள், தற்போது வடமேற்கு சிரியாவில் துருக்கிய ஆக்கிரமிப்பால் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறி, AANES (Autonomous Administration of North and East Syria) கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தஞ்சமடைந்து வாழ்ந்தனர்.

தற்போது அங்கு மீண்டும் இஸ்லாமிய ISIS படைகள் தலையோங்கி வருவதால் இந்த மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. 2014 காலகட்டத்தில் பல துன்புறுத்தல்களை சந்தித்தனர். யாசிடி பெண்களைக் கடத்துதல், அவர்களின் புனிதத் தலங்களை இடித்தல் மற்றும் மத அடையாளத்தின் காரணமாகக் குறிவைக்கப்படுவது தொடர்ந்து பிரச்சனையாக உள்ளது.

சிரியாவில் பத்தாண்டுகளாக நீடிக்கும் வன்முறைகளுக்குப் பிறகும், ஐக்கிய நாடுகள் சபை இவர்களுக்கு நீதி மற்றும் பாதுகாப்பு கிடைக்கப் போராடி வருகிறது, மேலும் பல யாசிடிகள் இன்னும் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். ஆனாலும் தற்போதைய நிலை இன்னும் மோசமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது.

## உலகில் யாசிடி மக்கள்:




யாசிடி மக்கள் குர்தி மொழி பேசுவதுடன், சியா, சூபி இசுலாமியச் சமயங்களின் கூறுகளை உள்ளடக்கிய நாட்டுப்புற மரபுகளுடன் கலந்த சமரச சமயத்தை பின்பற்றுகின்றனர். யாசிடி மக்கள் ஈராக்கில் நீண்ட காலமாக பாரம்பரியமாக வாழ்ந்துவரும் சிறுபான்மை இனமாவர்.

உலகில் மொத்தம் 15 இலட்சம் யாசிடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பான்மையினர் வட ஈராக்கின் சிஞ்சார் மலைப்பகுதியிலும் அதைச்சுற்றியுள்ள நகரங்களிலும் வாழ்கின்றனர். யாசிடி இன மக்களில் ஈராக்கில் 850,000, ஜேர்மனியில் 200,000, சிரியாவில் 60,000, ரஷ்சியாவில் 70,000 , ஆர்மீனியாவில் 60,000 , ஜோர்ஜீயாவில் 20,000 சுவீடனில் 7,000 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

## பல நூற்றாண்டு ஒடுக்குமுறை :

யாசிடி மக்கள் பெரும்பாலும் தொன்மைய அசிரியாவின் பகுதியாகவிருந்த வடக்கு ஈராக்கின் நினேவெ மாநிலத்தில் நீண்ட காலமாக வாழ்ந்தனர். ஐரோப்பாவிற்கு, குறிப்பாக ஜெர்மனிக்கு இவர்கள் குடி பெயர்ந்ததை அடுத்து ஆர்மீனியா, ஜோயார்சியா மற்றும் சிரியா நாடுகளில் இவர்களது மக்கள்தொகை 1990களிலிருந்து வெகுவாக குறைந்துள்ளது.

யாசிடி மக்களை “சாத்தானை வழிபடுவோர்” என பல நூற்றாண்டுகளாக ஈராக்கில் ஒடுக்கி வந்துள்ளனர். இத்தகைய ஒடுக்குதல் ஈராக்கில் முன்னர் சதாம் உசேனாலும் பின்னர் அடிப்படைவாத சுன்னி இசுலாம் புரட்சியாளர்களாலும் இன்னமும் தொடர்கின்றது.

## 2014 ஐஎஸ்ஐஎஸ் தாக்குதல் :

ஈராக்கில் ஆகஸ்ட் 2014 ஐஎஸ்ஐஎஸ் தாக்குதல் யாசிடி சமூகத்தின் மையப்பகுதியான சின்ஜார் மலையின் அடிவாரத்தில் தொடங்கியது. அவர்கள் யாசிடிகளை ISIS இன் அரசியல்-மத நிலையில் வரவேற்கப்படுவதில்லை.

2007இல் கூட அவர்கள் அதிகம் புழங்கும் பகுதிகளில் குண்டு

> **ஈரானில் மீட்பு நடவடிக்கைகள் என்றால், பலருக்கும் நினைவில் வருவது, 1980 ஈரானில் பணயக் கைதிகளாக இருந்த மீட்பு நடவடிக்கையின் தோல்வியையே. இதன் முன்னர் 1970களில் வியத்நாம் தோல்விகளும், பின்னர் 2021 இல் ஆப்கானை விட்டும் ஓடிய வரலாறும் அறிந்ததே. ஆனால் இப்போது டிரம்ப் முடிவெடுக்கும் நேரம் வந்துவிட்டது என்று கூறிவரும் மேற்குலக நாடுகளின் முன்னைய வரலாற்றை மறந்து விட்டனர் என்றே தோன்றுகிறது**

வைத்து 800க்கும் மேற்பட்ட யாசிடிக்கள் கொல்லப்பட்டனர். பின்னர் 2014 இல் ஐ. எஸ். இயக்கத்தினரால் இவர்களில் 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். தப்பியோடியவர்களில் சுமார் ஐம்பதாயிரம் பேர் வரை ஐ. எஸ். அமைப்பினரால் கொல்வதற்காக சுற்றி வளைக்கப்பட்டு பின் ஐ.நா தலையீட்டால் விடுவிக்கப்பட்டனர்.

இராக்கில் ஆகஸ்ட் 2014 சுன்னி கிளர்ச்சிக்குழுவான இஸ்லாமிய அரசு என்ற அமைப்பின் தீவிரவாதிகளின் வன்முறையிலிருந்து தப்ப, யாசிடி இன மக்கள் தங்கள் சொந்த ஊரான சிஞ்சாரை விட்டு வெளியேறினர்.

இராக் வன்முறையிலிருந்து தப்பியோடும் யாசிடி மக்கள் ஆயிரக்கணக்கானோர் சிரியா எல்லைக்கருகே உள்ள சிஞ்சார் மலையின் வறண்ட முகடுகளில் தஞ்சம் புகுந்தனர். சிலர் நடந்தே சிரியா எல்லையைக் கடந்திருக்கின்றனர். தங்கள் சொந்த ஊரான சிஞ்சாரைப் பிடித்த, இராக்கின் கிளர்ச்சிக்குழுவான இஸ்லாமிய அரசு என்ற அமைப்பின் தீவிரவாதிகள் செய்யும் வன்முறையிலிருந்து தப்ப இடம்பெயர்ந்தனர்.

பயத்தில் தப்பியோடும்போது பல குடும்பங்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களைப் பிரிந்தனர். தங்கள் குடும்பத்தில் பிரிந்துவிட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன ஆயிற்று என்று அவர்களுக்கு தெரியவில்லை. இந்தப் பகுதியில், சிறுபான்மை யாசிடி சமூகத்தினருக்கு எதிராக பல்வேறு கொடூரங்கள் நடந்ததாக அன்றைய தகவல்கள் கூறுகின்றன. தப்பியோடும் யாசிடி இனக் குழந்தைகள் மலையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

## பாலியல் தொழில் அடிமைகளாக :

பெண்கள் மற்றும் குழந்தைகள் வேறு தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அவர்களுடைய நகைகள் மற்றும் மதிப்புமிக்க பொருட்களை பெரும் குவியலில் சேர்த்து கொள்ளையிட்டனர். மிக கொடூரமாக ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினர் 13 வயது முதல் 16 வயது வரையிலான திருமணமாகாத சிறுமிகளைத் தேர்ந்தெடுத்து பிரித்தனர். எஞ்சியவர்கள் வேறொரு கிராமத்திற்குச் செல்ல திருமணமான பெண்கள் மற்றும் குழந்தைகள் அகதி முகாம்களில் தங்கி இருந்தனர்.

திருமணமாகாத இளம் பெண்களைத் ஐஎஸ் தேர்ந்தெடுத்து தங்

களுடன் அழைத்துச் சென்றனர். இளம் பெண்கள் ISIS போரா ளிகளுக்கு விற்கப்பட்டார்கள். அத்துடன் பாலியல் தொழில் அடிமைத்தனத்திற்கு தள்ளப்பட்டார்கள். ஐஎஸ் அமைப்பினர் பல பெண்கள் வதைத்து, அடிக்கப்பட்டு பட்டினி கிடக்கப் பட்டார்கள்.

அத்துடன் சிறுவர்கள் பயிற்சி முகாம்களுக்கு அழைத்து சென்று, முஸ்லீம் பெயர்களைக் கொடுத்து, பயிற்றுவித்தனர். எஞ்சி யிருந்த ஆண்களை கொன்றனர். தற்போது சின்ஜாரில் இருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். புதைகுழிகளைக் கண்டுபிடித்து படுகொலை யின் உண்மையான தன்மையை உலகம் உணர்ந்து உள்ளது.

சின்ஜார் படுகொலை நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகும் 200, 000 யாசிடிகள் இன்னும் காணவில்லை. அவர்கள் உண்மை யில் காணாமல் போயிருக்கிறார்களா அல்லது இறந்துவிட்டார் களா என்பது தெளிவாகத் தெரியவில்லை மற்றும் மக்கள் சின் ஜாருக்குத் திரும்புவதற்கான நம்பிக்கை கிட்டத்தட்ட சாத்திய மற்றதாக உள்ளது.



**யுத்த ஆயுதமாக பாலியல் வன்முறை:**

நதியா முராத் வடக்கு ஈராக்கில் உள்ள யாசிடி சிறுபான்மை யினரின் உறுப்பினராக உள்ளார். அங்கு அவர் தனது குடும் பத்தினருடன் தொலைதூர கிராமமான கொச்சோவில் வசித்து வந்தார். ஆகஸ்ட் 2014 இல் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) சிஞ்சர் மாவட்டத்தின் கிராமங்கள் மீது மிருகத்தனமான, திட்டமிட்ட தாக்குதலை நடத்தியது. இது யாசிடி மக்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்டது.



நதியா முராட்டின் கிராமத்தில், பல நூறு பேர் படுகொலை செய் யப்பட்டனர். வயதுக்குட்பட்ட குழந்தைகள் உட்பட இளைய பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் அடிமைகளாக நிறுத்தப்பட் டனர். ஐ.எஸ்ஸின் கைதியாக இருந்தபோது, நதியா முராத் பல முறை கற்பழிப்பு மற்றும் பிற முறைகேடுகளுக்கு ஆளானார். இஸ்லாமிய அரசின் வெறுக்கத்தக்க, மனிதாபிமானமற்ற விருப் பிற்கு அவர் மாறாவிட்டால் மரண தண்டனை நிறைவேற்றுவ தாக அவரை தாக்குதல் நடத்தியவர்கள் அச்சுறுத்தினர்.

ஐ.எஸ். இராணுவத்தால் கற்பழிப்பு மற்றும் பிற துஷ்பிரயோகங் களுக்கு ஆளான 3000 யாசிடி பெண்களில் நதியா முராத் ஒருவர். பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் கொடுமை யானவை. அத்துடன் இது ஒரு இராணுவ மூலோபாயத்தின் ஒரு பகுதி. இவ்வாறு அவர்கள் யாசிடி மற்றும் பிற மத சிறுபான் மையினருக்கு எதிரான போராட்டத்தில் ஒரு ஆயுதமாக இதனை பாவித்தனர்.

நீண்டகால கொடுமைகளுக்கு பிறகு நதியா முராத் ஈராக்கை விட்டு தப்பி ஓடினார். தப்பித்ததைத் தொடர்ந்து, அவர் அனு பவித்த கொடூரங்களை பற்றி வெளிப்படையாக பேசத் தேர்வு செய்தார். இதன்பின் 2016 ஆம் ஆண்டில், தனது 23 வயதில், ஐ.நாவின் முதல் நல்லெண்ண தூதராக அவர் தேர்வு செய் யப்பட்டார்.

## யாசீடி விடுதலை அமைப்பு : கொங்ரா ஸ்டார்


நீண்டகால இடர்களின் பின்னர் 2005இல் யாசீடி பெண்களால் நிறுவப்பட்ட Kongreya Star, அமைப்பானது அவர்களின் விடு தலைக்கு போராடும் கூட்டமைப்பு ஆகும். ஈராக், சிரியா பிராந் திய அரசாங்கங்கள் யாசிடிகளின் பாதுகாப்பிற்காக எதுவும் செய்யவில்லை என்று கொங்ரா ஸ்டார் சுட்டிக்காட்டியுள்ளது. யாசிடி பெண்கள் மற்றும் ஆண்களின் தியாகத்தால் தன்னாட்சி நிர்வாகம் நிறுவப்பட்டது.

யாசிடிகளின் கோங்க்ரா ஸ்டார் அமைப்பின் தன்னாட்சி நிர்வாகம் இனப்படுகொலையை அங்கீகரிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சர்வதேச சமூகத் திற்கு அழைப்பு விடுத்தனர்.

2005 இல் யாசிடிகளால் நிறுவப்பட்ட Kongreya Star, ரோஜாவா வில் உள்ள பெண்கள் அமைப்புகளின் கூட்டமைப்பு ஆகும். பிராந்தியத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களில் அவர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர். அவர்களின் பணி "பெண்களின் விடுதலை இல்லாமல், உண்மையான சுதந்திரமான சமூகம் சாத்தியமற்றது" என்ற கூற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது.

பொருளாதார வாய்ப்பு மற்றும் மேம்பாடு, பெண்களுக்கான விழிப்புணர்வு மற்றும் தற்காப்பு ஆகியவற்றில் கவனம் செலுத் தும் பெண்கள் கட்டமைப்பை ஒழுங்கமைப்பதில் இந்த அமைப்பு கவனம் செலுத்துகிறது. ரோஜாவா மற்றும் சிரியா முழுவதும் பணிபுரியும் கொங்ரா ஸ்டார் முழு மத்திய கிழக் கிற்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். அத்துடன் முழு பிராந்தியத்திலும் பெண்களின் விடுதலைப் புரட்சியை நனவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





# பலூசிஸ்தானில் காலடி வைக்கும் அமெரிக்கா! பாகிஸ்தானில் சீன ஆதிக்கம் தளருமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

11.02.2026

பாகிஸ்தானில் ஓர் பிராந்தியமான பலூசிஸ்தான் நீண்ட காலமாக தனிநாடு கோரி போராடி வருகிறது. தற்போது அங்கே 13 பில்லியன் டாலர் முதலீடு செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது. 'புராஜெக்ட் வால்ட்' (Project World) என்ற திட்டத்தின் மூலம், பாகிஸ்தானின் பலூசிஸ்தானில் உள்ள தங்கம் மற்றும் செம்புச் சுரங்கங்களை (Copper Mine) மேம்படுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த முதலீடானது சுரங்கத் தொழில் மட்டுமல்லாது, சாலைகள், எரிசக்தி மற்றும் உள்ளூர் மக்களின் சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும் என்று பாகிஸ்தான் அரச வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருக்கும் பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் இந்த 13 பில்லியன் டாலர்கள் முதலீடு பெரும் பொருளாதார உதவியாக இருக்கும் எதிர்பார்க்கப்படுகிறது. பலூசிஸ்தானில் ஏற்கனவே சீனா தனது சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் (CPEC) திட்டத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தற்போது அமெரிக்காவின் இந்த திட்டம், அப்பகுதியில் சீனாவின் செல்வாக்கைக் குறைப்பதற்கான ஒரு மூலோபாய நகர்வாகப் பார்க்கப்படுகிறது.

பலூசிஸ்தான் மாகாணத்தில் பிரிவினைவாதக் குழுக்களின் தாக்குதல்கள் தொடர்ந்து வரும் நிலையில், இந்த பிரம்மாண்ட திட்டத்தைச் செயல்படுத்துவது அமெரிக்காவிற்கும் பாகிஸ்தான் அரசிற்கும் ஒரு பெரிய சவாலாக இருக்கும். இந்த திட்டத்தில் பல பில்லியன் டாலர்கள் முதலீடு செய்ய அமெரிக்கா முடிவெடுத்துள்ளதன் பின்னணியில் பல காரணங்கள் உள்ளன என்று கூறப்படுகிறது. குறிப்பாக சீன ஆதிக்கத்தை அகற்ற அமெரிக்க அரசு முயல்கின்றது.

## தெற்கு வஜீரிஸ்தான் கனிம வளம்:

பாகிஸ்தானின் இந்து குஷ் மலைகளின் சியன்னா வளைவுகளில், ஆப்கானிஸ்தானின் எல்லையிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள 'முகமது கேல்' செம்பு சுரங்கத்திலிருந்து கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள செம்பு, 22,000 டொன்கள் தோண்டப்பட்டு சீனாவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதனைப் போல மற்றொரு மாகாணத்தில் செம்பு சுரங்கம் உள்ளது. இது பாகிஸ்தான் கூறும் மற்றொரு செம்பு சுரங்கம் கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகமாக விளைவிக்க முடியும். இது அமெரிக்கா ஒவ்வொரு ஆண்டும் பயன்படுத்தும் செம்புகளில் ஐந்தில் ஒரு பங்கிற்கு சமம். வளங்களுக்காக ஏங்குகிற வாஷிங்டன் நிர்வாகத்திற்கும் இந்த வாய்ப்பு மிகவும் கவர்ச்சிகரமானதாக இருப்பதால், அது விஷயங்களை நகர்த்த பல பில்லியன் டாலர்களுக்கு மேல் முதலீடு செய்கிறது.

## மண்ணுக்கு அடியில் பல செல்வம்:

பாகிஸ்தான் அதன் மண்ணுக்கு அடியில் பல செல்வம் இருப்பதாக கூறுகிறது. தாமிரம், லித்தியம், கோபால்ட், தங்கம், மற்றும் பிற முக்கியமான கனிமங்களில் மதிப்பிடப்பட்ட 8 டிரில்லியன் டாலர்கள் ஆகும். அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் மையமாக கனிம கையகப்படுத்துதலைக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடனான ஒரு நட்பை மேலும் பாகிஸ்தான் தற்போது வலுப்படுத்தியுள்ளது.

ஆனால் பாகிஸ்தான் கூறும் கனிம பொக்கிஷம் பல தசாப்த கால ஜிஹாதி கிளர்ச்சிகளால் பாதிக்கப்பட்ட எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறியதிலிருந்து, அவசரமாக கைவிடப்பட்ட ஆயுதங்கள் பலவற்றை அங்கு விட்டுச் சென்றது இன்னோர் பாதுகாப்பு பிரச்சனையாக இருக்கிறது. ஏனெனில் அமெரிக்கா விட்டுச் சென்ற உயர் தொழில்நுட்ப ஆயுதங்கள் இப்போது எல்லைப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் கைகளுக்கு சென்றுள்ளது.

## சுத்திகரிக்கப்பட்ட அரிய மண் தாதுக்கள்:

உலகளாவிய உற்பத்தியில் 90% க்கும் அதிகமான சுத்திகரிக்கப்பட்ட அரிய மண் தாதுக்கள் சீனாவால் தான் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவை கைப்பேசி (ஐபோன்கள்) முதல் மின்சார வாகனங்கள் வரை அனைத்திற்கும் சக்தி அளிக்கப் பயன்படுகின்றன.

அரிய மண் தாதுக்கள் (Rare Minerals) மீதான அந்த ஏகபோகமும் அவற்றின் செயலாக்கமும் அமெரிக்காவுடனான வர்த்தகப் போரில் பெய்ஜிங்கின் மிகவும் சக்திவாய்ந்த கருவிகளாக தற்போது மாறியுள்ளன. மேலும் டிரம்ப் அதை உடைக்க முயற்சிக்கத் தொடங்கியுள்ளார் என்பது தெளிவாகிறது.

தனது முதல் வருட பதவியில், அமெரிக்க ஜனாதிபதி அவுஸ்திரேலியா, கம்போடியா மற்றும் தாய்லாந்துடன் எதிர்காலத்தில் அமெரிக்கா முக்கியமான கனிமங்களை அணுகுவதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.




வீடுகளுக்கு தேவையான மின்சார இணைப்பு கேபிள்கள், AI மேம்பாட்டின் பின்னணியில் உள்ள குறைக்கடத்திகள் மற்றும் பாதுகாப்புத் துறை முழுவதும் உள்ள பிற தொழில்நுட்பங்களுக்குத் தேவையான மற்றொரு உலோகமான செம்புவின் பரந்த இருப்புக்களை பாகிஸ்தான் விளம்பரப்படுத்துவதன் மூலம் அவரது ஆர்வத்தை மேலம் தூண்டியது.

உலகம் விரைவாக டிஜிட்டல் மின்மயமாக்கப்படுவதால் செம்புவின் அவசரம் நடந்து வருவதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். உலகளாவிய தேவை தற்போது ஆண்டுக்கு முப்பது மில்லியன் டன்களிலிருந்து 2050 ஆம் ஆண்டுக்குள் ஐம்பது மில்லியன் டன்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செம்பு நவீன பொருளாதாரத்தின் ஒவ்வொரு பகுதியையும் எரிபொருளாக பயன்படுத்ததிக் கொள்ளும். மேலும் உலகில் அதிக கட்டமைப்பு பற்றாக்குறையில் இருக்கிறது. அந்த பற்றாக்குறை அமெரிக்காவை அரிய பூமி தாதுக்களை செயலாக்குவதற்கு குறைந்த போட்டித்தன்மையுடன் ஆக்குகிறது. இதனாலேயே பாகிஸ்தானின் முகமது கேல் செம்பு சுரங்கம் மிக அவசியமானதாக பார்க்கப்படுகிறது.

கடந்த வருட இறுதியில் டிசம்பர் மாதம், பாகிஸ்தானில் உள்ள உயர்மட்ட அமெரிக்க தூதர், தென்மேற்கு பலூசிஸ்தான் மாகாணத்தில் உள்ள ரெக்கோ டிக் என்ற இடத்தில் முக்கியமான கனிமங்களைச் சுரங்கப்படுத்துவதற்கு அமெரிக்க ஏற்றுமதி - இறக்குமதி வங்கி (EXIM) 1.25 பில்லியன் டாலர் நிதியுதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக அறிவித்தார். அந்த இடம் உலகின் மிகப்பெரிய வளர்ச்சியடையாத செம்பு இருப்புக்களைக் கொண்டுள்ளது என்று கூறப்படுகிறது. தற்போது இந்த சுரங்கத்தை நவீனப்படுத்தி மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு பன்னாட்டு கனடா நிறுவனம் தலைமை தாங்குகிறது.

பாகிஸ்தானில் உள்ள பலர் பல்வேறு நெருக்கடிக்கு தள்ளப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டவர்கள் ஆவார்கள். 1958 முதல் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 24 பிணை எடுப்புகளைப் பெற்றுள்ளது. அமெரிக்க வழங்கும் பாரிய முதலீடு பாகிஸ்தானின் மக்களுக்கும் வளர்ச்சிக்கும் மற்றும் செழிப்புக்கும் நிறைய வழங்க முடியும் என்று கூறப்படுகிறது.

டிரம்ப் ஆட்சிக்கு வந்ததிலிருந்து பெய்ஜிங்கில் பரபரப்பான செயல்பாடுகள் அனைத்து கவனிக்கப்பட்டுள்ளன. இஸ்லாமாபாத்தில் உள்ள அவர்களின் நீண்டகால நட்பு நாடுகள் அமெரிக்காவுடனான தங்கள் வணிகம் சீனாவின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்காது என்றும் உறுதியளித்துள்ளனர்.

## பலூசிஸ்தான் தனிநாட்டு போராட்டம் :

1947இல் பாகிஸ்தான் மத அடிப்படையில் இந்தியாவை பிரிந்து ஒரு தனி நாடாக உருவானது. ஆனால் உண்மையில் அது வங்காளம், பஞ்சாப், சிந்தி, பலூச்சி, பக்தூன் என ஐந்து தேசிய தேசிய இனங்களைக் கொண்டிருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு வங்காளம் போராடி 1971இல் வங்காள தேசமாக மலர்ந்தது.

இராணுவ ஆட்சி, மக்களாட்சி என எதுவாயிருந்தாலும் பாகிஸ்தானில் கோலோச்சுவது பஞ்சாபி முஸ்லீம்களும் சிந்தி முஸ்லீம்களுமே. இவர்கள் பலூச்சிகளையும் பக்தூனியர்களையும் (பத்தானியர்கள்) நீண்ட காலமாக ஒடுக்கி வருகின்றனர். அதனை எதிர்த்துப் பாகிஸ்தானில் அவ்விரு இனங்களும் விடுதலை




கோரிப் போராடி வருகின்றன.

பொருளாதார ரீதியாக, மற்ற பாகிஸ்தானியர்களுடன் ஒப்பிடும் போது பலூச்சிகள் தனிநபர் வருமானம் மிகக் குறைவு. கட்டமைப்பு ரீதியான பொருளாதாரச் சுரண்டல், சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் (CPEC) இருந்து பெரும்பாலான பலூச் சமூகத்தை விலக்கியது மற்றும் பிற பொருளாதாரத் திட்டங்களில் இருந்து அந்நியப்படுத்துதல் ஆகியவை பலூச் மக்களை போராட்ட வழியில் செயல்படத் தூண்டின.

பலூசிஸ்தான் தனி நாடு கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அந்நாட்டில் மிகப்பெரிய அளவிலான மக்கள் போராட்டங்கள் அப்பகுதியில் மட்டுமல்லாமல் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.

## பலூசிஸ்தான் வரலாறு :

பிரிட்டிஷிடம் இருந்து 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி பலூசிஸ்தான் பகுதி சுதந்திரம் பெற்றது. இதையடுத்த 1947, டிச.16-ஆம் தேதி அப்பகுதியை பாகிஸ்தானுடன் இணைப்பது தொடர்பாக பொது மற்றும் மேல்சபை ஆகியவற்றில் தீர்மானம் முன்மொழியப்பட்டது.

ஆனால், இதனை இரு சபைகளும் நிராகரித்தன. இந்நிலையில், பலூசிஸ்தான் மீது பாகிஸ்தான் படையெடுப்பு நடத்தியது. காலத் பகுதி கான் மற்றும் அவரது குடும்பத்தினரை சிறை வைத்தது. அப்பகுதியின் முழுக் கட்டுப்பாட்டையும் கைப்பற்றியது. எனவே 1948-ஆம் ஆண்டு முதல் அப்பகுதி பாகிஸ்தானின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

## மறைமுக இந்திய ஆதரவு :

பலூசிஸ்தான் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியர்கள் தார்மீக ஆதரவு செய்வதாக பலூசிஸ்தான் விடுதலை மன்றமான "ஹிந்த் பலூச்" எனும் அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் நிறுவனர் ஜிதேந்திரானந்த் சரஸ்வதி கூறுகையில் பலூசிஸ்தான், பிரிட்டிசிடம் இருந்து சுதந்திரம் பெற்ற போதிலும், 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீள வலுக்கட்டாயமாக பாகிஸ்தானுடன் இணைக்கப் பட்டது.

பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர உரிமைகளுக்காக இந்தியர்கள் பங்களிப்பு செய்தனர். தங்களது அடையாளம், கலாசாரம் ஆகியவற்றின் மீது பலூசிஸ்தான் மக்கள் அதிக மரியாதை கொண்டுள்ளனர் என்றும் கூறினார். தற்போதைய சூழலில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதால் பாகிஸ்தானில் இருந்து பிரித்து பலூசிஸ்தான் தனிநாடாக அமைக்க இந்தியா உதவ வேண்டும் என இந்த இயக்கம் விரும்புகிறது. இதனிடையே பலூசிஸ்தானில் ஏற்பட்டு வரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக ஐ.நா. சபையில் இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.

# எப்ஸ்டீன் ஆவணங்கள் என்றால் என்ன?

06.02.2026

*(எச்சரிக்கை: இக்கட்டுரையில் தற்கொலை குறித்த தகவல்கள் உள்ளன)*

35 இலட்சம் பக்கங்கள், 1.80 இலட்சம் புகைப்படங்கள், 2,000 வீடியோக்கள் என இத்தனை ஆதாரங்களும் ஒரே ஒரு நபருடன் தொடர்புடையவை அதுவும் தற்போது உயிரோடு இல்லாத ஒருவரைப் பற்றியவை (???).

அவர் ஜெஃப்ரி எப்ஸ்டீன். சமீபகாலமாக இவருடைய பெயரையும், "எப்ஸ்டீன் ஆவணங்கள்" என்ற வார்த்தையையும் நீங்கள் அதிகமாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

யார் இந்த ஜெஃப்ரி எப்ஸ்டீன்? உலகின் முன்னணிப் பிரபலங்கள் பலரும் இந்த விவகாரத்தில் தொடர்புபடுத்தப்படுவது ஏன்? இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இது மீண்டும் பேசுபொருளாக மாறியிருப்பது ஏன்?

இப்படிப் பல கேள்விகளுக்கான பதில்களை இந்த தெரிந்து கொள்ளலாம்.

## 1. யார் இந்த ஜெ.ஃப்ரி எப்ஸ்டீன்?

இவரைப் பற்றிக் கூறவேண்டுமெனில், உலகின் மிகப்பெரிய பாலியல் கடத்தல் வழக்கு ஒன்றில் தொடர்புடைய மிக முக்கியமான நபர் ஆவார்.

1953-ஆம் ஆண்டு நியூயார்க்கில் பிறந்த எப்ஸ்டீன், அங்கேயே ஒரு பல்கலைக்கழகத்தில் கணிதம் மற்றும் இயற்பியல் பயின்றார். இருப்பினும், இவர் பட்டப் படிப்பு எதனையும் முடிக்கவில்லை. ஒரு காலத்தில் கணித ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

அப்போது இவரிடம் பயின்ற ஒரு மாணவனின் தந்தை, இவருடைய திறமையைக் கண்டு "பியர் ஸ்டெர்ன்ஸ்" (Bear Stearns) என்ற வால் ஸ்ட்ரீட் முதலீட்டு வங்கியில் இவரை ஒரு மூத்த பங்குதாரராக ஆக்குகிறார்.

1982-இல், "ஜே எப்ஸ்டீன் அண்ட் கோ" என்ற பெயரில் தனது சொந்த நிறுவனத்தைத் தொடங்குகிறார் எப்ஸ்டீன். இந்த நிறுவனம் தொடங்கப்பட்ட சில நாட்களிலேயே வெற்றியைக் கண்டது. இதனால், இவருடைய சாதாரண வாழ்க்கை ஆடம்பர வாழ்க்கையாக மாறியது.

புளோரிடாவில் ஒரு மாளிகை, நியூ மெக்சிகோவில் ஒரு பண்ணை வீடு எனப் பல சொத்துகளைக் குவித்தார். அதே நேரத்தில் பல பிரபலங்கள் மற்றும் அரசியல்வாதிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார்.

2002-இல் தற்போதைய அமெரிக்க அதிபரான டிரம்ப் இவரைப் பற்றிப் பேசியதாக நியூயார்க் இதழ் செய்தி வெளியிட்டது. அதில், "ஜெஃப்ரியை எனக்கு 15 ஆண்டுகளாகத் தெரியும். அவர் ஓர் அருமையான மனிதர். அவர் என்னைப் போலவே அழகான பெண்களை இரசிக்கிறார்" அதிலும் குறிப்பாக இளம் பெண்களை," என்று கூறியுள்ளார்.

டிரம்ப் மட்டுமன்றி, இப்படிப் பல பிரபலங்களுடன் எப்ஸ்டீன் நெருக்கமான நட்பு கொண்டிருந்தார்.

வெளியுலகிற்கு இவர் ஒரு பெரிய பிரபலமாகத் தெரிந்தாலும், இவருடைய தனிப்பட்ட வாழ்க்கை இரகசியமாகவே இருந்தது. ஜெஃப்ரி எப்ஸ்டீன் திருமணம் செய்துகொள்ளவில்லை; ஆனால் கிஸ்லேன் மேக்ஸ்வெல் உட்பட பல பெண்களை "டேட்" செய்துள்ளார்.

இவர்கள் இருவருக்குமான காதல் உறவு சில ஆண்டுகள் மட்டுமே நீடித்திருந்தாலும், அந்த உறவு முடிந்த பிறகும் நீண்ட காலமாக மேக்ஸ்வெல் எப்ஸ்டீனுடன் இணைந்து செயல்பட்டு வந்ததாக அவர்களுடைய நண்பர்கள் கூறுகின்றனர்.

## 2. எப்ஸ்டீன் மீதான குற்றச்சாட்டுகள்

இவ்வளவு புகழ்பெற்ற ஒரு நபர், சட்டச் சிக்கலில் சிக்கியது எப்படி?

2005-இல் புளோரிடாவில் 14 வயதுச் சிறுமியிடம் எப்ஸ்டீன் தவறாக நடந்துகொண்டதாக அந்தச் சிறுமியின் பெற்றோர் புகார் அளித்தனர். இதற்குப் பிறகு காவல்துறை அவருடைய வீட்டைச் சோதனை செய்தபோது, வீடு முழுவதும் சிறுமிகளின் புகைப்படங்கள் கிடைத்தன. ஆனால் அப்போது ஃபெடரல் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பித்துவிட்டார். பின்னர் 2008-இல், இவருக்கு 18 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அப்போது கூட, ஒரு நாளைக்கு 12 மணி நேரம், வாரத்தில் 6 நாட்கள் அவர் அலுவலகத்திற்குச் சென்று வேலை செய்யும் வகையில் வொர்க் ரிலீஸ் (Work Release) என்ற சலுகை வழங்கப்பட்டது. பின்னர் 13 மாதங்களில் நன்னடத்தை அடிப்படையில் விடுதலையானார்.

எப்ஸ்டீனின் மேன்ஹாட்டன் மாளிகையில் எஃப்பிஐ (FBI) சோதனை நடத்தியது. அதன்பிறகு அவருடைய முன்னாள் மேலாளர் ஜுவான் அலெசியிடம் விசாரித்தபோது, அவர் பல அதிர்ச்சியூட்டும் விஷயங்களை வெளிப்படுத்தினார். "மசாஜ்" செய்வதற்காகச் சிறுமிகளை அழைத்து வருமாறு எப்ஸ்டீனும், கிஸ்லேன் மேக்ஸ்வெல்லும் தன்னிடம் கேட்டதாக அலெசி வாக்குமூலம் அளித்துள்ளார்.

எப்ஸ்டீன் வீட்டில் வேலை செய்பவர்களுக்காகவே 69 பக்க கையேடு ஒன்று இருந்துள்ளது. அதில், "யாரும் எப்ஸ்டீனின் கண்களைப் பார்த்துப் பேசக்கூடாது; எதைப் பார்த்தாலும் காது கேட்காதது போலவும், வாய் பேசாதது போலவும் இருக்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

2008-இல் நியூயார்க் பாலியல் குற்றவாளிகள் பதிவேட்டில் எப்ஸ்டீனின் பெயர் அதிகாரப்பூர்வமாகச் சேர்க்கப்பட்டது. அடுத்த 10 ஆண்டுகளில், பல பெண்கள் முன்வந்து, தாங்கள் சிறுமிகளாக இருந்தபோது எப்ஸ்டீனால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானதாகப் புகார் அளித்தனர்.

2019 ஜூலையில் பாலியல் கடத்தல் வழக்கில் மீண்டும் எப்ஸ்டீன் கைது செய்யப்பட்டார். சிறுமிகளை வைத்து ஒரு பெரிய வலைப்பின்னலையே நடத்தி, அவர்களைச் சுரண்டி வந்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

எப்ஸ்டீன் தன் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் தொடர்ந்து மறுத்து வந்தார். நீதிமன்றமும் அவருக்கு ஜாமீன் வழங்க மறுத்து, நியூயார்க் சிறையில் அடைத்தது.

சிறையில் இருந்தபோது கழுத்தில் காயங்களுடன் அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்தக் காயங்கள் குறித்து சிறை நிர்வாகமோ அல்லது அவரது வழக்கறிஞர்களோ அதிகாரப்பூர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை.

2019 ஆகஸ்ட் மாதத்தில் அவர் சிறையிலேயே மர்மமான முறையில் உயிரிழந்தார் (???). இவருடைய மரணம் தற்கொலை (???) என்று அறிவிக்கப்பட்டது.

2020 ஜூலையில், சிறுமிகளை வைத்து எப்ஸ்டீன் செய்த பாலியல் வன்கொடுமைகளுக்கு உதவியதாகச் சந்தேகத்தின் பேரில், இவருடைய முன்னாள் காதலியான மேக்ஸ்வெல் கைது செய்யப்பட்டார்.

## 3. எப்ஸ்டீன் ஆவணங்கள் என்றால் என்ன?

எப்ஸ்டீன் தொடர்பான வழக்கு விசாரணையின் போது பல ஆவணங்கள் சேகரிக்கப்பட்டன. இதில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளிடம் நடத்தப்பட்ட உரையாடல் பதிவுகள், பல இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள், அவருடைய மின்னஞ்சல் உரையாடல்கள் எனப் பல விஷயங்கள் கிடைத்தன. இந்த விசாரணையில் சேகரிக்கப்பட்டவையே "எப்ஸ்டீன் ஆவணங்கள்" ஆகும்.

நீங்கள் நினைப்பது போல இது வெறும் ஒரு ஆவணம் அல்லது கோப்பு மட்டும் அல்ல. புகைப்படங்கள், வீடியோக்கள், மின்னஞ்சல் உரையாடல்கள், விமானப் பயணப் பதிவுகள் எனப் பல ஆதாரங்களை உள்ளடக்கியது.

எப்ஸ்டீன் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்ட பிறகு, அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பலரும் சந்தேகங்களை எழுப்பினர். பல அரசியல் கட்சிகள் இந்த ஆதாரங்களைப் பொதுவெளியில் வெளியிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன. இந்த கோரிக்கை வலுப்பெற்ற நிலையில், கடந்த ஆண்டு நவம்பரில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் "எப்ஸ்டீன் கோப்புகள் வெளிப்படைத்தன்மைச் சட்டம்" நிறைவேற்றப்பட்டது.

கடந்த டிசம்பர் 19-ஆம் தேதிக்குள் அனைத்து ஆவணங்களும் வெளியிடப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி கடந்த ஆண்டின் இறுதியிலேயே முதற்கட்டமாக ஜனநாயகக் கட்சியின் "மன்ற மேற்பார்வைக் குழு" (House Oversight Committee) சுமார் 70 புகைப்படங்களை வெளியிட்டது. பிறகு மின்னஞ்சல்கள், வீடியோக்கள், ஆவணங்கள் எனப் பல ஆதாரங்கள் சிறுகச் சிறுக வெளியாகின.

2024 தேர்தல் சமயத்தில், டிரம்பிடம் இதுபற்றிக் கேட்டபோது, "நீங்கள் கேட்டால் நான் அதை வெளியிடுவேன்" என்று கூறியிருந்தார். இறுதியாகக் கடந்த ஜனவரி 30-ஆம் தேதி அமெரிக்க நீதித்துறை மேலும் பல ஆதாரங்களை வெளியிட்டுள்ளது.

## 4. இதில் யார் யாரின் பெயர்கள் உள்ளன?

பொதுவெளியில் உள்ள ஆவணங்களில், எப்ஸ்டீனுடன் தொடர்புடைய பல உயர்மட்ட நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தொழிலதிபர்கள் எலான் மஸ்க், ஸ்டீவ் டிச், பிரிட்டன் முன்னாள் இளவரசர் ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் வின்ட்சர், அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன், மைக்கேல் ஜாக்சன் ஆகிய பெயர்களும் அடங்கும். பில் கிளிண்டன் நிர்வாகத்தில் கருவூலச் செயலாளராக இருந்த லாரி சம்மர்ஸ், டிரம்பின் முன்னாள் ஆலொசகர் ஸ்டீவ் பேன்னன் போன்ற பல பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் சிலருடைய பெயர்கள் பல இடங்களிலும், சிலருடைய பெயர்கள் ஒன்று அல்லது இரண்டு இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிப்பாக டிரம்பின் பெயர் 100-க்கும் மேற்பட்ட இடங்களில் இடம்பெற்றுள்ளது. எப்ஸ்டீனின் தனியார் விமானத்தில் டிரம்ப் பலமுறை பயணம் செய்ததற்கான ஆதாரங்களும் அதில் உள்ளன. டிரம்ப் மற்றும் மார்லா மேப்பிள்ஸ் திருமணத்தில் எப்ஸ்டீன் கலந்துகொண்டதாக சிஎன்என் வெளியிட்ட சில புகைப்படங்கள் காட்டுகின்றன.

பில் கிளிண்டன் நீச்சல் குளம் மற்றும் குளியலறை தொட்டியில் இருப்பது போன்ற புகைப்படங்கள், இளவரசர் ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் முகம் மறைக்கப்பட்ட ஐந்து பேரின் மீது படுத்திருப்பது போன்ற புகைப்படங்கள் மற்றும் பல மின்னஞ்சல் உரையாடல்கள் வெளியாகின.

எப்ஸ்டீனால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான வர்ஜீனியா கிஃப்ரேவை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டுகளை ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் வின்ட்சர் தொடர்ந்து மறுத்து வருகிறார். இந்தச் சமயத்தில், வர்ஜீனியாவின் குற்றச்சாட்டை மறைக்க அந்தப் பெண்ணுக்கு வின்ட்சர் பணம் கொடுத்ததாக சிஎன்பிசி செய்தியில் வெளியானது.

இதற்கிடையில், சமீபத்தில் வெளியான எப்ஸ்டீன் ஆவணங்களில் இந்திய பிரதமர் மோதி பெயரும் இடம்பெற்றுள்ளதாக காங்கிரஸ் கட்சி தனது எக்ஸ் தளத்தில் ஒரு புகைப்படத்தை வெளியிட்டு குற்றம்சாட்டியுள்ளது.

அதில், "2017-இல் மோதி தன்னிடம் ஆலோசனை பெற்றுதான் இஸ்ரேலுக்குச் சென்றதாகவும், அங்கு அமெரிக்க அதிபரின் நலனுக்காக ஆடிப் பாடியதாகவும் எப்ஸ்டீன் கூறியுள்ளதாக" எப்ஸ்டீன் கோப்புகளைச் சுட்டிக்காட்டி காங்கிரஸ் விமர்சித்திருந்தது.

ஆனால், இந்திய வெளியுறவு அமைச்சகம் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது. ஜூலை 2017-இல் பிரதமரின் அதிகாரப்பூர்வ இஸ்ரேல் பயணத்தைத் தவிர, மின்னஞ்சலில் மீதமுள்ள தகவல்கள் ஒரு தண்டனை பெற்ற குற்றவாளியின் வெற்றுப் பிதற்றல்களே தவிர வேறொன்றுமில்லை என்று கூறியுள்ளது.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், எப்ஸ்டீன் ஆவணங்களில் பெயரோ அல்லது புகைப்படமோ இடம்பெற்றிருப்பதாலேயே சம்பந்தப்பட்ட நபர் குற்றம் செய்தார் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

## 5. பிரபலங்கள் சொல்வது என்ன?

எப்ஸ்டீன் ஆவணங்களில் தங்களுடைய பெயர்கள் இடம்பெற்றிருப்பது குறித்துப் பிரபலங்கள் என்ன கூறுகிறார்கள்?

டிரம்ப் ஒரு காலத்தில் எப்ஸ்டீனுடன் தொடர்பில் இருந்தாலும், எப்ஸ்டீன் கைதாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே அந்த நட்பு முறிந்துவிட்டதாக டிரம்ப் கூறியுள்ளார். தனது பெண் ஊழியர்களிடம் எப்ஸ்டீன் தவறாக நடந்துகொண்டதால், அவரைத் தனது "மார்-எ-லாகோ" கிளப்பில் இருந்து டிரம்ப் வெளியேற்றிவிட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்தது.

தனது பெயர் இடம்பெற்றிருப்பது குறித்து எலான் மஸ்க் விளக்கமளித்திருந்தார். எப்ஸ்டீன் தன்னைத் தனது தீவிற்கு அழைத்ததாகவும், ஆனால் தான் அதனை நிராகரித்துவிட்டதாகவும் மஸ்க் கூறியிருந்தார்.

பில் கிளிண்டனும், பிரிட்டிஷ் அரச குடும்பமும் எப்ஸ்டீனின் குற்றங்கள் குறித்துத் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று மறுத்துள்ளனர். மைக்கேல் ஜாக்சன் 2009-இலேயே உயிரிழந்துவிட்டார். ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் வின்ட்சர் தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்று மறுத்துவிட்டார்.

"எப்ஸ்டீனுடன் தொடர்பைத் தொடர்ந்தது எனது தவறான முடிவு. அதற்கான முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்," என்று லாரி சம்மர்ஸ் அறிக்கை வெளியிட்டார்.

"எப்ஸ்டீனுடன் செலவிட்ட ஒவ்வொரு நிமிடத்திற்காகவும் நான் மிகவும் வருந்துகிறேன். நான் அப்படிச் செய்ததற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்," என்று பில் கேட்ஸ் கூறியுள்ளார்.

இது குறித்து சமீபத்தில் பில் கேட்ஸின் முன்னாள் மனைவி மெலிண்டா ஒரு பாட்காஸ்டில் பேசும்போது, "ஒவ்வொரு முறையும் இந்த விவரங்கள் வரும்போதெல்லாம் அது தனிப்பட்ட முறையில் கஷ்டமாக இருக்கிறது. ஏனெனில் அது எனது திருமண வாழ்க்கையில் மிகவும் வேதனையான சில காலங்களை நினைவுபடுத்துகிறது," என்று தெரிவித்துள்ளார்.

## 6. விடைதெரியா கேள்விகள்

எப்ஸ்டீன் ஆவணங்களில் இன்னும் புகைப்படங்கள் முழுமையாக வெளியாகவில்லை. அதுமட்டுமன்றி, இதற்கு முன் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் மற்றும் ஆவணங்கள் தனியுரிமை போன்ற காரணங்களால் அதிகாரப்பூர்வ பக்கத்தில் இருந்து மறைக்கப்பட்டுப் பின்னர் நீக்கப்பட்டன.

அரசியல் வட்டாரங்கள் மட்டுமன்றி சமூக ஊடகங்களிலும் இந்த விவகாரம் தற்போது பேசுபொருளாகியுள்ளது. பொதுமக்கள் மத்தியிலும் எப்ஸ்டீனைச் சுற்றிப் பல கேள்விகள் தொடர்ந்து எழுந்த வண்ணம் உள்ளன:

**குறிப்பாக, எப்ஸ்டீனுக்கு ஏன் இவ்வளவு மென்மையான தண்டனை வழங்கப்பட்டது?**
**எப்ஸ்டீனும், முன்னாள் காதலியான மேக்ஸ்வெல்லும் மட்டுமே தனியாகச் செயல்பட்டது உண்மைதானா?**
**சிறையில் இருந்தபோது எப்ஸ்டீன் எப்படி உயிரிழந்தார்?**

இதுபோன்ற பல கேள்விகளுக்கு இன்னும் விடை தெரியாமலேயே உள்ளன.

நன்றி: BBC தமிழ்

# வளைகுடா எண்ணெய் அரசியல்:

# ஈரான் ஆட்சி கவிழ்ப்பில் அமெரிக்கா!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

05.02.2026

மத்திய கிழக்கின் கருப்புத் தங்கம் என வர்ணிக்கப்படும் எண்ணெய் வளம், வளைகுடா நாடுகளுக்கு வரமாக அமைவதற்குப் பதிலாக தீராத காயங்களையும், வலிகளையும் பரிசாகத் கொடுத்திருக்கிறது.

மேற்குலகால் மறைக்கப்பட்ட, மழுங்கடிக்கப்பட்ட கசப்பான சதி அரங்கேற்ற நிகழ்வு வரலாற்றுப் பக்கங்களில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளன.

1953ம் ஆண்டு ஈரானில் அமெரிக்க சீஐஏ, பிரித்தானிய எம்ஐ6 உளவு நிறுவனங்களால் அரங்கேற்றப்பட்ட "ஒபரேஷன் அஜாக்ஸ்" (Operation Ajax) என்ற ஆட்சிக் கவிழ்ப்பு திட்டத்தில், ஈரானிய மண்ணில் ஒரு இரகசிய சதித்திட்டத்தை அரங்கேற்றின.

ஈரான் ஒரு மகத்தான மாற்றத்தை நோக்கி 1950களின் தொடக்கத்தில் நகர்ந்தது. மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் முஹம்மது மொசத்திக் (Mohammad Mossadegh), ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்து, ஈரானின் எரிசக்தி வளங்கள் அனைத்தும் அந்நாட்டு மக்களுக்கே சொந்தமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தினார். அதற்கு வெளிநாட்டு சக்திகள் உரிமைக் கொண்டாட முடியாது என்பதில் அவர் உறுதியாக நின்றார்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் ஈரானின் எண்ணெய் கிணறுகள் அனைத்தும் பிரிட்டிஷ் நிறுவனமான "எங்லோ-பெர்ஷியன் ஒயில் கம்பெனி" - APOC (இன்றைய British Petroleum BP நிறுவனம்) வசம் இருந்தன. பிரதமர் மொசத்திக் எடுத்த ஒரு துணிச்சலான முடிவு சுரண்டல் சாம்ராஜ்யங்களை உலுக்கியது. அவர் ஈரானின் அனைத்து வளங்களையும் தேசிய மயமாக்கினார்.

மேற்குலக நிறுவனங்கள் தங்களது சுரண்டல் இலாபம் பறிபோவதைக் கண்டு சீற்றமடைந்து பிரிட்டன், அமெரிக்காவின் உதவியை நாடியது. இதன் விளைவாக, அமெரிக்காவின் CIA மற்றும் பிரிட்டனின் MI6 ஆகிய உளவு அமைப்புகள் இணைந்து ஈரானிய மண்ணில் ஒரு இரகசிய சதித்திட்டத்தை அரங்கேற்றின.

மேற்குலக சக்திகளின் போர்முறையின் முக்கிய அங்கமான பொய்ச் செய்திகள் பரப்பப்பட்டன. மொசத்திக்கிற்கு எதிராகச் செயற்கையான கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன. இதன் உச்சக்கட்டமாக, 1953 ஆகஸ்ட் மாதம் பிரதமர் மொசத்திக் அதிகாரத்திலிருந்து வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டார். ஒரு தேசத்தின் மக்களாட்சி ஜனநாயகம் நசுக்கப்பட்டு, மேற்கத்திய நாடுகளின் தாளத்திற்கு ஆடும் "ஷா பஹ்லவி" (King Shah) என்ற அமெரிக்க அடியாளான மன்னர் ஆட்சியில் அமர்த்தப்பட்டார். ஈரானில் ஏகாதிபத்திய கொடுங்கோலர்களுக்கு தலையாட்டும் பொம்மை முடியாட்சி மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது.



இந்தச் சதிக்குப் பிறகு, ஈரானின் எண்ணெய் கிணறுகள் மீண்டும் அந்நிய நாடுகளின் வசமானது. ஈரான் நாட்டின் இறையாண்மை திருட்டு எண்ணெய் வியாபாரிகளின் கைகளில் மீண்டும் அடகு வைக்கப்பட்டது.

அப்போதய ஆட்சி கவிழ்ப்புக்குப் பிறகு, மொசத்திக் கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். சொந்த நாட்டு மக்களின் நலனுக்காகப் போராடிய அவர் மீது தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டது.

ஆரம்பத்தில் அவருக்கு மரண தண்டனை விதிக்க ஆலொசிக்கப்பட்டது. ஆனால், சர்வதேச அளவில் அவருக்கு இருந்த செல்வாக்கையும் அவரது முதுமையையும் கருத்தில் கொண்டு, 1953 டிசம்பர் 21 அன்று அவருக்கு மூன்று ஆண்டுகள் தனிமைச் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் மூன்று ஆண்டுகாலச் சிறைவாசத்திற்குப் பிறகு 1956 இல் அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால், அந்த விடுதலை முழுமையானதாக இருக்கவில்லை. அவர் தனது சொந்த ஊரான அஹ்மதாபாத்தில் உள்ள இல்லத்திலேயே வாழ்நாள் முழுவதும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.



**மத்திய கிழக்கின் கருப்புத் தங்கம் என வர்ணிக்கப்படும் எண்ணெய் வளம், வளைகுடா நாடுகளுக்கு வரமாக அமைவதற்குப் பதிலாக தீராத காயங்களையும், வலிகளையும் பரிசாகத் கொடுத்திருக்கிறது**

1967ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் திகதி, தனது 84ஆவது வயதில் மொசத்திக் காலமானார். அவரது மறைவுக்குப் பிறகு மக்கள் கிளர்ச்சி வெடிக்கும் என்று அஞ்சிய ஷா மன்னர், அவரை ஒரு பொது மயானத்தில் அடக்கம் செய்யக்கூட அனுமதி மறுத்தார். இறுதியில், மொசத்திக்கின் உடல் அவரது இல்லத்தின் ஒரு அறையிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் இந்த அநீதியே பிற்காலத்தில் 1979இல் வெடித்த ஈரானியப் புரட்சிக்கு வித்திட்டது என்று சொல்லலாம்.

அந்தப் புரட்சி, மத்திய கிழக்கில் அமெரிக்க அரசியல் நலன் காக்கும் அரபு நாடுகளின் தலைவர்களிடையே நடுக்கத்தையும், கலக்கத்தையும் ஏற்படுத்தியது.

## எண்ணெய் அரசியல் :

மத்திய கிழக்கில் "எண்ணெய் அரசியலுக்காக" அரங்கேற்றப்பட்ட ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளும், பற்ற வைக்கப்பட்ட நெருப்பும் இன்றும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கிறது. மனித உயிர்கள் கருகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் கடந்த 47 ஆண்டுகளாக ஈரான் அரசு அமெரிக்கா - மேற்குலக நாடுகளுடன் மல்லுக்கட்டி முரண்பட்டு வருகிறது. இதனால் ஈரானை வீழ்த்த அமெரிக்க - மேற்குலக நாடுகள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர்.

ஈரான் இஸ்லாமியக் குடியரசு வீழ்ந்துவிடும் என்ற கனவை மேற்கத்திய ஊடகங்களும் ஏகாதிபத்திய சக்திகளும் கடந்த நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து கூறி வருகின்றன. தற்போது வெளியாகும் செய்திகள் அனைத்தும், ஈரானின் வலிமையையும் நிலைத்தன்மையையும் குறைத்து மதிப்பிடும் இன்னொரு தோல்வியடைந்த பிரச்சார முயற்சியாகவே பார்க்கப்படுகின்றன.

அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் ஈரானின் மீது விதித்துள்ள சட்டவிரோத பொருளாதாரத் தடைகள் குறித்து, ஈரான் அரசு அதைத் தெளி வாகவே 'பொருளாதார பயங்கர வாதம்' என்று வர்ணிக்கின்றது. ஈரான் மக்கள் சந்திக்கும் வாழ்வாதார சிரமங்களுக்கு அரசாங்கம் காரணமல்ல; மாறாக, மேற்கத்திய நாடுகள் மேற்கொள்ளும் மனிதாபிமானமற்ற அரசியல் அழுத் தங்களே இதற்கான பிரதான காரணம் என்பதையே அவர்கள் வலியுறுத்துகின்றனர்.



ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முனையும் வெளிநாட்டு உளவு அமைப்புகள், அப்பாவி மக்களைத் தூண்டி விட்டு நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயல்வதாகவும், ஆனால் அந்த முயற்சிகளை ஈரானின் பாதுகாப்புப் படைகளும் புரட் சிகரக் காவல்படையும் (IRGC) இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி வருவதாகவும் ஈரான் ஆளும் அரசு கூறுகிறது.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகளாகவே அவர்கள் கருதுகின்றனர். இதேவேளை 86 வயதான உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் வழிகாட்டுதலின் கீழ், ஈரான் தனது இறையாண்மையைக் காப்பதில் எந்தவித சமரசத்திற்கும் இடமளிக்காத உறுதியுடன் செயல்பட்டு வருகிறதாக கூறுகிறது. கடந்த காலங்களில் ஏற்பட்ட பல்வேறு கிளர்ச்சிகள், அழுத்தங்கள் மற்றும் வெளிநாட்டு தலையீடுகளை வெற்றிகரமாக கடந்து வந்ததுபோல, தற்போதைய அந்நிய சக்திகளின் ஊடுருவல்களையும் ஈரான் மீண்டும் தாண்டிச் செல்லும் என்பதில் ஈரானிய அரசு உறுதியாக நம்புகின்றது.

மேற்கத்திய ஊடகங்கள் ஈரானின் 'வெல்ல முடியாத பிம்பம்' உடைந்துவிட்டதாக கூறுவது வெறும் அரசியல் மாயை மட்டுமே என்றும், உண்மையில் ஈரானின் ஏவுகணை வலிமையும், அதன் 'எதிர்ப்பு அச்சு' (Axis of Resistance) முன்பைவிட மேலும் வலுவடைந்துள்ளதாகவும் ஈரானிய ஆளும் அரசு வாதிடுகின்றது.

1979 இஸ்லாமியப் புரட்சியின் விழுமியங்களைப் பாதுகாப்பதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கும் மில்லியன் கணக்கான மக்கள் ஈரானில் இருக்கும் வரை, தெஹ்ரானில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்ற மேற்கத்திய நாடுகளின் கனவு ஒருபோதும் நிறைவேறாது என்பதே அவர்களின் உறுதியான நிலைப்பாடாகும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தற்காலிகமானவை என்றும், சுயசார்பு பொருளாதாரக் கொள்கைகளின் மூலம் ஈரான் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கும் என்றும், எதிரிகளின் அனைத்து அழுத்தங்களையும் தாண்டி நாடு தனது பாதையில் முன்னேறும் என்றும் அந்த அரச ஆதரவுத் தரப்பு உறுதியாக நம்புகிறது.

# கொக்கட்டிச்சோலை படுகொலை

# 39 ஆண்டு கடந்தும் இதுவரை நீதியில்லை!

பா. அரியநேத்திரன்

03.02.2026




நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதி பதியாக இருந்த ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இடம் பெற்ற கிழக்கு மாகாணத்தில் மிகப்பாரிய இனப்படுகொலை கொக்கட்டிச் சோலை படுகொலையாகும். இது தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு உட்பட சர்வதேச சமூகம் இலங்கை அரசு மீது அவ்வேளை வன்மையான கண்டனத்தை வெளியிட் டிருந்த படுகொலையின் 39 வது ஆண்டு நினைவு கடந்த 2026 ஜனவரி 28 நாள் வழமை போன்று அந்த நினைவுத் தூபி அமைந்துள்ள மகிழடித்தீவு சந்தியில் நினைவு கூரப் பட்டது.

1987 ஜனவரி 28ம் நாள் அன்று அதிகாலை வடக்குப்பக்கம் வவுணதீவு பாலம் ஊடாகவும், தெற்குப்பக்கம் பட்டிருப்பு பாலம் ஊடாகவும், மேற்குப்பக்கம் பாலையடிவட்டை வெல்லாவெளி ஊடாகவும் மூன்று முனைகளில் இராணுவப்படையணிகள் கவசவாகனம் பீரங்கி பூட்டிய வாகனங்களுடன் படுவான்கரை பெருநிலத்தை நோக்கி நகர்ந்து வேட்டுக்களை தீர்த்த வண் ணம் பிரதான சந்திகளில் இராணுவத்தை இறக்கி அந்த வீதி களில் சென்றவர்கள் மீது வயல்களில் வேலை செய்தவர்கள் மீதும் துப்பாக்கி சூடுகளை நடத்தியவண்ணம் பேரிரச்சலுடன் வட்டம் இட்டன.

இதனால் அச்சத்தால் முனைக்காடு, முதலைக்குடா, மகிழடித் தீவு, பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை பகுதிகளை சேர்ந்த அப்பாவி இளைஞர்கள் பெரியவர்கள் எல்லோரும் தமக்கு பாதுகாப்பு அரணாக முதலைக்குடா வாவியை அண்டிய அமரிக்கன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கிய “இறால்வளர்ப்பு பண்ணை” யில் தஞ்சம் அடைந்தனர்.



அந்த பண்ணையில் தொழில் புரியும் அலுவலர்கள், ஊழியர் களும் அங்கு சமூகமாய் இருந்தனர். வயல்களில் அறுவடை செய்தவர்கள் வீதியால் சென்றவர்கள் என பலபேரை கண்ட கண்ட இடத்தில் சுட்டுக் கொலை செய்த வண்ணம் கோர முகத்துடன் மணற்பிட்டி சந்தியை கடந்து கொக்கட்டிச்சோலை ஊரை அண்டியதும் அங்கு பிரபல தனியார் வைத்திய சாலையை நடத்திவரும் வைத்திய கலாநிதி கந்தையா என்ற பெரியவர் படையினருடன் ஆங்கிலத்தில் உரையாடியபோது அவரையும் அவரின் இளைய மகனையும் அதே இடத்தில் சுட்டுக்கொலை செய்து விட்டு ஈற்றில் இறால் பண்ணைக்கு நுழைந்தவர்கள் அங்கு நின்ற அனைவரையும் சுட்டுக் கொன்றனர்.

அன்று மாலைநேரம் இறால் பண்ணையில் இறந்தவர்களின் உடலங்களை ஒவ்வொன்றாக உழவு இயந்திரத்தில் ஏற்றி மகி ழடித்தீவு சந்தியில் வேலிக்கட்டைகளை அடுக்குவது போன்று பரப்பில் வைத்து அவர்களில் சிலர் கைகளில் அணிந்திருந்த மோதிரம் மற்றும் சட்டைபைகளில் இருந்த பணம் பொருட்-களை எடுத்துவிட்டு மீண்டும் உழவு இயந்திரங்களில் உடலங்-களை ஏற்றி அம்பிளாந்துறை தாமரைப்பூ சந்தி முருகன் கோயி லுக்கு முன் குவித்து பக்கத்தில் இருந்த ஒலை வீட்டு கூரையை பிரித்து சடலங்களுக்கு மேல் போட்டு பெற்றோல் தெளித்து எரிக்கப்படனர்.

இந்த படுகொலையில் இறால் வளர்ப்பு பண்ணையில் மட்டும் 87 தமிழரும், இறால் வளர்ப்பு தவிர்ந்த படுவான்கரை பெரு நிலம் ஊர் வயல் வாடி கிராமங்கள் என அனைத்து இடங் களிலும் பலர் கொலை செய்யப்பட்டனர்.

இந்த படுகொலை தொடர்பாக சுதந்திரமான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என மட்டக்களப்பு பிரஜைகள் குழு கோரிய போதிலும் அதனை அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான அரசு நிராகரித் திருந்திருந்தது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பயங்கர வாதிகள் என சிறீலங்கா அரசாங்கம் அறிவித்தது.

இந்த படுகொலை சம்பவம் தொடர்பாக சர்வ தேச மனித உரி மைகள் அமைப்பு உட்பட சர்வதேச சமூகம் இலங்கை அரசு மீது அவ்வேளை வன்மையான கண்டனத்தை வெளியிட்டிருந் தன. இதன் பின்னர் செரன்டிப் நிறுவனம் தமது இறால் பண்ணை தொழிலாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக அமெரிக்க வொஷிங்டன் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய் திருந்தது.

இச்சம்பவங்களின் நேரடி சாட்சிகளை அமெரிக்காவிற்கு அழைத்து சென்று சாட்சி சொல்ல வைத்தனர். ஆனால் இலங்கை அரசாங்கம் இவ்வழக்கிற்கு சமூகமளிக்கவில்லை. இதில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி பொது மக்கள் என்றும் அவர்களின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

அமெரிக்க செரன்டிப் நிறுவனம், இறந்த தமது ஊழியர்களின் குடும்பங்களுக்கு மட்டும் தலா 60 ஆயிரம் ரூபா நட்ட ஈடு வழங் கியது. ஆனால் ஏனைய பொதுமக்கள் எவருக்கும் இலங்கை அரசாங்கம் இறந்தவர்களுக்கோ காயமடைந்தவர்களுக்கோ நஷ்டஈட்டை வழங்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர் தன கிழக்கு மாகாணத்தில் நடத்திய மிகப்பெரிய இன அழிப்பாக அப்போது இது பேசப்பட்டது.

சர்வதேசம் கண்டணம் மட்டுமே தெரிவித்தது. எந்த நீதி விசாரணையும் இலங்கையில் இல்லாமல் காலம் கடந்து இன்று 39 வருடங்கள் கடந்த நிலையிலும் அதற்கான சர்வதேச நீதியோ, உள்நாட்டு நீதியோ இதுவரை இல்லை.

இந்த படுகொலைச் சம்பவம் இடம் பெற்று சரியாக 14 வருடங்களின் பின்னர் 1991 ஜூன் மாதம் 12 ஆம் திகதி இடம் பெற்ற மற்றுமோர் படு கொலைச் சம்பவத்தில் மகி ழடித்தீவு ஊரில் அரங்கேறி யது. இராணுவத்தினரால் பெண்கள், குழந்தைகள் உட்பட 152 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என் பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



இந்த படுகொலை சம்பவத் துக்கு அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஜோசப் பரராசசிங்கம் சர்வதேச சமூகம் முன் மகிழடித்தீவு படுகொலையை கொண்டு சென்றதால் ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை நடந்தது. இலங்கை அரசை சர்வதேசம் கண்டித்தது. ஆனால் எந்த நீதியும் அதற்கு கிடைக்கவில்லை.

1987 ஜனவரி 28 ஆம் திகதி இடம்பெற்ற கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள், 1992 ஜூன் 12 ஆம் திகதி இடம்பெற்ற மகிழடித் தீவுப் படுகொலைகள் நினவாகவே 2000 ஆம் ஆண்டு மகிழடித்தீவுச் சந்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நினைவுத்தூபி அமைக்கப்பட்டது.

இந்த தூபியில் உயிர் நீத்த எல்லோரினதும் பெயர்கள் அதில் இடம் பெறாவிட்டாலும் அந்த காலப்பகுதியில் கிடைத்த பெயர்கள் மட்டும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1987 முதலாவது நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன தொடங்கிவைத்த தமிழின அழிப்பு அவருக்கு பின்னர் ஜனாதி பதிகளாக இருந்த ஆர். பிரமதாச, விஜயதுங்க, சந்திரிகா, மகிந்த, மைத்திரி, கோட்டா, ரணில் வரை நீண்டு சென்று தற் போதைய ஜனாதிபதி அநுராவரை கட்டமைக்கப்பட்ட இன வழிப்பாக தொடர்வதைக் காணலாம்.

யார் ஆட்சியில் அமர்ந்தாலும் இலங்கையிலும் நீதியில்லை, சர்வதேசத்திலும் நீதி கிடைக்காத இனமாகவே தமிழ் இனம் உள்ளது.

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சியின் 5ஆம் ஆண்டின் நிறைவும் மக்கள் பேரெழுச்சியும்

10.02.2026




2009ஆம் ஆண்டு வரை வீறுநடை போட்ட தமிழ் மக்களின் விடுதலை போராட்டம், அநீதியாலும் துரோகத்தினாலும் வீழ்த்தப்பட்ட பின், ஈழத்தமிழினம் உரிமையை கைவிட்டு அபிவிருத்தியையே கேட்டு நிற்கின்றது என்ற பொய் பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்ட நேரத்தில் தான், வீழ்ந்து கிடந்த ஈழத் தமிழினம் வீறுகொண்டெழுந்து உரிமை குரல் எழுப்பி நின்ற ஓர் உன்னத நிகழ்வே பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி. எமது தேசிய கவிஞன் புதுவை இரத்தினதுரையின் எண்ணத்தில் உதித்த “பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை” கவிவரிகளை தாங்கிய மக்கள் எழுச்சி தென் தமிழீழத்தின் அந்தமான பொத்துவில் தொடக்கம் வட தமிழீழத்தின் இறுதி எல்லையான பொலிகண்டி வரை வீறு நடை போட்டது. வடக்கு கிழக்கு எங்கும் இராணுவத்தையும் புலனாய்வாளர்களையும் குவித்து, திறந்த சிறைச்சாலையாக தமிழ் மக்களை ஒடுக்கி விட்டோம் என இறுமாந்திருந்த சிங்கள அரசின் முகத்தில் அறைந்த நிகழ்வே இதுவாகும். சலுகைக்காக உரிமையை விற்கும் மக்கள் நாம் அல்ல என்பதை சர்வ தேசத்திற்கு உரத்து கூறியதும் இந்த எழுச்சியே.

இந்த மக்கள் பேரெழுச்சியின் தொடர்ச்சியாக பிறப்பெடுத்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்து உள்ளன. இந்த ஐந்து ஆண்டுகளில் சிங்கள தேசத்தில் அரசுகள் மாறி உள்ளன. சிங்கள தேசத்தின் இரண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் மாறி மூன்றாவது ஜனாதிபதி இன்று அதிகாரத்தில் உள்ளார். ஆனால் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பின் நிகழ்ச்சி நிரல் எவ்வித இடைவெளியும் இல்லாது அதே வேகத்துடனே தொடர்கின்றது. இன்று மீண்டும் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு எனும் பெயரில் ஈழத் தமிழினத்தை மீண்டும் ஏமாற்றும் வேலைத்திட்டங்கள் எம் முன்னே அரங்கேறுகின்றன. ஈழத்தமிழினம் மீண்டும் ஒரு முறை ஏமாறுவதற்கு தயாராக இல்லை. அதன் அடிப்படையில், எம்முன்னே விரிக்கப்படும் சதி வலையை எதிர்கொள்ள கீழ் வரும் விடயங்களை முன்வைக்கின்றோம்.

இனப்பிரச்சனை தொடர்பில் சிறீலங்கா அரசும் சிங்கள தேசமும் இதயசுத்தியுடன் முன்னெடுப்புகளை மேற்கொள்வதாயின், அதன் முன்னோடியாக,

1. வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் நிலை கொண்டுள்ள சிறீலங்கா இராணுவம் அகற்றப்பட்டு, தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை திரும்ப வேண்டும்.

2. தமிழினத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்பை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளான சர்வதேச குற்றங்களை சர்வதேச பொறிமுறை மூலம் விசாரணைக்கு அனுமதிக்க வேண்டும்.

3. தமிழர் தாயகத்தில் அரச அனுசரணையுடன் நடைபெறும் பௌத்தமயமாக்கலும், நில அபகரிப்பும் உடனடியாக நிறுத்தப்பட்டு, சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைகள் அகற்றப்பட்டு, அடாத்தாக கையகப்படுத்தப்பட்ட தமிழர் நிலங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

4. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுவதுடன், அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. ஆறாம் திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு தமிழ் மக்களின் அரசியல் வெளி உருவாக்கப்பட வேண்டும்.

அத்துடன் இனப்பிரச்சனை தொடர்பில் மத்தியஸ்தம் வகிக்க விரும்பும் எந்த நாடும், இவ்விடயத்தில் தமது நடுநிலைமையை வெளிப்படுத்தும் விதத்தில்,

1. ஈழத்தமிழினத்தை ஓர் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. ஈழத்தமிழினத்தின் மீது சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பினை அங்கீகரிக்க வேண்டும்.

அத்துடன் இனப்பிரச்சனைக்கான எந்தவொரு நிரந்தர தீர்வும் ஈழத்தமிழ் மக்களிடம் சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பினுடாக தீர்மானிக்கப்பட வேண்டும். இதுவே இத்தீவில் நிரந்தர அமைதிக்கு வழியை ஏற்படுத்தும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சியின் உறுதி மொழியான தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான,

மரபுவழித் தாயகம் – சுயநிர்ணய உரிமை – தமிழ்த்தேசியம்

என்பன அங்கீகரிக்கப்படவேண்டும்.

அத்துடன் தமிழ் இனத்தின் மீது மேற்கோள்ளப்பட்ட, தொடர்ச்சியாக மேற்கோள்ளப்படுகின்ற இனவழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும்.

என்பதனை மீண்டும் நினைவுறுத்துவதுடன், தமிழர் தேசம் மலரும் வரை எமது போராட்டம் தொடரும் என உறுதி எடுத்துக் கொள்கின்றோம்.

நன்றி.
அருட்பணி. து. ஜோசப்மேரி – தலைவர்
தவத்திரு வேலன் சுவாமிகள் – தலைமை ஒருங்கிணைப்பாளர்










**தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள், தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# வெளிவந்துவிட்டது

## வணிகம்
## VANIKAM
## 2026




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

*தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள வணிகத்தில்*
*உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்*

**www.vanikam.ca**


**437-345-4203**



# காலனித்துவம் கட்டிய கோட்டைகள்

யாழ்ப்பாணத்தின் வரலாறு, பாதுகாப்பு, பொருளாதாரம், நாட்டாரியல் இப்படிப் பல விடயங்களுடனும் பின்னிப் பிணைந்த சிறப் புடையது, ஹம்மன் ஹில் என்றும் பூதத்தம்பி கோட்டை என்றும் வழங்கப்படும் கடற் கோட்டை.

பாக்கு நீரிணையூடாகச் சென்ற பன்நாட்டுக் கடற்பாதையில் இருந்து யாழ்ப்பாணப்பரவைக் கடலுள் நுழையும் வழியை அரண்செய்தது இக்கோட்டை இங்கிருந்து தென்மேற்காக நெடுந்தீவு சென்று அங்கிருந்து இராமேஸ்வரத்திற்கோ அல்லது மன்னார், கொழும்பிற்கோ செல்லலாம். வடக்கில் கோடிக் கரைக்கோ நாகப்பட்டினத்திற்கோ போய் அங்கிருந்து கிழக்காக, பத்தாவது அகலக்கோட்டைப் பின்பற்றித் தென் கிழக்காசியா விற்கும் சீனாவிற்கும் போகலாம். நேர் வடக்கில் இந்தியாவின் கிழக்குக் கரையோரமாக எந்தத்துறை முகத்திற்கும் போக முடியும். மேற்குத் திசையில் தொண்டி, அதிராம் பட்டினத்திற்கும் தென் கிழக்கில் யாழ்ப்பாணத்திற்கும் பூநகரிக்கும் போகலாம்.



**வரிசையாக ஆட்களை நிறுத்தி, கற்களைக் கைமாற்றித் தூக்கிச் சென்று, கடற்கோட்டையைப் முதலியார் ஒல்லாந் தருக்காகக் கட்டிக் கொடுத்தார் என்பதும் அந்தப் பொறாமை அவரது பூதத்தம்பி செல்வாக்கால் வந்த வாழ்வுக்கு உலை வைத்தது**

காரைநகருக்கும், ஊர்காவற்துறைக்கும் இடையில் பரவைக் கடலின் தலைவாயிலில் அமைந்த திட்டொன்றில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட இந்தக் கோட்டையில் இருந்து, யாழ்ப்பாணக் கோட்டையைப் பார்க்கவும் முடியும். பாதுகாக்கவும் முடியும். இந்த இடத்தின் கடற் பாதை முக்கியத்துவம், பாதுகாப்பு முக்கியத்துவம் காரணமாக, கடற்கோட்டைக்கு நேர் எதிராக ஊர்காவற்றுறைப் பக்கம் எய்றி (Fort Eyrie) என்றழைக்கப்பட்ட ஒரு கோட்டையை போர்த்துக்கேயர் ஏற்கனவே கட்டியிருந்தார்கள். அது இப்பொழுது பாழடைந்த நிலையில் உள்ளது.

ஊர்காவற்றுறைக்கு Kayts என்று வழங்கப்படும் பெயர் Kayts என்ற போர்த்துக்கேயச் சொல்லில் இருந்து வந்ததாகக் கருதப் படுகின்றது. இச்சொல், துறைமுகம் அல்லது துறைமுகமேடை எனப்பொருள்படும் "கீ" என்று உச்சரிக்கப்படும் Qyay என்ற ஆங்கிலச் சொல் இதற்குச் சமதையானது.

ஊர்காவற்றுறையென்று இன்று எழுத்துத் தமிழ் வடிவம் பெற்றிருக்கும் இந்த இடப் பெயர், "ஊறாத்துறை" என்றே பேச்சு வழக்கில் உள்ளது. 12ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கல் வெட்டுக்களில் ஊராத்துறை என்று அழைக்கப்பட்டிருக்கிறது. ஸூகர தித்த என்று சூளவம் சத்திலும் ஹூராதொட அல்லது ஊராதொட என்று பூஜாவலிய, ராஜாவலிய, நிகாயஸங் கிரஹய போன்ற இலயங்களிலும் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. (இந்திரபாலா: 1969)

### நயினாதீவில் உள்ள கல்வெட்டு ஒன்றில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது

1.).........நாங்கள்......
2) வந்து ஊராத்துறை
3) (யில்) பிரதேசிகள் வந்து
4) இருக்க வேணுமென்றும்
5) அவர்கள் ரஷைப்பட
6) வேணுமென்றும் பல துறை
7) களில் பிரதேசிகள் வந்து நந்து
8) றையிெ (ல) கூடவேணு மென்று
9) (ம்) நாம் ஆனை குதிரை மேல் ஸ்நெஹ
10) (மு) ண்டாதலால் நமக்கு
ஆனை குதிரை
11) கொடுவந்த மரக்கலங் கெட்டது
12) ண்டாகில் நாலத் தொன்று பண்டா
13) (ர) த்துக்குக் கொண்டு மூன்று கூறும்
14) (உ) டையவனுக்கு விடக்கடவதாகவு
15) (ம்) வாணிய மரக்கலங் கெட்டதுண்
16) டாகில் செம்பாகம் பண்டாரத்துக்
17) (கு) க் கொண்டு செம்பாகம் உடைய
18) (வ) னுக்கு விடக்கடவதாகவும்
19) இவவஸ்தை (ரு) ள்ளதனையுங்க
20) வில்லிலுஞ் செம்பிலும் எழுத்துவெ



'Hammenhiel as seen from Kayts'
Watercolour, C. Steiger, c.1710, Rijksmuseum, Amsterdam

21) ட்டி வித்து இவ்வஸ்தை செய்துங்கு

சமஸ்கிருதப் பாகத்தின் மொழி பெயர்ப்பு

பெயர்ப்புவரி 22 - 23: சகல சிங்களத்துக்கும் சக்கரவர்த்தி யாகிய பகை அரசர்களுக்கு காட்டுத் தீயாயாகிய வேபராக்கிரம புஜோ (பாஹூ)....

இந்திரபாலா
(யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுகள், 1969)

"ஸூகரஹா" என்பது பன்றி எனப்பொருள் தரும் சமஸ்கிருதச் சொல். சூகரம் என்று தமிழ் நிகண்டுகளிலும் இச்சொல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. பிராகிருத வழக்காறுகளில் இது ஹூரா என்றும் ஊரா என்றும் உருமாறும். சிங்களத்தில் இது வழக்கிலுள்ள சொல். ஸூகரதித்த (ஸூகர தீர்த்தம்) என்று சூளவம்சம் குறிப்பிடுவது பன்றித்துறை என்பதற்குச் சமதையானது. பன்றியின் காற்குளம் என்ற பொருளில் கடற் கோட்டைக்கு ஒல்லாந்தர் ஹம்மன் ஹில் (Hammenheil) எனப் பெயரிட்டது. கோட்டையின் வடிவமைப்பினால் மாத்திரம் அல்ல என்றே தோன்றுகின்றது.

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு மேலாக, கடற்கோட்டைப் பகுதியைக் கடந்து சென்ற பன்னாட்டுக் கடல்வணிகத்தின் தொல்லியற் தடங்களை நெடுந்தீவில் பெரியதுறை அருகிலுள்ள வெடியரசன் கோட்டையிலும் காரைநகரில் கடற்கோட்டைக்கு அணித்தாகவுள்ள வேரப்பிட்டியிலும் பொன்னாலையில் சம்புத் துறைக்குப் பக்கத்திலுள்ள திசைமழுவையிலும் காணலாம். பழைய துறைகளை ஒட்டியுள்ள இந்த மூன்று இடங்களிலும் காணப்படும் பௌத்த சின்னங்கள், கடல்வணிகத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையில் அக்காலத்தில் இருந்த நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றன.

இருப்பினும், இப்பகுதியின் கடல்வழித் தொடர்புகள் பௌத்த தடயங்களின் காலத்திற்கும் முந்தியவை என்பதை, காரைநகரின் உட்புறத்தில் களபூமியில் கிடைத்த பெருங் கற்காலத் தடயங்களும் ஊர்காவற்றுறை அமைந்துள்ள வேலணைத்தீவின் தென்கிழக்கில் சாட்டியிலும் கும்புறுப்பிட்டியிலும் கிடைத்த மட்கலத்தடயங்களும் தெளிவுபடுத்துகின்றன.

### இரண்டாம் இராசாதிராசசோழனது திருவாலங்காட்டுக் கல்வெட்டு

இவன் தன் படைநிலையான ஊராத்துறை, புலைச்சேரி,

www.sangathamil.ca






**ஊர்காவற்றுறைக்கு Kayts என்று வழங்கப்படும் பெயர் Kayts என்ற போர்த்துக்கேயச் சொல்லில் இருந்து வந்ததாகக் கருதப்படு கின்றது. இச்சொல், துறைமுகம் அல்லது துறைமுகமேடை எனப்பொருள் படும் "கீ" என்று உச்சரிக்கப்படும் Qyay என்ற ஆங்கிலச் சொல் இதற்குச் சமதையானது**

மாதோட்டம், வல்லிகாமம், மட்டிவாழ் உள்ளிட்ட ஊர்களிலே படைகளும் புகுவிட்டு படவுகளுஞ் செய்விக்கிற படி கேட்டு இதுக் குப் பரிகாரமாக ஈழத்தான் மருமகனராய் ஈழ ராச்சியத்துக்குங் கடவராய் முன்பே போந்திருந்த சீவல்லவரை அழைப்பித்து இவர்க்கு வேண்டுவனஞ் செய்து இவரையும் இவருடனே வேண்டும் படைகளும் ஊராத்துறை வல்லிகாமம் மட்டிவாழ் உள்ளிட்ட ஊர்களிலே புகலிட்டுப் புலைச்சேரி மாதோட்டம் உள் ளிட்ட ஊர்களும், அழித்து ஈழத்தானினவாய் இவ்வூர்களில் நின்ற ஆனைகளுங் கொண்டு ஈழ மண்டலத்தில் கீழ்மேல் இருபதின் காதமேற் படவுந் தென் வடல் முப்பதின்காதமேற் படவும் அழித்து இத்துறையில் இவன் மனிசராயிருந்தாரில் கொல்வாரையுங் கொன்று பிடிப்பாரையும் பிடித்து இவர்களை யுஞ் சரக்காய்க் கைக்கொண்டனவும் பிடித்த ஆனைகளும் அழைப்பித்து இவன் தமக்குக் காட்டி ஈழமண்டலத்துக் காரியம் எல்லாப் படியாலும் இவன் (சோழத்தளபதியாகிய பழையனு ருடையான வேதவன் முடையான் அம்மையப்பனான் அண்ணன் பல்லவராயன்) அழியச் செய்வித்த படிக்கும் (சதா சிவபண்டாரத்தார் பிற்காலச் சோழர் சரித்திரம்: 1967)

12ஆம் நூற்றாண்டில் ஊர்காவற்றுறையின் கேந்திர, வணிக முக்கியத்துவங்களை இரு தமிழ்க் கல்வெட்டுக்கள் அறியத்தரு கின்றன. இரண்டாம் இராஜாதிராஜ சோழனது (1163-1178) திரு வாலங்காட்டுக் கல்வெட்டு, சோழர்களுக்கும் பராக்கிரம பாகு விற்குமிடையில் நடைபெற்ற மோதலில் படைத்தளங்களுள் ஒன்றாக ஊராத்துறை இருந்ததை அறியத்தருகின்றது. தற் பொழுது நயினாதீவுக் கோயிலில் வைக்கப்பட்டுள்ள, முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ் சமஸ்கிருதக் கல்வெட்டு, ஊர் காவற் றுறையில் பன்நாட்டு வணிகம் ஊக்குவிக்கப்பட்டதைத் தெரியப் படுத்துகின்றது. கடற்கோட்டைக்கு அணித்தாக, நீரோட்டங்கள் கலக்கும் அபாயகரமான ஏழாற்றுப் பிரிவில் அடிக்கடி மரக்கல விபத்துக்கள் நடந்ததையும் இக்கல்வெட்டைக் கொண்டு ஊகிக்க முடிகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சிதைந்த மரக்கலங்களில் வந்த பொருட்கள் எவ்வாறு பகிரப்பட்டன என் பதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. சர்வதேசக்கடல் சார் சட்டங்களின் (International Maritine Laws) தோற்றுவாய்க் குரிய எடுத்துக் காட்டுகளில் ஒன்றாக இது விளங்குகின்றது.

காரைநகரில், கடற்கோட்டைக்கு அணித்தாகவுள்ள இராசாந் தோட்டத்தில் யாழ்ப்பாண அரசர்களுக்குச் சொந்தமான இருப் பிடமொன்று இருந்திருக்கிறது. இதற்கும், முன்னர் குறிப்பிடப் பட்ட வேரப்பிட்டிக்கும் இடையில், வியாவில் என்ற இடத்தில், ஐயனார் கோயிலொன்றும் யாழ்ப்பாணத்து அரசர் ஒருவரால் போர்த்துக்கேயர் இறுதியாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்குச் சற்று முன்னதாகக் கட்டப்பட்டது. இக் கோயில், போர்த்துக்கேயர் காலத்தில் இடிக்கப்படாவிட்டாலும் ஒல்லாந்தர் காலத்தில் இடிக்கப்பட்டு அக்கற்களைக் கொண்டு கடற்கோட்டை கட்டப்பட்டது. இவை, காரைநகர் சிவாச்சாரியார் களின் பரம்பரை ஏடுகள் அறியத்தரும் செய்திகள். (கணபதீஸ் வரக் குருக்கள் நினைவுமலர்: 1967)

காரைநகர்ச் சிவாச்சாரியார்களின் பரம் பரை ஏடுகளில் இருந்து...

**ஊர்காவற்றுறை பிடிபட்ட ஒரு மாசத்திற்குள் அநேக சைவசமயக் கோயில்களையும் இடித்துவிட்டு இந்த ஐயனார் கோவிலையும் இடிக்க வந்தபோது நாலுபேர் கண் தெரியாதவர்களாயும், இரண்டு பேர் நடக்கமாட்டாதவர்களாயும் போனார்கள். இது நடந்து கொஞ்சக்காலத்தின் பின் எங்களைப் பூசை செய்யாது தடுத்தனர். அவர்கள் போனபிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறையில் வைத்து இரகசியமாய்ப் பூசை செய்து வரும்போது**

வியாவில் ஐயனார் கோவில் கும்பா பிஷேகஞ் செய்த தினம் கலியப்தம் நாலா யிரத்து ஏழு நூற்று மூன்று, சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தைஞ் நூற்றுப் பதி னெட்டு, பிரபாவாதி வருஷம் முப்பத்தைந் தாவது பிலவ வருடம் வைகாசி மாசம் 25ந் திகதி நடைபெற்றது.... (மங்களேஸ்வரக் குருக்கள்)

நானுமெனது தமையனாரும் கோயிற் பூசை செய்து வரும் காலத்தில் தமிழ் இராச்சியம் போய்விட்டது. முத்துமாணிக்கம் செட்டியாரும் இறந்துவிட்டார். போர்த்துக் கீசர் என்னும் பறங்கியர் கிறிஸ்து வருஷம் 1618ம் ஆண்டு காலயுத்தி வருஷம் ஊர்கா வற்றுறைக்கு வந்தார்கள். அநேக சைவ சமயக் கோயில்களை இடித்துப் போட்டார் கள். இங்கேயுள்ள ஐயனார் கோயிலை இடிக்க வந்து கோபுரவாசலிற் கதவைத் திறக்கப்போனார்கள். அவர்களின் வாயிலி ருந்து இரத்தம் புறப்பட்டு இறந்துவிட்டார்கள் அந்தப் பயத்தினால் மறுபடி கோயிலை இடிக்க வரவில்லை....

(சூரியநாராயணக் குருக்கள்)

....பின்னர் போர்த்துக்கீசராச்சியம் போய் ஒல்லாந்தராச்சியம், வந்தது. அவர் கள் கிறிஸ்து வருஷம் 1858 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் ஊர் காவற்றுறையைப் பிடித்தனர். ஊர்காவற் றுறை பிடிபட்ட ஒரு மாசத்திற்குள் அநேக சைவசமயக் கோயில்களையும் இடித்து விட்டு இந்த ஐயனார் கோவிலையும் இடிக்க வந்தபோது நாலுபேர் கண் தெரியாதவர் களாயும், இரண்டு பேர் நடக்கமாட்டாதவர் களாயும் போனார்கள். இது நடந்து கொஞ் சக்காலத்தின் பின் எங்களைப் பூசை செய் யாது தடுத்தனர். அவர்கள் போனபிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறை யில் வைத்து இரகசியமாய்ப் பூசை செய்து வரும்போது ஒரு நாள் வந்து கோவிலையும் இடித்து கடலுக்குள்ளே ஓர் கோட்டையை யும் கட்டினார்கள்.. (கனகசபாபதிக் குருக் கள்)

(ஆன்ம தர்சநம், கணபதீசுவரக் குருக்கள் நினைவு மலர் 1967)

வரிசையாக ஆட்களை நிறுத்தி, கற்களைக் கைமாற்றித் தூக்கிச் சென்று, கடற்கோட்டையைப் பூதத்தம்பி முதலியார் ஒல் லாந் தருக்காகக் கட்டிக் கொடுத்தார் என்பதும் அந்தச் செல்வாக்கால் வந்த பொறாமை அவரது வாழ்வுக்கு உலை வைத்த காரணங் களுள் ஒன்றென்பதும் நாட்டார் இலக்கியத்தில் இடம்பெற்ற விடயங்கள்.

அழிபாடுகளில் இருந்து எடுத்துவரப் பட்டகற்கள் கடற்கோட்டை யைக் கட்டப் பயன்பட்டிருக்கலாம் என்பதை, கோட்டைக்குள் காணப்படும் வேலைப்பாடமைந்த சில கற்களை வைத்து ஊகிக் கலாம். இவற்றுள் இரு கற்களில் சோழர்காலக் கல்வெட்டுக்கள் அறியப்பட்டுள்ளன. ஒன்று மாத்திரமே படிக்கப்பட்டுள்ளது. மற் றையதன் பெரும் பாகம் சாந்தினால் மூடப்பட்டுள்ளதால் முழு மையாகப் படிக்கப்படவில்லை. படிக்கப்பட்ட கல்வெட்டு முதலாம் இராஜேந்திரசோழன் காலத்தது. இலங்கையை வெற்றி கொண்ட சோழத் தளபதியின் பெயரை அறி யத்தருகின்றது.

## *கடற்கோட்டைக் கல்வெட்டுக்கள்*
## *முதலாவது கல்வெட்டு*

ஸவஸ்திஸ்ரீ
ஈழமு(மு)
(ங்)து கொ
ண்டு ஈழ
த்தெசெர
யும் பெண்
டிர் பண்டார
மும் பிடிச்
சுக் கொடுபொ
ன அதிகார
த் தண்டநாச
கனார் ஐய

(ங்) கொண்ட (சொ)
(ழு) மூவேந்(த)
வெளார் மா
தொட்டமான
இராசராசபுர

ஸ் திஸ்ரீ
ஈழமான மு
ம்முடி சோழ
மண்டல...
...ண...
குல....

இந்திரபாலா: (யாழ்ப்பாணத்துக் கல்வெட் டுக்கள் 1969)

பாய்க்கப்பல் போய் நீராவிக்கப்பல் வந்த காலத்தில், பாக்கு நீரிணையின் ஆழம் போதாததால் ஊர்காவற்றுறை பன்நாட்டு முக்கியத் துவத்தை இழந்தது. இருப்பினும், இந்தியாவின் கிழக்குக் கரையுடன் வணிகம் அண்மைக்காலம் வரை தொடர்ந்தது. யாழ்ப்பாணப் பரவைக்கடலின் சங்கு வங்காளம் வரை சென்றதையும், விசாகப்பட்டினத்து வடக்கன் மாடு இங்கு வந்ததையும் ஊர்காவற்றுறையில் இன்றும் காணப்படும் சங்குக் கழிவுக்குவியல்களாலும் இடிந்து போன கால்நடைத் தொற்று நோய்த்தடுப்புக் கட்டிடங்களாலும் அறிந்து கொள்







ளலாம். ஊர்காவற்றுறையில் இறக்கப்பட்ட சரக்கு, மாட்டு வண்டித் தொடர்களில் அனுராதபுரம், கண்டிவரை சென்றதை எனது பாட்டனார் கூறக்கேட்டிருக்கின்றேன்.

காலனித்துவம் போய்த் தேசியங்கள் வந்த காலத்தில் ஊர்காவற்றுறையின் வணிகம் நின்று போனாலும் கேந்திர முக்கியத்துவம் போய்விடவில்லை வணிகத்தையும் கடற் பாதைகளையும் பராமரிக்கவும் பாதுகாக்கவும் தேவைப்பட்ட கேந்திர அமைவிடம் அவற்றைத் தடுக்கவும் தேவைப்பட்டது. வடபுலத்திற்கான இலங்கைக்கடற்படையின் தலைமையகம் கடற்கோட்டைக்கு மிகவும் அண்மித்த நிலப்பகுதியான காரைநகர், நீலங்காட்டில் அமைந்தது. இக்காரணத்தினாலேயே, 1971 ஆம் ஆண்டு J.V.P. கிளர்ச்சியின் போது கைதான ரோகண விஜேய வீரவும் சகாக்களும் பாதுகாப்புக் கருதி கடற்கோட்டையிலேயே சிலகாலம் சிறைவைக்கப்பட்டனர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

மிகப்பழங்காலந்தொட்டு மேற்கிற்கும் கிழக்கிற்குமான கடற்பாதை, மன்னார் வளை குடா பாக்குநீரிணையூடாகச் சென்றது. அபாயகரமானது என்பதால் ஆழ்கடல் பாதைகள் ஆதிகாலத்தில் இயன்றளவு தவிர்க்கப்பட்டன. இலங்கையின் தென்கிழக்கு மூலை யில், காந்தப்பாறைகள் என அறியப்பட்ட Great Bases, Little Bases காரணமாக இலங்கைப் பாதுகாப்பும் மன்னார் வளைகுடாவின் முத்தும் பாக்கு நீரிணையின் சங்கும் கிழக்கையும் மேற்கையும் இங்கு சந்திக்க வைத்தன.

இந்தியாவின் மேற்குக் கரையினரும் கிழக்குக் கரையினரும் பரஸ்பரம் வந்து போனதும் கிரேக்கரும் உரோமரும் வந்ததும் அரபுக்களும் சீனரும் வந்ததும் பின்னர் ஐரோப்பியர் வந்ததும் மன்னார் வளைகுடா பாக்குநீரிணைக் கடற்பாதையூடாகவே பெரிதும் நடைபெற்றதை அதன் இருபுறக் கரைகளிலும் காணப்படும் எண்ணிறந்த தொல்லியற் தடங்களால் அறிந்து கொள்ளலாம்.



இராமர் அணை என்றும் ஆதாமின் பாலம் என்றும் அழைக்கப்படும் சேதுவை இவர்கள் மன்னார்த்தீவிற்கும் மாந்தைக்கும் இடையில் உள்ள கால்வாயால் அல்லது இராமேஸ்வரம் தீவுக்கும் இராமநாதபுரத்துக்கும் இடையில் உள்ள பாம்பன் கால்வாயால் கடந்தனர். பெரிய துறைமுகம் எனப்பொருள் தரும் மாதோட்டம் என்ற மாந்தையிலும் பாம்பன் கால்வாயின் பெரு நிலப்பகுதியில் உள்ள அழகன் குளத்திலும் அறியப்பட்ட தொல்லியற் தடங்கள், அவை பல நூற்றாண்டுகளாக பல நாட்டினரும் வந்துபோன பெரும் நகரங்களாக விளங்கின என்பதைத் தெரியப் படுத்துகின்றன.

ஏறத்தாழ ஒல்லாந்தர்காலப் பிற்பகுதியில் மாந்தைக் கால்வாய் சேறடைந்து போக, பாம்பன் கால்வாய் மட்டும் தொடர்ந்து இயங்கியது. தமிழ்நாட்டுப் பாரம்பரிய வணிகர்களான செட்டியர்களின் தாயகம் எனப்படும் செட்டிநாடு, பாம்பன் கால்வாய்க்கு வடக்கிலும் மற்றொரு பாரம்பரிய வணிகர்களான முஸ்லீம்களின் பழைமை முக்கியத்துவம் வாய்ந்த நகரமான கீழக்கரை, பாம்பன் கால்வாய்க்குத் தெற்கிலும் அமைந்திருப்பது தற்செயலானவையன்று.

1860 இல் நீராவிக் கப்பல்கள் ஓடத் தொடங்கின. 1869 இல் சுயெஸ் கால்வாய் திறக்கப்பட்டது. கொழும்புத் துறைமுகமும் இலங்கையைச் சுற்றி செல்லும் கடற்பாதையும் தனி முக்கியத்துவம் பெற்றன. பாக்கு நீரிணைப்பாதை அறவே கைவிடப்பட்டது. துறைமுகங்கள் செல்வாக்கிழந்தன. வணிகப் பெருமக்கள் வேறிடங்களுக்குச் சென்று விட்டனர்.


மன்னார் வளைகுடா பாக்குநீரிணையை மீண்டும் பன்நாட்டுக் கடற்பாதையாக்கும் சேதுசமுத்திரத்திட்டம் நூறாண்டுகளுக்கு மேலாகப் பேசப்பட்டு வருவதொன்று. சேதுச முத்திரத் திட்டம் வந்தால், கொழும்பின் இழப்பைச் சரி செய்யவும் தூத்துக்குடியுடன் போட்டியிடவும் காங்கேசன்துறையை விரி வாக்க வென்று, அறுபதுகளின் பிற்பகுதியில், டட்லிசேனநாயக்கா வந்து காங்கேசன்துறை மருத்துவமனைப் பகுதியில் அத்திவாரமிட்டதைப் பார்த்தது நினைவுக்கு வருகிறது. அத்திவாரக்கல் இப்பவும் இருக்கலாம்.

இப்பொழுது சேதுசமுத்திரத் திட்டம் மீண்டும் முனைப்பாகப் பேசப்படுகிறது. இந்தியா மட்டும், தன்னுடைய கடற்பகுதியில் செய்யப்போவதாக, பல்வேறு அபிவிருத்திக் காரணங்கள் சொல்லப்பட்டாலும் பாதுகாப்பு என்பதே முனைப்பான காரணம் என்பதில் ஐயமில்லை. இதில், தனக்குப் பங்கு என்ன என்பது இலங்கை அரசின் கவலை. இருவருக்கும் பொதுவான பாதையாக இருக்கலாம் என்றும் இலங்கை அரசின் நிலப்பாலத் திட்டத்தை இதனுடன் இணைக்கலாம் என்றும் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. பல பன்நாட்டு நிறுவனங்களும் பங்கு கொள்ளக் காத்திருக்கின்றன. டெல்லியிலும் சென்னையிலும் கொழும்பிலும் இதைத் தீர்மானித்துவிடலாம் என்ற போக்கும் தெரிகின்றது.

எது எவ்வாறாயினும் சேதுசமுத்திரத் திட்டத்தால் வரப்போகும் கால்வாய் எங்கள் தீவகத்தின் புழைக்கடையூடாகத்தான் போகப் போகின்றது. பாக்கு நீரிணையின் பாரம்பரியப் பங்காளிகள், அதன் இருபுறமும் வாழும் மக்கள், பாக்குநீரிணை




இவர்களது பொருளாதார உரிமை மட்டுமல்ல, பண்பாட்டு உரிமையும் கூட, திட்டத்தில் இவர்களுக்குப் பங்கு என்ன என்பது தெளிவாகவில்லை. பாதிப்பு என்ன என்பதும் தெளி வாகவில்லை. சூழல், பொருளாதார, பண்பாட்டு விளைவுகள் மிகக் கவனமாக ஆராயப்பட வேண்டியவை. எங்களுக்கு இன்று அவசியம் தேவைப்படுவது இத்திட்டத்தின் விளைவுகள் பற்றி விழிப் புணர்வு.




## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com


**இழப்புகளுக்கு அஞ்சினால் யுத்தம் நடாத்த முடியாது;**
**இழப்புகளை வளர்ச்சியின் ஊன்றுகோலாகக் கருத வேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–


17 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
ஈகைப்பேரொளி
வ. முருகதாசன்
யாழ். துன்னாலை, 02.12.1982–12.02.2009
2009ஆம் ஆண்டு சுவிட்சிலாந்து ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் அவை முன்றலில்,
சிறீலங்கா அரசால் கொத்துக் கொத்தாய் படுகொலை செய்யப்பட்ட ஈழத்தமிழ் இனத்தைக்
காக்கக் கோரி தன் உடலையே தீயிற்குத் தாரை வார்த்தவர்.
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்